Corona Calls! (TAMIL)

# கரோனா கதறல்



2020இல் பரவியுள்ள
கரோனா நச்சுக்கிருமி நோய்
நமக்குத் தரும் பாடங்கள்

**R. ஸ்டான்லி**

# கரோனா கதறல்

**2020இல் பரவியுள்ள கரோனா நச்சுக்கிருமி நோய்**
**நமக்குத் தரும் பாடங்கள்**

**R. ஸ்டான்லி,** B.E., M.TECH.,

*திருமறைப் போதகராய் மாறிய*
*ஒரு கட்டிடப் பொறியியலர்*

R. Stanley
13 Church Colony
Vellore 632 006, India
*<stanleyonbible@hotmail.com>*

**CORONA CALLS!** (Tamil)

Copyright 2020 R. STANLEY
13 Church Colony
Vellore 632 006
Tamilnadu, India
*00 91 98437 07600*
*00 91 98430 11943*

முதல் பதிப்பு: ஆகஸ்டு 2020

ஆங்கிலத்திலும் உண்டு.

*தட்டெழுத்து:*
S. எபனேசர், ஓய்வு பெற்ற மிஷனரி, BYM
T. சின்னு

*பக்க வடிவமைப்பு:*
K. குணசேகரன்
ஓய்வு பெற்ற மிஷனரி
ஆசீர்வாத இளைஞர் இயக்கம் (BYM)

*அச்சுப்பிழை திருத்தம்:*
லினெட்டா சம்பத்குமார், M. மரியஜோசப்,
S. கனிஷ்டன், C. சுதாகர், மனோரம்மியா வில்சன்

*அச்சடிப்பு:*
New Shenbagam Offset, Sivakasi

# அர்ப்பணிப்பு

**தங்களது உயிரைப் பணயம் வைத்து**

**கரோனா நோயாளிகளைக் காப்பாற்ற**

**சிகிச்சையளிக்கும் மருத்துவர்கள்,**

**மருத்துவ உதவியாளர்கள்,**

**சுகாதாரப் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள்**

**மற்றும் காவல் துறையினரது**

**தன்னலமற்ற சேவையைப்**

**பாராட்ட!**

***அவர்களுக்கு இறையருள் பெருகுக!***

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | COVID-19 | ... | 7 |
| 2. | கரோனா வைரஸ் குறித்த ஜெபம் | ... | 10 |
| 3. | ‘‘ஆவியின் கனி’’ ஜெபம் | ... | 16 |
| 4. | இந்நாட்களில் நாம் செய்யவேண்டியது ... | ... | 18 |
| 5. | தேவனுக்கு நம்மீது கோபமா? | ... | 20 |
| 6. | ‘‘என் மக்கள் தங்களைத் தாழ்த்தினால் ...’’ | ... | 60 |
| 7. | நம்மில் நச்சுக்கிருமி | ... | 85 |
| 8. | ‘‘திறப்பின் வாசல்’’ | ... | 99 |
| 9. | நமக்கு வியாதி வந்தால் ... | ... | 111 |
| 10. | வீட்டுச் சபைகள் | ... | 123 |
| 11. | திருச்சபைகளில் திருத்தங்கள் | ... | 127 |
| 12. | மிஷனரிப்பணி ஆதரவாளர்களுக்கு ... | ... | 147 |
| 13. | மிஷனரிகளும் கரோனாவும் | ... | 152 |
| 14. | மிஷனரி நிறுவனங்களின் எதிர்காலம் | ... | 158 |
| 15. | அடுத்து என்ன? | ... | 173 |


*தமிழிலும் ஆங்கிலத்திலும், StanleyOnBible.com என்ற இணையதளத்தில், இவ்வத்தியாயங்கள் 115 முதல் 132 வரையுள்ள Online Lettersஇன் இணைப்பாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்நூல் முழுவதும் இணையதளத்தில் உண்டு. யாவற்றையும் இலவசமாய்ப் பதிவிறக்கம் செய்யலாம்.*

# 1

# COVID-19

உலகச் சுகாதார நிறுவனம் (World Health Organisation) 2020 பெப்ருவரியில் கரோனா நச்சுக்கிருமிக்கு அதிகாரப்பூர்வமாய் COVID-19 என்ற பெயரைக் கொடுத்தது. "CO" என்பது Corona என்பதின் முதல் இரு எழுத்துக்கள்; "VI" என்பது Virus என்பதின் முதல் இரு எழுத்துக்கள்; "D" என்பது Disease என்பதின் முதல் எழுத்து; ''19'' என்பது இந்நோய்த்தொற்று முதலாவது கண்டறியப்பட்ட 2019ஆம் ஆண்டினைக் குறிப்பிடுகிறது. கொள்ளை நோய் (Epidemic) என்று முதலில் பரவிய இது வெகு விரைவில் பெருங்கொள்ளை நோய் (Pandemic) என மாறியது; அடுத்து இது நிரந்தர நோய் (Endemic) என மாறவிருக்கிறது. கிறிஸ்துவுக்குமுன் மற்றும் கிறிஸ்துவுக்குப்பின் எனக் குறிப்பிட்டு வந்த BC மற்றும் AD எனும் எழுத்துக்கள் இனி பிரபலமாயிருக்காது என்று நகைச்சுவையாய்ப் பேசிக்கொள்ளப் படுகிறது! மாறாக, இனி நமது காலம் கரோனாவிற்குமுன் (Before Cornoa), அதாவது BC என்றும், கரோனாவிற்குப்பின் (After Corona), அதாவது AC என்றும், பிரிக்கப்படுமாம்! ''இக்கிருமி நம்மை விட்டுப் போகாது; நாம்தான் அதனுடன் வாழப் பழகிக்கொள்ளவேண்டும்'' என்பது மருத்துவ நிபுணர்கள் மற்றும் விஞ்ஞானிகளின் கூற்று.

பகுதியாகவோ முழுமையாகவோ, பிராந்திய அளவிலோ நாட்டளவிலோ, உலகளவிலோ ஊரடங்கு எப்படிப்பட்டதாயினும் இந் நோய்த் தொற்று கட்டுக்கடங்காமலே பரவிக்கொண்டிருக்கிறது. புள்ளி விபரங்கள் நம்மை நடுங்க வைக்கின்றன. இப்பக்கத்தை நான் எழுதிக்கொண்டிருக்கும் 2020 ஜூன் 14 அன்று உலகில் பாதிக்கப் பட்டோரின் மொத்த எண்ணிக்கை 80,00,000; உயிரிழந்தோர் 4,33,000. இவ்வாண்டின் இறுதியில் இந்த எண்ணிக்கை எவ்



வளவாயிருக்கும் என்ற கணிப்பு நம்மைக் கலக்குகிறது. பாதிக்கப் பட்டோரில் பெண்களைவிட ஆண்கள்தான் அதிகம் என்றாலும், பெண்களில் பலியானோர் விகிதம் 3.3% என்றும், ஆண்களில் அது 2.9% என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. இந்நோய்ப் பரவலால் ஏற் பட்டுள்ள பொருளாதார நெருக்கடியானது 8,60,00,000 குழந்தை களை இவ்வாண்டின் இறுதிக்குள் சகிக்க முடியாத வறுமைக்குள் தள்ளிவிடும் என்று UNICEF மற்றும் ''குழந்தைகள் காப்போம்'' (Save the Children) எனும் சேவை நிறுவனம் கணித்துள்ளன. ஊரடங்கானது வீரியமான நோய்க்கிருமியைக் கொன்றதோ இல்லையோ, இலட்சக் கணக்கான வேலை வாய்ப்புகளை நாசமாக்கிவிட்டது. உலகெங்கு முள்ள மாணவ மாணவியருக்குத் தனது வளாகக் கதவுகளைத் திறந்துவைத்திருந்த இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம், 800 ஆண்டுகளுக்குப் பின்னர், 2020-2021க்கான கல்வியாண்டின் வகுப்பறைப் போதனை முறையை ரத்து செய்துள்ளது. இப்பல்கலைக் கழகத்தில் 12,000 இளநிலைப் பட்டப்படிப்பு மாணவ மாணவியர் உளர். இந்நோய்த்தொற்றின் துக்கச் சம்பவங்களையும் துயரக் கணிப்புகளையுமே பக்கம் பக்கமாய் வெளியிடும் நாளிதழ்களைப் பார்க்கவே பயமாயிருக்கிறது.

கொள்ளைநோய் என்றாலும், இயற்கைப் பேரிடர் என்றாலும், விரும்பப்படாத வேறு நிகழ்வு எதுவென்றாலும் நாம் உடனே பைபிளைத் திறந்துவைத்துக்கொண்டு தேவனிடம்தான் ஓடவேண்டும். வயது மற்றும் பல உடல்நலக் கேடுகள் காரணமாய் வீட்டில் அடைபட்டுக் கிடக்கும் 86-வயதுள்ள ஒரு தாயார் தனது மகனிடம் சமீபத்தில் சொல்லியது: ''வீட்டின் அளவைவிடக் கதவு சிறியது; கதவைவிடப் பூட்டு சிறியது; பூட்டைவிடச் சாவி சிறியது; எனினும் வீட்டிற்குள் நுழையக் கதவைத் திறப்பது எல்லாவற்றையும்விடச் சிறியதான சாவிதான்!'' பைபிள்தான் அந்தச் சாவி! தொன்றுதொட்ட இந்நூலில் எழுதப்பட்டுள்ள யாவும் ''இறுதிக் காலத்தில் வாழும் நமக்கு அறிவுறுத்தல்கள்'' தருவதற்காகவே (1 கொரி 10:11). நம்மைச் சுற்றி நடக்கும் காரியங்கள் மூலம் தேவன் நம்முடன் பேசுவதென்ன என்றறிய, ஒரு திருமறைப் போதகன் என்ற நிலையில், பல மணி நேரங்கள்

திருமறையைத் துருவி ஆராய்ந்தேன். கரோனா நோய்த் தொற்று சம்பந்தமான வேதாகமக் கட்டுரைகள் பலவற்றை 2020 மார்ச் முதல் WhatsAppஇலும் எனது Websiteஇலும் பதிவேற்றினேன். இக்கட்டான இக்காலத்தில் இந்நிலை குறித்து இந்திய ஊழியரது கட்டுரைகள் அதிகம் வெளிவராததால், ''வனாந்திரத்தில் கூப்பிடுகிறவனின் சத்தம்'' போலவே எனது செய்திகள் அமைந்துள்ளன. இந்நாட்களில் எழுதப்பட்டவற்றில் பதினான்கு கட்டுரைகளை இந்நூலில் தொகுத் துள்ளேன். எழுதப்பட்ட நாள் வரிசையில் அல்ல, பொருள் அடிப் படையிலேயே இவை தரப்பட்டுள்ளன.

இயேசுவானவர் முன்னறிவித்துள்ளபடி, அவரது மறுவருகைக்குமுன் இன்னும் எவ்வளவோ கொள்ளை நோய்களையும் அழிவுகளையும் நாம் எதிர்கொள்ளவேண்டியதிருக்கும் (மத் 24:7,8). நாம்தான் கடைசித் தலைமுறையினராயிருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். எக் காலத்திலும் எக்கட்டத்திலும் உருவாகக்கூடிய நிலைமையைத் திருமறைப்பாணியில் சமாளிக்க வாசகருக்கு இந்நூல் கை கொடுக்கும்.



17 மார்ச் 2020

**2**

# கரோனா வைரஸ் குறித்த ஜெபம்

## A Prayer regarding Coronavirus

*சர்வ சக்தியுள்ள இறைவா,*
உலகெங்கும் பரவியுள்ள கரோனா வைரஸ் குறித்து
உடைந்துபோன உள்ளங்களுடன் உம்மிடம் வருகிறோம்.
எங்களுக்கு இது ஓர் அதிர்ச்சியாய் இருந்தாலும்,
துவக்கம் முதல் முடிவு வரையுள்ள அனைத்தையும்
அறிந்துவைத்துள்ள சர்வ ஞானியாகிய உமக்கு
இது ஆச்சரியம் அல்லவே.
என்னதான் செய்வதென்று தெரியாது
பரிதாபமாய் உம்முன் நெடுஞ்சாடையாய் விழுகிறோம்.

*பரிசுத்த பிதாவே,*
உம்மை அன்பின் தெய்வமாய் வழிபடுகிறோம்.
உம்மை இரக்கத்தின் தெய்வமாய் வழிபடுகிறோம்.
உம்மைக் கிருபையின் தெய்வமாய் வழிபடுகிறோம்.
இக்கட்டான இச்சூழலில் நீர் எங்களுக்கு ஆதரவு தரவேண்டுமென்று
இறைஞ்சுகிறோம்.
சிருஷ்டி கர்த்தாவாகிய உம்மை வணங்காமல் அறிவியலையும்
தொழில்நுட்பக்கலையையும் கும்பிட்டுக்கொண்டிருக்கும்
எங்களைத் தயவாய் மன்னியும்.
பொருளாசை மற்றும் துராசை போன்ற
எங்கள் விக்கிரகங்களுக்காக எங்களை மன்னியும்.
தன்னலம் நிறைந்த எங்கள் வாழ்க்கைக்காய் எங்களை மன்னியும்.
எங்களது தீய எண்ணங்கள், பண்பற்ற சொற்கள்

மற்றும் சீர்கேடான செயல்களை மன்னியும்.
செல்வந்தர் இன்னும் செல்வந்தராகவும்,
எளியவர் இன்னும் எளியவராகவும்
வழிவகுக்கும் எங்கள் அமைப்புகளை மன்னியும்.
தானதர்மச் செயல்களை அல்லத்தட்டி,
வறியவர்க்கு வழங்குவதில் கஞ்சத்தனம்பண்ணும்
எங்களை மன்னியும்.
சகமனிதரிடம் சகோதர பாசம் காட்டாத எங்களை மன்னியும்.
எங்களது பெருமை, அகம்பாவம்,
முரட்டாட்டம் போன்ற கெட்ட குணங்களை மன்னியும்.
ஊழல்வாதிகள் பலருக்கு வாக்களித்து எங்களை ஆளுவதற்கு
அவர்களைத் தெரிந்தெடுத்த எங்கள் மதியீனத்தை
எங்களுக்கு மன்னியும்.
கலாச்சார வேறுபாடுகள் எங்களைப் பிரிக்க அனுமதித்ததற்காய்
எங்களை மன்னியும். உன்னைவிட நான் மேல் எனும்
எங்கள் மனப்பான்மையை மன்னியும்.
தேவா, எங்கள்மீது இரக்கமாயிரும்.
உம்மிடம் மன்னிப்பிற்குக் குறைவில்லை என்று அறிந்திருக்கிறோம்.

*விண்தந்தையாகிய கடவுளே,*
நோய் தடுப்பு முறைகளும், சிகிச்சை வசதிகளும் வெகுவாய்ப்
பெருகியிருந்தாலும், உலகெங்குமுள்ள தேசத் தலைவர்கள்
தடுமாறி, திணறி, நிற்கிறார்கள்.
இந்த நச்சுக்கிருமியினால் பாதிக்கப்பட்டோருக்காய்ப்
பிரார்த்திக்கிறோம்.
தங்கள் நோய்கள் மற்றும் வேதனைகளுடன்
இயேசுவானவரிடம் வந்தவர்களை
அவர் எவ்விதம் அற்புதமாய்ச் சுகப்படுத்தினார் என்பதை
நினைத்துப் பார்க்கிறோம்.



அவர் இன்றும் சற்றும் மாறாது சுகமளிப்பவராய் இருக்கிறார்
என்று நம்புகிறோம். சிகிச்சையளிக்கும் மருத்துவக் குழுக்களுடன்
இருந்து உதவும், ஆண்டவரே.
எங்கள் சமுதாயங்களுக்குள் உமது சுகமளிக்கும் வல்லமை
நதியாய்ப் பாயட்டும்.
இவ்வித நோய்களால் எளிதில் தாக்கப்படக்கூடிய
ஒன்றுமறியா குழந்தைகள்மீதும் பலங்குன்றிய முதியோர்மீதும்
இரக்கம் காட்டும்.

*நல்ல ஆண்டவரே,*
இக்கொள்ளை நோய்க்குப் பலியாகிவிட்ட
ஆயிரக்கணக்கானோரின் குடும்பத்தினர்
மற்றும் நண்பர்களுக்காய் உம்மிடம் வேண்டுகிறோம்.
அவர்களது இழப்பு தாங்கமுடியாதது,
அவர்களது துயரம் தணிக்கமுடியாதது.
நீர்தான் எல்லாவித ஆறுதலின் தேவனானவர்.
இறந்துபோன தமது நண்பன் லாசருவை
அவர் உயிருடன் எழுப்பப்போகிறார்
என்று இயேசுவுக்குத் தெரிந்திருந்தும்
அவர் அந்தச் சூழலில் கண்ணீர் விட்டாரே.
பிரியமுள்ள பிதாவானவரே,
இக்குடும்பங்களின் இதயங்களிலும் இல்லங்களிலும்
உமது சமாதானத்தை அனுப்பும்.
தேவா, அவர்களது வாழ்வில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை
உமது பிரசன்னம் மட்டுமே நிரப்ப முடியும்.

*தந்தையாம் கடவுளே,*
மனம் வருந்திக் கண்ணீருடன் மக்கள்
உம்மைப் பார்த்துக் கதறியபோது
நீர் கொள்ளை நோய்களைத் தடுத்து நிறுத்திய
சம்பவங்களையெல்லாம் பைபிளில் வாசித்திருக்கிறோம்.

உண்மையான, உயிருள்ள, ஒரே தெய்வமாகிய உம்மிடம்
இந்தியரும் இந்தியரல்லாதவருமாகிய நாங்கள் யாவரும் திரும்பிவர
அருள் தாரும்.
எங்களது நகர்கள், பட்டணங்களிலிருந்து மதுபானக் கடைகள்,
விபச்சார விடுதிகள், சூதாட்ட மையங்கள் போன்றவை
அகற்றப்படட்டும்.
தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நியாயமான சம்பளம்
கொடுக்காது அவர்களது பரிதாப நிலையைச் சாதகமாக்கிக்கொள்ளும்
எங்களை மன்னியும்.
அவர்களது கூக்குரல் உமது காதுகளை எட்டிவிட்டதோ?
நீர் ஏழைகளின் தேவனாச்சுதே!
நாட்டளவில் நாங்கள் உமக்கு விரோதமாய்ப் பாவம்
செய்துகொண்டிருக்கிறோம்.
உலகளவில் நாங்கள் உமது கட்டளைகளை
மீறிக்கொண்டிருக்கிறோம்.
எங்கள் அக்கிரமத்தின் பாத்திரம் நிரம்பி வழிந்துகொண்டிருக்கிறது.
உமது பொறுமையைத் தவறாய்ப் புரிந்துகொண்டுவிட்டோம்.
எங்கள் பாவங்களுக்குத் தகுந்தபடி எங்களைத்
தண்டித்துவிடாதிரும், அப்பா.
எங்கள்மீதுள்ள உமது கோபத்தை அகற்றும் என்று மண்டியிட்டுக்
கெஞ்சுகிறோம். சமுதாயத்திற்கு வெளிச்சமாயிருக்கவேண்டிய
கிறிஸ்தவர்களாகிய நாங்கள்
தவறிய காரியங்களுக்காய் எங்களை மன்னியும்.
எங்களை மன்னித்து எங்கள் நாட்டிற்கு நலம் தாரும், தேவா.
பெற்றோருக்குக் கீழ்ப்படியாது, முதியோரை எதிர்க்கும்
எங்கள் சிறுவர், சிறுமியர், வாலிபர், நங்கையரை மன்னியும்.
உமது சாபத்திற்கு அவர்கள் ஆளாகிவிடாதபடி
அவர்கள் அடங்கி நடந்திட
அவர்களது இதயங்களை இணக்கமுள்ளவைகளாக்கும்.



*விண்தந்தையே,*
உலகின் முடிவு காலத்திற்கு அடையாளமாய்ப் பஞ்சங்களும்,
கொள்ளை நோய்களும், பலவிடங்களில் நிலநடுக்கங்களும்
வரும் என்று 2000 ஆண்டுகட்கு முன்னதாகவே
இயேசுவானவர் தமது சீடருக்கு முன்னறிவித்ததை
நாங்கள் நினைத்துப் பார்க்கிறோம்.
இந்த நாட்கள் ஏற்கனவே வந்துவிட்டதாகவே உணருகிறோம்.
இவையெல்லாம் உமது குமாரனாகிய இயேசுவானவரது இரண்டாம்
வருகைக்கு முன்னடையாளம் என்று
உமது திருவார்த்தையாகிய பைபிள் கூறுகிறது.
ஆத்தும இரட்சிப்புக்காகவும் நித்திய வாழ்வுக்காகவும்
அவரை நம்பி அவரது மறுவருகைக்கு ஆயத்தப்பட்டு
இக்கொடிய நாட்களைச் சமாளிக்க
உமது கிருபையால் எங்களை வலுப்படுத்தும்.

*இறைவா,*
இப்பிரார்த்தனை எவ்வளவு குறைவுள்ளதாயிருந்தாலும்
அதனை நீர் கேட்பதற்காய் உமக்கு நன்றி சொல்லுகிறோம்.
நீரே சர்வ வியாபகராகிய கடவுள்,
நீரே சர்வ வல்லவராகிய கடவுள்,
நீரே சர்வ ஞானியாகிய கடவுள்
என்று உம்மைத் தொழுது மறுபடியும்
உமது பாதங்களில் விழுகிறோம்.

இயேசுவானவரின் பெயரால் இவ்வேண்டலைச் சமர்ப்பிக்கிறோம்.
நாங்கள் கேட்டுக்கொண்டபடியே ஆகட்டும், தேவா!

■

*(இந்த இறைவேண்டலை எழுதுவதற்கு ஆதாரமாயிருந்த 50 பைபிள் வசனக் குறிப்புகள்: ஏசாயா 41:26; 1 யோவான் 4:16; சங்கீதம் 103:11; 1 பேதுரு 5:10; ஓசியா 14:3; கொலோசெயர் 3:5; பிலிப்பியர் 2:4; மாற்கு 7:20*

*-23; 2 கொரிந்தியர் 8:13-15; 9:9-11; நீதிமொழிகள் 11:24-26; மத்தேயு 22:39; 2 தீமோத்தேயு 3:1-4; 1 தீமோத்தேயு 3:1-9; நீதிமொழிகள் 31:4,5; உபாகமம் 17:17; அப்போஸ்தலர் 10:34,35; 17:26-28; மத்தேயு 7:3-5; சங்கீதம் 130:4; மத்தேயு 4:24; எபிரெயர் 13:8; லூக்கா 5:17; 2 கொரிந்தியர் 1:3; யோவான் 11:35; 2 நாளாகமம் 6:28-31; யோவான் 17:3; அப்போஸ்தலர் 14:15; யாக்கோபு 5:1-5; சங்கீதம் 69:33; நீதிமொழிகள் 19:17; ரோமர் 2:3-6; எஸ்றா 9:15; சங்கீதம் 130:3; 103:10; 103:8,9; 30:5; 2 நாளாகமம் 7:14; மல்கியா 4:6; லூக்கா 1:17; யாத்திராகமம் 20:12; மத்தேயு 24:7; லூக்கா 21:11,34-36)*



5 ஏப்ரல் 2020

**3**

# "ஆவியின் கனி" ஜெபம்

(கலாத்தியர் 5:22,23)

**"Fruit of the Spirit" Prayer**

*சர்வ வல்ல தேவா,*
கரோனா நச்சுக் கிருமியினால் இருள் சூழ்ந்துள்ள இக்காலத்தில்
நீர் இரக்கமாய்ச் செயல்பட உம்மை நாடி வந்துள்ளோம்.

(1)
சகமனிதரிடம் நாங்கள் ***அன்பு*** காட்டத் தவறியதை மன்னியும்;
எங்களைப் போலவே பிறரிடமும் ***அன்பு*** காட்ட உதவும்.

(2)
பொருளாதார மற்றும் உடல்ரீதியான எவ்வளவோ ஆசிகள் இருந்தும்
எங்களிடம் ***மகிழ்ச்சி*** இல்லை;
உமது இரட்சிப்பின் ***மகிழ்ச்சி*** எங்களை நிரப்பட்டும்.

(3)
எங்கள் இல்லங்கள், வேலைத்தலங்கள், நிறுவனங்கள் மற்றும்
நாட்டிற்குச் ***சமாதானம்*** தாரும்; ***சமாதானம்*** எங்கும் நிலவ
நாங்கள் ஒருவரோடொருவர் ஒப்புரவாகட்டும்.

(4)
உடனுக்குடன் வேண்டும் என்று இயங்கும் இவ்வுலகில்
***பொறுமை*** இழந்துவிட்டோம்; நலிந்தோர் மற்றும்
ஞானம் குறைந்தோரிடம் நாங்கள் ***பொறுமை*** காட்ட உதவும்.

(5)
***இரக்கம்*** நிறைந்த தேவனாய் உம்மை வணங்குகிறோம்.
பிறரிடம் நாங்கள் கடின வார்த்தைகள் பேசாது காத்தருளும்;
நாங்கள் இருக்கும் நல்ல நிலைக்கு உமது ***இரக்கம்*** ஒன்றே காரணம்.

(6)

எங்கள் சிந்தனை, சொல், செயல் யாவற்றிலும் ***நற்குணம்***
காணப்படட்டும்; எங்களது சகவுறவுகளை ***நற்குணம்*** எனும்
மகுடம் அலங்கரிக்கட்டும்.

(7)

***நம்பகம்*** என்பது எங்கள் வாழ்வுமுறை ஆகட்டும்;
பொய் மற்றும் மாய்மாலம் இல்லாது ***நம்பகம்*** எங்களில் மிளிரட்டும்.

(8)

உமது ***சாந்தம்*** இல்லையேல் நாங்கள் பிழைக்கவே முடியாது;
எங்கள் பணியாளர், சகவூழியர் யாவரிடமும்
நாங்கள் ***சாந்தம்*** காட்டட்டும்.

(9)

திருப்தியின்மையும் பேராசையும் நிறைந்துள்ள இவ்வுலகில்
எங்களுக்குத் ***தன்னடக்கம்*** எவ்வளவாய்த் தேவை;
விலக்கப்பட்டதை நோக்கிய இழுப்பை எதிர்க்க
எங்களுக்குத் ***தன்னடக்கம்*** தாரும்.

தேவனே, உமது தூயாவியானவரின் இந்த ஒன்பது கனிகளும்
எங்களில் இப்பொழுதும் எப்பொழுதும் விளையட்டும்.
உமது மகன் இயேசுவின் திருப்பெயரால் வேண்டுகிறோம்.
அப்படியே ஆகட்டும்!

*(கரோனா தொற்றுநோய்ப் பரவலுக்கு எதிராய்த் தேசிய அளவில் நாம் ஒன்றுபட்டு நிற்கிறோம் என்பதைக் காட்ட 2020 ஏப்ரல் 5 அன்று இரவு 9 மணிக்கு 9 நிமிடம் அமைதி காக்கப் பாரதப் பிரதமர் விடுத்த அழைப்பையடுத்து மேற்கண்ட இறைவேண்டல் எழுதப்பட்டது.)*



24 மார்ச் 2020

**4**

# இந்நாட்களில் நாம் செய்யவேண்டியது ... 144

## What I must do during these days

நமது வேலைகள் மற்றும் வழக்கமான அலுவல்களிலிருந்து நமக்குக்
கட்டாய விடுப்பு தரப்பட்டுள்ளது.
நேரத்தைப் பயனுள்ள வகையில் செலவிடுவதற்கான
சில வழிமுறைகளைக் கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு
இங்கு தர விரும்புகிறேன் —

(1)

விறுவிறுப்பாய்ச் செயல்பட்டுக்கொண்டிருந்த நாட்களில்
நாம் தேவனோடு அவசரப்படாது நேரம் செலவழிக்க முடியவில்லை.
இப்பொழுது தானியேல் போல தினம் மூன்று வேளை
தேவனை நோக்கி ஜெபிக்கலாம்,
திருப்பாடகன் போல தினம் ஏழு முறை அவரைத் துதிக்கலாம்
(தானி 6:10; சங் 119:164).
கடவுளுடன் காரியங்களைச் சரிசெய்வோம்.

(2)

போதுமான நேரம் திருமறையைத் தியானிக்காததால்
நமது ஆன்மீக வளர்ச்சி குன்றியுள்ளது (1 பேது 2:1-3).
தினமும் ஓரிரு மணிநேரம் பைபிளுடன் செலவிடுங்கள்.
மனத்தொய்வு நிறைந்துள்ள இந்நாட்களில்
அது உங்கள் ஆன்மாவை உயிர்ப்பித்து
உங்களுக்கு உற்சாகம் தரும் (சங் 119:92).

(3)

ஆண்டாண்டாய் நாம் வாங்கிய ஆவிக்குரிய புத்தகங்கள் பல
நமது அலமாரிகளில் தூங்குகின்றன.

இறைநடத்துதலின்படி,
அவற்றில் ஒன்றைத் தெரிந்தெடுத்து வாசித்து முடியுங்கள்.
அப்புத்தகத்தில் உங்களுக்கு அதிகம் பிடித்த குறிப்புகளை
உங்கள் தியானக் கையேட்டில் எழுதிவைத்துக்கொள்ளுங்கள்.

(4)

உலகெங்கும் பரவிவரும் கரோனா தொற்றுநோய் குறித்துச்
செய்தித்தாள்களும் தொலைக்காட்சிகளும்
போதுமான தகவல்கள் தந்துகொண்டிருக்கின்றன.
தேவன் இரங்கி விரைவில் இந்நிலையை மாற்றும்படித்
தனித்தும் குடும்பமாகவும் அவருக்குமுன் மன்றாடுங்கள்.
(அத்தியாயங்கள் 2, 3இலுள்ள ஜெபங்களைப் பயன்படுத்துங்கள்.)

(5)

வலைதளத்தில் அளவுக்குமீறி நேரம் செலவழிக்காதீர்கள்.
கைபேசிக்கு அடிமையாவது
உங்கள் மனதையும் ஆன்மாவையும் சீரழிக்கும்.

(6)

உங்கள் வாழ்க்கைத்துணையோடும் பிள்ளைகளோடும்
குடும்பத்தின் பிற அங்கத்தினரோடும் தரமான நேரம் செலவிட
இந்நாட்களைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.
சேர்ந்து சாப்பிடுங்கள், உரையாடுங்கள், பாடுங்கள், ஜெபியுங்கள்.

(7)

கிறிஸ்தவரல்லாத உங்கள் நண்பர்களுடன் தொடர்பில் இருங்கள்.
அன்புடன் விசாரியுங்கள்.
இறையன்பு மற்றும் இறைவன்மை குறித்துச்
சுருக்கமான கருத்துக்களை அவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.
அவர்களை உற்சாகப்படுத்துங்கள்.
அவர்கள் ஒவ்வொருவருக்கும் நீங்கள் சொல்லவேண்டியது:
*''இயேசு உங்களையும் என்னையும் நேசிப்பதால்*
*நான் உங்களை நேசிக்கிறேன்!''*



10 மே 2020

**5**

# தேவனுக்கு நம்மீது கோபமா?

## Is God angry with us?

கட்டுப்படுத்த முடியாத கரோனா தொற்றுநோய்ப் பரவலால் உலகின் 250 நாடுகளில் 210 பாதிக்கப்பட்டுள்ளன. இப்பரவலைத் தடுக்க நாட்டுத் தலைவர்களும் மருத்துவப்பணியாளர்களும் தங்களாலியன்ற அத்தனையும் செய்துவருகின்றனர். இதற்கான பரிகாரம் கண்டுபிடிக்க 70 ஆராய்ச்சிக் குழுக்கள் தீவிரங்காட்டி வருகின்றன. விளைவோ ஊக்குவிக்கும் வகையில் இல்லை. COVID-19 எனும் இந்நச்சுக்கிருமி நம்மை விட்டுப் போகாது, நாம்தான் அதோடு வாழப் பழகிக்கொள்ளவேண்டும் என்பது நிபுணர்கள் பலரது கருத்து. துவக்கத்தில் அது ''கொள்ளை நோய்'' (epidemic) என்றிருந்தது; இப்பொழுது அது ''பெருங்கொள்ளை நோய்'' (pandemic) என மாறியுள்ளது; அடுத்து ''நிரந்தர நோய்'' (endemic) என மாறவிருக்கிறது. கிறிஸ்தவத்திற்கெதிரான அவர்களது மனப்பான்மை மற்றும் செயல்பாடுகளினாலேயே தேவனது தண்டனை அந்நாட்டின்மீது வந்துவிட்டதெனச் சில நாடுகளைச் சுட்டிக்காட்டி ஒரு சில கிறிஸ்தவப் பிரசங்கிமார் இத்தொற்றுநோயின் துவக்க நாட்களில் பேசிவந்தனர். ஆனால் அதிவிரைவில் மதம் என்பதைத் தாண்டிப் பல நாடுகளில் இந்நோய் தீவிரமாய்ப் பரவியபோது, இவ்விதம் அவசரப்பட்டுப் பேசப்பட்ட நியாயத்தீர்ப்பின் வார்த்தைகள் தவறென்பது புலப்பட்டது. கம்யூனிசம், புத்த மதம், இந்து மதம், இஸ்லாம் மதம் மற்றும் கிறிஸ்தவ மதம் போன்றவற்றைத் தழுவிய நாடுகளிலும், புனித பூமி எனப்படும் இஸ்ரவேல் நாட்டிலும்கூட இந்நோயின் தாக்கம் ஏற்பட்டுவிட்டது. நாளது தேதியில் இஸ்ரவேலில் பாதிக்கப்பட்டுள்ளோர் 16,500 பேர், இறந்தோர் 250 பேர்.

*''தேவனுக்கு நம்மீது கோபமா?''* என்பதே மக்களது மனதில் எழும் பல கேள்விகளில் தலையோங்கி நிற்பது. ஒரு திருமறைப் போதகர் என்ற நிலையில் இக்கேள்விக்கான பதிலைத் திருமறைச் சரித்திரம் மற்றும் திருமறைத் தீர்க்கதரிசனத்திலிருந்து கண்டுபிடிக்க முனைந்தேன். ''சரித்திரத்திலிருந்து நாம் கற்றுக்கொள்வதேயில்லை என்பதுதான் சரித்திரத்திலிருந்து நாம் கற்றுக்கொள்வது'' என்பதே கசக்கும் உண்மை! இத்தலைப்பில் திருமறையைக் கருத்துடன் ஆராயத் தொடங்கினேன். அதன் விளைவே இக்கட்டுரை. *''தேவனது கோபம்''* (Wrath of God) என்ற வார்த்தைகள் எனது காதுகளில் ஓங்கி ஒலித்ததால் மே 7 அன்று அதிகாலை 2 மணிக்கு எழுந்து எனது ஆராய்ச்சியைத் தொடங்கினேன்.

*தேவனுக்கு நம்மீது கோபமா?* தேவனது அன்பு என்பதைப் பேசுமளவிற்குத் தேவனது கோபம் என்பதையும் பைபிள் குறிப்பிடுகிறது. தேவனது கோபம் என்பது பழைய ஏற்பாட்டில் குறைந்தது 180 தடவை சொல்லப்பட்டிருக்கிறது. இதோவோர் எடுத்துக்காட்டு: யாத் 32:9,10, ''கர்த்தர் மோசேயைப் பார்த்து, இந்த மக்களைப் பார்த்தேன்; இவர்கள் வணங்காக் கழுத்துள்ள மக்கள். எனவே எனது கோபம் இவர்கள்மீது மூளவும், நான் இவர்களை அழித்துப்போடவும் நீ என்னை விட்டுவிடு.'' தேவனது கோபம் என்பது அநியாயச் செயல்கள்மீது அவருக்கு வரும் நியாயமான எரிச்சல். இதை அடக்கமுடியாத அவரது முன்கோபம் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. இதனை இரத்தினச் சுருக்கமாய்ப் பவுலடியார் வரையறுத்துள்ளார்: ரோ 1:18, ''மனிதருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்திற்கும் விரோதமாய் தேவ கோபம் விண்ணிலிருந்து வெளிப்பட்டிருக்கிறது.''

தேவ கோபத்தின் முதல் வெளிக்காட்டலை ஏதேன் தோட்டத்திலேயே காண்கிறோம். முதலாவது சர்ப்பத்தைப் பார்த்தும், அடுத்து ஏவாளைப் பார்த்தும், இறுதியாக ஆதாமைப் பார்த்தும் அவர் கோபமான



வார்த்தைகளைப் பேசினார் (ஆதி 3:14-19). அடுத்து, முதல் பெற்றோரின் முதல் மகனிடம் அவர் சினங்கொள்கிறார் (4:11,12). தனிநபர்கள் பலரிடம் அவர் கோபப்பட்டது தொடர்ந்து வருகிறது: மோசே (யாத் 4:14), மிரியாம்-ஆரோன் (எண் 12:9), கோராகு (16:19-21,35), பிலேயாம் (22:22), ஆகான் (யோசு 7:1,26), தாவீது (2 சாமு 24:1,15), சாலொமோன் (1 இரா 11:9,10), அனனியா-சப்பீராள் (அப் 5:1-11), மற்றும் ஏரோது (அப் 12:21-23). மட்டுமல்ல, நகர்களும் நாடுகளும் அவரது கோபத்திற்குப் பலியாகின. சோதோமும் கொமோராவும் மறக்கமுடியாதவை (ஆதி 18:20; 19:24,25; ரோ 9:29). மக்களைக் கணக்கிட்ட தாவீதின்மீது கோபப்பட்ட தேவன் இஸ்ரவேலர் நடுவில் கொள்ளை நோய் ஒன்றை அனுப்பி 70,000 ஆண்களை அழித்தார் (1 நாளா 21:14).

இவ்விதப் பேரழிவுகளையெல்லாம் குறிப்பிட்டுத் தீர்க்கன் செப்பனியா மூலம் பின்னர் தேவன் பேசியது: ''மக்களினங்களை வெட்டி வீழ்த்தினேன்; அவர்களது கோட்டைகளைத் தகர்த்தெறிந்தேன்; அவர்களது தெருக்களை வெறுமையாக்கினேன்; அவை ஆளின்றி வெறிச்சோடின; யாரும் இராதபடி, எங்கும் குடியிராதபடி அவர்களது நகர்கள் பாழடைந்துபோயின'' (செப் 3:6). முழுவுலகின் மீதும் கொட்டப்பட்ட தேவ கோபத்தை நோவா காலத்து வெள்ளப் பெருக்கு உணர்த்தி நிற்கிறது (ஆதி 6:5,11-13). இனி மனிதன் பொருட்டு இப்படி நிலத்தைச் ''சபிப்பதில்லை,'' அப்படியே, இனி இதுபோல ''அனைத்து'' உயிர்களையும் அழிப்பதில்லை என்பது மட்டுமே வெள்ளப் பெருக்கையடுத்து தேவன் கொடுத்த வாக்குறுதி (8:21). ''விதைப்பும் அறுப்பும், குளிரும் வெப்பமும், கோடைக்காலமும் மழைக்காலமும், இரவும் பகலும் என்றும் ஓயாது'' என்பதே வானவில் உடன்படிக்கையாகும் (வச 22). இதுவும் ''மண்ணுலகு இருக்கும்வரை'' மட்டுமே. வானங்களும் மண்ணுலகும் முடிவில் அழிக்கப்படவிருக்கின்றன என்பது இங்கு குறிப்பு என்பதைக் கவனிக்க (2 பேது 3:10).

''தேவனது அன்பு'' மற்றும் ''தேவனது கோபம்'' ஆகிய இரண்டும் தேவனது பிரிக்க முடியாத குணாதிசயத்தின் இரு பக்கங்களாம். இருதயம் நொறுங்கி மனந்திரும்பும் பாவியிடம் தேவனது அன்பைக் கூறவேண்டும்; வணங்காக் கழுத்துள்ளவர்களுக்குத் தேவனது கோபம் சுட்டிக்காட்டப்படவேண்டும். தேவனது இந்த இரட்டைக் குணத்தைப் பவுல் அழகாய்ச் சமநிலைப்படுத்துவதைப் பாருங்கள்: ரோமர் 11:22, ''தேவனது தயவையும் கண்டிப்பையும் பார்; விழுந்த வர்களிடம் கண்டிப்பையும், உன்னிடம் தயவையும் காண்பித்தார்; அந்தத் தயவில் நீ நிலைத்திருந்தால் உனக்குத் தயவு கிடைக்கும்; இல்லையேல் நீயும் வெட்டியெறியப்படுவாய்.'' யோவான் 3:16இல் தேவனது அன்பைப் பற்றியும், 18ஆம் வசனத்திலோ தண்டனைத் தீர்ப்பு குறித்தும் இயேசு பேசினார். தேற்றும் கோலுடன் பாசமுள்ள மேய்ப்பராய்த் தோற்ற மளிக்கும் இயேசுவின் படங்கள் நிறையவுண்டு; ஆனால் தேவா லயத்தை வணிகமயமாக்கினோரை வாரினால் துரத்தும் அவரது படமெங்கே? தனது பிரிவுரையில் தேவனைப் ''பட்சிக்கும் அக்கினி'' என்றும் ''எரிச்சலுள்ள தேவன்'' என்றும் மோசே சித்தரித்தார் (உபா 4:24). அடுத்து, உடனே அவரை ''இரக்கமுள்ள தேவன்'' என்கிறார் (வச 31). கீழ்ப்படிவோருக்கு வாக்குப்பண்ணப்பட்டுள்ள ஆசீர்வாதங்களை வரிசைப்படுத்தியுள்ள உபாகமம் 28:1-14 நம்மெல்லாருக்கும் அதிகம் பிடிக்கும். இவை 14 வசனங்கள்தான்; ஆனால் கீழ்ப்படியாமைக்கு வரும் சாபங்களை இவ்வத்தியாயத்தில் விவரிப்பது, அப்பப்பா, 54 வசனங்கள்! ''கொள்ளை நோய், உருக்கு நோய், காய்ச்சல், எரி வெப்பம், மூல நோய், சொறி, சிரங்கு, மூளைக்கோளாறு, பார்வையிழப்பு, முழங்கால்களிலும் தொடைகளிலும் குணப்படுத்த முடியாத கொப்பு ளங்கள்'' போன்றவையெல்லாம் இச்சாபங்களில் உள்ளடங்கும். நியாயப் பிரமாணப் புத்தகத்தில் எழுதப்படாத பிணிகளும் வாதைகளும் வருமாம் (வச 61).

தேவ கோபம் என்பது பழைய ஏற்பாட்டுப் பாடம் என்றோ, யுக முடிவுக்குரியது என்றோ நாம் தள்ளிவிட முடியாது. புதிய ஏற்பாட்டில்



இதற்குப் பல குறிப்புகள் உண்டு. தேவ கோபம் குறித்துப் புதிய ஏற்பாட்டினரை எச்சரிக்கப் பழைய ஏற்பாட்டு நிகழ்வுகளை அப் போஸ்தலர் மேற்கோள் காட்டினர் (1 கொரி 10:1-11; 2 பேது 2:4-10; யூதா 5-7). ''விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்'' எனும் உபதேசத்திற்கடுத்த ரோமர் நிருபத்திலும் அடிக்கடி தேவ கோபம் என்பதைப் பவுலடியார் குறிப்பிடுகிறார் (ரோ 1:18; 2:5,8; 5:9; 9:22). இயல்பின்படி நாமெல்லாரும் ''கோபாக்கினையின் பிள்ளை கள்தான்'' (எபே 2:3). இப்பொழுதோ தேவனது அன்பு, இரக்கம் மற்றும் கிருபையினால் தேவ கோபத்திலிருந்து விடுவிக்கப்பட்டி ருக்கிறோம் (வச 4,5).

முழுவுலகின் பாவமும் கிறிஸ்துவின்மீது சுமத்தப்பட்டு, அவர் நமக்காய்ச் சிலுவையில் பாவமான வேளையில் தேவ கோபம் உச்சத்தை எட்டிற்று (2 கொரி 5:21). தமது குமாரன் சித்திரவதை செய்யப்பட்டு இறந்தபோது, நிலநடுக்கத்தை ஏற்படுத்தி மலை களைப் பிளக்கச் செய்து தேவன் தமது கோபத்தை வெளிப் படுத்தினார் (மத் 27:50,51). யாரோ ஒருவரது குற்றத்திற்காய்த் தனது மகனைக் கொடூரமாய்த் தண்டிக்கும் ஒரு தந்தையைக் கற்பனை செய்து பாருங்களேன்! ''என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?'' என்று இயேசு கதறினார் (வச 46). அது ஏசாயா 54:7,8இன் நிறைவேறுதலோ? ''நொடிப்பொழுதே நான் உன்னைக் கைவிட்டேன்; ஆயினும் பேரிரக்கத்தால் உன்னை மீண்டும் ஏற்றுக்கொள்வேன். பொங்கியெழும் சீற்றத்தால் இமைப்பொழுதே என் முகத்தை உனக்கு மறைத்தேன்; ஆயினும் என்றுமுள பேரன்பால் உனக்கு இரக்கம் காட்டுவேன்.'' ''இரக்கம்,'' (Mercy) ''கிருபை'' (Grace) ஆகிய இரண்டும் ''கோபத்திற்கு'' எதிர்மறையானவை (புல 3:22; எபே 2:3-5; 1 தீமோ 1:13,14; எபி 4:16). தகுந்த தண்ட னையைத் தடுத்து நிறுத்துவது தேவ ''இரக்கம்;'' தகுதியற்றோர்மீது பிரியம் காட்டுவது அவரது ''கிருபை.'' நாம் தள்ளப்படவேண்டிய நரகத்தினின்று நம்மைக் காப்பது ''இரக்கம்;'' தகுதியற்ற நம்மை மோட்சம் எடுத்துச்செல்வது ''கிருபை!''

இன்று தேவ கோபத்தினின்று விடுதலை என்பது தனிநபர் களுக்குத் தரப்படுவது: ''குமாரனை விசுவாசிப்பவன் நித்திய வாழ்வு உடையவன்; குமாரனை விசுவாசியாதவன் வாழ்வைக் காண மாட்டான்; தேவ கோபம் அவன்மீது வந்தமரும்'' (யோ 3:36). ''விசுவாசித்துத் திருமுழுக்கு பெறுகிறவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ தண்டனைத்தீர்ப்பு அடைவான்'' (மாற் 16:16). நித்திய தண்டனையிலிருந்து விடுதலை என்பது இன்று பிராந்திய அல்லது தேசிய அளவிலானது அல்ல. ஒவ்வொரு தனிநபரும் தனது பாவங்களிலிருந்து மனந்திரும்பி பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவாட்டுக்குட்டிமீது விசுவாசம் வைக்கவேண்டும்; அப்பொழுது தான் அவன் ''வரவிருக்கும் கோபத்திற்குத்'' தப்பமுடியும் (மத் 3:7; லூக் 3:7; யோ 1:29,36; ரோ 2:5,8).

தேவ கோபமானது சிலுவையில் ''ஆட்டுக்குட்டியானவர்'' மீது வந்தது; யுகங்களின் முடிவில் மனுக்குலமே ''ஆட்டுக்குட்டியான வரின் கோபத்தை'' எதிர்கொள்ள வேண்டியதிருக்கும் (வெளி 6:16,17). சிருஷ்டி கர்த்தர் என்ற ரீதியில் அவரே முழுவுலகிற்கும் சொந்தக்காரர், முழுவுலகையும் பராமரிக்கிறவர். நல்லது அல்லது தீயது என்று தெரிந்தெடுப்பு செய்வது மனிதனின் தனியுரிமை. ஆனாலும் அவனது விருப்பம்போல் அவனைப் போகவிட தேவனது அன்பு இடங் கொடுப்பதில்லை (ஏசா 53:6). அவரது குரலைக் கேட்க அவன் மறுக் கும்போது அவர் சினமடைகிறார். தேவ கோபத்தைக் கிளறிவிடும் 10 முக்கிய காரியங்களை பைபிள் குறிப்பிடுகிறது. அவற்றைச் சுருக்க மாய்ப் படிப்போம் —

## 1. விக்கிரகாராதனை

சிலைவணக்கம் போலக் கடவுளைக் கோபப்படுத்தும் பாவம் எதுவுமில்லை. பத்துக் கட்டளைகளில் முதல் இரண்டும் இதையே கண்டிக்கின்றன. கொலை 6ஆவதாகவும், விபசாரம் 7ஆவதாகவும்,



களவு 8ஆவதாகவும்தான் வருகின்றன! (யாத் 20:1-17). அவர் எவ்விதம் பத்துக் கட்டளைகளைப் பெற்றார் என்பதைக் குறிப்பிட்டு மோசே சொன்னது: ''நெருப்பிலிருந்து ஆண்டவர் உங்களோடு பேசினார். பேச்சு ஒலியை நீங்கள் கேட்டீர்கள்; உருவம் எதையும் காணவில்லை; குரல் மட்டும் கேட்டது ... ஓரேபு மலையில், நெருப் பினின்று ஆண்டவர் உங்களோடு பேசிய அந்நாளில், நீங்கள் எந்த உருவத்தையும் காணவில்லை. எனவே மிகவும் எச்சரிக்கையாயிருங் கள் ... வான் நோக்கிக் கண்களை உயர்த்தி, கதிரவன், நிலா, விண்மீன்கள், வான்படைகள் ஆகிய கண்ணால் காணுபவற்றிற்குமுன் நீங்கள் மண்டியிட்டு வணங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்'' (உபா 4:12-19). இவ்வார்த்தைகளை மோசே எவ்விதம் முடிக்கிறார் பாருங்கள்: ''உங்கள் கடவுளாகிய ஆண்டவர் அழிக்கும் நெருப்பு போன்றவர்; அவர் வேற்றுத் தெய்வத்தின் வழிபாட்டைச் சகிக்காத இறைவன்'' (வச 24).

கடவுளது விரலாலேயே எழுதப்பட்ட இரு கற்பலகைகளைப் பெற்றபின், மலையிலிருந்து இறங்கிவர மோசே சற்றுப் பிந்தியபோது, மக்கள் ஆரோனுக்கு அழுத்தம் கொடுத்து அவர்கள் வணங்குவ தற்காக ஒரு தங்கக் கன்றுக்குட்டி செய்துகொண்டார்கள்: மோசே மன்றாடியிராவிடில், தமது கோபக்கனலால் மக்களைத் தேவன் அழித்தொழித்திருப்பார் (யாத் 32:10,14). தேவனது கடுஞ்சினத் திற்குத் தப்பித்துக்கொள்ள எல்லாவிதச் சிலை வணக்கத்திற்கும் விலகியிருக்கவேண்டுமென்ற எச்சரிப்பு பரிசுத்த வேதாகமம் எங்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது (உபா 11:16,17; 2 நாளா 34:25; சங் 106:35,36,40). சிருஷ்டிகராகிய தம்மைத் தொழுதுகொள்வதற்குப் பதிலாக சிருஷ்டிக்கப்பட்ட எதையும் வணங்குவதைப் போன்று அவருக்கு எரிச்சல் உண்டாக்குவது வேறேதுமில்லை (ரோ 1:18-25). அது சிலுவையோ, சிலுவைச் சொரூபமோ (crucifix), எந்தச் சிலையோ, மோசேயே செய்த வெண்கலச் சர்ப்பமோ, எதற்கு முன்பும் ''வணங்குவதே'' விக்கிரகாராதனைதான் (யாத் 20:4,5; 2 இரா 18:4).

தேவன் கொடுத்த பத்துக் கட்டளைகளில் முதல் கட்டளையே அழுத்தமாய்ச் சொல்வது, ''என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது'' (யாத் 20:1-3). பல்வேறு நம்பிக்கைகளும் கோட்பாடுகளும் உள்ள நமது சமுதாயம் (pluralistic society) பெரும் பாலும் தன்னைப் பன்மைத் தெய்வ வணக்கத்திற்கே (polytheism) விற்றுப்போட்டுள்ளது. ஆனால் இது பைபிளுக்கும் கிறிஸ்தவத்திற் கும் எதிரானது. யேகோவா ஒருவரே தேவன் (சங் 83:17). அவரே ''தெய்வங்களுக்கெல்லாம் கடவுள்'' (God of gods) (உபா 10:17; யோசு 22:22; சங் 136:2). சிலைவணக்கம் நிறைந்த பாபிலோனின் அரசன் நேபுகாத்நேச்சாரே தானியேலிடம் செய்த அறிக்கை: ''நீர் வணங்கும் கடவுளே தெய்வங்களுக்கெல்லாம் கடவுள்'' (தானி 2:47). அவர் தெய்வங்களுக்கெல்லாம் கடவுள் மட்டுமல்ல, அவர் ''எல்லாத் தெய்வங்களையும்விடப் பெரியவர்'' (2 நாளா 2:5). இதுவே மன்னன் சாலொமோனின் துவக்கக் கால விசுவாச அறிக்கை. இந்த மனவுறுதியிலிருந்து அவர் பின்வாங்கியதால்தான் அவர்மீது தேவ கோபம் மூண்டது (1 இரா 11:4,9,10). ஆகாஸ் ராஜாவும் அப்படித்தான் (2 நாளா 28:24,25). ''இனி எனக்குச் சிலைகள் எதற்கு?'' என்று எப்பிராயீம் சொல்லும்போது அவன் மீதிருந்த கடவுளின் சினம் தணியும்; அவன் லீலி போல் மலருவான், திராட்சைச்செடி போல் செழிப்பான் (ஓசி 14:4-8).

''பைபிளின் தேவனே தெய்வங்களுக்கெல்லாம் கடவுள். அவரது மகனாகிய இயேசு மட்டுமே விண்ணகம் செல்ல ஒரே வழி. நாம் மீட்பு பெற வேறே எந்தப் பெயரும் கொடுக்கப்படவில்லை'' எனும் நமது செய்தியில் கிறிஸ்தவர்களாகிய நாம் சற்றும் சமரசம்பண்ணக் கூடாது (யோ 14:6; அப் 4:12). நம்மைக் குறுகிய மனப்பான்மை யுடையவர் என்று சமூகம் குறைகூறும்; அதைப்பற்றியென்ன? ஏனெனில் இடுக்கமான வாயில்தான் நித்திய வாழ்வுக்கான வழி, அகன்ற பாதையோ அழிவுக்குத்தான் வழிநடத்தும் (மத் 7:13,14). 2020 மே 8 அன்று இந்து வேதம் ஒன்றிலிருந்து ஒரு பிரார்த்த னையை வாசிக்கும்படி இந்து மத ஆச்சாரியார் ஒருவர் அமெரிக்கா



வின் தேசிய ஜெப நாளுக்கு (National Day of Prayer) அழைக்கப் பட்டார். கிறிஸ்தவ நாடு என்றழைக்கப்படும் ஒன்று இதற்கும் மோசமாகப் பின்வாங்க முடியுமா? Dr. பில்லி கிரஹாம் (1918-2018) மற்றும் 2020 மே 19 அன்று 74 வயதில் மகிமைக்குள் நுழைந்த Dr. ரவி சகரியாஸ் போன்ற தேவ மனிதர்களே முந்தைய ஆண்டுகளில் இந்த ஜெபத்தை நடத்தினர்.

## 2. மனந்திரும்ப மறுப்பு

''தேவன் பாவத்தை வெறுக்கிறார்; பாவியையோ நேசிக்கிறார்'' என்று நாம் அடிக்கடி சொல்வதுண்டு. உண்மைதான், ஆனால் மனந்திரும்ப மறுக்கும் பாவிகள்மீது அவர் சினங்கொள்கிறார் என்பதை மறந்து விடுகிறோம். தாவீதின் கூற்றுகளிலிருந்து இதோவொன்று: சங் 7:11-13, ''கடவுள் நடுநிலை தவறாத நீதியரசர்; பொல்லார்மீது நாள்தோறும் சினம் அடைகிறார்; அவர்கள் மனமாற்றம் அடையாவிடில், அவர் தமது வாளைக் கூர்மையாக்குவார்; வில்லை நாணேற்றி ஆயத்தம் செய்வார். கொலைக்கருவிகளை ஆயத்தமாக்குவார்; அம்புகளை அனல் பறக் கும்படி எய்வார்.'' தேவ கோபத்தை இதிலும் விளக்கமாய்ச் சித்தரிக்க முடியுமோ? நாம் ஏன் பாவத்திலேயே வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பதற்குச் சாலொமோனின் ஞானம் பதில் தருகிறது: பிர 8:11, ''தீமை செய்வோருக்குத் தகுந்த தண்டனை விரைவில் அளிக்கப்படாத தாலேயே, மக்களின் இருதயம் தீதானவற்றைச் செய்யத் துணிச்சல் கொண்டுள்ளது.'' சாலொமோன் இன்னும் சொல்வது, நீதி 29:1, ''பன்முறை கண்டிக்கப்பட்டும், ஒருவன் பிடிவாதமாய் மனதைக் கடினப்படுத்தினால், ஒரு நாள் திடீரென அழிக்கப்படுவான், பின்னர் பரிகாரம் கிட்டாது.''

முதல் நாள் துவக்கி மனுக்குலம் இறைவனது பொறுமையைத் தவறாகவே புரிந்துகொண்டிருக்கிறது. மனிதனது பொல்லாக் குணமும், நெறிகேடும் அவரது இதயத்திற்கு வேதனையளித்தபோது அவர் சொன்னது: ''எனது ஆவி மனிதனுடன் என்றும் போராடிக் கொண்டிருக்காது; அவன் வெறும் சதைதானே!'' (ஆதி 6:6,3). தேவனது

பொறுமை இனி நீடிக்காது என்றொரு நிலை வந்துவிட்டால் பேரழிவுதான். எப்பொழுதும் அவரை நாம் எதிர்த்துக்கொண்டிருக்க நம்மால் இயலாது என்பதால்தான் அவர் நம்மோடு போராடுவதை நிறுத்துகிறார். அவரது வார்த்தைகளைக் கவனிப்போம்: ''நான் எப்பொழுதும் வழக்காடமாட்டேன்; நான் என்றும் கோபமாய் இருப்பதுமில்லை; ஏனெனில் மனிதனின் ஆவியும் நான் உண்டாக்கின ஆத்துமாக்களும் எனது முகத்துக்குமுன் சோர்ந்துபோகுமே'' (ஏசா 57:16). கடவுளுக்கு யாக்கோபு தன்னை விட்டுக்கொடுக்காமலே இருந்தால், ஒரு கட்டத்தில் அவனது பலம் இருக்கும் தொடைச்சந்தையே அவர் தொட்டுவிடுவார். பின்னர் காலமெல்லாம் அவன் நொண்டியடிக்கத்தான் வேண்டும் (ஆதி 32:25,32). கவனம்! தேவனது மன்னிப்பு ஒரு பரவச அனுபவம்; அதே வேளையில் அது கொண்டுவரும் பொறுப்பும் சாதாரணமானதல்ல: ''இனிப் பாவம் செய்யாதே!'' இவ்வார்த்தைகள் இயேசுவின் வாயிலிருந்து இருமுறை வந்தன: ஒருமுறை ஓர் ஆடவனுக்கும், அடுத்தது ஒரு பெண்மணிக்கும் சொல்லப்பட்டன (யோ 5:14; 8:11). இவ்வார்த்தைகளுடன் அவர் சேர்த்துச் சொல்லியதைக் கவனிப்போம்: ''இதைவிடக் கேடானது உனக்கு வராதபடி ...''

தனிநபர்கள் மட்டுமல்ல, கிறிஸ்தவச் சபைகளும் மனந்திரும்ப வேண்டுமென்று இயேசு அழைக்கிறார். 7 சபைகளில் 5 சபைகளுக்கு அவரது செய்தி, ''மனந்திரும்பு'' என்பதே (வெளி 2:5,16,21,22; 3:3,19). ''மனந்திரும்பு'' என்ற வார்த்தையுடன் நிறுத்தாமல், ''இல்லாவிட்டால் ...'' என்றும் எச்சரித்தார். இவ்வழைப்பிற்கு இணங்காவிடில் அச்சபையே பிடுங்கியெறியப்படும், தேவன் தமது வாயின் பட்டயத்துடன் சபையினரோடு போராடுவார், அவர்களைப் படுத்த படுக்கையாக்குவார், குழந்தைகளை அழிப்பார், வாந்திபண்ணிப்போடுவார், இப்படிப் பல நடக்கும் (2:5,16,22,23; 3:16). எப்பிராயீமைப் போல நாம் ''அரைவேக்காட்டு அப்பம்'' போலவும் ''புத்தியற்ற புறா'' போலவும் இருந்தாலும், அன்புள்ளம் கொண்ட தேவன் நம்மிடம் சொல்வது: ''எப்பிராயீமே, நான் உன்னை எப்படிக்



கைவிடுவேன்? நீ என் செல்லப் பிள்ளை அல்லவா? என் உள்ளம் உனக்காய்க் கொதிக்கிறது, குழம்புகிறது, பொங்குகிறது; என் சீற்றத்தின் கனலைக் கொட்டமாட்டேன்'' (ஓசி 7:8,11; 11:8,9; எரே 31:20). கிருபையின் காலத்தை அசட்டை செய்யாதிருப்போம்!

சுய பரிசோதனை செய்துகொள்ளத் திருமறையிலுள்ள பாவப் பட்டியல்களைப் பயன்படுத்துவோம்: நீதி 6:16-19 ... தேவன் வெறுக்கும் 7 காரியங்கள்; மாற் 7:21-23; ... 13 பாவங்கள்; ரோ 1:29-32 ... 23 பாவங்கள்; கலா 5:19-21 ... 17 பாவங்கள்; 2 தீமோ 3:2-5 ... 19 பாவங்கள். ''தேவ கோபத்திற்கு'' ஆளாகும் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளின் பாவக் குணங்கள்தான் இவை (எபே 5:6). எத்தனைப் பிரசங்கங்கள் கேட்கிறோம்! எத்தனை கூட்டங்களில் பங்கேற்கிறோம்! எத்தனை நிகழ்ச்சிகள் பார்க்கிறோம்! எத்தனைப் புத்தகங்கள், பத்திரிகைகள் வாசிக்கிறோம்! எத்தனை ஆராய்ச்சி வேதாகமங்கள் வைத்திருக்கிறோம்! இவ்வளவு ஆன்மீக உணவு வேறெந்தத் தலைமுறையினருக்கும் கிடைக்கவில்லை. அறியாதவனுக்கு அடிகள் குறைவு; அறிந்தவனுக்கோ அடிகள் அதிகம் (லூக் 12:48). மீறுதலின் வகையைப் பொறுத்து, பாவ அறிக்கை தனித்தோ கூடியோ செய்யப்படவேண்டும். மனந்திரும்புதலின் ஜெபமாய்ச் சங்கீதங்கள் 6,32,38,51,102,130,143 ஆகியவற்றைப் பயன்படுத்தலாம். தேவனது கோபம் எவ்வளவு பயங்கரம் என்பதை உணர்ந்த தாவீது இவ்விதம் கதறினார்: ''கர்த்தாவே, உமது கோபத்தில் என்னைக் கண்டியாதேயும்; உமது எரிச்சலில் என்னைத் தண்டியாதேயும்'' (சங் 6:1; 27:9; 38:1). நமது தேவனின் தந்தையுள்ளத்தை நாம் வெகுவாய்ப் புண்படுத்தியிருக்கலாம்; ஆனால் முழுமனதுடன் அவரிடம் திரும்பிவந்தால் பாச முத்தங்களும் தடபுடல் வரவேற்பும் நமக்குக் காத்திருக்கும் (லூக் 15:20,25).

அடுத்து, நாம் நகர்களுக்கும் நாடுகளுக்கும் வருவோம். தனிப்பட்ட அளவில் கிறிஸ்தவர்களும், உள்ளூர்ச் சபைகளும் மனந்திரும்புதலின் கண்ணீரில் நனைந்தால் போதாது. தேவனே

சிருஷ்டிகர், அவரே இரட்சகர் என்று ஏற்றுக்கொண்டு நகர்களும் நாடுகளும் மொத்தமாய் அவரிடம் திரும்பவும் அவர் எதிர்பார்க்கிறார். வெளியிடங்களில் இயேசு கண்ணீர் விட்டார் என்று இரு சம்பவங் களை மட்டுமே சுவிசேஷப் புத்தகங்கள் குறிப்பிடுகின்றன: ஒன்று, பாவமானது உலகிற்குள் கொண்டுவந்த சோகத்தைப் பார்த்து ஒரு கல்லறைக்குமுன் நின்று (யோ 11:33-35); அடுத்தது, ஒரு நகரைப் பார்த்தபோது (லூக் 19:41). எருசலேமைப் பார்த்து அவர் புலம்பியது: ''எருசலேமே, எருசலேமே! இறைவாக்கினரைக் கொல்லும் நகரே! உன்னிடம் அனுப்பப்பட்டோரைக் கல்லால் எறிகிறாயே! கோழி தன் குஞ்சுகளைத் தன் இறக்கைக்குள் கூட்டிச்சேர்ப்பது போல நானும் உன் மக்களை அரவணைத்துக்கொள்ள எத்தனையோ முறை விரும்பினேன். உனக்கோ விருப்பமில்லையே. இதோ, உங்கள் இல்லம் கைவிடப்பட்டுப் பாழடையும்'' (மத் 23:37,38). கோராசின், பெத்சாயிதா, கப்பர்நகூம் ஆகிய நகர்களையும் கடுஞ்சொற்களால் ஆண்டவர் திட்டினார் (மத் 11:20-24). ''தீர்ப்பின் நாள்'' மற்றும் ''பாதாளம்'' போன்ற வார்த்தைகளால் அவற்றை எச்சரித்தார். நினிவே பட்டணத்தை மேற்கோள் காட்டி, அது எவ்விதம் தமது கடுஞ்சினத் திற்குத் தப்பியது என்பதை நினைவுபடுத்தினார் (யோனா 3:5-10; மத் 12:41; நாகூம் 1:1,6). சோதோமின் மக்கள் தொகையில் 10 நீதிமான்கள் என்பது என்ன சதவீதம் என்பது நமக்குத் தெரியாது (ஆதி 18:32). நமது நகர்களில் இந்தச் சதவீதம் இன்னும் குறைவோ? ''தேவா, எங்கள் நகர்களிலுள்ள பேயாட்டங்களைத் துரத்திப் பேரின்பம் கொண்டுவரக்கூடிய பிலிப்பு போன்ற சுவிசேஷகர்களை எங்களுக்கு அனுப்பித் தாரும்!'' (அப் 8:5-8). ஊரெங்கும் உல கெங்கும் உரக்கக் கத்தவேண்டிய இரு முழக்கங்கள்: ***''தேவனிடம் திரும்புவோம்!'' ''பைபிளுக்குத் திரும்புவோம்!''*** *Back to God! Back to the Bible!*

''ஆண்டவரே, சென்னை, பெங்களூரு, மும்பை, டெல்லி, லண்டன், பாரிஸ், நியூயார்க், கலிபோர்னியா, மாஸ்கோ, டோக்கியோ, பெய்ஜிங் போன்ற எங்கள் நகர்களில் மனந்திரும்புதல் நதியாய்ப்



புரண்டு வராதா? எங்கள் பாலியல் பாவங்களுக்காய் நாங்கள் நியாயந்தீர்க்கப்படும் வகையில் எய்ட்ஸ் நோயினால் 3,20,00,000 பேர் மாண்டுவிட்டனரே! ஓரினச் சேர்க்கை, ஓரினத் திருமணம் போன்ற சீர்கேடான மாறுபாடுகளைச் சட்டரீதியாக்கிவிட்ட எங்களை மன்னியும், கர்த்தாவே!'' (ரோ 1:24-27). இந்தியாவில் 6,37,500க்கும் அதிகமான பாலியல் தொழிலாளர் இருக்கின்றனர்; சிவப்பு விளக்குப் பகுதிகளுக்குத் தினமும் செல்வோர் 5,00,000 பேர். பிரியமானவர்களே, பாலியல் பாவங்களினால் நமது உடலை நாம் கெடுத்தால் பாலியல் வியாதிகளினால் (Sexually Transmitted Diseases) தேவன் அதனை அழிப்பார் (1 கொரி 3:16,17; 6:17-19). பாகிஸ்தானிலும் ராஜஸ் தானிலும் சமீபத்தில் படையெடுத்துள்ள வெட்டுக்கிளிகள் நமக்கு அடுத்த அச்சுறுத்தல்! (2 நாளா 7:13,14). கடந்த சில பத்தாண்டுக் காலங்களில் இதுவே அதிமோசமாயிருக்கும் என்பது கணிப்பு.

## 3. தேவன்மீது அவிசுவாசம்

முதல் மனிதனும் அவன் மனைவியும் செய்த முதல் பாவம் அவர்களிடம் கடவுள் சொல்லியிருந்ததை விசுவாசியாததே (ஆதி 2:16,17; 3:1,17). இதனால்தான் அவரது கோபம் மனுக்குலம் அனைத்தின்மீதும் வந்தது. வேதனை, துக்கம், இறப்பு ஆகியவை தொடர்ந்தன. தம்மிடம் திரும்பி வந்து அவர்மீது விசுவாசம் வைக்க வேண்டுமென்பதே ஆதிமுதல் தேவனிடமிருந்து மனிதனுக்கு வரும் அழைப்பு. ''விசுவாசம் இல்லாது தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்'' (எபி 11:6). தேவன்மீதும் அவரது வார்த்தைமீதும் அவிசுவாசம் என்பது எவ்விதப் பாவங்களையும்விடக் கொடியது. கொலையோ, களவோ, விபசாரமோ, இவை போன்ற எப்பாவமோ செய்துவிட்ட எவருக்காவும் மன்னிப்பு வேண்டி நாம் தேவனிடம் ஜெபிக்கலாம்; அவிசுவாசமாகிய பாவத்திற்காய் அவ்விதம் வேண்ட முடியாது (1 யோ 5:16,17). இயேசுவை விசுவாசியாதிருப்பதே பாவங்களிலெல்லாம் பாவமாம்; அந்நபர் ஏற்கனவே தேவ கோபத் தினால் தீர்ப்பு அடைந்தாயிற்று (யோ 3:18,36). இரட்சிக்கப்படும்படி

இயேசுவின்மீது விசுவாசம் வைக்காத பிரதான காரணத்தினாலேயே மக்கள் நரகம் செல்கின்றனர் (மாற் 16:16). கிறிஸ்துவைப் புறந்தள்ளுவோருக்கு இதோவோர் அழைப்பு: ''குமாரனானவர் கோபம் கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படி, அவரை முத்தம் செய்யுங்கள்; விரைவில் அவரது கோபம் பற்றியெரியும்; அவரை நம்பி அவரிடம் அடைக்கலம் புகுவோர் அனைவரும் பேறுபெற்றோர்'' (சங் 2:12).

மோசேக்கும் ஆரோனுக்கும் கானானுக்குள் செல்வதற்கான நுழைவுச்சீட்டு (Visa) ரத்து செய்யப்பட்டது போன்று அவிசுவாசத் திற்கான தண்டனையை வேறெந்த நிகழ்வும் சித்தரிக்க முடியாது. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து எபிரெய மக்களை விடுவித்துக் கொண்டுவந்த முக்கிய தலைவர்களே மோசேயும் ஆரோனும். மோசே போன்று அவருக்கு முன்னரும் பின்னரும் ஒரு தீர்க்கன் எழும்பிய தில்லையென்று தேவனே சான்று பகன்றார் (உபா 34:10-12). அவர் புறங்கூறப்பட்டபோது, ''என் வீடு முழுவதிலும் அவரே நம்பிக் கைக்குரியவர்'' என்று தேவன் அவருக்காய்ப் பேசினார் (எண் 12:7; எபி 3:2,5). இஸ்ரவேலரின் சரித்திரத்தில் முதல் ஆசாரியன் ஆரோன்தான் (எபி 5:4; யாத் 28:1). பார்வோனுக்குமுன் மோசேக்கு வாயாகச் செயல்பட்டவர் அவரே (யாத் 4:16; 7:1). இப்படியெல்லாம் இருக்க இவ்விருவரின் பெரிய பாவம்தான் என்ன? தண்ணீருக்காய் மலையைப் பார்த்துப் ''பேசுங்கள்'' என்று மோசேயிடமும் ஆரோனிடமும் தேவன் சொன்னார்; அவர்களோ மலையை, அதுவும் இருமுறை, ''அடித்து விட்டனர்'' (எண் 20:8,11). பெருக்கெடுத்துத் தண்ணீர் வந்தது உண்மைதான்; ஆனால், தேவனைப் பொருத்தமட்டில் அவரது பெயரை இஸ்ரவேலருக்குமுன் பரிசுத்தப்படுத்தும்படி இவ்விருவரும் போது மான அளவு அவரை ''விசுவாசிக்கவில்லை'' (வச 12). ''நீங்கள் வாக்குப்பண்ணப்பட்ட நாட்டிற்குள் நுழையமாட்டீர்கள்'' என்று தேவன் அவர்களிடம் உடனே சொல்லிவிட்டார். அந்நாட்டினைப் ''பார்க்க''



மட்டும் மோசே அனுமதிக்கப்பட்டார் (உபா 32:52). கைக்கெட்டியது வாய்க்கெட்டாது போய்விட்டது! அவிசுவாசம் எவ்வளவாய்த் தேவனுக்குக் கோபம் உண்டாக்குகிறது பாருங்கள்!

தலைவர்கள் மட்டுமல்ல, மக்களும் அவிசுவாசத்தினால் கானானுக்குள் நுழைய முடியாது போயிற்று (எபி 3:19). அவர்களைக் குறித்து தேவன் சொன்னது: ''அத்தலைமுறையினர்மீது நான் சினம் கொண்டேன் ... எனவே எனது இளைப்பாறுதல் எனும் நாட்டிற்குள் அவர்கள் நுழையவே மாட்டார்கள் என்று எனது கோபத்தில் ஆணை யிட்டேன்'' (3:10,11; 4:3; சங் 95:11). நாற்பது ஆண்டுகள் அத் தலைமுறையினர் தமக்கு ''வெறுப்பூட்டினார்கள்'' என்று தேவன் புலம்பினார் (சங் 95:10). அத்தனை ஆயிரம் பேருக்கு நாற்பது ஆண் டுகள் பாலை நிலத்தில் உணவளித்து, அவர்களது தேவையனைத் தையும் சந்தித்தது என்னே அற்புதம்! அவர்கள் மேலிருந்த ஆடைகள் நைந்து போகவில்லையாம்; அவர்கள் காலணிகள் பழுதடைந்து போகவில்லையாம் (உபா 29:5). அவ்வளவு காலம் நடந்தே சென்ற பின்னரும் அவர்கள் பாதங்கள் கொப்பளிக்கவில்லையாம் (நெகே 9:21). நம்ப முடிகிறதோ? இத்தனை ஆசிகளை அனுபவித்திருந்தும், தேவனது அற்புத வல்லமையை அவர்கள் விசுவாசிக்கவில்லை. ''தேவனால் முடியும்'' (God can!) என்று அடித்துச் சொல்வதற்குப் பதிலாக, ''தேவனால் முடியுமா?'' (Can God?) என்று அசட்டையாய்க் கேட்டனர் (சங் 78:19,20). இதைக் கேட்ட ஆண்டவர் சினம் கொண்டார்; அவர்கள்மீது அவரது சீற்றம் பொங்கியெழுந்தது (வச 21). ஓரேபிலிருந்து வாக்குத்தத்த நாட்டிற்குச் செல்ல பதினொரு நாட் கள்தான் பிடிக்கும் (உபா 1:1). ஆனால் ஆண்டவரின் சினம் இஸ்ர வேலருக்கு எதிராக மூளவே, அவர் அவர்களை அப்பாலை நிலத்தில் நாற்பது ஆண்டுகள் அலையச் செய்தார்; அந்தப் பொல்லாத தலை முறை அனைத்தும் அழியுமட்டும் இது நடந்தது (எண் 32:13,14). அறிவியலுக்காகவும் தொழில்நுட்பவியலுக்காகவும் தேவனைத் துதிப்போம்; ஆனால் இயற்கைக்கப்பாற்பட்ட அவரது வல்லமையை நாம்

விசுவாசிக்கத் தவறும்போது அவரது கோபம் பொங்கியெழுகிறது. COVID-19க்கு எதிரான நமது போராட்டத்தில் நமது பகுத்தறிவு நமக்குப் போதுமான அளவு கைகொடுக்கவில்லையே! குழந்தை போன்ற எளிய விசுவாசத்துடன் தமது பிள்ளைகள் தம்மிடம் திரும்பி வருவது போன்று தந்தைக்கு மகிழ்வூட்டுவது எதுவுமில்லை. அவரது மாளிகைகள் அவர்களது வருகைக்காய்க் காத்திருக்கின்றன (யோ 14:1-3).

## 4. பொருளாசை

ஏசாயா 5ஆம் அத்தியாயத்தில் ''ஐயோ'' என்று 6 முறை கூறப்பட்டுள்ளது (வச 8,11,19,20,21,23). பொருளாசைக்குத் தங்களை விற்றுப்போட்டவர்களுக்குத்தான் முதலாம் ''ஐயோ!'' வச 8, ''வீட்டோடு வீடு சேர்ப்பவர்களே, வயலோடு வயல் இணைத்துக் கொள்பவர்களே, உங்களுக்கு ஐயோ கேடு! பிறர்க்கு இடமில்லாமல் நீங்கள் மட்டும் தனித்து நாட்டில் வாழ்வீர்களோ?'' இவ்வித மக்க ளுக்கு எதிராக ஆண்டவரின் சினம் எனும் தீ கிளர்ந்தெழுகிறது (வச 25). செல்வந்தர் இன்னும் செல்வந்தராகுவதும், எளியவர் இன்னும் எளியவராகுவதுமான நிலையே இது. அமெரிக்காவிலுள்ள 600 கோடீஸ்வரர்களின் சொத்து இந்தக் கரோனா ஊரடங்கு காலத்தில் சராசரியாக 15% அதிகரித்திருக்கிறது என்பதை உங்களால் நம்ப முடிகிறதா? தேவனிடம் பாரபட்சம் கிடையாது. இஸ்ரவேலரது பாலைவனப் பயணத்தின்போது தேவன் அவர்களுக்கு வானத்தின் அப்பமாகிய மன்னாவை வழங்கிய அடிப்படையில் ''சமத்துவம்'' எனும் கோட்பாட்டைப் பவுலடியார் போதிக்கிறார் (2 கொரி 8:12-15; யாத் 16:17,18). இத்தத்துவம் பெந்தெகொஸ்தேயைத் தொடர்ந்து ஆதிச் சீடரால் தன்னார்வமாய்ப் பின்பற்றப்பட்டது (அப் 2:44,45; 4:32). இன்றும் இதனைச் செயல்படுத்தவேண்டுமா என்ற விவாதத்திற்குள் நான் செல்ல விரும்பவில்லை. ஆனாலும், நமது தேவைக்கும் மிஞ்சி தேவன் நமக்குக் கொடுப்பது, தேவையில் இருப்போருக்கு அதனைப் பகிர்ந்துகொள்வதற்காகவே என்பது மாறாத நியமம். நம் நடுவிலிருந்து



பொருளாசையை அடியோடு ஒழித்துக்கட்டுவதற்கு இது ஒன்றே வழி. சராசரியான ஒரு அமெரிக்கப் பெண்மணி 19 ஜோடி காலணிகள் வைத்திருக்கிறார்களாம்! இதற்கு நேராகவே இந்தியாவும் ஓடிக் கொண்டிருக்கிறது.

பைபிளில் எத்தனையோ பாவங்கள் கண்டிக்கப்பட்டுள்ளன; ஆனால், ''பண ஆசையே **எல்லாத்** தீங்குக்கும் வேர்'' என்று அது போதிக்கிறது (1 தீமோ 6:10). எனவேதான் மரங்களின் ''வேர்'' அருகிலேயே திருமுழுக்கினன் யோவான் கோடரியை வைத்தார். அவர் முழங்கியது: ''நல்ல கனி தராத மரமெல்லாம் வெட்டப்பட்டு நெருப்பில் போடப்படும்'' (மத் 3:10). ''நல்ல கனி'' கொடுப்பதற்கான வழிமுறைகளைச் சொல்லிக்கொடுக்கும்போது, பொருளாசை கூடாது, தானதர்மம் கட்டாயம் என்றே நெடுகவே வலியுறுத்தினார் (லூக் 3:10-14). அவரைப் பொருத்தமட்டில், பொருளாசைக்கு வந்தனம் சொல்லி அதனை அகற்றிவிடுவதே, ''வரவிருக்கும் கோபத்திற்குத்'' தப்பும் ஒரே வழியாம் (வச 7). யோவானது தண்ணீர் ஞானஸ்நானத்திற்குத் தப்பிக்கொண்ட சகேயு தணல் ஞானஸ்நானம் கொடுப்பவரிடம் மாட்டிக்கொண்டார்! தனது பொருளாசைப் பழக்கங்களை ஒழித்துவிடத் தீர்மானித்தபோது, இரட்சகர் தமது இரட்சிப்பின் பொக்கிஷங்களை அவரது வீட்டில் கொட்டிவிட்டார் (லூக் 19:8,9).

பொருளாசை கொண்டிருந்த சிலர்மீது இறங்கிய தேவ கோபம் குறித்து விவிலியத்தில் ஆங்காங்கே வாசிக்கிறோம். ஒருவன் பிலேயாம் தீர்க்கதரிசி (எண் 22:22). இச்சரித்திரம் நமக்கு நன்றாகவே தெரியும். இவனது செயலைக் ''கூலிக்காகச் செய்த வஞ்சகம்'' எனக் குறிப்பிட்டு, இந்த வழியில் செல்வோருக்கு ''ஐயோ'' என்கிறார் அப்போஸ்தலன் யூதா (யூதா 11). அடுத்த நபர் யூதாஸ் காரியோத். அவன் துவக்க முதலே திருடனாயிருந்தும், அவன் திருந்துவதற்கு வாய்ப்பு கொடுக்கும்படி, பணப்பையை இயேசு அவனிடம் ஒப்படைத்திருந்தார் (யோ 12:6). மூன்றாண்டுகளுக்குமேல் ஆண்டவர்

அவனுக்குக் கயிற்றை விட்டுக்கொண்டேயிருந்தார். அவனது பொரு ளாசையினால் அவன் அக்கயிற்றிலேயே தூக்கு போட்டுக்கொண்டான்! (அப் 1:16-18). அவன் ''கேட்டின்'' மகனானான் (யோ 17:12). பண ஆசையானது மனிதரை ''அழிவிலும் கேட்டிலும் அமிழ்த்தும்'' என்று பின்னர் பவுல் எச்சரித்தார் (1 தீமோ 6:9). அடுத்து திருவாளர் அனனியாவும் திருமதி சப்பீராளும் வருகின்றனர் (அப் 5:1-11). ஆதிச் சபையில் முதல் முறையாகத் தீர்ப்பு விழுந்தது இத்தம்பதியர்மீதுதான்; அதுவும் பணக்காரியத்தில்! சொன்னபடி கேட்கும் கணவனுக்கு உடனடி மரணம்; ஆருயிர் மனைவிக்குத் தகவல் தெரிவிக்காது அவனது அடக்கம்; ஒரு சில மணி நேரங்களில் அம்மையாருக்கும் அடித்தது சாவு மணி! பொருளாசைப் பிசாசு பிடித்த ஒருமன ஜோடிக்கு என்னே கதி பாருங்கள்! நண்பரே, எழுப்புதலுக்காய் ஜெபிக்கும்போது கவனமாயிருங்கள். சபைகள்மீது ''பரிசுத்த ஆவியானவரின்'' அக்கினி விழும்போது இவ்வித நிகழ்வுகள் வாடிக்கையாகிவிடும் (வச 3,9).

நாம் விக்கிரக வணக்கம் செய்வதில்லையென்று எப்படித்தான் மார்தட்டுகிறோமோ? பொருளாசையை விக்கிரகாராதனை என்றும், பொருளாசைக்காரனை விக்கிரகாராதனைக்காரன் என்றும் பவுல் தயங்காது அழைக்கிறார் (கொலோ 3:5; எபே 5:5). இவ்விரு வசனப் பகுதிகளிலும் வரவிருக்கும் ''தேவ கோபத்தை'' அப்போஸ்தலன் குறிப்பிடுகிறார் (கொலோ 3:6; எபே 5:6). இப்பாவத்தை அவர் அளவுக்குமீறிக் கண்டிக்கிறார் என்று நான் சொல்ல மாட்டேன். அவருக்கு ஏசாயா 57:17 நன்றாகவே தெரிந்திருக்கும். அதில் ஆண்டவர் சொல்வது: ''நான் அவர்களது பொருளாசை எனும் அக்கிர மத்தின் பொருட்டுக் கடுங்கோபமாகி, அவர்களை அடித்தேன்; நான் மறைந்து, கடுங்கோபமாய் இருந்தேன்; தங்கள் மனம் போன போக்கில் மாறுபாடாய் நடந்தார்களே!'' எபேசுவிலும் கொலோசே யிலும் இருந்த விசுவாசிகளுக்குப் பவுல் எழுதும்போது யோபுவின் அறிக்கை அவரது மனதில் பசுமையாய் இருந்திருக்கும்: யோபு 31:24-28, ''நான் பொன் மீது நம்பிக்கை வைத்து, தங்கமே எனது தஞ்சம் என்று சொல்லியிருந்தால், அது நீதியரசர்களால் விசாரிக்கப்



படவேண்டிய அக்கிரமமாய் இருந்திருக்கும்; அதனால் உன்னதத்தில் இருக்கும் தேவனை மறுதலித்திருப்பேனே!'' மூச்சடைத்து நம்மைச் சாகடிப்பதில் கரோனாவைவிடப் பொருளாசை கொடியது (மத் 13:22; நீதி 1:19).

## 5. தானதர்மமின்மை

தானதர்மத்திற்குப் பொருளாசை பரம எதிரி. சேமிப்பைக் கூட்டிக் கொண்டேயிருக்க விரும்பினால் தானதர்மத்தைக் குறைத்துக் கொண்டேதான் இருப்போம். ஏசாயா 5ஆம் அத்தியாயத்தில் சொல்லப்பட்டுள்ள ஆறு ''ஐயோ''க்களில் முதலில் வருவதை முந்தையக் குறிப்பில் சுட்டிக்காட்டினேன். தாங்கள் மட்டுமே நாட்டில் தனித்து வாழும்படி, மற்றவர்களுக்கு இடமில்லாமல்போகும் அள வுக்கு, வீடு வீடு என்று கட்டுவதிலும், நிலம் நிலம் என்று வாங்கு வதிலும் பைத்தியமாயிருப்போரைப் பற்றியது அது (ஏசா 5:8). தேவைக்கு மிஞ்சிச் சேர்ப்பதில் பேராசை கொண்டால், எல்லாமே குறைந்துகொண்டு வரும் இவ்வுலகில், மற்றவர்களுக்குச் சேர வேண்டியவற்றையும் நாம் அபகரிக்கிறோம் என்றுதான் பொருள். மற்றவர்களை ஆசீர்வதிக்கவே இறைவன் நம்மை ஆசீர்வதிக்கிறார். அவர் நமக்கு நிறைய துணிமணி தருவாரானால், உடையற்றோரை நம்மால் முடிந்த அளவு நாம் உடுத்துவிக்க வேண்டும் என்பதே அவரது எதிர்பார்ப்பு. அவர் நமக்கு நிறைய உணவு வகைகள் தரு வாரானால், பசியிலிருப்போருக்கு நம்மால் முடிந்த அளவு நாம் உணவளிக்கவேண்டும் என்பதே அவரது விருப்பு. அவர் நமக்கு வசதியும் சொகுசும் நிறைந்த இல்லங்கள் தருவாரானால், தங்க இடமின்றித் தவிப்போருக்கு நம்மால் முடிந்த அளவு நாம் உறைவிட வசதி செய்து தரவேண்டும் என்பதே அவரது மனத்துடிப்பு. இவற்றைச் செய்யத் தவறுவோர் இறைவனது கோபத்திற்கு ஆளாவர். அவர்களைப் பார்த்து இயேசு ராஜன் சொல்லப்போவது: ''சபிக்கப் பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும் அவனது தூதர்களுக் காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கும் அணையா அக்கினிக்குள்

செல்லுங்கள்'' (மத் 25:41-46). ''குபேரன்'' என்று இவ்வுலகில் தூக் கப்படுபவன் ''குப்பை'' என்று மறுவுலகில் தூக்கியெறியப்படலாம்! தலைகீழ் மாற்றம்!

இந்தக் காரியத்தில்தான் யோபு வித்தகரானார். கீழை நாட்டு மக்களில் மிக வசதி படைத்தவர் இவர்தான் (யோபு 1:3). தானதர்மத்திலும் வள்ளலாயிருந்தார். குருடருக்கு அவர் கண்களானார், முடவருக்குக் கால்களானார், தரித்திரருக்குத் தந்தையானார், உதவியற்றோருக்கு வக்கீலானார், பலங்குன்றியோருக்காய்ப் போராடுபவரானார், விதவைகளை மகிழ்விக்க இசைக்கலைஞரானார் (29:13-17). இல்லாதோரோடும் இரப்போரோடும், அப்பப்பா, எவ்வளவாய்த் தம்மை இணைத்துக்கொண்டார்! ''நலிந்தோருக்கும் நாதியற்றோ ருக்கும் போதுமான அளவு நான் உதவியிராவிடில், எனது தோள் மூட்டு, தோளிலிருந்து நெகிழட்டும், எனது முழங்கை மூட்டு முறிந்து கழலட்டும்'' என்றார்! (31:16-22). ''யோபு தாத்தா, இப் படியும் உங்களால் சொல்லமுடியுமா?'' தானதர்மம் என்பது நமது விருப்பு வெறுப்பைப் பொறுத்ததல்ல, அது கட்டாயம் என்பதை வலியுறுத்த அவர் தொடர்ந்து சொன்னது: நான் இவ்விதம் செய்யா விடில், ''இறைவன் அனுப்பும் அழிவு எனக்குப் பேரச்சம்; அதற்கு முன் என்னால் எதுவும் இயலாது'' (வச 23). வாசக நண்பரே, *''தேவ னுக்கு நம்மீது கோபமா?''* என்பதே இக்கட்டுரையின் தலைப்பு என்பதை நினைவிற்கொள்ளுங்கள். ''எங்கிருந்து'' கரோனா வந்தது என்று கண்டுபிடிக்கும் முயற்சியில் உலகச் சுகாதார நிறுவனம் (WHO) இறங்கியிருக்கிறது; அதை ''யார்'' அனுப்பியிருக்கக்கூடும் என்று பைபிளைப் படித்து ஆராய்ந்து பார்ப்பது மேல் (2 இரா 22:13; யோபு 12:9,10).

பண்ணையாளர்கள், தொழிலதிபர்கள் மற்றும் முதலாளிகளுக்கு ஒரு வார்த்தை. யாக்கோபு 5:1-6ஐத் தயவுசெய்து வாசித்துப் பாருங் கள். இவ்வசனப்பகுதியின் துவக்க வரிகளே நடுங்க வைக்கின்றன: ''செல்வர்களே, சற்றுக் கேளுங்கள். உங்களுக்கு வரப்போகும்



இழிநிலையை நினைத்து அலறி அழுங்கள்'' (வச 1). ''செல்வம், ஆடைகள், பொன், வெள்ளி, ஆடம்பரம், சொகுசு'' ஆகியவற்றையே அப்போஸ்தலன் இங்கு சுட்டிக்காட்டுகிறார். இவ்விதச் செல்வக் குவிப்பே ''நெருப்பு போல உடையோரின் சதையை அழித்துவிடும்'' என்று எச்சரித்த பின்னர், கூலியாட்களுக்கு இழைக்கப்படும் அநி யாயம் குறித்துப் பேசுகிறார் (வச 3). சொந்த ஆதாயத்திற்காய்த் தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிதல் முதலாளித்துவ நாடுகளில் மட்டுமல்ல, இந்தியா போன்ற நாடுகளிலும் இல்லாமலில்லை. 2018இன் அகிலவுலக அடிமைகள் கணக்கெடுப்பின்படி (Global Slavery Index) இந்தியாவில் 80,00,000 கொத்தடிமைகள் உள்ளனர். இன்றைய நெருக்கடியில் இந்த எண்ணிக்கை பெருகியவண்ணம் இருக்கின்றது. வேலையில்லாத் திண்டாட்டத்தைக் கோடீஸ்வரர்கள் சாதகமாக்கிக்கொண்டு, தொழிலாளர்களைக் குறைந்த வேலை களிலும், குறைந்த கூலியிலும் அமர்த்துவது வாடிக்கையாகிவிட்டது. ''குறைந்தபட்ச ஊதியச் சட்டம்'' (Minimum Wages Act) என்பதெல் லாம் எழுத்தளவில்தானிருக்கிறது. கிறிஸ்தவ மிஷனரி நிறுவனங் களில்கூட இச்சட்டத்தைப் பின்பற்றாதது துக்கம். திருமறையின் தேவன் எளியோரின் தேவன் என்பதை மறக்காதிருப்போம். கூலி யாட்களின் கூக்குரல் ''படைகளின் ஆண்டவரது காதுகளை'' எட்டு கின்றதாம் (வச 4). ''சேனைகளின் கர்த்தர்'' அல்லது ''படைகளின் ஆண்டவர்'' என்று பழைய ஏற்பாட்டில் யேகோவா தேவன் எத்த னையோ முறை அழைக்கப்பட்டிருக்கிறார்; புதிய ஏற்பாட்டிலோ மூன்று முறை மட்டுமே இவ்விதம் அழைக்கப்படுகிறார்: ரோமர் 9:29; 2 கொரி 6:18; அடுத்து யாக்கோபு 5:4 என்ற இவ்விடத்தில். நலிந்தோரை நசுக்குவோருக்கு எதிரான போராளி என்றே இதனால் அவரை நான் புரிந்துகொள்கிறேன். இக்கட்டான இக்காலக்கட்டத் தில், தளர்வடைந்த நிலையிலிருந்து (slowdown) தகர்ந்துவிட்ட நிலைக்கு (shutdown) பொருளாதாரம் சரிந்துள்ளது. இதில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளோர் அடித்தட்டு மக்கள்தான். எனவே, நடுத்தரக் குடும்பங்களும் எளியோருக்குச் செய்யும் தானதர்மத்தை இருமடங்கு

அல்லது மும்மடங்கு ஆக்கவேண்டும். தாங்களே பொருளாதார நெருக்கடியிலிருக்கும்போது மக்கெதோனியக் கிறிஸ்தவர்கள் செய்தது இதுதானே? (2 கொரி 8:1-3).

தொழிலாளர் சமுதாயத்தினரிடம் திருச்சபைக்கு வெளியேயுள்ள பொதுவுலகே கூடுதல் பரிவோடும் புரிதலோடும் நடந்துகொள்ளுகிறது. இந்த மாற்றம் கிறிஸ்தவக் குடும்பங்களுக்குள் இன்னும் போதுமான அளவு வராதது குறித்து வருந்துகிறேன். ''வேலைக்காரன்'' அல்லது ''வேலைக்காரி'' (servant) என்றல்ல, ''உதவியாளர்'' (helper) என்றே அழைக்கவேண்டும்; ''ஊனமுற்றோர்'' (disabled) அல்ல, ''மாற்றுத் திறனாளிகள்'' (differently abled); தோட்டிகள் (sweepers / scavengers) அல்ல, ''தூய்மைத் தொழிலாளர்'' (sanitary workers); இப்படிப் பல. கொத்தடிமைகள், குழந்தைத் தொழிலாளர்கள் போன்றவற்றிற்கெல்லாம் கிறிஸ்தவ வட்டாரங்களில் இடமேயிருக்கக் கூடாது. உதவியாளர்களோடும் கீழ்மட்ட ஊழியர்களோடும் பேசும் போதும் பழகும்போதும் அச்சுறுத்தலான அல்லது அவமதிப்பான வார்த்தைகளைப் பயன்படுத்தக்கூடாது. விண்ணுலகில் நமக்கும் மேலே இருக்கும் அரும்பெரும் ''தலைவரை'' மறந்துவிடக்கூடாதென்கிறார் பவுல் (எபே 6:9). ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்! (சங் 112:3-5,9; 2 கொரி 9:9). வீட்டு வேலை செய்பவர்கள் இந்தியாவில் 50,00,000 பேருக்குமேல் உள்ளனர்; அவர்களில் 80 சதவீதத்தினர் பெண்கள். இவர்களில் பெரும்பாலோர் வீடுகளில் வாங்கிவிட்ட கடனை அடைக்கமுடியாமல் காலமெல்லாம் கடன்காரராய், நாளடைவில் கொத்தடிமைகள் என்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இவர்களது கடன்களைத் தள்ளிவிடும்படி இல்லத் தலைவிகளை இறைஞ்சிக் கேட்கிறேன். இதனால் நீங்கள் ஏழையாகிவிடமாட்டீர்கள். மத்தேயு 6:9-13இலும் லூக்கா 11: 2-4இலும் உள்ள கர்த்தரது ஜெபம் *''கடன்கள்''* மற்றும் *''கடனாளிகள்''* குறித்தே முக்கியமாய்ப் பேசுகிறது; நாமோ நமது வசதிக்காக, கெட்டிக்காரத்தனமாய், *''பாவங்கள்''* அல்லது *''குற்றங்கள்''* என்று



மாற்றிக்கொண்டோம்! உங்கள் குடும்ப ஜெபங்களிலும் ஆலய ஆராதனைகளிலும் இதனைத் திருத்திக்கொள்ளுங்கள். மத்தேயு 18:23-35ஐ வாசித்துப்பார்த்து, ''தேவனே, என்னோடு பேசும்'' என்று கேளுங்கள்.

## 6. அன்பற்ற சகவுறவுகள்

தேவனால் ''சபிக்கப்பட்ட'' முதல் மனிதன் காயீன்தான் (ஆதி 4:11). துல்லியமாய்க் கவனித்தால், ஆதாமும் ஏவாளும் ''சபிக்கப்படவில்லை;'' அவர்கள்மீது தண்டனை அறிவிக்கப்பட்டது, அவ்வளவுதான். சர்ப்பமும் நிலமும் மட்டுமே ''சபிக்கப்பட்டன'' (3:14-19). அப்படியானால் சகவுறவுகளில் கேடுபாட்டைத் தேவன் எவ்வளவாய் வெறுக்கிறார் பாருங்கள்! நாம் ''காயீனைப்போல்'' இல்லாது, ''ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டும்'' என்பதே ''ஆதிமுதல்'' நாம் கேட்ட பிரதான செய்தி என்று அப்போஸ்தலன் யோவான் எழுதுகிறார் (1 யோ 3:11,12). ஆபேலைக் காயீன் கொன்றது தன்னிடமிருந்து ஆபேல் எதையோ அபகரித்துக்கொண்டதாலோ, அல்லது தனக்கு விரோதமாய் ஆபேல் செயல்பட்டதாலோ, இப்படி எதினாலும் அல்ல. அண்ணனது செயல்கள் தீயவையாகவும் தம்பியின் செயல்கள் நல்லவையாகவும் இருந்த ஒரே காரணத்தினாலேயே மனுக்குலச் சரித்திரத்தில் இந்த முதலாம் கொலை நடந்தது (வச 12). தீயோரது செயல்கள் தீயவையாயிருப்பதாலும், நல்லோரது செயல்கள் நல்லவையாயிருப்பதாலுமே, நல்லோரைத் தீயோர் வெறுக்கின்றனர்! அடுத்து, யோவான் நமக்குத் தரும் அறிவுரை: ''எனது சகோதரரே, உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதீர்கள்'' (வச 13). ஆனால் இன்றையப் பிரச்னை, கிறிஸ்தவரல்லாதோர் கிறிஸ்தவர்களைப் பகைப்பதல்ல, கிறிஸ்தவர்களே ஒருவரையொருவர் பகைக்கின்றனர் (வச 14). கொலைகாரர் நிறைந்துள்ளதொரு திருச்சபைமீது தேவனுக்குக் கோபம் வராதா என்ன? (வச 14,15; மத் 5:21,22). நண்பரே, பைபிளிலுள்ள வசனங்களுக்கு இவ்வித எளிய அர்த்தம் கொடுக்கும் என்னைக் கோபித்துக்கொள்ளாதீர்கள்.

வெளியுலகில் பரவிவரும் வெறுப்பு மற்றும் பொறாமையின் ஆவியைவிடத் திருச்சபையில் நிலவிவரும் அன்புக்குறைச்சலும் ஒருமனமின்மையும்தான் தேவனுக்குப் பெரிய கவலை. சீடராகிய நம்மிடமிருந்து அல்லவா உலகம் அன்பைக் கற்றுக்கொள்ளவேண் டும்? (யோ 13:35). பெரும்பாலான நமது சபை ஐக்கியங்களில் ஐக்கியம் என்பது கிடையவே கிடையாது. ஐயகோ, ஆன்மீக இடைவெளியைச் (spiritual distancing) சமூக இடைவெளி (social distancing) இன்னும் கூட்டிவிட்டது! நமது சபைகளில் சமாதானம் குறையுமானால், நாம் நமது உப்புத்தன்மையை இழந்துவருகிறோம் என்பதே பொருள் (மாற் 9:50). திருச்சபைக்கு உள்ளே இருக்கும் நம்மீது சமாதானம் எனும் உப்பு தூவப்படும்போதுதான், வெளியிலிருப்போரை ஆசீர்வதிக்கும்படிச் சமுதாயத்திற்குள் நாம் அதனைத் தெளித்திட முடியும் (கொலோ 4:5,6). தேவனுக்கு ''அருவருப்பான,'' அவர் ''வெறுக்கும்,'' ஏழு காரியங் களைச் சாலொமோன் பட்டியலிட்டார் (நீதி 6:16-19). அவற்றில் ஆறு காரியங்கள் சகவுறவுகளுக்கடுத்தவை என்பதைக் கவனித்திருக் கிறீர்களா? திட்டமாகச் சொன்னால், திருச்சபைகளில் இருக்க வேண்டியது புதிய ஏற்பாட்டு நிருபங்களில் தரப்பட்டுள்ள முறை மையின்படியான இறையாட்சிதான் (theocracy), மக்களாட்சி (democracy) அல்ல. நமது சபைகளில் பெரும்பாலும் நடக்கும் தேர்தல் முறை திருமறைக்குச் சற்றும் ஒவ்வாதது. அது ஒழியும்வரை, கட்சி மனப் பான்மை ஒழியாது; அதுவரை ஒருமனம் வெறும் கனவாகத்தான் இருக்கும்; நாம் தேவனது இதயத்தின் துக்கத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர முடியாது. வெள்ளாடுகள்தான் (goats) சண்டை போடும், செம்மறியாடுகள் (sheep) சண்டை போடாது!

நமது அன்பின்மையின்மீது தேவனுக்கு வரும் கோபம் கலாத்தியர் 5:15இல் நேரடியாய்ச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது: ''நீங்கள் ஒரு வரையொருவர் கடித்துக் குதறினால் அழிவீர்கள்; அப்படி ஒருவரா லொருவர் அழிக்கப்படாதபடி எச்சரிக்கையாயிருங்கள்.'' நம்மில் அநேகர் ''அடிப்பதைத்'' தாண்டிக் ''கடிக்கத்'' துவங்கிவிட்டோம்!



*''நாய்கள் ஜாக்கிரதை!''* "(Beware of Dogs!)" எனும் அறிவிப்புப் பலகைகள் விரைவில் நமது ஆலயங்களில் தேவைப்படும் (பிலி 3:2அ). நமது இதயத்தில் குடிகொண்டுள்ள பழிவாங்கும் ஆவி திருமறையின் தேவனுக்கு எதிரானது. ''பழிவாங்குதல் **எனக்குரியது, நானே** பதில் செய்வேன்'' என்று பலமுறை தேவன் கூறியுள்ளார் (ரோ 12:19). வேதாகமச் சொல்லகராதி ஒன்றை எடுத்து இக்கூற்று அல்லது இதுபோன்றது பைபிளில் எத்தனை முறை வருகிறதென்று பாருங்கள். ''உங்கள்'' கோபத்திற்கு இடங்கொடாமல், ''தேவ'' கோபத்திற்கு இடங்கொடுங்கள். ''மனிதரின் கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாது'' (யாக் 1:20). பரலோகத்தைவிட நரகத் தைப்பற்றியே நமதாண்டவர் அதிகம் பேசியுள்ளார். அன்பற்ற, எரிச்சலான வார்த்தைகளைக் கடிந்துகொள்ளும்போதுதான் முதல் தடவையாக அவர் ''நரகம்'' என்று குறிப்பிட்டார் (மத் 5:21,22). கோபம் உடனே தணியாமல் தங்கிவிடுமானால் அது பாவமாகிறது (எபே 4:26; சங் 4:4). தேவனது கடுஞ்சினத்திற்குத் தப்பிக்கொள் ளும்படி இவ்விதத் திருவசனங்களுக்குமுன் நடுங்குவோம்!

## 7. அளவுக்குமீறிச் சுயசார்பு

*''தன்னம்பிக்கையை வளர்ப்பது எப்படி?''* என்று பல புத்தகங்கள் வெளிவந்துள்ளன. சவால்களைச் சந்திப்பதற்குத் தேவையான சாதகச் சிந்தையை வளர்க்க இவையெல்லாம் கைகொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் தேவனை ஓரங்கட்டுமளவுக்கு மனிதன் தன்னையே சார்ந்துகொள்வது திருமறைக்கு ஏற்புடையதல்ல. முதலும் முடிவுமாக நாம் ஆண்டவரையே சார்ந்திருக்கவேண்டும். இது மூன்று எடுத்துக்காட்டுகள் மூலம் நமக்குப் போதிக்கப்பட் டுள்ளது. (அ) கட்டிடம் கட்டுதல் — ''உனது ஆற்றலாலும் அல்ல, வலிமையாலும் அல்ல; ஆனால் எனது ஆவியினாலேயே ஆகும்'' (சக 4:6); (ஆ) விளையாட்டுப் போட்டி — "விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயே ஆகும்'' (ரோ 9:16); (இ) பயிர்த் தொழில் — ''நடுகிறவனாலும் ஒன்றுமில்லை,

நீர் பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச் செய்யும் தேவனாலேயே எல்லாம் ஆகும்'' (1 கொரி 3:7). தம்மைத் திராட்சைச் செடிக்கும், நம்மைத் திராட்சைக்கொடிக்கும் ஒப்புமைப்படுத்திய பின்னர் இயேசு அழுத்திச் சொன்னது: ''நானின்றி நீங்கள் ஒன்றும் செய்ய இயலாது'' (யோ 15:5). அது தனிநபரை அடுத்ததோ, ஒரு நிகழ்வை அடுத்ததோ, ஒரு திட்டத்தை அடுத்ததோ, இத்தத்துவம் மீறப்படும்போதெல்லாம், தேவனுக்குக் கோபம் மூளுகிறது.

நமக்கிருக்கும் பலத்திற்குத் தேவன் எதிரானவரல்ல; நமக்கிருக்கும் ஞானத்திற்கு அவர் எதிரானவரல்ல; நமக்கிருக்கும் செல்வத்திற்கும் அவர் எதிரானவரல்ல; இவையெல்லாம் அவரது கரத்திலிருந்து வந்தவைதானே? ஆனால் இவை நமது சொந்தச் சரக்கு, அவர் தந்தவை அல்ல, என்று நினைக்கும்போதுதான் பெருமையடிக்கத் துவங்குகிறோம் (எரே 9:23). எனவேதான் அவர் விடும் சவால்: ''உன்னைப் பிறனைவிடச் சிறந்தவனாக்குவது யார்? உனக்கு உள்ளவற்றில் நீ வாங்கிப் பெற்றுக்கொள்ளாதது எது? நீ பெற்றுக்கொண்டவன்தான் என்றால், பெற்றுக்கொள்ளாதவன் போல ஏன் பெருமையடிக்கிறாய்?'' (1 கொரி 4:7). இதோ ஒரு விளக்கச் சித்திரம்: ஏசாயா 10:15, ''கோடரியானது தன்னால் வெட்டுகிறவனுக்கு விரோதமாய்ப் பெருமையடிக்கலாமோ? வாளானது தன்னைக் கையாளுகிறவனுக்கு எதிராய்ப் பெருமை யடிக்கலாமோ? அவ்விதம் பெருமையடித்தால், தடியானது தன்னைப் பிடித்திருக்கிறவனை மிரட்டினது போலவும், கோலானது 'நான் மரக்கட்டை அல்ல' என்று எழும்பினது போலவும் இருக்குமே!'' ஒரு சிறிய ''பூச்சி'' (worm)கூட இறைவனது கையில் ''கூரிய ஆயுதம்'' (weapon) ஆகலாமே (ஏசா 41:14.15). தற்பெருமையும் சுயசார்பும் சேர்ந்து தலைதூக்குமானால், ''இஸ்ரவேலின் ஒளியானவர் நெருப்பாகவும், அதின் பரிசுத்தர் தீக்கொழுந்தாகவும் உருவெடுப்பார்; அது அவனது முட்புதர்களையும் நெருஞ்சி முட்களையும் ஒரே நாளில் சுட்டெரித்துச் சாம்பலாக்கிவிடும்'' (10:16,17). அண்ணா, அக்கா, தம்பி, தங்காய், கவனம்!



தான் எடுத்துள்ள முயற்சிகளில் அளவுகடந்த சுயசார்பு கொண்ட எவருக்கும் பாபேல் கோபுரம் மறக்கமுடியா எச்சரிப்பாய்த் தகர்ந்து கிடக்கிறது (ஆதி 11:4). தேவனே இறங்கிவந்து அவர்களது திட்டங் களைத் தவிடுபொடியாக்கினார் (வச 5-8). மிகவுயரமான, மிகப் பிரம்மாண்டமான கட்டிடங்களைக் கட்டியெழுப்பவேண்டுமென்ற பாபேலின் ஆவி இன்றும் தலைவிரித்தாடுகிறது. இந்த எலிப்பந்தயம் கிறிஸ்தவத்திலும் நடைபெறுவது வேதனையிலும் வேதனை. எரேமியா 17:5இல் ஆண்டவர் தந்துள்ள கண்டிப்பான வார்த்தை களுக்கு இணையில்லை: ''மனிதர்மீது நம்பிக்கை வைத்து, உடல் பலத்தைத் தனது வலிமையாகக் கொண்டு, கர்த்தரை விட்டு விலகு கிற இருதயமுள்ளவன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லு கிறார்.'' மாறாக, ''கர்த்தர்மீது நம்பிக்கை வைத்து, கர்த்தரையே தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிறவன் பாக்கியவான்'' (வச 7). முதலாமவன் ''பாலைவனப் புதர்'' போலிருப்பான்; அடுத்தவனோ ''ஆற்றோர மரம்'' போலிருப்பான் (வச 6,8). ஒருவன்மீது தேவனது எரிச்சல் வருகிறது; அடுத்தவனோ இரக்கம் பெறுகிறான். தெரிவு நமதே!

தங்களது திறமை மற்றும் வலிமை குறித்துத் தலைவர்கள் மார்தட்டிக்கொள்ளுவது தேவனுக்குக் கோபமூட்டுகிறது; ஏனெனில், அது சபையாயிருந்தாலும் சமுதாயமாயிருந்தாலும், மக்களை ஆண்டு நடத்துவதற்கு அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தது தேவன்தான். இரு அரசர்களை அவர்களது அகந்தை மற்றும் அளவுக்குமீறிய சுயசார்பின் காரணமாகத் தேவன் தண்டித்தார். அசீரியா ராஜாவாகிய சனகெரிப் அகம்பாவத்துடன் பேசியது: ''எண்ணற்ற எனது தேர் களோடு நான் மலையுச்சிகளுக்கு லெபனோனின் சிகரங்களுக்கு ஏறிச் சென்றேன். வானளாவிய கேதுரு மரங்களையும் அங்கு நின்ற உயர்ந்த தேவதாரு மரங்களையும் வெட்டினேன். அதன் காடுகளின் மிக அடர்ந்த பகுதியான கடையெல்லைவரை சென்றேன் … எகிப்தின் நதிகளையெல்லாம் என் உள்ளங்கால்களினால் வற்றச் செய்தேன்'' (2 இரா 19:23,24). எசேக்கியா ராஜாவுக்கு எதிராய்ப்

பேசிய இவ்வார்த்தைகளால் இஸ்ரவேலின் பரிசுத்தரையே ''பழித்து இகழ்ந்தான்'' (வச 22). இதனால் கர்த்தரது ''கடுஞ்சினம்'' அசீரியர் மீது ஊற்றப்பட்டு 1,85,000 பேரைக் கொன்றது (வச 35). அடுத்து உசியா ராஜா வருகிறார். தீர்க்கன் சகரியாவின் ஆலோசனை கேட்டுக் கர்த்தரைத் தேடிவந்த காலம் வரை அவருக்கு யாவும் நலமுடன் நடந்தது (2 நாளா 26:4,5). பெலிஸ்தியர், அரேபியர், மெயோனியர், அம்மோனியர் ஆகியோருக்கு எதிராய்த் தேவன் அவருக்கு உதவினார் (வச 6-8). அவரது சேனை மகா பெரியதாயிருந்தது; கட்டிடங்கள் கட்டுவதிலும் சிறந்து விளங்கினார். இவ்விதம் அவரது வலிமை பெருகியபோது தேவனுக்கு விரோதமாய் ஆணவங்கொண்டார் (வச 16). தேவன் அவரைத் தொழுநோயினால் அடித்தார்; தொழுநோயாளியாகவே இறந்தார் (வச 20,21). இந்த ராஜாவின் இறப்புக்குப் பின்னர்தான் ''ராஜாதி ராஜாவின்'' விண்ணகத் தரிசனம் தீர்க்கன் ஏசாயாவுக்குக் கிடைத்தது (ஏசா 6:1,5). செய்தி தெளிவுதானே?

கிறிஸ்து பிறப்பைப்பற்றிய தீர்க்கதரிசனம் கொடுக்கப்பட்டுள்ள ஏசாயா 9:6,7தான் கிறிஸ்தவர்களாகிய நம்மெல்லாருக்கும் மிகவும் பிரியமான திருமறைப் பகுதி. பெத்லகேமின் பாலகன்மீது பரிதாபப் படுவதோடு நமது தியானத்தை நிறுத்திக்கொள்கிறோம். இவ் வசனங்களிலுள்ள மற்ற வார்த்தைகளைப் பாருங்கள்: ''அரசாட்சி ... தோள் ... சிங்காசனம் ... நியாயத்தீர்ப்பு ... நீதி ... வைராக்கியம்!'' இவ்விரு வசனங்களைத் தொடர்ந்து உடனே இஸ்ரவேலருக்கு எதிராய் ஆண்டவர் தமது வார்த்தையை அனுப்பினார். அவர்களது ''அகந்தையையும் மனப்பெருமையையும்'' அவர் கடிந்துகொண்டார். ''நாங்கள் திரும்பக் கட்டுவோம் ... வேறு மரங்களை நாட்டுவோம்'' என்று அவர்கள் பெருமையாய்ப் பேசிக்கொண்டிருந்தனர் (வச 8-10). 12ஆம் வசனத்தின் பின்பகுதிதான் விவிலியத்திலேயே அதிகம் அச்சுறுத்தும் திருவார்த்தை: ''கர்த்தரது கோபம் ஆறாமல் இன்னும் அவருடைய கை நீட்டினபடியே இருக்கிறது!'' இதே வார்த்தைகள் 5:25; 9:17,21 மற்றும் 10:4ஆம் வசனங்களிலும் திரும்பச் சொல்லப்பட் டுள்ளன. சில வேதாகமப் பதிப்புகளில் இவ்வாக்கியம் அந்த



வசனங்களுக்குக் கீழே தனியாகத் தரப்பட்டுள்ளது (வச 12,17,21; 10:4). இது பைபிளில் அசாதாரணம்! இதுதான் மூப்பர்கள், தீர்க்கர்கள் மற்றும் தலைவர்களின் பெருமை மற்றும் மதியீனத்தின் விளைவு (வச 15,16). ஊழியங்களை நிறுவிய தலைவர்களது காலத்திற்குப் பின்னர், கீறல்கள் ஏற்படும்போது, அடுத்த வரிசையினர் மிகுந்த தாழ்மையுடனும், தவறாத நேர்மையுடனும் செயல்பட்டால்தான் திரும்பக் கட்டும் அவர்களது முயற்சி சித்திபெறும்.

நமது விண்வெளி விஞ்ஞானிகளின் அற்புதக் கண்டுபிடிப்பு களுக்காகவும், விந்தையான செயல்களுக்காகவும் அவர்களைப் பாராட்டுகிறோம். இதனால் மருத்துவம் மற்றும் பொறியியல் போன்ற துறைகளுக்குக் கிடைத்துள்ள பயன்களுக்காய்த் தேவனைத் துதிக்கிறோம். ஆனால், விண்வெளியை நாம் ''கைப்பற்றிவிட் டோம்'' (conquered the space) போன்ற வார்த்தைகள் வாய் தவறியும் வந்துவிடாது கவனமாயிருக்கவேண்டும். அது கூடாத காரியம்! ஏற்கனவே பூவுலகைக் ''கறைப்படுத்திவிட்டோம்'' (corrupted the earth) (ஆதி 6:11,12; வெளி 19:2). மற்ற கிரகங்களையும் அவ்விதம் கெடுத்துவிட நாம் முயலக்கூடாது. பழைய ஏற்பாட்டில் ஒரே அத்தியாயம் கொண்டுள்ள தனது புத்தகத்தில் தீர்க்கன் ஒபதியா தந்துள்ள எச்சரிக்கை: ''உன் இருதயத்தின் அகந்தை உன்னை ஏமாற்றிவிட்டது. நீ கழுகைப்போல உயரப் பறந்தாலும், நட்சத்திரங் களுக்குள்ளே உன் கூட்டைக் கட்டினாலும், அங்கிருந்தும் உன்னை விழத்தள்ளுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்'' (வச 3,4).

தொலைநோக்குத் திட்டங்கள் தீட்டும் முதலாளிகள் மற்றும் தொழிலதிபர்கள் போன்றோருக்குத் திருமறை தரும் நேரடிச் செய்தி: யாக்கோபு 4:13-16, ''இன்றோ நாளையோ குறிப்பிட்ட நகருக்குச் சென்று, அங்கு ஓராண்டு தங்கி, வாணிகம் செய்வோம், பணம் ஈட்டுவோம் என்று சொல்லுகிறவர்களே, சற்றுக் கேளுங்கள். நாளைக்கு உங்கள் வாழ்க்கை எப்படியிருக்கும் என்பது உங்களுக்குத் தெரியாதே! நொடிப்பொழுதில் தோன்றி மறையும் புகை போன்றவர்கள்

நீங்கள். எனவே அவ்வாறு சொல்லாமல், ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்ன செய்வோம் என்றே சொல்லவேண்டும். இப்பொழுதோ நீங்கள் வீம்பு பாராட்டிப் பெருமைகொள்கிறீர்கள். இவ்விதப் பெருமையெல்லாம் தீயது.'' இதற்கு விளக்கம் வேண்டுமோ?

## 8. பக்தியற்ற தலைமை

எல்லாவற்றிற்கும் ஒட்டுமொத்தமான தலைமை நமது தேவனிடமே இருப்பதால், அரசியல் தலைவர்கள் என்றாலும், ஆன்மீகத் தலைவர்கள் என்றாலும், அவர்களுக்குத் தேவையான அதிகாரம் அவரிடமிருந்தே வருகிறது (ரோ 13:1; அப் 20:28). இஸ்ரவேலரது காரியங்களில் இவ்விரு வகையான தலைமைத்துவமும் ஆங்காங்கே பின்னிக் காணப்பட்டது. இப்படியிருக்க, தலைமைத்துவத்தில் பின்பற்ற வேண்டிய தத்துவங்கள், தவிர்க்கவேண்டிய ஆபத்துகள் பற்றிய திருமறைப் போதனை எத்தலைமுறையிலுமுள்ள தலைவர்களுக்கும் பொருந்தும். தேவனது எச்சரிப்புகள் கவனியாது விடப்படும் போதெல்லாம் அவரது கோபத்தினால் பேரழிவு வந்துள்ளது.

அரசர்களுக்குக் கொடுக்கப்பட்ட பழைமையான கட்டளைகளில் ஒன்று அவர்கள் குதிரைகளையும், மனைவிகளையும், செல்வத்தை யும் பெருக்கிக்கொண்டேபோகக்கூடாது (உபா 17:16,17). பெருமை யிலிருந்தும் சுயபலச் சார்பிலிருந்தும் அவர்களை விலக்கிக் காக்கவே இக்கட்டளை. தமது புத்தகத்தின் பிரதியொன்றையும் அரசன் தனக் காக எழுதி வைத்துக்கொண்டு, மக்களை வழிநடத்துவதில் இறை நடத்துதலிலிருந்து விலகிவிடாதபடித் தினமும் அதனை வாசிக்க வேண்டும் என்றும் ஆண்டவர் அறிவுறுத்தினார் (வச 18-20). தேவனையும் அவரது வார்த்தைகளையும் மனதிலிருத்திக்கொள்ளாத தலைவர்களால் சின்னாபின்னமான நாடுகளைக் குறித்த சரித்திரம் பைபிளில் நிறையவுண்டு. மூத்தோர் ஆலோசனையை அரசன் ரெகோபெயாம் தள்ளிவிட்டதால், தாவீது மற்றும் சாலொமோனின் அரசு நிரந்தரமாய்ப் பிளவுபட்டது (1 இரா 12). தனது தளபதி யோவாப் தடுத்து



நிறுத்த முயன்றும், அதைக் கவனியாது தாவீது மக்கட்தொகையைக் கணக்கெடுத்தார் (2 சாமு 24:1-4). இச்செயல் தேவனுக்குக் கோபமூட்டியது; அவர் அனுப்பிய வாதையினால் 70,000 ஆண்கள் மடிந்தனர் (வச 15). மக்கள் பலத்திலும் மாம்ச பலத்திலும் நம்பிக்கை வைக்கும் எத்தலைவனுக்கும் தேவன் எதிரானவர். ''குதிரையின் வலிமையில் அவர் மகிழ்ச்சி காண்பதில்லை; வீரனின் கால் வலிமையையும் அவர் விரும்புவதில்லை. தமக்கு அஞ்சி நடந்து தமது பேரன்புக்காக நம்பிக்கையுடன் காத்திருப்போரிடம் அவர் மகிழ்ச்சி கொள்கிறார்'' (சங் 147:10,11). தமது ஆவியானவரின் நடத்துதலைத் தவறவிட்டுவிடாதபடி, அவபக்தியுள்ள நாடுகளுடன் உடன்பாடு செய்துகொள்வதையும் அவர் எச்சரித்தார்; அது ''பாவத்தோடு பாவத்தைக்'' கூட்டுவதாம் (ஏசா 30:1,2). வசதிக்காய்ப் பிலாத்துவோடு உடன்பாடு செய்துகொண்ட ஏரோதின் நரித்தந்திரத்தை இயேசு சுட்டிக்காட்டினார் (லூக் 13:31,32,33; 23:12).

1995 ஆகஸ்டு 21 அன்று வெளிவந்த *Fortune* எனும் பத்திரிகை "Asia Corrupt-O-Meter" என்ற வரைபடம் ஒன்றை அச்சிட்டிருந்தது. அதில் ஊழலில் முதலிடம் வகிக்கும் நாட்டிற்கு 10 புள்ளிகளும், ஊழல் அரிதாயிருக்கும் நாட்டிற்கு 1.0 புள்ளியும் கொடுக்கப்பட்டி ருந்தது. மேலிருந்து 3ஆம் இடத்தைப் பிடித்துள்ள இந்தியாவிற்குக் கிடைத்தது 7 புள்ளிகள்! ''நேர்மையுள்ள நாடு மேன்மையடையும்; பாவம் நிறைந்த எந்த நாடும் இழிவடையும்'' (நீதி 14:34). நமது தேசிய வாழ்வுக்குக் கேடான ''ஏழு சமூகப் பாவங்களை'' (Seven Social Sins) மகாத்மா காந்தி வரிசைப்படுத்தியுள்ளார்: மனச்சாட்சி இல்லாது இன்பம், தத்துவங்கள் இல்லாது அரசியல், அர்ப்பணிப்பு இல்லாது இறைவேண்டல், குணநலன் இல்லாது கல்வியறிவு, உழைப்பு இல்லாது செல்வம், மனிதத்துவம் இல்லாது விஞ்ஞானம், நேர்மை இல்லாது வணிகம். ''தேவனாகிய கர்த்தாவே, உமது கோபம் எங்கள்மீது வராதபடி இரக்கம் காட்டும்!'' மற்ற நாடுகளைவிட இந்தியாவில் கரோனா நோயாளிகள் குறைவு என்று நாம் பெருமை யடித்துக்கொள்ளக்கூடாது. உண்மை என்னவென்றால், இங்கு நாம்

1000 பேரில் 2 பேருக்குத்தான் பரிசோதனை செய்கிறோம்; அமெரிக்கா, ரஷ்யா, ஜெர்மனி போன்ற நாடுகளிலோ 1000 பேரில் 50 பேருக்கும் அதிகமானோருக்குப் பரிசோதனை நடத்தப்படுகிறது!

அடுத்து, ஆன்மீக உலகின் தலைமை குறித்துப் பேசுவோம். ஆசாரியர்களும் தீர்க்கதரிசிகளும்தான் பழைய ஏற்பாட்டில் மார்க்கத் தலைவர்கள். இன்று புதிய ஏற்பாட்டுத் திருச்சபையில் தலைமைப் பொறுப்பு மூப்பர்கள் (Elders) அல்லது கண்காணிகள் (Bishops) என்ற மேய்ப்பர்கள் (Shepherds) மீது உள்ளது (அப் 20:17,28; 1 தீமோ 3:1; தீத் 1:7; 1 பேது 5:1). கிறிஸ்தவரல்லாத தலைவர் கள்போல் அதிகாரத் தோரணையில் இறைமக்களை நடத்தக்கூடாது என்பதே இயேசுவின் போதனை (மத் 20:25). அவரது இப்போதனை யையே அப்போஸ்தலர் பின்பற்றினர் (2 கொரி 1:24; 10:8; 1 பேது 5:3). அதிகார வர்க்கத்தினர் மக்களைப் பயன்படுத்துவார்கள், பலப் படுத்தமாட்டார்கள், பக்குவப்படுத்தமாட்டார்கள், பயிற்றுவிக்கமாட் டார்கள். ''உங்களுக்கு ஐயோ'' என்று திரும்பத் திரும்பச் சொல்லி மாய்மாலமான தலைவர்களை இயேசு கடிந்துகொண்டார் (மத் 23:13,14,15,16,23,25,27,29). சீயோனில் நடமாடும் மாய் மாலத்தைக் குறிப்பிட்டு ஏசாயா எச்சரிப்பது: ''சுட்டெரிக்கும் நெருப்பை நம்மில் யார் தாக்குப்பிடிக்க முடியும்? அணையாத தழலுக்கு முன் யார் சமாளிக்க முடியும்?'' (ஏசா 33:14). இரக்கச் செயல்களைவிடத் தங்களது பாரம்பரியங்களுக்கே முக்கியத்துவம் கொடுத்தவர்களிடம் இயேசு கோபம் கொண்டார் (மாற் 3:4,5).

மார்க்கம் எவ்வகையிலும் வணிகமயமாவதைத் தடுத்து நிறுத்த வேண்டியது சபை மேய்ப்பர்கள் மற்றும் ஊழியத் தலைவர்களின் பொறுப்பு. தாமே செய்த சவுக்கைத் தேவாலய வளாகத்தில் இரு முறை பயன்படுத்திய நமதாண்டவரை மறக்காதிருப்போம் (யோ 2:14-16; மத் 21:12,13). தங்களது பேச்சாற்றலில் பெருமை கொண்டு மகிமை முழுவதையும் தேவனுக்குக் கொடுக்கத் தவறும் பிரசங்கிமாரைத் தேவன் நியாயந்தீர்ப்பார் (அப் 12:21-23). தங்களது முற்பிதாக்களின் எளிமை மற்றும் தானதர்மச் சிந்தையை மறந்துவிட்டு,



பந்தாவும் சொகுசும் நிறைந்த வாழ்க்கை முறைக்கு அடிமையாகிவிட்ட கிறிஸ்தவத் தலைவர்களுக்கு ''ஐயோ'' என்கிறார் ஆண்டவர் (எரே 22:13-16). கொழுத்த ஆயர்களும் மெலிந்த ஆடுகளுமே இன்றையக் கிறிஸ்தவத்தின் சாபம் (எசேக் 34:1-3).

## 9. முரட்டாட்டம்

இதற்கு முந்தைய உபதலைப்புகளில் தேவனுக்கு விரோதமான நமது பாவங்கள் குறித்துப் போதுமான அளவு தியானித்துவிட்டோம். மனிதரது அதிகாரத்திற்கும் தலைமைக்கும் எதிராய்ச் செயல்படுவதை இங்கு கவனிப்போம்.

பெற்றோர்-பிள்ளைகள் என்பதில் துவங்குவோம். பத்துக் கட்ட ளைகளை இரு பகுதிகளாய்ப் பிரிக்கலாம்: 1 முதல் 4 கட்டளைகள் தேவனுக்கு நமது கடமை; 5 முதல் 10 வரை மனிதருக்கு நமது கடமை (யாத் 20:1-17). பெற்றோருக்குப் பிள்ளைகளின் கடமை என்பதிலேயே இரண்டாம் பகுதி துவங்குகிறது: ''பூவுலகில் உன் வாழ்நாள் நீடிக்கும்படி உன் தந்தையையும் உன் தாயையும் மதித்து நட'' (வச 12). இதனை எபேசியர் 6:1-3இல் அப்போஸ்தலன் பவுல் மேற்கோள் காட்டி, இதுவே ''வாக்கு'' சேர்ந்த ''முதல்'' கட்டளை என்கிறார். இதுதான் ''வாக்கு'' சேர்ந்த ''ஒரே'' கட்டளை என்பதையும் மறக்கக்கூடாது! முக்கியத்துவம் புரிகிறதா? பெற்றோருக்குக் கீழ்ப்படியாது முரட்டாட்டம் பண்ணும் பிள்ளைகளுக்கு வாழ்வு ''நன்றாய்'' அமையாது (எபே 6:3). பெற்றோருக்குக் கீழ்ப்படியாமை என்பதைத் தேவன் எவ்வளவு எரிச்சலுடன் பார்க்கிறார் என்று கவனியுங்கள்: உபா 21:18-21, ''ஒருவனது புதல்வன் பிடிவாதமும் முரட்டுத்தனமும் கொண்டவனாய், தாய் தந்தையரது சொல் கேளாமல் அடங்காது இருந்தால் ... அந்நகரத்து மனிதர் எல்லாரும் அவனைக் கல்லெறிந்து கொல்லட்டும்.'' விண்ணகத்திலிருந்தே வந்தவராயிருந்தாலும், மனுவுடலில் தெய்வம் என்றிருந்தாலும், தமது பூவுலகப் பெற்றோருக்கு இயேசு கீழ்ப்படிந்து வாழ்ந்தார் (லூக் 2:51). அப்போஸ்தலன் பவுல் முன்னறிவித்தபடி இறுதிக்காலத்தின்

இறுதிக்கட்டமாகிய இந்நாட்களில் பிள்ளைகளின் கீழ்ப்படியாமையும் அடங்காமையும் அதிகரித்துக்கொண்டே வருகிறது (2 தீமோ 3:2). ''நான் வந்து பூவுலகைச் சாபத்தினால் அழிக்காமலிருக்க, தந்தையருடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயங்களைத் தந்தையரிடத்திற்கும் திருப்பும்'' எலியாவின் இறுதிக்காலப் பணி என்று தேவன் குறிப்பிட்டது தூயாவியானவர் மூலம் நடந்துவருகிறது (மல் 4:6). பழைய ஏற்பாட்டின் கடைசி வசனம் இப்படியா முடிவடையவேண்டும்? எலியாவின் ஆவியும் பலமும் உடையவராய் வந்த திருமுழுக்கினன் யோவான்தான் இந்தக் கடைசிக்காலப் பணியைத் தொடங்கிவைத்தார் (லூக் 1:15-17). அடங்காத பிள்ளைகளுக்கு எதிரான தேவ கோபம் ஏசாயா 45:10இல் வெளிப்படுகிறது: ''தந்தையிடம், 'நீர் ஏன் என்னைப் இப்படிப் பிறப்பித்தீர்?' என்றும், தாயிடம் 'என்னை ஏன் இப்படிப் பெற்றெடுத்தாய்?' என்றும் வினவுபவனுக்கு ஐயோ கேடு!'' செல்லங்களே, இவ்வளவு துணிச்சலான வார்த்தைகளை நீங்கள் பேசாதிருக்கலாம், ஆனாலும் உங்கள் மனப்பான்மை இப்படித்தானே இருக்கிறது?

அடுத்து, நாட்டின் அதிகாரங்களுக்கு எதிரான முரட்டாட்டத்தைக் கவனிப்போம். பவுல், பேதுரு ஆகிய இருவரும் இதனைக் கண்டித்துள்ளனர். ரோமர் 13:2, ''அதிகாரத்தை எதிர்த்து நிற்போர் கடவுளின் ஏற்பாட்டையே எதிர்த்து நிற்கின்றனர். அவ்வாறு எதிர்ப்பவர்கள் தங்கள்மீது தண்டனைத் தீர்ப்பைத் தாங்களே வருவித்துக்கொள்ளுகிறார்கள்.'' இந்த முழுப்பகுதியையும் வாசித்துப் பாருங்கள் (வச 1-5). 1 பேதுரு 2:13,14, ''அனைத்து மனித அமைப்புகளுக்கும் ஆண்டவரின் பொருட்டுப் பணிந்திருங்கள்.'' எந்தச் சட்டமானாலும் அதிலிருந்து தப்பிவிட மனிதன் ஏதாவதொரு வழியைக் கண்டுபிடித்துவிடுகிறான். மேற்கத்திய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இந்தியராகிய நாம் சட்டங்களை அவ்வளவு மதிப்பதில்லை. கிறிஸ்தவர்களாகிய நாம் இதை ஒரு சவாலாய் எடுத்துக்கொண்டு கிறிஸ்தவரல்லாதோருக்குமுன் ''தேவனை மகிமைப்படுத்த'' முடிந்ததெல்லாம் செய்வோம் (வச 12).



மூன்றாவதாக, ஆன்மீகத் தலைமைக்கு எதிரான நடக்கையைப் பற்றிப் பேசுவோம். மோசேயின் அடுத்த வரிசையினராகிய மிரியாம்-ஆரோனின் எதிர்ப்பு மனப்பான்மை விரும்பத்தகாத விளைவுகளைக் கொண்டுவந்தது (எண் 12:1-15). அவர்களுக்கு விரோதமாய்க் கர்த்தரது கோபம் மூண்டது; தமது பிரசன்னத்தையே அவர்கள் நடுவிலிருந்து தேவன் விலக்கிக்கொண்டார்; மிரியாம் தொழுநோயாளியானாள்; இறைமக்களின் பயணம் ஏழு நாள் தடைபட்டது. கோராகு அணியினர் மோசேக்கு விரோதமாக எழும்பியபோதும் சீரழிவு ஏற்பட்டது (எண் 16). தரையானது பிளந்து முரட்டாட்டக்காரரை உயிரோடு புதைத்தது. ஆண்டவரிடமிருந்து நெருப்பு வந்து 250 மனிதரைச் சாம்பலாக்கியது. இஸ்ரவேலரின் சரிதையில் இவ்விதச் சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளன. ''அவர்கள் கடவுளின் தூதுவர்களை ஏளனம் செய்து, அவரது வார்த்தைகளைப் புறக்கணித்து, அவரது தீர்க்கர்களை இழித்துரைத்தனர். எனவே, அவர்கள் தப்ப முடியாத அளவு ஆண்டவரது சினம் அவர்கள்மேல் கனன்றெழுந்தது'' (2 நாளா 36:15,16; சங் 78:31; சக 7:12).

மூப்பர்கள் அல்லது கண்காணிகள் என்றழைக்கப்படும் மேய்ப்பர் கள் மீதுதான் சபைத் தலைமை வைக்கப்பட்டிருக்கிறது (அப் 20:17,28; 1 தீமோ 3:1; தீத் 1:7; 1 பேது 5:1). தன்னை ஓர் உடன் மூப்பன் என்றழைத்துக்கொண்டு அப்போஸ்தலன் பேதுரு இளைஞருக்கு எழுதியது: ''இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்கள் எல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளோருக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார்; தாழ்மையுள்ளோருக்கோ கிருபை அளிக்கிறார்'' (1 பேது 5:1,5). இதே பாணியில் எபிரெய நிருப ஆக்கியோன் அறிவுறுத்துவது: ''உங்களை நடத்துகிறவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காகக் கணக்கு கொடுக்கவேண்டியவர்களாய் உங்கள் நலனில் விழிப்பாயிருக்கிறபடியால், அவர்கள் கடமைக்காக அல்ல, களிப்போடு அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் சலிப்போடு அப்படிச் செய்தால் அது உங்களுக்கு நலம் பயக்காது'' (எபி

13:17). ''திருவசனத்திலும் திருவுபதேசத்திலும்'' முழு ஈடுபாட்டுடன் உழைக்கும் மூப்பர்களுக்கு இருமடங்கு ஊதியம் அளிக்கவேண்டும் என்பது பவுலின் கூற்று (1 தீமோ 5:17). நமது சபைகளில் முரட்டாட்டம்பண்ணிப் பிரிவினை உண்டாக்குவோர் யாரென்று நமக்கு நன்றாகவே தெரியும். அவர்களைப் ''பிறவிக் குணம் மாறாதவர்கள்'' என்றும் ''தூயாவியால் ஆளப்படாதவர்கள்'' என்றும் அப்போஸ்தலன் யூதா சுட்டிக்காட்டுகிறார் (யூதா 19). இப்படிப்பட்டவர்களைச் சேருவது நம்மைத் தேவனது கோபத்திற்கு ஆளாக்கும்.

## 10. பின்மாற்றம்

தேவனோடு நடந்துவந்த காலத்தை மறந்து பழைய வழிகளுக்குத் திரும்புவதே பின்மாற்றம் எனப்படும். அது பல்வேறு வகைகளில் ஏற்பட்டாலும், அது எப்படியும் தேவனது கோபத்தைக் கிளறியே விடும். தங்களது ஆதி மேன்மையைக் காத்துக்கொள்ளாது பாவம் செய்த தூதர்களையும் அவர் விட்டுவைக்கவில்லை. அவர்களை இருட்டுச் ''சங்கிலிகளால்'' கட்டி, ''நரகத்தில்'' தள்ளித் தண்டித்துள்ளார் (2 பேது 2:4; யூதா 6). பின்மாற்றக்காரரைத் திரும்பி வரும்படி தேவன் கொடுத்த பழங்கால அழைப்புகளில் ஒன்று எரேமியா 3:12,13இல் உண்டு: ''சீர்கெட்ட இஸ்ரவேலே, திரும்பு என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் என்றைக்கும் கோபம் வைக்கமாட்டேன். உன் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணினாய் என்று உன் அக்கிரமத்தை ஒத்துக்கொள்.'' பின்மாற்றத்திலிருந்து திரும்பித் தேவனிடம் வருவோருக்குப் பழைய ஏற்பாட்டில் நிறைய இறைவாக்குகள் உண்டு. ஓசியா 14:1,4, ''இஸ்ரவேலே, உன் தேவனாகிய கர்த்தரிடம் திரும்பு; நீ உன் அக்கிரமத்தினால் விழுந்தாய் ... நான் உங்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன்; உங்களை மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பேன்; என் கோபம் உங்களை விட்டு நீங்கிற்று.'' நாடுகள் மனந்திரும்பித் தேவனிடம் திரும்பிவருதலை இவ்வசனப் பகுதிகள் குறிப்பிடுகின்றன.



புதிய ஏற்பாட்டிற்குள் வரும்போது, தனிப்பட்ட கிறிஸ்தவர்களும் சபைகளும் மனந்திரும்பி ஆதிநிலைக்கு வரவேண்டுமென்பதே அழுத்திச் சொல்லப்படுகிறது. பலவிதமான பின்மாற்றங்களுக்கு இங்கு எடுத்துக்காட்டுகள் உண்டு. பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் காரியோத் என்பவன் பொருளாசையினால் பின்வாங்கினான். ''சாத்தான் அவனுக்குள் புகுந்தான்'' என வாசிக்கிறோம் (லூக் 22:3). தனது ஆண்டவரை விற்ற பணத்தைக் கொண்டு அவன் வாங்கிய நிலத்திலேயே தூக்குப்போட்டுச் செத்தான் (அப் 1:16-19). வியாபாரத்திலோ, ஊழியத்திலோ, பொருளாசை நிறைந்த செயல்பாடுகளினால் நீங்கள் வாங்கிய *''அக்கெல்தமா''* எனும் ''இரத்த நிலம்'' ஏதும் உங்களிடம் உண்டா? பவுலின் மிஷனரிக் குழுவிலிருந்து உலகப்பற்றினால் விலகிய தேமா என்பவன் இன்னொரு பின்மாற்றக்காரன் (2 தீமோ 4:10). பிரசங்கிமார் நடுவில், அதுவும் பிலேயாமுக்கிருந்தது போன்ற தீர்க்கதரிசன வரமுள்ளோர் வரிசையில், பின்மாற்றத்திற்கு முக்கியமான காரணமாயிருப்பது பண ஆசையே (2 பேது 2:15,16). இதனைக் ''கிறுக்கு'' என்றழைக்கிறது திருவசனம் (வச 16). ''காரிருளே'' இவர்களுக்காய் வைக்கப்பட்டிருக்கிறதாம் (யூதா 11,13).

''கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை'' எனும் யேசபேல் நச்சுக்கிருமியினால் (Jezebel Virus) தேவ ஊழியர் பலர் பாதிக்கப்பட்டு, சிகிச்சை எடுத்துக்கொள்ளாததால், ''படுத்த படுக்கையாகியுள்ளனர்'' (வெளி 2:20-22). எகிப்திலிருந்து நாம் வெளியேறுவதைவிட நம்மிலிருந்து எகிப்து வெளியேறுவதுதான் கடினமாயுள்ளது. இது ஆண்டவரது கோபத்தைக் கிளறிவிட்டு, பின்மாற்றக்காரரை எரித்தொழிக்கிறது (எண் 11:1,10). இவர்களை ''நாய்கள்'' என்றும் ''பன்றிகள்'' என்றும் அழைக்கும் அப்போஸ்தலன் பேதுரு, ''இவர்களது பின்னைய நிலை முன்னைய நிலையைவிடக் கேடுள்ளதாயிருக்கும்'' என்கிறார் (2 பேது 2:20-22). இவ்வித ''அக்கிரமக்காரரது வஞ்சகத்தினால் நாம் இழுக்கப்பட்டு நமது உறுதிப்பாட்டிலிருந்து விலகி விழுந்துவிடாதபடி'' நாம் விழிப்பாயிருக்கவேண்டும் (3:17,18). பின்மாற்றத்தைக் குறிப்பிட்டு எபிரெயர் நிருப ஆக்கியோன்

நடுங்க வைக்கும் சில வரிகளை எழுதியுள்ளார்: ''ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுவது பயங்கரமாயிருக்குமே ... ஒருவன் பின்வாங்கிப்போவானானால் அவனிடமிருந்து தேவனது பிரியம் அகலும் ... நாம் அழிந்துபோகாதபடிப் பின்வாங்காதிருப்போம்'' (எபி 10:3138,39). பின்மாற்றக்காரன் திரும்பிவரமாட்டானா என்று தேவன் ''பொறுத்துப் பொறுத்து இளைத்துப்போவதும்'' உண்டு (எரே 15:6).

உபதேசத் தடுமாற்றத்தினால் ஏற்படுவது அடுத்த வகை பின் மாற்றமாகும். கிருபையிலிருந்து பிரமாணக் கொள்கைக்குள் விழுதல் (கலா 1:6; 5:4). இப்படிப்பட்டவர்களைத் திருப்பிக்கொண்டு வரு வது பிரசவ வேதனைதான் (4:19). இதற்கு எதிராகத் தோன்றியுள்ள நவீன உபதேசம் 'கிருபை கிருபை' என்று அளவுக்குமீறிப் பேசி மனிதனின் பொறுப்பை மறைக்கிறது (ரோ 6:1,2). இது "Hyper-grace Movement" என்றழைக்கப்படுகிறது. தேவ கிருபையைக் காமவிகாரத்துக்கு ஏதுவாகப் புரட்டிக்கொள்வோர் ''தண்டனைத் தீர்ப்புக்கு'' ஆளாவார்கள் (யூதா 4). தேவனது ''கோபத்தின் பாத்திரங்கள்'' என்று ஆகாமல் அவரது ''கிருபையின் பாத்திரங்கள்'' என்று அவர் நம்மைத் தெரிந்து கொண்டாரே, அந்த இரக்கத்தையும் புண்ணியத்தையும் தப்புக்கணக்குப் போடாதிருப்போம் (ரோ 9:22,23). கேட்டுக்கு வழிவகுக்கும் வேதப் புரட்டுகளைத் தந்திரமாய் உள்ளே நுழைக்கும் கள்ளத் தீர்க்கர்கள், கள்ளப் போதகர்களுக்கு விழிப்புடன் விலகியிருப்போம்; அவர்களது அழிவு தீவிரமாயிருக்கும் (2 பேது 2:1-3). இந்தக் கடைசி நாட்களில் வஞ்சிக்கும் ஆவிகளும் பிசாசின் உபதேசங்களும் காற்றில் எங்கும் மிதந்தவண்ணமிருக்கின்றன (1 தீமோ 4:1). ஆரோக்கிய உபதேசத் தைவிட தவறான போதனை தரும் பிரசங்கிமாரே எண்ணிக்கையில் அதிகமாயிருப்பர் (2 தீமோ 4:2-4). நித்திய நெருப்பில் தூக்கி யெறியப்படாதிருக்க, கிறிஸ்துவின் உபதேசத்திலேயே உறுதியாய் நிலைகொண்டிருப்போம் (யோ 15:6; 2 யோ 9).

கிறிஸ்துவுடன் புதிய வாழ்வைத் துவங்கிய காலங்களில் அவருக் காய் விறுவிறுப்பாய்த் துடிதுடிப்புடன் சாட்சி பகர்ந்து வந்த பலர் காலப்போக்கில் தளர்ந்து உட்கார்ந்துவிடுகின்றனர். இயேசுவுக்காய்



நிற்பது வருங்காலங்களில் இன்னும் கடினமாகத்தானிருக்கும். ஆனாலும் நமது இதயங்களை விட்டு அகலக்கூடாத அவரது வார்த்தைகள்: ''எனது பெயரின் பொருட்டு எல்லாராலும் நீங்கள் வெறுக்கப்படுவீர்கள்; இறுதிவரை தாக்குப்பிடிப்பவனே தேறுவான் ... என்னைத் தெரியாது என்று மனிதர்முன் மறுதலிப்பவனை நானும் விண்ணகத்திலிருக்கும் எனது தந்தை முன்பாகவும் தூதர்கள் முன்பாகவும் மறுதலிப்பேன்'' (மத் 10:22,33; லூக் 12:9). ஆண் டவர் நம்மை ஆசீர்வதிக்கும் அளவுக்கு நாமும் மக்களை ஆசீர்வதித்துக்கொண்டேயிருக்க வேண்டும். வானத்திலிருந்து பொழியும் மழையைக் குடித்துக்கொண்டேயிருக்கும் நிலமானது விளைச்சல் தராவிடில் சபிக்கப்படும், எரிக்கப்படும் (எபி 6:7,8; லூக் 13:6-9). வரவிருக்கும் நாட்களில், இமெனே மற்றும் அலெக்சந்தர் போன்ற அநேகர் கிறிஸ்துவின்மீதுள்ள அடிப்படை விசுவாசத்தை விட்டு விலகிச் சாத்தானின் பிரதிநிதிகளாய்ச் செயல்படுவர் (1 தீமோ 1:19,20).

## தேவன் என்றும் கோபமாயிருப்பாரோ?

''தேவ கோபம்'' என்ற இத்தலைப்பில் இக்கட்டுரை எழுதுவது எனக்குச் சுலபமாயிருக்கவில்லை. எழுதிக்கொண்டிருக்கும்போதே, விட்டுவிடலாமா என்ற சோதனை பலமுறை வந்தது; கர்த்தருடைய ஆவியானவரோ அதற்கு அனுமதி தரவில்லை. திருமறையின் 50க்கும் கூடுதலான புத்தகங்களிலிருந்து இக்கட்டுரையில் குறிப் பிடப்பட்டுள்ள 860 வசனங்களை நான் தியானித்தது என்னில் தேவ பயத்தைக் கூட்டியது; இதற்காய் என் தேவனைத் துதிக்கிறேன். சங்கீதக்காரன் ஒரு கேள்வியை மும்முறை கேட்கிறார்: ''எதுவரைக்கும் கர்த்தாவே? நீர் என்றைக்கும் கோபமாயிருப்பீரோ?'' (சங் 79:5; 80:4; 85:5). தாவீது மற்றும் மீகா ஆகியோரின் வார்த்தைகள் எனக்கு ஆறுதலும் ஊக்கமும் தருகின்றன: சங் 103:8-10, ''கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையும் உள்ளவர். அவர் எப்பொழுதும் கடிந்துகொண்டே இருக்கமாட்டார்; என்றைக்கும் கோபத்தை வைத்திருக்கமாட்டார். அவர் நமது பாவங்களுக்கு ஏற்றபடி நமக்குச்

செய்யாமலும், நமது அக்கிரமங்களுக்கு ஏற்றபடி நம்மைத் தண்டிக்காமலும் இருக்கிறார்.'' மீகா 7:18,19, ''தேவனாகிய கர்த்தர் கிருபை செய்ய விரும்புவதால், அவர் என்றைக்கும் கோபத்தை வைத்துக்கொள்ளமாட்டார். அவர் திரும்பவும் நம்மீது இரங்குவார்; நமது அக்கிரமங்களை மிதித்தொழிப்பார்; நமது பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார்.'' தீர்க்கன் ஆபகூக்கின் விண்ணப்பத்துடன் இக்கட்டுரையை முடிக்கிறேன்: ''கர்த்தாவே, ஆண்டுகளின் நடுவில் உமது வேலையை **உயிர்ப்பியும்!** ஆண்டுகளின் நடுவில் அதை யாவரும் அறியச் செய்யும்; கோபித்தாலும் இரக்கத்தை நினைத்தருளும்!'' (ஆப 3:2). ஆம், கரோனா நோய்ப் பரவலானது ''***இன்னொரு எழுப்புதல்***'' வருவதற்கு வழியை ஆயத்தப்படுத்துகிறது!



13 ஏப்ரல் 2020

**6**

# "என் மக்கள் தங்களைத் தாழ்த்தினால் ..."

## "If My people humble themselves ..."

எவ்விதப் பேரழிவின் காலக்கட்டத்திலும் பாதுகாப்பு மற்றும் விடுதலைக்கான ஜெபங்களுக்கு அடிக்கடி சுட்டிக்காட்டப்படும் திருவசனம், 2 நாளாகமம் 7:14, "எனது பெயரால் அழைக்கப்படும் எனது மக்கள் (1) **தங்களைத் தாழ்த்தி,** (2) ஜெபம்பண்ணி, (3) எனது முகத்தைத் தேடி, (4) தங்களது தீயவழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகிலிருக்கும் நான் கேட்டு, அவர்களது பாவத்தை மன்னித்து, அவர்கள் நாட்டிற்கு நலம் வரப்பண்ணுவேன்." இவ்வசனத்தில் கடவுள் தமது மக்களிடம் எதிர்பார்க்கும் நான்கு காரியங்களில் "**நம்மை நாம் தாழ்த்துதல்**" என்பதே முதன்மையாக வருவதைக் கவனிக்கிறோமா?

கடந்த சில ஆண்டுகளாக ஆண்டவர் இக்காரியத்திலேயே என்னிடம் கண்டிப்புடன் இடைபட்டு வருகிறார். இயல்பாக நான் ஒரு பெருமைக்காரன். என்னைத் தாழ்மைப்படுத்தும் எத்தனையோ அனுபவங்கள் வழியாக அவர் என்னை எடுத்துச் சென்றிருந்தும் போதுமான அளவு நான் என்னைத் தாழ்த்திவிட்டேன் என்று சொல்வதற்கில்லை. அவரது பொறுமை என்னை இன்னும் வனைந்து கொண்டிருக்கிறது.

நமது தகுதியின்மையை உணருவதே தேவன் எவ்வளவு தகுதியுள்ளவர் என்ற அறிவுக்குள் நம்மை நடத்தும். "தொழுகை" என்பதற்கான ஆங்கிலச் சொல்லாகிய "Worship" என்பது "Worthship," அதாவது "தகுதி நிறைவு," என்ற பொருள்கொண்ட மூலப்பதத்திலிருந்து வருகிறது. நம்மைத் தாழ்த்துவதே நமது தொழுகையைத்

தேவனுக்குமுன் ஏற்புடையதாக்குகிறது. இயேசுவின் பார்வையில் தீர்க்கர்களிலெல்லாம் பெரியவராகிய திருமுழுக்கினன் யோவான் தான் தனது தகுதியின்மையை முழுக்க முழுக்க உணர்ந்தவர்களில் முன்வரிசையில் நிற்கிறார். அவர் அறிக்கையிட்டது: "என்னிலும் வல்லவர் எனக்குப்பின் வருகிறார்; குனிந்து அவரது மிதியடி வாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை." இக்கூற்று மூன்று சுவிசேஷங்களில் இடம்பெற்றுள்ளது (மாற் 1:7; லூக் 3:16; யோ 1:27). ஜெபாலயப் பிரசங்கம் ஒன்றில் அப்போஸ்தலன் பவுலும் இதனைக் குறிப்பிடுகிறார் (அப் 13:25). வேலைக்காரர் அல்ல, அடிமைகள்தான் மிதியடியின் வாரை அவிழ்ப்பர். நம்மை நாமே தாழ்த்தும் இவ்வனுபவம் நெடுகவே நடக்கவேண்டியது. "இயேசு பெருகிக்கொண்டேயிருக்கவேண்டும்; நான் குறைந்துகொண்டே யிருக்கவேண்டும்" என்பதுதான் யோவானது கூற்றின் உட்கருத்து (யோ 3:30).

*"நான் யார்?" (Who am I?) "நான் எம்மாத்திரம்?" (What am I?)* ஆகியதும் இவை போன்றதுமான கேள்விகள் கேட்ட, அல்லது அறிக்கைகள் செய்த, தனிநபர்கள் பலரை எனது சமீபகால வேத ஆராய்ச்சியின்போது கண்டேன். இவையெல்லாம் அந்நபர்களது தாழ்மையின் வெளிப்பாடு என்பது தெளிவு. அவர்களில் எழுவரை இச்செய்திக் கட்டுரையில் சந்திப்போம் —

## 1. ஆபிரகாம்

*"இதோ, தூசியும் சாம்பலுமாயிருக்கும் அடியேன்*
*ஆண்டவரோடு பேசத் துணிந்தேன்"* (ஆதி 18:27)

சோதோமுக்காய் மன்றாடுகையில் பரலோகத்தின் தேவனை நோக்கி ஆபிரகாம் இவ்வார்த்தைகளைச் சொன்னார். 50 நீதிமான்கள் என்று தொடங்கி 45, 40, 30, 20, 10 என்று ஆபிரகாம் குறைத்துக் கொண்டே வந்தார் (வச 22-33). 50க்கு 5 குறைவாக என்று மன்றாடியபோதுதான் மேற்குறிப்பிட்ட வார்த்தைகளை ஆபிரகாம் கூறினார். ஒருவர் தன்னைத்



''தூசி அல்லது சாம்பல்'' என்று அழைத்துவிட்டால் அதற்கும் அதிகமாக அவர் தன்னைத் தாழ்த்தமுடியாது. இவையிரண்டும் குப்பை மேட்டில் கொட்டவேண்டிய ஒன்றுக்கும் உதவாதவை. தனது பார்வையில் ஆபிரகாம் இவ்வளவு குறைவாகத் தன்னை மதிப்பிட்டாலும், இந்தக் கோத்திரப்பிதாவின்மீது தேவனுக்கு அலாதிப்பிரியம் இருந்தது. கீழ்வரும் குறிப்புகள் நம்மை ஊக்குவிக்கும், உணர்த்துவிக்கும் —

■ ஆங்கில வேதாகமத்தின்படி, "தொழுகை" (Worship) என்ற சொல்லைத் திருமறையில் முதலாவது பயன்படுத்தியது ஆபிரகாம் தான். மோரியா மலைக்குத் தன்னுடனும் ஈசாக்குடனும் வந்த இரு வேலைக்காரரிடம் ஆபிரகாம் சொன்னது: ''நீங்கள் கழுதையுடன் இங்கேயே காத்திருங்கள்; நானும் மகனும் அவ்விடம் சென்று **தொழுதுகொண்டு** திரும்பிவருவோம்'' (ஆதி 22:5). தனக்குப் பிரியமான தனது ஒரே மகனைப் பலியிடுவதையே "தொழுகை" என்று ஆபிரகாம் அர்த்தப்படுத்தினார் (வச 2). தொழுகை அல்லது ஆராதனை என்பதற்கு இதைவிட மேலான வரையறை தரமுடியுமோ? ஆராதனை என்பது *நம்மைப்* பரவசப்படுத்த அல்ல; அது நமக்குள்ள உசிதமானதைக் கொண்டு *உன்னதரை* உயர்த்துவதாம். அது *நம்மை* மகிழ்விக்க அல்ல; *நமதாண்டவரது* இதயத்தைக் குளிரப்பண்ணு வதாம். ஆராதிப்பதைக் குறித்து ஆபிரகாமுக்கு இருந்த அறிவுடன் ஒப்பிடும்போது இன்றையத் துதி ஆராதனைகள் எவ்வளவு குறை வுள்ளவை பாருங்கள்!

■ "தீர்க்கதரிசி" என்று பைபிளில் முதலாவது அழைக்கப்பட்டது ஆபிரகாம்தான். அவர் சொன்ன பாதி உண்மையை நம்பிய அரசன் அபிமெலேக்கு சாராளை எடுத்துக்கொண்டார். அவள் இன்னொரு வரது மனைவி என்று சொப்பனத்தில் அரசனை ஆண்டவர் கடிந்து கொண்டார். தேவன் அவரிடம் சொன்னது: "அந்த மனிதனின் மனை வியை அவனிடம் அனுப்பிவிடு; அவன் ஒரு **தீர்க்கதரிசி**; அவன் உனக்காய் வேண்டுதல் செய்வான்" (ஆதி 20:7). முதலாம் நபராய்த் தீர்க்கதரிசி என்றழைக்கப்பட்டது, அதுவும் தேவனாலேயே அவ்விதம்

அழைக்கப்பட்டது, சாதாரண காரியம் அல்லவே! இவ்வித மனிதன்தான் தன்னைத் "தூசி" என்றும் "சாம்பல்" என்றும் தாழ்த்திக் கொண்டார் (18:27). தேவனது கிருபாவரங்களைக் குறித்து நாம் பெருமை யடிக்காதிருப்போம். நான் ஓர் அப்போஸ்தலனாகவோ, தீர்க்கதரிசி யாகவோ, சுவிசேஷகனாகவோ, மேய்ப்பனாகவோ, போதகனாகவோ, எவ்வித அழைப்பைப் பெற்றிருந்தாலும் தேவனுக்குமுன் நான் தூசிதான், சாம்பல்தான், என்பதை ஒருபோதும் நான் மறக்கக்கூடாது.

■ "தேவனுக்குச் சிநேகிதன்" என்று அழைக்கப்பட்ட முதல் நபரும் ஆபிரகாம்தான். சோதோம், கொமோரா நகர்களின் கூக்குரலும் கொடிய பாவமும் தமக்கு உண்டாக்கிய கோபத்தைத் தேவன் அவருக்குச் சொல்லுமுன், தமக்குள்ளேயே தேவன் பேசிக்கொண்டது, "நான் செய்யவிருப்பதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? ... நான் அவனை அறிந்திருக்கிறேன்" (ஆதி 18:17-19). தேவனது இவ்வார்த்தைகளின் அடிப்படையிலேயே ஆபிரகாம் "**தேவனுக்குச் சிநேகிதன்**" என்றழைக்கப்பட்டார் என்று அப்போஸ்தலன் யாக்கோபு எழுதினார் (யாக் 2:23). ஆபிரகாமுடன் தேவனுக்கிருந்த நெருக்கவுறவு அபாரம். பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பர். ஆபிரகாமைப் பொருத்தவரை அப்படியல்ல. அவர் ஆண்டவரை அனைத்துலக "நீதியரசர்" என்றழைத்தார் (ஆதி 18:25). சோதோமுக்காய் மன்றாடுகையில், "ஆண்டவரே, உமக்குக் கோபம் வராதிருக்கட்டும்" என்று இருமுறை கேட்டுக்கொண்டார் (வச 30,32). தேவனுடன் நமக்கிருக்கும் ஐக்கியம் மற்றும் நெருக்கமானது அவர் மீதுள்ள நமது பயபக்திக்குப் பங்கம் விளைவித்துவிடக்கூடாது.

■ விசுவாசிக்கிற அனைவருக்கும் "தந்தை" என்று ஆபிரகாம் அழைக்கப்படுகிறார் (ரோ 4:11). தேவன் அவரது பெயரை "ஆபி ராம்" என்பதிலிருந்து "ஆபிரகாம்" என்று மாற்றியபோது அவரிடம் சொன்ன வார்த்தைகளை நினைவில் வைத்துப் பவுல் அவரை இவ்விதம் அழைக்கிறார்: "நான் உன்னை எண்ணற்ற மக்களினங்களுக்குத் தந்தையாக்கினேன்" (ஆதி 17:5). "ஆபிராம்" என்றால் "உயர்த்தப்பட்ட



தந்தை" என்று பொருள்; "ஆபிரகாம்" என்றால் "திரள்களின் தந்தை" என்று பொருள். ஒன்று உயர்த்தப்படுதலையும், அடுத்தது விரிவாக் கப்படுதலையும் குறிப்பிடுகிறது. தேவனுக்குமுன் உத்தமமாய் நடப்பது ஆபிரகாமின் வாழ்க்கையின் செங்குத்துப் பரிமாணம் (வச 1); நாட்டின் நீளமும் அகலமும் எவ்வளவோ அவ்வளவு நடந்து திரிவது சமதளப் பரிமாணம் (13:17). அப்போஸ்தலன் பவுலின் ரோமர் நிருபத்தில் ஒரு முழு அத்தியாயமே ஆபிரகாமுக்காய் ஒதுக்கப் பட்டுள்ளது (அத் 4). பழைய ஏற்பாட்டுக் கதாபாத்திரங்களில் எவருக்கும் புதியதில் இவ்வளவு முக்கியத்துவம் தரப்படவில்லை. புதிய ஏற்பாடும், இயேசுவின் வம்ச வரலாறும் ஆபிரகாமில்தான் துவங்குகின்றன (மத் 1:1). தேவன் நம்மை நமது வேலை அல்லது ஊழியத்தில் உயர்த்தும்போது, நமது திறமை மற்றும் உழைப்பினாலேயே இந்நிலைக்கு நாம் வந்துவிட்டோம் என்று நினைப்பது எளிது. இவையிரண்டையும் ஆண்டவர் கனப்படுத்துகிறார் என்பது உண்மைதான்; அதனால் நம்மை உயர்த்திவிட அவர் கடமைப் பட்டவரல்ல. விரும்பத்தக்க உயர்நிலைகளுக்கு நம்மைக் கொண்டு வருவது தேவ கிருபையே.

■ தங்களது வேர்கள் எங்கே என்பதைத் தெரிந்துகொள்ள இஸ்ர வேல் மக்கள், பழைய ஏற்பாட்டு அத்தனை கதாபாத்திரங்களிலும், ஆபிரகாமையே நோக்கிப்பார்க்க அழைக்கப்பட்டனர். ஏசா 51:1,2, "நீதியை நாடுவோரே, ஆண்டவரைத் தேடுவோரே, எனக்குச் செவி கொடுங்கள்: நீங்கள் எந்தப் **பாறையினின்று** செதுக்கப்பட்டீர்களோ, எந்தக் குழியினின்று தோண்டப்பட்டீர்களோ, அதை நோக்குங்கள். உங்கள் **தந்தை** ஆபிரகாமையும் உங்களைப் பெற்றெடுத்த சாரா ளையும் நினைத்துப் பாருங்கள். தனியனாய் இருந்த அவனை அழைத்தேன்; அவனை ஆசீர்வதித்துப் பெரும் திரளாக்கினேன்." ஆபிரகாம் தனது பார்வையில் "தூசியும் சாம்பலுமாகவே" தெரிந்தார் (ஆதி 18:27). தேவனோ அவரைப் "பாறை" என்றழைக்கிறார். மேன்மைக்கு முன்னானது தாழ்மை (நீதி 15:33ஆ; 18:12ஆ).

## உ. மோசே

மோசே தேவனைப் பார்த்து, *''பார்வோனிடம் செல்வதற்கும், இஸ்ரவேல் மக்களை எகிப்திலிருந்து அழைத்துப் போவதற்கும்* ***நான் யார்?''*** என்றார் (யாத் 3:11)

நெருப்பால் எரிந்துகொண்டிருந்த முட்புதர் தரிசனத்தின்மூலம் தேவன் தமது மக்களைப்பற்றிய திட்டத்தை மோசேக்கு வெளிப் படுத்தினார் (யாத் 3:1-10). இது அவ்வளவு அதிசயமான தரிசன மாயிருந்ததாலேயே இயேசுவும் ஸ்தேவானும் தங்கள் பிரசங்கங் களில் அதனைக் குறிப்பிட்டனர் (லூக் 20:37; அப் 7:30,35). தரிசிக்க முடியாததை மோசே தரிசித்தார்; கேட்க முடியாததைக் கேட்டார்; அழிக்க முடியாததைத் தெரிந்துகொண்டார்; செய்ய முடி யாததைச் செய்தார் (எபி 11:27). மோசேயைக் குறித்து மேன்மை யான பல காரியங்கள் சொல்லப்பட்டுள்ளன —

■ மோசேயைப்பற்றித் திருவசனம் கூறும் சான்று உணர்த்துதலா யிருக்கிறது: எண் 12:3, "பூவுலகின் அனைத்து மாந்தரிலும் மோசே **சாந்தமிகு** மானிடராய்த் திகழ்ந்தார்." சாந்தம் என்பது "தாழ்மை" என்றும் மொழியாக்கப்பட்டுள்ளது. இவ்வார்த்தைகள் காணப்படும் சூழமைவைக் கவனிக்கவேண்டும். அவர் மணந்திருந்த எத்தியோப் பியப் பெண்ணைக் குறித்து அவரது சகோதரி மிரியாமும், சகோத ரன் ஆரோனும் அவருக்கு எதிராகப் பேசினர் (வச 1). தங்களது விமர்சனத்திற்கு மார்க்க வர்ணமும் பூசிவிட்டனர்: "மோசே மூலம் மட்டும்தான் கர்த்தர் பேசினாரோ? எங்கள் மூலமாகவும் அவர் பேசவில்லையோ?'' (வச 2). மோசே இங்கு தன்னை நியாயப்படுத்தி எதுவும் பேசவில்லை. தனக்கு வாயாகச் செயல்பட்ட சொந்தச் சகோ தரனும், பாடல் நடத்திய சொந்தச் சகோதரியும் பேசிய இப்பேச்சு அவரை எவ்வளவு புண்படுத்தியிருக்கும்! அவர் கேளாதவர்போல் இருந்துவிட்டார்; ஆனால் "*கர்த்தர்* அதனைக் கேட்டார் " (வச 2). தனக்கு எதிராகப் பேசித் தொழுநோயாளியாகிவிட்ட தனது சகோ தரிக்காய் ஜெபிக்கவே மோசே முதன்முதலாக வாயைத் திறந்தார்:



"என் தேவனே, அவளைக் குணமாக்கும்" என்று கெஞ்சினார் (வச 13). இந்நிகழ்வின்போது மோசே இவ்வளவு சாந்தமாய் இராதிருந்தால், மிரியாமைத் தனது இடது கையினாலும், ஆரோனை வலது கையினாலும் அடித்து நொறுக்கி, அடக்கமும் செய்திருப்பார்! 40 ஆண்டுகள் அவரை வனாந்திரத்தில் கர்த்தர் பக்குவப்படுத்துமுன் அவர் அப்படிப்பட்ட வராய்த்தான் இருந்தார் (யாத் 2:11-15; அப் 7:21-28).

■ மோசேயுடன் தேவன் ''ஒரு நண்பனிடம் பேசுவதுபோல் முகமுகமாய்ப்'' பேசினார் (யாத் 33:11அ). அவரை மிரியாம் மற்றும் ஆரோனுக்குமுன் மெச்சிப்பேசியபோது அவர்களிடம் தேவன் விட்ட சவால்: ''என் வார்த்தைகளைக் கேளுங்கள்: உங்களுக்குள் தீர்க்கதரிசி ஒருவன் இருந்தால் ஆண்டவராகிய நான் ஒரு தரிசனத்தின் வழியாக அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்; கனவில் அவனோடு பேசுவேன். ஆனால் என் அடியான் மோசேயோடு அப்படியல்ல; என் வீடு முழுவதிலும் அவன் நம்பிக்கைக்குரியவன்; நான் அவனுடன் பேசுவது மறைபொருளாக அல்ல, நேர்முகமாகவும் தெளிவாகவும் இருக்கும். ஆண்டவரது சாயலையும் அவன் காண்கிறான். பின்னர் ஏன் என் அடியான் மோசேக்கு எதிராகப் பேச நீங்கள் அஞ்ச வில்லை?'' (எண் 12:6-8). தேவனது இவ்வார்த்தைகளின்படி, மோசே ஒரு **தீர்க்கதரிசிக்கும் மேலானவர்.** ''தீர்க்கர்களிலெல்லாம் பெரியவன்'' என்று யோவானை இயேசு குறிப்பிட்டார் (மத் 11:11). அவர் அற்புத அடையாளம் ஒன்றும் செய்யவில்லை என்று வாசிக்கிறோம் (யோ 10:41). ஆனால் மோசேயைக் குறித்தோ, கர்த்தர் அவர்மூலம் செய்த ''அடையாளங்கள், அற்புதங்கள், வல்ல செயல்கள், அச்சுறுத்தும் காரியங்கள்'' எல்லாவற்றையும் பார்த்தால், அவரைப்போன்றதொரு தீர்க்கன் இஸ்ரவேலில் எழும்பியதில்லை என்றே சொல்லப்பட்டி ருக்கிறது (உபா 34:10-12). நம்மூலம் தேவன் அசாதாரண வரங்களைக் கண்கவரும் வகையில் வெளிப்படுத்தும்போது அவருக்கு முன்பாகவும் மனிதருக்கு முன்பாகவும் தாழ்மையைக் காத்துக்கொள்வது எளிதல்ல; இங்குதான் உண்மையான மேன்மைக் குணம் வெளிப்படுகிறது. ''தேவா, என்னை மறைத்து உம்மை வெளிப்படுத்தும்'' என்பதே நமது

வேண்டலாய் இருக்க வேண்டும். நாம் இருதயத்திலிருந்து நிசமாகவே இவ்விதம் ஜெபித்தால், இத்தகைய வல்லமையை மனிதருக்கு அருளும் "கடவுளை" மக்கள் போற்றிப் புகழ்வர் (மத் 9:8).

■ ''என் தாசன்'' அல்லது ''என் ஊழியன்'' அல்லது ''என் அடியான்'' (My servant) என்று அழைக்கப்பட்ட முதல் நபர் ஆபிரகாம் எனினும், வேறு எவரையும்விடப் பைபிளில் அடிக்கடி அவ்விதம் அழைக்கப் பட்டது மோசேதான். மிரியாமிடமும் ஆரோனிடமும் தமது சவாலை ஆண்டவர் வீசியபோது, இருமுறை அவர் மோசேயை *''என் தாசன்''* என்று குறிப்பிட்டார் (எண் 12:7,8). மோசேக்குப் பின்னர் யோசுவாவைப் பணிக்கு நியமித்தபோது கர்த்தர் அவரிடம் சொன்னது, ''*என் ஊழியன்* மோசே இறந்துவிட்டான். இப்பொழுது நீ எழுந்து புறப்படு'' (யோசு 1:2). ''தேவதாசன்'' என்று மோசே அழைக்கப்பட்ட பிற இடங்கள்: 1 நாளா 6:49; 2 நாளா 24:9; நெகே 10:29; தானி 9:11. பரலோகிலும்கூட பாடப்படும் ஒரு பாடல் "**தேவதாசன்** மோசேயின் பாடல்" எனப்படுகிறது (வெளி 15:3). பரலோகிற்குள் அல்ல, கானானுக்குள் செல்லத்தான் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. மறுரூப மலைக்கு விண்ணிலிருந்து வந்து இயேசுவுடன் பேசிய இருவரில் அவர் ஒருவர் (மத் 17:3). "மோசேயுடன்" எலியா தோன்றினார் என்றெழுதுகிறார் மாற்கு (மாற் 9:4). மோசேயும் எலியாவும் "மகிமையில்" தோன்றினர் என்பது லூக்கா தரும் தகவல் (லூக் 9:30,31). பட்டங்களும் பதவிகளும் நமக்குள் செருக்கையும் அகம்பாவத்தையும் புகுத்திவிடக்கூடாது. தாழ்மையே நமது மகுடமாயிருக்கவேண்டும்.

■ ஒரேயொரு சங்கீதம்தான் மோசேயின் சங்கீதம் எனப்படுகிறது: சங்கீதம் 90. அது ***"தேவ மனிதன்*** *மோசேயின் ஜெபம்"* என்று தலைப்பிடப்பட்டிருக்கிறது. நேரமெடுத்து இச்சங்கீதத்தைத் தியானியுங்கள். 10ஆம் வசனம் முதியவர்களுக்கு அதிகம் பிடிக்கும்: "எங்கள் வாழ்நாள் எழுபது ஆண்டுகளே; பலசாலிகளுக்கு எண்பது; அவற்றிலும் பெருமைக்குரியன துன்பமும் துயரமுமே. அவை விரைவில் கடந்துவிடுகின்றன; நாங்களும் பறந்துவிடுகின்றோம்." இக்கருத்தை அவர் 15ஆம் வசனத்தில் சமநிலைப்படுத்துகிறார்: "கர்த்தாவே, எங்களை நீர் ஒடுக்கிய நாட்களுக்கும், நாங்கள் தீங்குற்ற ஆண்டுகளுக்கும் ஈடாக, எங்களை மகிழச்செய்யும்!" கோத்திரப் பிதாக்களின் வாழ்காலத்துடன் ஒப்பிடுகையில், மோசே சீக்கிரம் இறந்துவிட்டார் என்றுதான் சொல்லவேண்டும்; அவருக்கு இன்னும் கண்களில் புரை (cataract) விழவில்லையே (உபா 34:7). அடக்க ஆராதனைக் கூடுகையின்றி, தேவனே அடக்கம் செய்தது அவர் ஒருவரைத்தான் (உபா 34:5,6). அவரது பிரேதத்திற்காய்ப் பிரதான தூதன் மிகாவேலுடன் பிசாசு வாதாடினான் (யூதா 9). அவர் எங்கு புதைக்கப்பட்டாரென்று தெரியாததற்கு ஆண்டவருக்குக் கோடா கோடி ஸ்தோத்திரம்! இல்லையேல், அவ்விடத்தில் மக்கள் ஓர் ஆலயம் கட்டியிருப்பார்கள்; மறுரூப மலையிலேயே மோசேக்குக் கூடாரம் போட விரும்பினார்களே (மத் 17:4)!

நாம் தேவனது ''பிள்ளைகள்'' என்றழைக்கப்படுகிறோம். ''தேவ மனுஷன்'' அல்லது ''தேவ மனுஷி'' என்ற நிலைக்கு வளர விரும்பும் எவரும் தேவ மனுஷன் மோசேயிடமிருந்து கற்கவேண்டியவை ஏராளம். அவர் தேவனுடன் நெருக்கவுறவு கொண்டிருந்தார் (எண் 12:8; உபா 34:10). தேவனுடைய வீட்டில் எங்கும், எதிலும், உண்மையாயிருந்தார் (எண் 12:7; எபி 3:2,5). அவரது உண்மைத் துவத்தை இயேசுவினதோடு ஒப்பிட எபிரெய நிருப ஆக்கியோன் தயங்கவில்லை, பாருங்கள் (எபி 3:2-5). மக்கள் கானானுக்குள் நுழைய முடியாதபடி வாதையினால் அவர்களை நாசமாக்கப்போவ தாக மோசேயிடம் தேவன் சொன்னபோது, அவர் தேவனுக்குமுன் புலம்பி மன்றாடினார் (எண் 14:1;1-19). ஆனால் கானானுக்குள் நுழைவு தேவனால் அவருக்கு ரத்து செய்யப்பட்டபோதோ அதை அவர் மறுவார்த்தை பேசாது ஏற்றுக்கொண்டார் (20:12). இவ் வுலகில் எக்காரணத்தை முன்னிட்டோ ஒரு தேவ மனிதன் தகுதி நீக்கம் செய்யப்படலாம்; ஆனால் அவன் விண்ணில் தனக்காய்க் காத்திருக்கும் "பலன்" மீதே கண்ணைப் பதித்து, தேவனுக்குமுன்

உத்தமமாய்த் தொடர்ந்து நடைபோட்டுக்கொண்டே இருப்பான் (எபி 11:26). தாழ்மை எனும் ஆடையை அவன் கழற்றவே மாட்டான் (1 பேது 5:5).

## 3. சவுலரசன்

*''இஸ்ரவேலில் **மிகச் சிறிதான** பெஞ்சமின் குலத்தைச் சார்ந்தவனன்றோ நான்? பெஞ்சமின் குலத்தில் அனைத்துக் குடும்பங்களிலும் என்னுடையது **கடைநிலையில்** உள்ளதன்றோ? பின்பு, நீர் ஏன் என்னிடம் இவ்வாறு பேசுகிறீர்?''* (1 சாமு 9:21)

தேவன் தமது மக்களுக்குத் ''தலைவனாகச்'' சவுலைத் தெரிந் தெடுத்துள்ளார் என்று தீர்க்கன் சாமுவேல் அவரிடம் சொன்னபோது, அவர் கொடுத்த பதில் வார்த்தைகள் இவை (1 சாமு 9:20; 10:1). இஸ்ரவேலின் முழு ''விருப்பமும்'' அவர்மீதும் அவரது வீட்டார் மீதும் உள்ளது என்று சாமுவேல் சொன்னது சவுலை அதிர்ச்சிக்குள் ளாக்கிற்று.

யாக்கோபின் பன்னிரு குமாரரில் பென்யமீன்தான் இளையவன். அவனைப் பிரசவிக்கையில் இறந்துகொண்டிருந்த அவனது தாய் அவனுக்குப் ''பெனொனி'' என்று பெயர் வைத்தாள்; ''வேதனையின் மகன்'' என்பது அதற்குப் பொருள் (ஆதி 35:18). அவன் தந்தையோ அவனுக்குப் ''பென்யமீன்'' என்று பெயரிட்டார்; ''வலக்கை மகன்'' என்பது அதற்குப் பொருள். யோசேப்புக்குப் பென்யமீன் உடன் பிறந்த சகோதரன் (வச 24). பென்யமீனைக் குறித்த யாக்கோபின் தீர்க்கதரிசனத்தைக் கவனியுங்கள்: ஆதி 49:27, ''பீறிக்கிழிக்கும் ஓநாய்க்குப் பென்யமீன் ஒப்பானவன்; காலையில் வேட்டையாடிய இரையை அவன் விழுங்குவான்; மாலையில் கொள்ளைப் பொருளைப் பங்கிட்டுக்கொள்வான்.'' பென்யமீனியர் வல்ல போர் வீரர் ஆவர் என்பதே இத்தீர்க்கதரிசனம். அவர்களைக் குறித்து நாம் வாசிப்பது: 1 நாளாகமம் 12:1,2, ''அவர்கள் போரில் (தாவீதுக்கு) தோள்கொடுத்த



ஆற்றல்மிகு படைவீரர், வில்வீரர். கவண்கல் எறி வதற்கும், அம்பு எய்வதற்கும், வலக்கை இடக்கைப் பழக்கமுள்ளவர்.'' பவுலடியாரும் பெஞ்சமின் குலம் சார்ந்தவர் (பிலி 3:5). மனந்திரும்புதலுக்கு முன்னரும் பின்னரும் அவர் போராளிதானே?

■ கர்த்தருக்கு முன்பாக இறுதிவரை தாழ்மையின் ஆவியையும், தனது ஒன்றுமில்லாமையின் உணர்வையும் சவுலரசன் தக்கவைத்துக் கொள்ளாதது துக்கம். இதுவே அவரைத் தவறான வழிகளுக்குள் நடத்தியது. தகனபலி செலுத்த சாமுவேல் வரும்வரை அவர் காத்திருக்கவில்லை. சாமுவேல் வரத் தாமதித்தபோது, மக்கள் ஒவ் வொருவராய் அவரை விட்டுப்போகின்றனர், மற்றும் பெலிஸ்தியர் எந்த நிமிடமும் தாக்கிவிடலாம், என்று தகனபலியைக் கட்டாயமாய்ச் செலுத்திவிட்டார். ''மக்கள்'' சார்ந்த இம்மனப்பான்மையினால் ''தேவன்'' தந்த கட்டளையைச் சவுல் மீறினார் (1 சாமு 13:8-14). சவுலின் **பயபக்தியற்ற செயல்** தேவனுக்குக் கோபமூட்டியதால், அவர் சவுலைக் கடந்துசென்றார் (வச 13,14). தமது இதயத்திற்கு இதமான வனைத் தெரிந்தெடுத்துவிட்டார்!

■ **தற்புகழ்** நாடியது சவுலரசனின் அடுத்த பாவம். தனக்கென்று ஒரு நினைவுக் கோபுரம் அமைத்துக்கொண்டார் (1 சாமு 15:12). தலைமையில் இருக்கும் எவருக்கும் இது ஒரு வஞ்சகக் கண்ணி. கதாநாயக வணக்கம் மலிந்துள்ள திரையுலகு மற்றும் அரசியலின் கலாச்சாரம் கிறிஸ்தவத்திற்குள்ளும், குறிப்பாக நட்சத்திரப் பிரசங்கிமார் பலரது ஊழியங்களுக்குள், பரவிவிட்டது. மார்க்கவுலகில் காணப்படும் இதனைத் தேவன் அருவருக்கிறார். மக்களது பாராட்டு அனைத்தையும் தேவனுக்குப் புகழ்ச்சியாய் அவர் பக்கம் திருப்பிவிடப் பிரசங்கிமார் நெடுகவே முழுமுயற்சி எடுக்காவிடில் ஆபத்துதான். ''தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்; தன்னைத்தான் ***தாழ்த்துகிற வனோ*** உயர்த்தப்படுவான்'' என்று எத்தனை முறை இயேசு சொல்லி யிருக்கிறார்! (மத் 23:12; லூக் 14:11; 18:14ஆ).

■ மூன்றாவதாக, **அரைகுறைக் கீழ்ப்படிதல்** சவுலின் தவறுதல்களில் ஒன்று. அமெலேக்கியரை அடியோடு அழித்து, அவர்கள் இல்லாதுபோகும்வரை அவர்களுக்கு எதிராய்ப் போரிடவேண்டுமென்று சவுலைக் கர்த்தர் பணித்திருந்தார் (1 சாமு 15:3,18). அவரும் மக்களுமோ கால்நடைகளில் முதல்தரமானவற்றையும், நல்லவை அனைத்தையும் அழிக்காது வைத்துக்கொண்டனர்; ஒன்றுக்கும் உதவாதவற்றை மட்டும் அழித்துப்போட்டனர் (வச 9). இதனால், சவுலை இஸ்ரவேலருக்கு முதல் மன்னன் ஆக்கியது தேவனுக்கு ''மிகுந்த விசனம்'' உண்டாக்கிற்று (வச 11). தனது மனவேதனையைத் தீர்க்கன் சாமுவேலிடம் தேவன் கொட்டியபோது, அவர் இரவெல்லாம் தூங்காது தேவனை நோக்கிக் கதறினார். கர்த்தரது கட்டளைக்கு அரைகுறைக் கீழ்ப்படிதல் என்பது ''கலகம், சூனியம், முரட்டுத்தனம், சிலைவழிபாடு'' ஆகியவற்றிற்கு ஒப்பான குற்றம் என்று சவுலைச் சாமுவேல் கண்டித்தார் (வச 23). இந்தச் சமயத்தில்தான் சாமுவேல் சவுலைப் பார்த்து, ''நீர் உமது பார்வைக்கே *சிறியவராய்* இருந்த போதல்லவா இஸ்ரவேல் குலங்களுக்குத் தலைவர் ஆனீர்?'' என்று நினைப்பூட்டினார் (வச 17; 1 சாமு 9:21).

பிரியமானவரே, தலைமைப் பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், நொறுங்கிய மனதையும் தாழ்மைச் சிந்தையையும் இறுதிவரை தக்கவைத்துக்கொள்வது எளிதல்ல. தேவன் சவுலை ''அகற்றி'' தாவீதை ''அமர்த்தினார்.'' தனது முதலாம் மிஷனரிப் பயணப் பிரசங்கங்கள் ஒன்றில் பவுல் இதனைக் குறிப்பிடும் அளவு இது சரித்திரம் புகட்டும் பாடமாயிற்று (அப் 13:21,22). தேவ ஊழியர் பலரது வாழ்வில் இது நிகழ்ந்துள்ளது. விழிப்புடனும் எச்சரிப்புடனும் நடக்காவிடில், நமது பொலிவான தோற்றமும், இயல்பான திறமைகளும் நமது சமநிலையை இழக்கச் செய்யும் (1 சாமு 9:2). தேவன் நம்மைத் தெரிந்தெடுத்தது அவரது கிருபையினாலேயே என்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. இதுவே நம்மை இறுதி வரை தாழ்மையாய் வைத்துக்கொள்ளச் செய்யும். ஊழியத்தில் உயரங்களை எட்டும்போதும், வெற்றிமேல் வெற்றி குவியும்போதும், தேவனுக்குமுன் தாழ்மையாய் நடக்கிறோமா என்று அவ்வப்போது தற்பரிசோதனை செய்துகொள்வது சீரழிவிலிருந்து நம்மைக் காக்கும்.



## 4. தாவீது

*“நான் யார்?” “நான் எம்மாத்திரம்?”*

இவ்விதக் கேள்விகளைப் பல சந்தர்ப்பங்களில் தாவீது கேட்டார். அவற்றில் நான்கினை இங்கு பார்ப்போம் —

■ சவுலரசன் தனது மூத்த மகள் மேராபைத் தாவீதுக்கு மணமுடித்துக்கொடுக்க முன்வந்தபோது தாவீது சொன்னது: ''அரசரின் மருமகன் ஆவதற்கு *நான் யார்?* என் *உறவினர் யார்? இஸ்ரவேலில் என் தந்தையின் குலம் எம்மாத்திரம்?''* (1 சாமு 18:18). ஏதோவொரு காரணத்தினால் மேராப் இன்னொருவருக்குக் கொடுக்கப்பட்டுவிட்டாள். சவுலின் இளைய மகள் மீகாளுக்குத் தாவீதைப் பிடித்துவிட்டது. இதனைச் சவுல் தனது பணியாளர் மூலம் தாவீதுக்குச் சொல்லியனுப்பியபோது, முதலில் சொன்னது போன்ற பதிலையே தாவீது கொடுத்தார்: ''அரசனுக்கு மருமகன் ஆவது உங்களுக்கு அவ்வளவு எளிதானதாய்த் தோன்றுகிறதா? *நான் எளியவனும் தாழ்ந்தவனுமாய் உள்ளேன் அன்றோ?''* (வச 23). மன்னனுக்கு மருமகனாவது சாதாரண காரியமா? வாழ்க்கைத்துணையைத் தெரிந்தெடுப்பதிலேயே வாலிபர் நங்கையர் பலர் தங்கள் குணநலன்களையே தொலைத்துவிட்டனர். மீகாளுடன் மணவாழ்வு தாவீதுக்கு மங்களகரமாய் இருந்ததாய்த் தெரியவில்லை; ஆனாலும் இறுதிவரை அவர் கர்த்தருக்குமுன் தாழ்மையைக் காத்துக்கொண்டார். கர்த்தருடைய பெட்டியை எருசலேமிற்கு நடனமாடிக்கொண்டு வருகையில், ''ஓர் அரசன் இப்படியா ஆடுவது?'' என்று மீகாள் தாவீதை அலட்சியமாய்ப் பேசினாள். அதற்குத் தாவீது கொடுத்த பதில்: ''நான் என்னை இன்னும் கடையவனாக்கிக்கொள்வேன்; என் கண்முன் என்னைத் **தாழ்த்திக்கொள்வேன்**'' (2 சாமு 6:22).

■ சவுல் துரத்திய வேளையிலும் தாவீதின் தாழ்மை தெளிவாய்த் தெரிகிறது. அவர் கேட்டது, *“இஸ்ரவேலின் அரசர் யாரைத் தேடிப் புறப்பட்டார்? ஒரு செத்த நாயை அன்றோ? ஒரு தெள்ளுப்பூச்சியை அன்றோ?”* (1 சாமு 24:14). இயற்கைக்கடன் கழிக்கச் சவுல் ஒரு குகைக்குள் சென்றபோது, அவருக்குத் தெரியாது அவரது மேலங்கியின்

தொங்கலை அறுத்துக்கொண்டபோது, அவரைக் கொல்வது அவ்வளவு எளிதாயிருந்த வேளையிலும் தாவீது இவ்வார்த்தைகளைச் சொன்னார் (வச 3,4). நமது எதிரிகள் நம்மிடம் சவால்விடும்போது நாம் நமது ஒன்றுமில்லாமையை மறந்துவிடுகிறோம் அல்லவா? ஊழியங்களில் இருப்போருக்கு ஒரு வார்த்தை: உங்கள் பணியை ஆண்டவர் ஆசீர்வதித்து விரிவாக்கும்போது, ஆதரவாளர்கள் பெருகி னாலும் எதிரிகளும் கூடுவர் என்பதே உலகெங்கும் கண்டது. நீங்கள் உங்களைக் கர்த்தருக்குள் திடப்படுத்திக்கொள்ளவேண்டிய அதே வேளையில், உங்களது ஒன்றுமில்லாமையையும் மறந்துவிடாதேயுங்கள். சர்வ வல்லவருக்குமுன் இன்னும் உங்களைத் தாழ்மைப்படுத்த இதனை ஒரு வாய்ப்பாய்ப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். போதுமான அளவு நம்மைத் தாழ்த்திவிட்டோம் என்று விழுந்துபோன மனுக்குலத்தைச் சேர்ந்த நாம் ஒருபோதும் சொல்லமுடியாது.

■ தாவீது அல்ல, அவரது மகன் சாலமோன்தான் ஆலயத்தைக் கட்டுவார் என்று தீர்க்கன் நாத்தான் மூலம் தேவன் தாவீதுக்குச் சொல்லியனுப்பினார். இதோ தாவீதின் மறுமொழி: ''என் தலைவராம் ஆண்டவரே, இதுவரை நீர் என்னை வழிநடத்தி வந்தமைக்கு *நான் யார்? என் குடும்பம் யாது?''* (2 சாமு 7:18). இச்சம்பவத்தைத் திரு மறை இவ்விதம் குறிப்பிடுகிறது: ''தாவீதரசன் உள்ளே சென்று, கர்த்தரது திருமுன் அமர்ந்து இவ்வாறு பேசினார்.'' தரையில் உட்கார்ந்தே தாவீது இவ்வறிக்கையைச் செய்தார் என்று புரிந்து கொள்ளமுடிகிறது. துவக்கக் காலங்களில் இப்படியெல்லாம் அறிக் கைபண்ணுவது எளிது; உச்சத்தை எட்டியபிறகு? நமது முந்திய தாழ்வு நிலையைத் தேவன் அடிக்கடி நமக்கு நினைவுபடுத்துகிறார். தாவீதிடம் அவர் சொன்னது: ''என் மக்கள் இஸ்ரவேலரின் தலை வனாக விளங்கப் புல்வெளியில் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த உன்னை நான் அழைத்தேன்'' (வச 8). வசனங்கள் 18 முதல் 29 வரையுள்ள தாவீதின் நன்றிப்பாடலை வாசித்துப் பாருங்கள். ''கர்த்தராகிய ஆண்டவரே'' (''என் தலைவராம் ஆண்டவரே'') என்று எட்டு முறை இதில் தேவனை அழைக்கிறார்! கலப்படமற்ற ஆரா தனை!



தேவனுக்குமுன் நம்மைத் தாழ்த்தும் அளவுக்குத்தான் நமது தொழுகை மேம்படும். நம்மில் ஆசனங்களுக்கே அடிமைப்பட்டுள்ளவர்கள் கீழேயிறங்கித் தேவனுக்குமுன் பாயில் உட்காருவோம். பாயிலிருந்து நாம் கீழே விழமுடியாது!

■ தனது மகன் சாலமோனிடம் ஆலயக் கட்டிடத்திற்கான வரை படத்தைக் கொடுத்த பின்னர், ''அனுபவம் குறைந்த இளைஞனா கிய'' தனது மகனுக்கு முழு ஒத்துழைப்பு தருமாறு சபையார் அனைவரிடமும் தாவீது கேட்டுக்கொண்டார் (1 நாளா 28:11; 29:1). தனது ''சொந்தக் கருவூலத்திலிருந்து பொன்னையும் வெள்ளியை யும்'' தாராளமாய்க் கொடுத்துவிட்டதையும் மக்களிடம் கூறினார் (29:3). தேவனது ஆலயத்தின்மீது தனக்கிருந்த பற்றார்வத்தாலேயே இப்படிச் செய்ததாகத் தாவீது அறிக்கையிட்டார். மனப்பூர்வமாய்க் கொடுக்கும்படிப் பின்னர் மக்களுக்கு அழைப்பு விடுத்தார் (வச 5). மக்கள் தாராளமாகவும் ஏராளமாகவும் கொடுத்தனர். இதில் அக மகிழ்ந்த தாவீது தேவனை வாழ்த்திக் கூறியது: ''கர்த்தாவே, இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் ஆற்றல் உண்டாவதற்கு *நான் எம்மாத்திரம்? என் மக்கள் எம்மாத்திரம்?* எல்லாம் உம்மிடமிருந்து வந்தவை. உமது கையிலிருந்தே வாங்கி உமக்குக் கொடுத்துள் ளோம்'' (வச 14). பணம் திரட்டும் தனது திறமை என்று தாவீது பெருமையடிக்கவில்லை. பல்வேறு திருச்சபைகள், திருச்சங்கங் களுக்காய்ப் பணம் சேகரிப்போரிடையே நடக்கும் எலிப்பந்தயம் ஒழியட்டும்!

தாழ்மை குறித்த நமது வேத ஆராய்ச்சியில் அடுத்த கதாபாத்தி ரத்தைக் கவனிக்குமுன், தங்கள் பாவங்கள் சுட்டிக்காட்டப்பட்டபோது சவுலரசனும் தாவீதரசனும் எவ்விதம் அதற்குப் பிரதிபலித்தனர் என்று பார்ப்போம். சவுல் ஏன் தகனபலி செலுத்தினாரென்று சாமுவேல் வினவியபோது, அவர் அதற்குச் சாக்குப்போக்குகள் சொல்லத் தொடங்கினார். அமெலேக்கியர் காரியத்தில் பழியை மக்கள்மீது போட்டுவிட்டார். தற்புகழுக்காகத் தனக்கென்று நினைவுத்தூண் ஒன்று நாட்டிக்கொண்டார். மாறாக, தாவீதின் விபசாரம் மற்றும் கொலை ஆகிய

பாவங்களை அவருக்குத் தீர்க்கன் நாத்தான் உணர்த்தியபோது, ''நான் பாவம் செய்தேன்'' என்று அடிபணிந்தார். மக்களை அவர் கணக்கிட்டதால் தேவன் ஒரு கொள்ளை நோயை அனுப்பியபோது, அவர் தேவனை நோக்கிக் கேட்டது: *''நான்தானே* பாவம் செய்தேன், *நான்தானே* தீச்செயல் புரிந்தேன்; இந்த *ஆடுகள் என்ன செய்தன?''* (2 சாமு 24:17). தாழ்மை இல்லாது பாவ அறிக்கையும் மனந்திரும்புதலும் உண்மையாயிராது.

## 5. சாலொமோன்

*''விண்ணும் விண்ணுலகும் அவரைக் கொள்ள இயலாதிருக்க,*
*அவருக்கேற்ற ஓர் ஆலயம் கட்ட யாரால் முடியும்?*
*அவரது திருமுன் தூபம் காட்டுவதற்கேயன்றி*
*அவருக்கென ஓர் ஆலயம் எழுப்ப* ***நான் யார்?''*** (2 நாளா 2:6)

பல்லாயிரம் கூலியாட்களையும் கண்காணிகளையும் ஆலயக் கட்டுமானத்திற்காய் நியமித்த பின்னர், தீரு மன்னராகிய ஈராமிடம் ஆளனுப்பி, கட்டிட நிபுணரான ஒரு கலைஞனையும், மரங்களையும் தனக்கு அனுப்பிவைக்கும்படிச் சாலமோன் கேட்டுக்கொண்டார் (2 நாளா 2:3-10). இவ்விதம் ஈராமைக் கேட்டுக்கொண்டபோதுதான் மேற்கூறிய வார்த்தைகளைச் சாலமோன் பேசினார் (வச 6). தனது தந்தை தாவீதிடமிருந்து இவ்விதத் தாழ்மை மனப்பான்மையைச் சாலமோன் பெற்றுக்கொண்டது மெச்சிக்கொள்ளத்தக்கது. சாலொமோனிடம் இணையற்ற காரியங்கள் பல இருந்தன —

■ சாலமோனது காலத்தில் மிகப் பெரிய ஞானி அவர்தான். ஒரு கனவில் தேவன் அவரிடம் சொன்னது: ''இதோ, நான் இப்பொழுது நீ கேட்டபடியே செய்கிறேன். உனக்கு நிகராக, உனக்கு முன்னே எவரும் இருந்ததில்லை, உனக்குப் பின்னே இருக்கப்போவதுமில்லை. அந்த அளவுக்கு ஞானமும் பகுத்தறிவும் நிறைந்த உள்ளத்தை உனக்கு வழங்குகிறேன்'' (1 இரா 3:12). சாலமோனுக்கு ஆண்டவர் அருளியிருந்த ஞானத்தை நேரில் கேட்டறிய எல்லா நாட்டினரும் அவரை நாடி வந்தனர் (10:24).



■ சாலமோனுக்கு இருந்த அளவு செல்வமும் புகழும் வேறு எந்த அரசனுக்கும் இருந்ததில்லை. மேற்குறிப்பிட்ட அதே கனவில் ஆண்டவர் அவருக்குச் சொன்னது: ''நீ கேளாத செல்வத்தையும் புகழையும் உனக்குத் தருவேன். ஆகையால் உன் வாழ்நாள் முழுவதிலும் உனக்கு இணையான அரசன் எவனும் இரான்'' (1 இரா 3:13). சாலமோனுக்கிருந்த செல்வத்தைக் குறித்த சில வார்த்தைகள்: ''அவரது பான பாத்திரங்கள் எல்லாம் தங்கத்தாலும், லெபனோனின் வனம் எனப்பட்ட மாளிகையின் கலன்கள் அனைத்தும் பசும்பொன்னினாலும் ஆனவை. ஒன்றும் வெள்ளியினால் செய்யப்படவில்லை; சாலமோனின் காலத்தில் வெள்ளியை யாரும் உயர்வாக மதிக்கவில்லை" (10:21). இக்காலத்து அரேபிய ஷேக்குகளைவிட அதிகம் போல் தெரிகிறது!

■ ''சாலமோன்கூட தனது மேன்மையில் எல்லாம் ...'' என்று இயேசுவே குறிப்பிட்டார் என்றால் பாருங்கள் (மத் 6:28,29)! சாலொமோனின் ஞானத்தைக் கேட்க தென்னாட்டிலிருந்து அவ்வளவு பயணித்துவந்த ஷீபா ராணியைக் குறிப்பிட்டுத் ''தாம் சாலொமோனிலும் பெரியவர்'' என இயேசு சுட்டிக்காட்டினார் (12:42; 1 இரா 10:1).

இப்படி எத்தனையோ நிகரற்றவை சாலமோனுக்கு இருந்தும், அவர் தனது ஒன்றுமில்லாமையை உணர்ந்தவராயிருந்தார். ஆசிகள் நமது கண்களைக் குருடாக்கிவிடக்கூடாது. தீர்க்கன் எரேமியா மூலம் நமக்கு வரும் திருவார்த்தையைக் கேட்போம்: ''ஞானி தனது ஞானத்தைக் குறித்துப் பெருமையடிக்க வேண்டாம்; வலியவர் தங்கள் வலிமையைக் குறித்துப் பெருமையடிக்க வேண்டாம்; செல்வர் தங்கள் செல்வத்தைக் குறித்துப் பெருமையடிக்க வேண்டாம்; பெருமை பாராட்ட விரும்புவோர், நானே ஆண்டவர் என்பதை அறிந்து புரிந்துகொள்வதிலுமே பெருமை பாராட்டட்டும்'' (எரே 9:23,24). நம்மிடம் இருக்கும் எதுவும் நாம் *பெற்றுக்கொண்டதுதான்*. கொரிந்து விசுவாசிகளுக்கு அப்போஸ்தலன் பவுல் விட்ட சவால்: ''உன்னைச் சிறந்தவனாக்குவது யார்? உன்னிடம் இருப்பதெல்லாம் நீ

பெற்றுக்கொண்டதுதானே? பெற்றுக்கொண்டும் பெற்றுக்கொள் ளாததுபோல் பெருமையடிப்பதேன்?'' (1 கொரி 4:7). செல்வர் களுக்குக் கட்டளையிடும்படித் தீமோத்தேயுவுக்குப் பவுல் அறி வுறுத்திய முதல் காரியம், ''மேட்டிமை உணர்வு கொள்ளலாகாது'' என்பதே (1 தீமோ 6:17). வாழ்வின் இறுதிக்காலத்தில், ஆசீர் வாதங்களிலும் சிற்றின்பங்களிலும் மூழ்கிப்போன சாலொமோன் ஆசீர்வதிக்கிறவரை விட்டுவிட்டார். இது எவருக்கும் நேரிடலாம். ''சாலமோன்'' என்றாலே ''சமாதானம்'' என்றுதான் பொருள்; அவரோ தேவ சமாதானம் இழந்து இறந்தார். ஞானத்துடன் பிறர்க்குச் சொன்ன நீதிமொழிகளை அவர் தனக்குச் சொல்லிக்கொள்ள மறந்துவிட்டார்!

எக்காரணத்தையிட்டும் நாம் நம்மை உயர்த்திக்கொள்ளாதபடி நம்மைத் தடுக்கும் முட்களுக்காய்த் தேவனைத் துதிக்கவேண்டும் (2 கொரி 12:7). முடிசூட்டப்பட்ட நிலையில் நம்மைக் காத்துக்கொள்வது முட்களே.

## 6. மேவிபோசேத்

அவன் வணங்கி, *"நான் செத்த நாய் போன்றவன்,*
*என்னைக் கடைக்கண் பார்ப்பதற்கு உமது அடியான் எம்மாத்திரம்?"*
என்றான் (2 சாமு 9:8)

சவுலரசன் இறந்தபின் தாவீது விசாரித்தது: ''கடவுளின் கருணையை நான் சவுலின் வீட்டாருக்குக் காட்டுவதற்கு இன்னும் யாராவது இருக்கின்றனரா?'' அதற்குச் சவுலின் வீட்டைச் சேர்ந்த சீபா என்ற பணியாளன் கொடுத்த பதில்: ''யோனத்தானின் மகன் ஒருவன் இருகால் ஊனமுற்றவன் இருக்கிறான்'' (2 சாமு 9:3). அவன் குறிப்பிட்ட நபர் மேவிபோசேத். தாவீது அவனைத் தன்னிடம் அழைத்து வரச்செய்தார். அவன் தாவீதிடம் வந்தபோது, முகங்குப்புற விழுந்து சொன்ன வார்த்தைகளே மேலே குறிப்பிடப்பட்டவை (வச 6,8).

பிற மொழியாக்கங்களின்படி, ''நான் கருணை காட்டச் சவுலின் வீட்டாரில் யாரும் *இருக்கிறார்களா?''* என்றல்ல, ''யாரும் *இல்லையா?''* என்றுதான் தாவீது கேட்டிருக்கிறார். அப்படியே, வெறுமனே ''கருணை''



என்றல்ல, ''கடவுளின் கருணை'' என்று குறிப்பிட்டிருக்கிறார் (வச 3). ''உன் தலைவரின் பேரன் மேவிபோசேத் எப்பொழுதும் என்னுடன் உணவருந்துவான்'' என்று சீபாவிடம் தாவீது உறுதியளித்தார் (வச 10,11). இது அவனது வாழ்நாள் முழுவதற்குமான சிலாக்கியம்.

மேவிபோசேத்தில் நாம் நம்மைக் காண்கிறோம். அவன் இரு கால்களிலும் ஊனமுற்றவன் (வச 13). தன்னால் எதுவும் செய்ய முடியாதவன். நம்மைப்பற்றிச் சொல்லப்பட்டுள்ளதும் இதுதானே? ''நாம் பலமில்லாதவர்களாய் இருக்கும்போதே, ஏற்ற காலத்தில், கிறிஸ்து நமக்காய் உயிர் கொடுத்தார்'' (ரோ 5:6). தாவீதுக்குச் சவுல் பரம எதிரியாய் அவரைத் துரத்தினார். ''ஆனால் நாம் பாவிகளாய் இருந்தபோதே, கிறிஸ்து நமக்காய் உயிர் கொடுத்தார்'' (வச 8). தானே நினைத்துத் தாவீது மேவிபோசேத்துக்கு இவ்விதக் கருணை காட்டினார் (2 சாமு 9:1-3). ''நீங்கள் அல்ல, நானே உங்களைத் தெரிந்துகொண்டேன்'' எனும் இயேசுவின் வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன அல்லவா? (யோ 15:16). இதே உண்மையை அப்போஸ் தலன் யோவான் தனது நிருபத்தில் திரும்பச் சொல்கிறார்: ''நாம் கடவுள்மீது அன்பு கொண்டுள்ளோம் என்பதில் அல்ல; மாறாக, அவர் நம்மீது அன்புகொண்டு தமது மகனை நமது பாவங்களுக்குக் கிருபாதார பலியாக அனுப்பினார் என்பதில்தான் அன்பின் தன்மை விளங்குகிறது ... அவரே முதலில் நம்மிடம் அன்பு செலுத்தியதால் நாமும் அன்பு செலுத்துகிறோம்'' (1 யோ 4:10,19). இச்சத்தியத்தைப்பற்றிய அறிவு பவுலைவிட வேறு எவருக்கும் அதிகமில்லை என்பது எனது கருத்து. எபேசியர் 2:8,9இல் அவர் எழுதியுள்ளது: ''கிருபையினால் விசுவாசம் மூலம் இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானது அல்ல; இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமையடிக்காதபடி இது மனிதச் செயல்களால் உண்டானது அல்ல.'' பிரியமானவரே, நமது விசுவாசத் தைத் ''துவக்குபவர்'' இயேசுவே, நாம் அல்ல (எபி 12:2). நம்மில் நற்செயலைத் துவங்கியது தேவனே (பிலி 1:5). தேவனே, தமது சொந்த விருப்பத்தின்படி, நம்மை முன்குறித்தார், அழைத்தார், நீதிமான் களாக்கினார், மகிமைப்படுத்துவார் (ரோ 8:29,30). அது ''அவரது''

தீர்மானம் (வச 28). ''அடியேனுக்குத் தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல'' என்று நாம் யாக்கோபுடன் சேர்ந்து சொல்வோம் (ஆதி 32:10).

மேற்குறிப்பிட்ட சத்தியம் நமது மனதில் பதிந்தும், பசுமையாகவும் இருக்கும்வரை நமது கால்கள் சமதளத்தில் நிற்கும். 'உன்னைவிட-நான்-மேல்' எனும் மனப்பான்மைக்கு நம்மை விலக்கிக் காப்பது இதுவே. தாவீதரசனுடன் அவரது மேசையில் தினமும் சாப்பிடு கிறேன் என்று மேவிபோசேத் எப்பொழுதாவது பெருமையடித்துக் கொள்ள முடியுமா? சாப்பாட்டு மேசைக்கும் யாராவது ஒருவர் அவனைத் தூக்கிக்கொண்டு வரவேண்டுமே! அந்நாட்களில் மின்கலம் பொருத்தியுள்ள சக்கர வண்டிகள் உண்டோ? நீதிமானாக்கப்படுதல் கிருபையினாலேயே. பரிசுத்தமாக்கப்படுதல் கிருபையினாலேயே. மகிமையடைதலும் கிருபையினாலேயே நடக்கும். அடிமை வியாபாரி யாயிருந்த ஜான் நியூட்டன் (1725-1807) என்பவர் தனது மனமாற் றத்திற்குப் பின்னர் அடிமை வியாபாரத்தை ஒழிக்க உதவினார். 1772இல் அவர் இயற்றிய பாடல் காலத்தால் அழியாதது —

*Amazing Grace, how sweet the sound,*
*That saved a wretch like me;*
*I once was lost, but now am found;*
*Was blind, but now I see!*

1. *ஆஹா, கிருபை, இரட்சிப்பு, ஆகாதவன் கீதம்;*
   *அலைந்தேன், கண்டுபிடித்தார், அந்தகன் பார்க்கிறேன்!*
2. *கிருபையே, பயபக்தி, தொலைந்தது பயம்;*
   *நம்பின நொடிப் பொழுதில் நளதம் ஆயிற்றே!*
3. *திகில்கள், தீய வலைகள், யாவும் தப்பி வந்தேன்;*
   *கிருபைதான் காரணமே, விண்ணிலும் சேர்க்குமே!*



4. *வானவர் வாக்குப் பண்ணினார், வார்த்தையே நங்கூரம்;*
   *கேடகமும் அவர்தானே, எந்நாளும் போதுமே!*
5. *நித்திய காலம் மோட்சத்தில், விண்ணொளி வீதியில்;*
   *இங்கே துதியின் தொடக்கம், தொடரும் என்றுமே!*

*''ஆஹா, கிருபை!''* எனது சரிதைக்கு இதிலும் மேலான தலைப்பை என்னால் நினைத்தும் பார்க்க முடியாது. பண்டிதர் பில்லி கிரஹாம் (1918-2018) அவர்களது 784-பக்க சுயசரிதை நூல் *"Just as I am" (நான் பாவிதான்!)* என்ற தலைப்பில் வெளிவந்ததைக் கண்ட என் கண்கள் குளமாயின. அப்பாடலைப் பாடுவோமா?

*Just as I am, without one plea,*
*But that Thy blood was shed for me,*
*And that Thou bidd'st me come to Thee,*
*Lamb of God, I come! I come!*

*நான் பாவிதான், ஆனாலும் நீர்*
*மாசற்ற ரத்தம் சிந்தினீர்;*
*வா என்று என்னை அழைத்தீர்,*
*என் மீட்பரே, வந்தேன்! வந்தேன்!*

தலைமுடி வெட்டி, முகச்சவரம் பண்ணி, சோப்புக் குளியல் போட்டு, உடை மாற்றம் செய்தபின்தான் என் மகனைக் கட்டியணைப்பேன் என்றா தந்தை சொன்னார்? ''அவன் தொலைவில் வந்துகொண்டிருந்தபோதே தந்தை அவனைக் கண்டு, **பரிவு கொண்டு,** ஓடிப்போய், அவனைக் கட்டித்தழுவி முத்தமிட்டார்'' (லூக் 15:20). அந்த இளைய மகன் தன்னைத் தாழ்த்தியதாலேயே தந்தையின் வீட்டில் உயர்நிலை அடைந்தான் (வச 19,21). உள்ளே வர மறுத்த மூத்தவனுக்கோ பரிதாப நிலை (வச 28). தனது நற்செயல்களைக் குறித்தே அவன் பெருமை யடித்துக்கொண்டிருந்தான் (வச 29). நமது சபைகளில் ''மூத்த குமாரர்'' நிறைய இருப்பதுதான் துக்கம். பிரியமானவர்களே, நம்மை நாமே தாழ்த்துவோம், தாழ்த்துவோம், தரைமட்டும் தாழ்த்துவோம்!

நமது கடந்த காலப் பாவநிலையை மறக்கும் வாய்ப்புக்கு எதிராக விசுவாசிகளாகிய நாம் எச்சரிக்கப்பட்டுள்ளோம். ''கர்த்தர் செய்த உபகாரங்களை மறவாதே'' என்று தாவீது தனக்குத் தானே கட்டளை யிட்டுக்கொண்டார். ஐந்து உபகாரங்களில் அவர் முதலாவது குறிப்பிடுவது ''பாவ மன்னிப்பு'' என்பதைக் கவனிக்க (சங் 103:1-5). இச்சங்கீதத்தில் தேவனது நாற்பரிமாண அன்பினை வர்ணிக்கிறார்: உயரம் (வச 11), அகலம் (வச 12), ஆழம் (வச 13), நீளம் (வச 17,18). தேவன் தமது இரக்கத்தினால் எவ்விதம் நமது பழைய பாவங்களிலிருந்து நம்மைத் தூயோராக்கினார் என்பதை மறக்கும்போது, ''கிட்டப் பார்வை'' மட்டுமல்ல, "முழுக் குருட்டுத்தனமுமே" மிஞ்சும் என்று அப்போஸ் தலன் பேதுரு நம்மை எச்சரித்துள்ளார் (2 பேது 1:9). அவரது காலத்திலிருந்த பல ஊழியரைவிடத் தேவன் ஜான் வெஸ்லியை (1703-1791) அதிகமாய்ப் பயன்படுத்தியதற்கு ஒரு காரணம் அவர் தன்னை இரட்சித்த அதிசயமான கிருபையை எப்பொழுதும் நினைவி லிருத்தியிருந்ததே. ஒரு முறை காவலர்களால் தெருவில் இழுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்த ஒரு குடிகாரனைச் சுட்டிக்காட்டி, ''தேவ கிருபை மட்டும் கிடைக்காதிருந்தால், அதோ, அவன்தான் ஜான் வெஸ்லி'' என்று தனது உடன் ஊழியரிடம் கண்ணீர் மல்கக் கூறினார். ''தந்தையாம் தேவனே, தாவீதின் குமாரனுடன் பந்தியில் உட்கார்ந் திருக்கும் நான் ஒரு மேவிபோசேத் என்பதை என்றுமே மறக்கா திருக்கச் செய்யும்!''

## 7. பவுல்

புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களில், தாழ்மை குறித்த போதனைக்கும் தாழ்மை நிறைந்த வாழ்க்கைக்கும் முன்னிலையில் நிற்பது அப் போஸ்தலன் பவுல்தான். தாழ்மையின் தத்ரூபமாய்க் கிறிஸ்துவை அவர் முன்வைக்கிறார் (பிலி 2:8). தாழ்மை குறித்த அவரது உபதேசத்திற்கு ரோமர் 12:3; 1 கொரிந்தியர் 1:28,29; எபேசியர் 4:2; கொலோசெயர் 3:12; தீத்து 3:2 ஆகிய வசனங்களைப் பாருங்கள். தனது ஒன்றுமில்லா மையையும் தகுதியின்மையையும் மூன்று முக்கிய பகுதிகளில் பவுல் அறிக்கையிடுகிறார் —



■ ***''பாவிகளில் படுமோசமானவன்.''*** தன்னிடம் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த ஓர் இளைஞனிடம் தன்னை இவ்விதம் அழைத்துக்கொள்கிறார் (1 தீமோ 1:15). மனமாற்றத்திற்கு முன்னரே தனது காலத்தினரைவிட மேன்மையான வாழ்க்கை வாழ்ந்திருந்தும் இவ்விதம் அறிக்கையிடுகிறார். பிலிப்பியக் கிறிஸ்தவர்க்கு எழுதும் போது, தன்னை நியாயப்பிரமாணத்தின்படிக் ''குற்றம் சாட்டப் படாதவன்'' என்று மார்தட்டுகிறார் (பிலி 3:6). அப்படியானால், சன்மார்க்க ரீதியாக அவரிடம் பாவங்கள் இல்லை என்பதும், அவரது முரட்டுச் செயல்கள் யாவும் மார்க்கச் சம்பந்தமானவையே என்பதும் தான் பொருள். யூத மார்க்கத்தில் அவருக்கிருந்த பக்தியும் இணை யற்றது: கலாத்தியர் 1:14, ''மூதாதையர் மரபுகளில் ஆர்வம் மிக்க வனாய் என் இனத்தவருள் என் வயதினர் பலரைவிட யூத நெறியில் சிறந்து விளங்கினேன்.''

■ ***''பரிசுத்தவான்களில் கடையவன்.''*** கிருபையினாலேயே இரட்சிப்பு எனும் உபதேசத்தை வலியுறுத்தும் தனது எபேசியர் நிருபத்தில் பவுல் இவ்விதம் தன்னைத் தாழ்த்துகிறார்: எபேசியர் 3:8, ''பரிசுத்தவான்கள் எல்லாரிலும் கடையவனாகிய நான் கிறிஸ்துவின் அளவற்ற செல்வத்தைப் புறவினத்தாரிடம் சுவிசேஷமாய் அறிவிக்க இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டுள்ளது.'' தன்னைப் பின்பற்ற வும் தன்னைப் போலாகவும் மக்களுக்குச் சவால் விட்ட ஒருவர் தன்னைப் ''பரிசுத்தவான்களில் கடையவன்'' என்றழைப்பது வியப்பு தான் (1 கொரி 11:1; பிலி 3:17; 4:9; 2 தீமோ 3:10; 1 தெச 2:10-12). இதுதான் உண்மையான தாழ்மையின் அழகு.

■ ***''அப்போஸ்தலர்களில் அடிமட்டத்தினன்.''*** இங்கும், தேவ கிருபைக்குத் துதிபாடிக்கொண்டிருக்கும்போதே தன்னை இவ்விதம் அழைத்துக்கொள்கிறார்: 1 கொரிந்தியர் 15:9,10, ''நான் அப்போஸ் தலரில் அடிமட்டத்தினன். அப்போஸ்தலன் என்றழைக்கப்படத் தகுதியற்றவன். ஏனெனில், திருச்சபையைத் துன்புறுத்தினேன். ஆனால்

இப்போது நான் இந்த நிலையில் இருப்பது தேவனுடைய கிருபை யினால்தான்; அவர் எனக்களித்த கிருபை வீணாகிவிடவில்லை. அப்போஸ்தலர் எல்லாரையும்விட நான் மிகுதியாய்ப் பாடுபட்டு உழைத்தேன். உண்மையில் நானாக உழைக்கவில்லை; என்னோடி ருக்கும் தேவ கிருபையே அவ்வாறு உழைக்கச் செய்தது.'' அப்போஸ் தலப்பணியில் பவுலடியாரின் சிறப்புகள் கவனிக்கத்தக்கவை. தொடக்கம் முதல் இறுதி வரை அங்குமிங்கும் சரியாது வாழ்ந்தார் (அப் 20:18,19). ''யாருக்கும் அநியாயம் செய்யவில்லை, யாரையும் கெடுக்கவில்லை, யாரையும் வஞ்சிக்கவில்லை'' என்பதே அவரது சாட்சி (2 கொரி 7:2). புதிய ஏற்பாட்டின் 21 நிருபங்களில் 13 நிருபங்கள் அவர் எழுதியதே.

சுருக்கிச் சொன்னால், தனது பாவ நிலை (sinfulness), பரிசுத்த நிலை (saintliness), பணி முறை (service) ஆகிய மூன்றிலும் பவுல் தன்னை முழுமையாய்த் தாழ்த்திக்கொண்டார். கிறிஸ்துவைத் தாழ்மையாய்ப் பின்பற்றிய இவர் பின்பற்றப்படுவதற்கு ஏற்றவர்!

## முடிவுரை

''நிரம்புதல்'' (filling) குறித்தே கிறிஸ்தவ உலகு அதிகம் பேசுகிறது, ''வெறுமையாக்குதல்'' (emptying) பற்றிப் பேசுவதேயில்லை. ஆனால் இயேசுவைக் குறித்து வாசிக்கும்போதோ, அவர் தம்மை முதலாவது ''வெறுமையாக்கினார்,'' அடுத்து ''தாழ்த்தினார்'' என்றிருக்கிறது (பிலி 2:5-8). நம்மைக் குறித்து உயர்வாய் நாம் நினைத்துக்கொள்ளும் அத்தனையிலிருந்தும் நம்மை வெறுமையாக்கும்வரை உண்மையான தாழ்மையை நாம் அனுபவிக்கமுடியாது. வெறுமையாக்க வெறுமை யாக்கத்தான் அதிகமதிகமாய் நிரப்பப்படமுடியும். ஒரு தீர்க்கதரிசியின் விதவைக்கு எண்ணெய் பெருகச் செய்த தீர்க்கன் எலியாவின் அற்புதத்தில் இத்தத்துவம் தெளிவாய் விளங்குகிறது. காலிப் பாத்திரம் இனி எதுவுமில்லை என்று சொன்னவுடன் எண்ணெய்ப் பெருக்கம் நின்றுபோயிற்று (2 இரா 4:6). பரலோகில் 24 மூப்பர்களுக்குத் தேவன்



கிரீடங்களும் சிம்மாசனங்களும் கொடுத்துக் கவுரவித்தார். அவர்களோ, முதலாவது, கிரீடங்களைக் கழற்றிக் கர்த்தர் பாதம் வைத்து, ''நீரே பாத்திரர்'' என்றனர் (வெளி 4:10,11). அடுத்து, தங்கள் சிம்மாசனங்களிலிருந்து எழுந்து, அவர் முன் முகங்குப்புற விழுந்து அவரைத் தொழுதுகொண்டனர் (11:16). தேவனிடமிருந்து நமக்கு வரும் கவுரவமும் அவருக்கே போய்விட வேண்டும். இதுதான் தேவனுக்குமுன் நறுமணமாய் எழும்பும் தாழ்மையாம்!

30 ஏப்ரல் 2020

# 7

## நம்மில் நச்சுக்கிருமி

### *திருப்பணியாளர்க்குச் சுயபரிசோதனை*

### Virus in us!

கட்டுப்படுத்த முடியாத அளவில் கரோனா தொற்று நோய் பரவிக்கொண்டிருக்கும் இந்நாட்களில் மருத்துவர்களும் உதவிப் பணியாளர்களும் தீவிரமாய் ஈடுபட்டிருக்கும் இரு காரியங்கள்: ''பரிசோதனை'' (Testing), ''சிகிச்சை'' (Treatment). போதுமானதும் துல்லியமானதுமான பரிசோதனைக் கருவிகள் இல்லாதது ஒரு முட்டுக்கட்டை. சிகிச்சைக்கான சரியான மருந்தும் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. இருள் சூழ்ந்துள்ள இக்காலத்தை முடிவுக்குக் கொண்டுவர நாம் ஆண்டவரது முகத்தைத் தேடி நிற்கும் இவ் வேளையில், பரிசோதனையிலும் சிகிச்சையிலும் அவரது கரம் இருக்க வேண்டுவோம்.

COVID-19 என்ற இந்த நச்சுக்கிருமி நமது உடலைத் தாக்குகிறது; ஆனால் நமது ஆன்மாவையும் ஆவியையும், ஏன் உடலையும் சேர்த்து, தாக்கும் கொடூரமான இன்னொரு *நச்சுக்கிருமி நம்மில்* உண்டு. அதுதான் நம்மில் குடிகொண்டிருக்கும் **''பாவம்''** என்பது (ரோ 7:17,20). இந்த நச்சுக்கிருமிக்கான துல்லிய பரிசோதனைக் கருவி **''பைபிள்''** (BIBLE). இந்நோய்க்கான மருந்து இயேசுவின் **''இரத்தம்''** (BLOOD). தேசிய ஊரடங்கின் காரணமாகக் கிறிஸ்த வர்களாகிய நாம் ஒவ்வொருவரும் இந்த ஆன்மீகப் பரிசோதனை செய்துகொள்ளப் போதுமான நேரம் நமக்குக் கிடைத்திருக்கிறது. ஆனாலும், முழுநேரமாக அல்லது பகுதிநேரமாக, *திருப்பணியாளர்* என்றிருக்கும் சபை மேய்ப்பர்கள், பிரசங்கிமார், மிஷனரிகள், பல்வேறு ஊழியத் தலைவர்கள் போன்றோருக்காகவே குறிப்பாக இக்கட்டுரை எழுதுகிறேன். நமது சபையாரைக் கூட்டி அவர்களுக்கு



நாம் செய்யக்கூடிய பணிகள் தடைசெய்யப்பட்டிருக்கின்றன. இதுவரை நாம் மக்களுக்கே பணியாற்றிக்கொண்டிருந்தோம்; நமது சொந்த வாழ்க்கையைச் சீர்தூக்கிப் பார்க்கவும் செப்பனிடவும் தேவன் இப்பொழுது நமக்கு நிறைய நேரம் தந்துள்ளார். சாலமோனின் உன்னதப்பாட்டில் சூலமித்தியாள் செய்யும் அறிக்கையே நமது கதை: ''என்னைத் திராட்சைத் தோட்டங்களுக்குக் காவல்காரியாக வைத்தார்கள்; என் *சொந்தத் திராட்சைத் தோட்டத்தையோ* நான் காக்கவில்லை'' (உன் 1:6ஆ).

விபசாரம், கொலை, களவு போன்ற சமூகப் பாவங்கள் நம்மிடம் இல்லாதிருக்கலாம். ஆனால் ''பாரபட்சம்'' என்பதும் ''கொலை'' என்பதும் கடவுளுடைய பார்வையில் சமமான தீயச் செயல்களாகும் (யாக் 2:8-11). ''துராசையான பார்வை'' மற்றும் ''விபசாரம்'' ஆகிய இரண்டையும் அவர் ஒன்றாகவே பார்க்கிறார் (மத் 5:27,28). சிறியது (Small), நடு அளவு (Medium), பெரியது (Large), மிகப் பெரியது (Extra-large) என்றெல்லாம் பாவங்களை அவர் வேறுபிரிப்பதில்லை. அனைத்தையும் பட்டப்பகலாய்ப் பார்க்கும் அவரது கண்களுக்குமுன் பாவம் என்றால் பாவம்தான் (2 நாளா 16:9). அவரது ''பரிசுத்தத்தின்'' தரம், மற்றும் அவரது ''மன்னிப்பின்'' அளவு ஆகிய இரண்டும் மண்ணுலகிற்கும் வானுலகிற்கும் இடையிலுள்ள தூரம்போன்று நமதைவிட உயர்ந்தவை (ஏசா 55:7-9). இது அவருக்குமுன் நாம் ''நடுங்கிட'' பயபக்தியையும், ''மகிழ்ந்திட'' பரிசுத்த தைரியத்தை யும் நமக்குச் சேர்த்தே தருகிறது (சங் 2:11). தேவனானவர் ''பட்சிக்கும் அக்கினி,'' அதே வேளையில் ''பரிதபிக்கும் அப்பா'' (எபி 12:29; 2:17,18; 4:14-16).

''சுயபரிசோதனை'' மேற்கொள்ள 10 பிரிவுகளின்கீழ் 50 கேள்வி கள் தந்துள்ளேன். ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு அல்லது கூடு தல் வசனக் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. பைபிள் எனும் கண் ணாடிதான் குறைவற்றதாகையால் அதுதான் நம்மைச் சரியாய்ப் படம் பிடித்துக் காட்டும் (யாக் 1:22-25). "COVID-19 & PSALM-19."

பரிசோதனை முடிவுகள் சரியாயிருக்கவேண்டுமானால் இப்பரி சோதனையை மேற்கொள்ள உங்களுக்குக் குறைந்தது இரு நாட்கள் தேவைப்படும். முதல் 5 பிரிவுகளை முதல் நாளிலும் அடுத்த 5 பிரிவுகளை அடுத்த நாளிலும் எடுத்துக்கொண்டு உங்களைப் பரிசோதித்துப் பார்க்கும்படி ஆலோசனை கூறுகிறேன். நாளின் ஒரு வேளை உணவையாவது விட்டுவிட்டு உபவாசிப்பது இப்பயிற் சியை மேம்படுத்தும். கணவன்-மனைவி இருவரும் இந்தச் சுய பரிசோதனையை, முதலாவது தனித்தனியேயும் அடுத்து இருவரும் சேர்ந்தும், மேற்கொள்வது பெரும் பயனளிக்கும். அவ்விரு நாட் களிலும் வீட்டு வேலைகளையும் கைபேசியைப் பயன்படுத்து வதையும் குறைத்துக்கொள்ளுங்கள்.

ஒவ்வொரு கேள்விக்கும் கொடுக்கப்பட்டுள்ள வசனக் குறிப்புகள் ஜெபத்துடன் தெரிந்தெடுக்கப்பட்டவை. இந்த வசனங்களெல்லாம் தெரிந்தவைதானே என்று பைபிளைத் திறந்து பார்க்காமல் அடுத்த கேள்விக்குக் கடந்துவிடாதீர்கள். நாம் மேயும்போதெல்லாம் கர்த்தரது வசனம் ''பசும்புல் தரையாய்'' இருக்கும். இக்கேள்விகளைப் பயன் படுத்தும்போது இன்னொரு ஊழியக்காரனைக் குறித்து யோசிக்கா தீர்கள். நமது ஜெபம் இருக்கவேண்டிய விதம்: ''தேவனே, **என்னை** ஆராய்ந்து, **என்** இருதயத்தை அறிந்துகொள்ளும்; **என்னைச்** சோதித்து, **என்** சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி **என்னில்** உண்டோ என்று பார்த்து, நித்திய வழியில் **என்னை** நடத்தும்'' (சங் 139:23,24). தோண்டித் துருவிச் செயல்படத் திருவசனத்திற்கு இடங்கொடுங்கள் (எபி 4:12,13). தூயாவியானவர் உணர்த்தும்போது, உங்கள் பாவங்களையும் குறை பாடுகளையும் அப்பொழுதே அறிக்கையிட்டு, இயேசுவின் இரத்தத் தால் உடனடியாய்க் கழுவப்படுங்கள் (1 யோ 1:8-10). மனிதரோடு சரிசெய்யவேண்டுமென்று உணர்த்தப்பட்ட காரியங்களைக் குறித்துவைத்துக்கொண்டு, காலந்தாழ்த்தாமல் ஆவன செய்யுங்கள். இப்பயிற்சியின் முதல் பயனாளி நான்தான்; இச்செய்தியை ஆயத்தப் படுத்தியபோதும் எழுத்துப்பிழை திருத்தியபோதும் இதுவே நான் பெற்ற அனுபவம் (2 தீமோ 2:6).



பரிசோதனையும் சுத்திகரிப்பும் முடிந்து நமது ஜெப அறை களிலிருந்து நாம் வெளிவரும்போது, அருவியில் குளித்தது போன்ற புத்துணர்வு நமக்குக் கிடைக்கும்! தமது தந்தையிடம் இயேசு கூறியது இதோ: ''நீர் எனக்குத் தந்தவர்களும் பரிசுத்தமாக்கப்படும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்'' (யோ 17:19). ஊரடங்கு நீக்கப்படும்போது நமது சபையாரும் சகவூழியரும் இந்த ஆசீர்வாதத்தைதான் அனுபவிப்பர்! இப்பரிசோதனையை ஊழியக்காரர் மட்டுமல்ல, விசுவாசிகள் எவரும் மேற்கொள்ளலாம்.

## பரிசோதனை உபகரணம்
## Self-testing Kit

### 1. தனிவாழ்வில் பரிசுத்தம்

(a) ஆண்டவரால் பயன்படுத்தப்படும்படி என்னைச் சுத்தமான பாத்திரமாய்க் காத்துக்கொள்ளுகிறேனா?

*(ஏசா 52:11; 2 தீமோ 2:21,22)*

(b) ஏதாவது இரகசியப் பாவத்தில் வாழுகிறேனா?

*(சங் 32:3-5; 51:3,4; 1 தீமோ 5:24,25)*

(c) பரிசுத்தத்தை முழுமனதாய் வாஞ்சிக்கிறேனா?

*(சங் 45:7அ; ஏசா 64:5)*

(d) சோதனைக்குக் காரணமான யாவற்றையும் விட்டு ஓடுகிறேனா?

*(ஆதி 39:10-12; 1 கொரி 6:18; 10:13,14)*

(e) எனது மனசாட்சி சுத்தமாயிருக்கிறதா?

*(நீதி 20:27; அப் 23:1; 24:16; 1 யோ 3:20,21)*

### 2. தியான ஒழுங்குகள்

(a) வேதத்தைத் தியானிக்கவும் ஜெபிக்கவும் கிரமமாய் அமைதி நேரத்தைக் கடைப்பிடிக்கிறேனா?

*(சங் 55:17; 119:148; தானி 6:10ஆ)*

(b) திருவசனத்தில் மகிழுகிறேனா?

*(சங் 1:2; 40:6-8; 119:97; 1 பேது 2:2,3)*

(c) எனது ஜெப வாழ்வு ஆழமடைந்துகொண்டிருக்கிறதா?

*(எபே 6:18; கொலோ 4:2; 1 யோ 3:22; 5:14,15)*

(d) எனது உடன் ஊழியரோடு ஜெபிக்க நாடுகிறேனா?

*(தானி 2:17,18; லூக் 9:28; அப் 3:1)*

(e) வேலையைத் தொழுகைக்குப் பதிலாக்குகிறேனா?

*(மாற் 1:32-35; அப் 13:2; கொலோ 3:16,17,24)*

## 3. சமூக உறவுகள்

(a) பிறர் என்னோடு எளிதாய்ச் சுமுக உறவு வைத்துக்கொள்ள முடிகிறதா? *(கொலோ 3:12,13; 1 தெச 5:14,15; தீத் 3:2,3)*

(b) குற்றம் கண்டுபிடித்துக்கொண்டும் அன்பற்றுக் குறைகூறிக் கொண்டுமே இருக்கிறேனா? *(சங் 57:4; மத் 7:4; லூக் 6:41,42)*

(c) மனப்பூர்வமாய்த் திருத்தங்களை ஏற்றுக்கொள்கிறேனா அல்லது நான் செய்வதே சரியென்று சாதிக்கிறேனா?

*(நீதி 15:32; 27:5,6; 30:12)*

(d) பிறரை வெளிப்படையாய்ப் பாராட்டுவது எனக்குக் கடினமாயிருக்கிறதா? *(ரூத் 2:11,12; மத் 25:21,23; 1 தெச 5:12,13)*

(e) ஆவியின் ஒருமனப்பாட்டைக் காத்துக்கொள்வதற்காய் இனவெறிக்கும் இடவெறிக்கும் செத்திருக்கிறேனா?

*(அப் 6:1; 15:8,9; எபே 2:11-14,18,19)*

## 4. குடும்ப வாழ்வு

(a) என் வாழ்க்கைத்துணைக்கு உண்மையாயிருக்கிறேனா?

*(மல் 2:15; 1 கொரி 7:2,5; எபே 5:33)*

(b) மறுபாலரோடு பழகும் காரியங்களில் எட்டி நிற்கிறேனா?

*(நீதி 6:27-29; எபே 5:3,4; 1 தீமோ 5:1,2)*

(c) எனது வாழ்க்கைத்துணையோடு சாவகாசமாய் நேரம் செலவழித்து அவளது/அவரது வளர்ச்சிக்கு உதவுகிறேனா?

*(1 சாமு 1:8,19,20; எபே 5:28,29; 1 பேது 3:7)*

(d) எனது பிள்ளைகளோடு உல்லாசமான நட்புறவு வைத்திருக்கிறேனா? *(யோபு 1:4,5; சங் 128:3,4; கொலோ 3:21)*



(e) மன்னாதி மன்னனைச் சேவிப்பதே பணிகளிலும் பாக்கியங் களிலும் தலைசிறந்தது என்று நம்புவேனானால், எனது பிள்ளைகளைச் சொல்லாலும் செயலாலும் திருப்பணிக்கு நேராய் ஊக்குவித்து நடத்துகிறேனா?

*(யாத் 13:2; 22:29; 1 சாமு 1:27,28; யோ 3:16)*

## 5. இறைப்பணி

(a) ஆதி அன்போடு ஆண்டவரைச் சேவித்து ஆரம்பக் கால உற்சாகத்தைத் தக்கவைத்துக்கொள்ளுகிறேனா?

*(அப் 20:24; எபி 6:10,11; வெளி 2:3,4).*

(b) சோம்பேறியாகிக்கொண்டிருக்கிறேனா?

*(எரே 48:10; யோ 9:4; ரோ 12:11)*

(c) ஊழியத்தில் கனியில்லாததாலோ வேலை கடினமாயிருப்பதாலோ எளிதில் சோர்படைகிறேனா?

*(பிர 11:1-6; 2 கொரி 4:8-10; கலா 6:9)*

(d) மக்களோடு பொறுமையுடனும் பாசத்துடனும் நடந்துகொள்ளுகிறேனா? *(கொலோ 3:12,13; 1 தீமோ 6:11, 2 தீமோ 2:24)*

(e) மனிதரைத்தான் பிரியப்படுத்த நாடுகிறேனா?

*(மத் 15:12-14; 22:16; யோ 6:60,66; கலா 1:10; 1 தெச 2:4)*

## 6. செயல்பாடுகளில் நேர்மை

(a) ஊழிய அறிக்கைகளில் உண்மையாயிருக்கிறேனா அல்லது மிகைப்படுத்துகிறேனா? *(மாற் 6:5,6; யோ 21:11; ரோ 15:18,19)*

(b) பணக்காரியங்களில் உண்மையாயிருக்கிறேனா?

*(மத் 22:17-21; ரோ 13:5-7; 2 கொரி 8:18-21)*

(c) எனது வார்த்தைகளை நம்ப முடியுமா?

*(மத் 5:37; எபே 4:25; யாக் 5:12)*

(d) எந்தச் சூழலிலும் அவர்களோடு நிற்பேன் என்று எனது உடன் ஊழியர் என்னை நம்பமுடியுமா?

*(சங் 55:12-14; நீதி 17:17; 2 தீமோ 1:16-18)*

(e) பிறரது பெயர்ப்புகழ் எனது கரங்களில் காக்கப்படுகின்றதா?

*(ஆதி 6:9; 9:20-23; எரே 18:18; யாக் 5:19,20)*

## 7. ஆன்மீக வளர்ச்சி

(a) அவ்வப்போது எனது ஆன்மீக வாழ்வைச் சீர்தூக்கிப் பார்க்கிறேனா? *(2 கொரி 13:5; பிலி 3:12-14; 1 தீமோ 4:13-15; 2 பேது 1:5-8)*

(b) எனக்கு முன்வந்திருந்தாலும் பின்வந்திருந்தாலும் எனது உடன் ஊழியர் என்னைத் திருத்த, எச்சரிக்க, முன்னேற்றுவிக்க அவர்களுக்கு உரிமை அளித்திருக்கிறேனா?

*(நீதி 27:17; பிர 4:13; எபே 5:21)*

(c) தனித் தியானம், பிரசங்கங்கள் அல்லது வெளியீடுகள் வாயிலாக எனக்கு வரும் கர்த்தரின் சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறேனா?

*(நெகே 1:4; 2:11,12; சங் 16:7,8; 32:8,9)*

(d) எனது தவறுகளையோ பலக்குறைவுகளையோ ஒத்துக்கொண்டு அறிக்கையிட எனது பெருமை என்னைத் தடுக்கிறதா?

*(2 சாமு 12:13; யோபு 42:5,6; ரோ 7:15-20)*

(e) எனது சகவூழியரைப் பக்திவிருத்தியாக்கிப் பலப்படுத்துவதற்காய் எனது சுயநாட்டங்களைத் தியாகம் செய்ய நான் ஆயத்தமா?

*(யோ 15:13; 2 கொரி 12:15; பிலி 2:17)*

## 8. நிறுவனத்திற்கு உண்மை

(a) எனது ஊழிய நிறுவனத்தின்மீது பற்றுடையவனாயிருக் கிறேனா? *(2 சாமு 19:24; 1 கொரி 4:1,2; 2 தீமோ 2:4)*

(b) எனது தலைவர்களுக்கு முழுமனதாய் அடங்கியிருக்கிறேனா?

*(நியா 5:2; 1 இரா 19:21; 2 இரா 3:11; நெகே 2:17,18)*

(c) எனது தலைவர்களது தீர்மானங்கள் எனக்குப் பிடிக்காதபோது அவர்களைப் புறங்கூறுகிறேனா? *(எண் 12; 16:1-3,28,31-33)*

(d) என்னிடம் கட்சி மனப்பான்மை உண்டா?

*(1 கொரி 1:11-13; யூதா 19)*



(e) பெற்ற நலன்களுக்காய்த் தேவனுக்கும் நிறுவனத்திற்கும் நன்றியுள்ளவனாயிருக்கிறேனா அல்லது முறுமுறுக்கிறேனா?

*(1 கொரி 10:1-6,10; பிலி 4:10-12; 1 தீமோ 6:6-8)*

## 9. ஊழியத் தரிசனம்

(a) சுவிசேஷத்தைக் கேள்விப்படாதோருக்காய்த் தேவனோடுகூட எனது இருதயம் பாரங்கொண்டுள்ளதா?

*(லூக் 4:42,43; யோ 10:15,16; ரோ 9:1-3; 10:1)*

(b) அகிலவுலகிலும் தேவன் செய்துகொண்டிருப்பவைகளைப் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதில் ஆர்வங்கொண்டுள்ளேனா? *(அப் 9:31; 11:19,20; 13:13,14; 14:24-27; ரோ 10:18; 1 தெச 1:8)*

(c) துன்புறுத்தப்படும் சபைக்காகவும் அநியாயமாய் நடத்தப்படுகிறவர்களுக்காகவும் ஜெபிக்கிறேனா?

*(அப் 4:23-31; 2 தெச 3:1,2; எபி 13:3)*

(d) எளியவருக்கான எனது கரிசனை நடைமுறையில் வெளிப்படுகிறதா? *(யோபு 29:12-17; அப் 11:28-30; யாக் 2:15-17)*

(e) மற்ற சபைகளின், நிறுவனங்களின் நல்ல பணிகளைப் பாராட்டி முடிந்த வகையில் அவற்றிற்கு ஒத்துழைப்பு தருகிறேனா?

*(லூக் 5:6,7; யோ 4:37,38; கலா 2:7-9)*

## 10. எதிர்கால நம்பிக்கை

(a) வருங்காலத்திற்காய்த் தேவனை நம்பியிருக்கிறேனா அல்லது அளவுக்குமீறிக் கவலைப்படுகிறேனா?

*(மத் 6:31-34; 19:27-29; யோ 12:26இ)*

(b) பணம்படைத்தவரோடு என்னை ஒப்பிட்டு அதனால் பணம் பணம் என்றே நினைத்துக்கொண்டிருக்கிறேனா?

*(பிலி 3:17,19; 2 பேது 2:1-3; யூதா 11)*

(c) தவறாய்ப் புரிந்துகொள்ளுதல் மற்றும் தனிமை எனும் சிலுவையை எடுத்துக்கொள்ளத் தயங்குகிறேனா?

*(யோபு 19:13-19; சங் 88:8,18; மத் 26:56; 2 தீமோ 4:16,17)*

(d) எனது தரிசனத்திலிருந்தும் அர்ப்பணிப்பிலிருந்தும் இறங்கி வரும்படிக் கூப்பிடும் சத்தங்களுக்கு எனது காதுகளை அடைத்துக்கொள்ளுகிறேனா?

*(நெகே 6:1-3; லூக் 9:51-53; அப் 20:22-24)*

(e) முடிவுவரை திருச்சபையின் ஆண்டவரை நான் உத்தமமாய்ச் சேவித்தால் பரலோகில் எனக்காய்க் காத்திருக்கும் வரவேற்பையும் பரிசளிப்பையும் மனதிற்கொண்டுள்ளேனா?

*(மத் 25:21,23,34; 2 தீமோ 4:8; 1 பேது 5:2-4)*

## பரிசோதனை மற்றும் சிகிச்சைக்குப் பின்னர் ...

மேலே கொடுக்கப்பட்டுள்ள பரிசோதனைக் கேள்விகள் தேவ ஊழியராயிருக்கும் சபை மேய்ப்பர், பிரசங்கிமார், மிஷனரிகள் அல்லது ஊழியத் தலைவர்கள் எவருக்கும் பொருந்தும். நாம் சிகிச்சை பெற்றுக் குணமடைந்துவிட்டால் போதாது. இனிவரும் ஆண்டுகளில் நமது ஊழியங்கள் திருமறைப்பாணியில் மகிபனைப் பிரியப்படுத்தி, மக்களை ஆசீர்வதிக்கவேண்டுமானால் நாம் நெடுகவே ஆரோக்கியமாய் இருக்கவேண்டும். இதற்குப் பிரதான பொறுப்புள்ளவர்கள் **சபை மேய்ப்பர்கள்;** ஏனெனில் எப்பணியிலிருந்தாலும் கிறிஸ்துவின் திருவுடலாம் சபையில்தான் நாம் அங்கத்தினர்கள்; அதற்கு மேய்ப்பர்கள்தான் முக்கிய தலைவர்கள். தனது சபையாரை முதிர்ச்சிக்கும் கனிநிறைவுக்கும் நடத்திச் செல்ல விரும்பும் மேய்ப்பர் ஒவ்வொருவரும் எடுக்கவேண்டிய அத்தியாவசியத் தீர்மானங்கள் அடுத்த பக்கத்தில் தரப்பட்டுள்ளன (எபே 4:11-13). அவை 10 பகுதிகளாய்ப் பிரிக்கப்பட்டுள்ளன —



# ஆயர்களின் ஆரோக்கியத்திற்காய் ...

## Health-kit for Pastors

### (1)

அதிகாரத்தினால் அல்ல,
முன்மாதிரியினால் என் ஆடுகளை நடத்துவேன்.
குற்றம் சாட்டப்படாதவாறு நடந்துகொள்ள முயற்சிப்பேன்.
எதிர்ப்பாலரோடு எட்டி நின்றே பழகுவேன்.
குறைகூறப்படும்போது கோபப்படாமல்
நான் என்னை திருத்திக்கொள்ளவேண்டுமா என்று என்னைச்
சோதித்துப் பார்ப்பேன். தேவபக்தியுள்ள ஒரு சில தலைவர்களை
நானாக எனக்குப் பொறுப்பாளர்களாய் எடுத்துக்கொண்டு
அவர்களுக்கு அடிபணிவேன்.
*(யோ 10:4; 1 பேது 5:3; 1 கொரி 11:1;*
*1 தீமோ 3:1,2; 5:2; தீத் 2:3,4; 2 சாமு 12:7-9)*

### (2)

எனது சபை உறுப்பினர்களுக்காய் ஜெபிக்கத்
தினமும் ஒரு வேளையைப் பிரித்தெடுத்து வைப்பேன்.
பிரதான ஆசாரியனின் மார்ப்பதக்கத்தில் இஸ்ரவேலரின் பன்னிரு
கோத்திரங்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்ததுபோல
எனது விசுவாசிகள் கர்த்தருடைய காரியங்களில் வளரவேண்டுமென்ற
கரிசனையை எப்பொழுதும் என்னிதயத்தில்
சுமந்துகொண்டிருப்பேன்.
ஒரேயொரு விசுவாசி பின்மாறினாலும்
நான் சும்மாயிருக்கமாட்டேன்.
வியாதியிலும் வேதனையிலும் துன்புறுவோரைச்
சென்று சந்திப்பதை எனது தலையாயக் கடனாய்க் கொள்வேன்.
*(1 தெச 1:2-4; யாத் 28:29; பிலி 1:3-6;*
*2 கொரி 11:28,29; லூக் 15:4; யாக் 5:14)*

## (3)

திருமறையை ஆராய்ந்து படிக்கத் தினமும் குறைந்தது
இரண்டு மணிநேரம் செலவிடுவேன். ஆராய்ச்சி வேதாகமங்கள்,
வியாக்கியானங்கள் மற்றும் ஆராய்ச்சி நூல்களைத்
தாராளமாய்ப் பயன்படுத்துவேன்.
குறிப்புகள் இல்லாது பிரசங்கிப்பது கெட்டிக்காரத்தனம் அல்லது
கூடுதல் அபிஷேகத்தின் அடையாளம் எனும்
பிசாசின் பொய்யை நம்பமாட்டேன்.
பிடித்தமான ஒரு சில தலைப்புகளிலேயே
பிரசங்கித்துக்கொண்டிராது எனது சபையாருக்குத் தேவனது
முழு ஆலோசனையையும் அறிவித்து சரிவிகித உணவு வழங்குவேன்.
நிர்வாகக் காரியங்கள் எனது வேத ஆராய்ச்சி வேளையைத்
திருட விடமாட்டேன்.
*(மல் 2:7; லூக் 9:10,11; மத் 10:27; அப் 20:20,27; 6:2-4)*

## (4)

எனது சபையுறுப்பினர் ஒவ்வொருவரையும்
ஊழியக்காரனாய் மாற்றிவிடப் பாடுபடுவேன்.
ஒவ்வொருவரும் தனது வரத்தை அடையாளங்காணவும்
அதை அப்பியாசிக்கவும் உதவுவேன்.
எல்லாமே நானே செய்யாமல் பொறுப்புகளைப் பகிர்ந்தளிப்பேன்.
மக்களை நம்புவேன்.
அவர்களது தவறுகளைப் பொறுத்துக்கொள்வேன்.
வேத ஆராய்ச்சி நூல்களை விசுவாசிகளுக்கு
அறிமுகம் செய்வேன்.
பிறர்க்குத் தொண்டாற்றும் தலைவனாயிருப்பேன்.
திருத்தங்களை ஏற்றுக்கொள்வேன்.
புதிய கருத்துக்களையும் முன்னேற்றத்திற்கு உதவியான
மாற்றங்களையும் வரவேற்பேன்.
இளைஞருக்கு நண்பனாயிருப்பேன்.
*(எபே 4:11-13; ரோ 12:4-8; மாற் 3:14; யோ 13:13-15;
1 கொரி 3:21-23; அப் 6:14; 1 யோ 2:14ஆ)*



## (5)

சபையாரிடம் செல்வந்தர்-எளியவர், படித்தவர்-படிக்காதவர்,
வசதியுள்ளோர்-நலிந்தவர் என்ற பாரபட்சமின்றி நடந்துகொள்வேன்.
காணிக்கை அதிகம் கொடுப்பவர்களால் கவரப்படமாட்டேன்.
நாதியற்றோருக்கும் நசுக்கப்பட்டோருக்கும்
தனிக் கவனம் செலுத்துவேன்.
இடவெறி, இனவெறி போன்றவற்றிற்குச் சாவேன்.
எனது செயல்பாடுகளில் அரசியல் வித்தைகளைத் தவிர்ப்பேன்.
*(யாக் 2:1-5; லூக் 21:1-4; யாக் 1:27; கொலோ 3:11-14)*

## (6)

பணக்காரியங்களில் உண்மையாயிருப்பேன்.
தசமபாகம், காணிக்கை, நன்கொடை,
இப்படி எவ்விதம் வரப்பெற்றாலும் எல்லாப் பணத்திற்கும்
கணக்கு வைத்து, முறைப்படி தணிக்கை செய்து,
அரசுக்கு வரவு-செலவு விபரம் சமர்ப்பிப்பேன்.
சபையின் பணத்தில் என் பெயரிலோ
எனது குடும்பத்தினர் பெயரிலோ
உடைமைகள், சொத்துக்கள் எதுவும் வாங்கமாட்டேன்.
எனது தேவைகளுக்காய் ஓர் உதவித்தொகையைப்
பெற்றுக்கொண்டு, பணக்காரியங்கள் எல்லாவற்றையும்
நம்பகமான குழு ஒன்றிடம் ஒப்படைப்பேன்.
*(2 கொரி 8:20,21; ரோ 13:6.7; மத் 22:21)*

## (7)

ஒரு-சபைக்கு-ஒரு-மேய்ப்பர் எனும் தத்துவம்
பைபிளுக்கு முரணானது என்ற உணர்வுடன்
ஒரு சில உடன் மேய்ப்பரோடு
சபையின் தலைமைப் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வேன்.
("மேய்ப்பர்" Pastors என்றாலும் "மூப்பர்" Elders என்றாலும்
திருமறையில் ஒன்றுதான்.)

எனது சபை சிறியதாயிருந்தாலும் ஓர் உடன் மேய்ப்பரையாவது
நியமித்துக்கொள்வேன்.
கூட்டுத் தீர்மானங்களோடு எனது ஆணவம் மோத இடங்கொடேன்.
உடன் தலைவர் எவரும் மக்களால் என்னைவிட அதிகம்
விரும்பப்படுவாரானால்
அவரை எனக்கு ஆபத்தாய்க் கருதமாட்டேன்.
எனது மகனையே அடுத்த தலைவனாய்க் கொண்டுவரத்
துடிக்கமாட்டேன்.
*(தீத் 1:5; அப் 20:17,28; 1 பேது 5:1;*
*அப் 15:22,27; 1 சாமு 18:7-9)*

## (8)

மற்ற சபை மேய்ப்பர்களோடும் ஊழியச் சங்கத் தலைவர்களோடும்
சுமுகமான உறவு வைத்துக்கொள்வேன்.
பொதுவான கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்காய்
உற்சாகமாய் அவர்களோடு கரங்கோர்ப்பேன்.
எனது ஆடுகள் "உள்ளும் புறமும்" மேய்ச்சலைக் கண்டடையும்படி
அவைகளை மற்ற கூட்டங்களுக்கும் போகவிடுவேன்.
மற்றவர்களது வெற்றிகளில் மகிழ்ந்து
வெளிப்படையாய் அவர்களைப் பாராட்டுவேன்.
துர்வுபதேசத்திற்கு எதிராய் எனது சபையாரை எச்சரிப்பேன்.
ஆரோக்கிய உபதேசத்தை அவர்களுக்கு நெடுகவே போதித்து
அவர்களைப் பாதுகாப்பேன்.
*(எபே 4:11-16; 1 கொரி 3:5-9; யோ 10:9;*
*லூக் 9:49,50; பிலி 3:2; 1 யோ 4:1)*

## (9)

எனது சபையை மிஷனரிச் சிந்தையுள்ளதாக்குவேன்.
முன்னோடி மிஷனரிக் களங்களைப் பார்த்துவர
விசுவாசிகளைக் குழுக்களாய் அழைத்துச்செல்ல ஒழுங்கு செய்வேன்.
சபையாருக்குச் சவாலிட அவ்வப்போது மிஷனரிகளையும்
மிஷனரித் தலைவர்களையும் வரவழைப்பேன்.



மிஷனரிகளைத் தாங்குவது எங்கள் சபை பட்ஜெட்டில்
முதலிடம் பெறும்.
கடினமான பகுதிகளுக்கு மிஷனரிகளாய்ச் செல்ல
வாலிபரை ஊக்குவிப்பேன்.
திறமையான ஊழியரை மிஷனரிப்பணிக்கு அனுப்பிவிடத்
தயங்கமாட்டேன்.
*(ரோ 10:13-15; 15:21; மத் 10:35-38;*
*எபே 6:19,20; அப் 13:1-3)*

## (10)

எனது குடும்பத்தோடு போதுமான அளவு
தரமான நேரம் செலவிடுவேன்.
வீடு சந்திப்பிற்கு எனது மனைவியை அழைத்துச் செல்வேன்.
வாரம் ஒருமுறையாவது மனைவி பிள்ளைகளை
வெளியே அழைத்துச் செல்வேன்,
அப்பொழுது சபை மற்றும் ஊழியம் குறித்து
ஒன்றும் பேசமாட்டேன்.
திங்கட்கிழமை அல்லது வார நாள் ஒன்றை இளைப்பாறவும்,
சும்மாயிருக்கவும் ஒதுக்கிவைப்பேன்,
அதை என் சபையார் அறிந்துகொள்ளச் செய்வேன்.
*(ஆதி 18:17-19; 1 கொரி 9:5; 1 தீமோ 3:4,5; மாற் 6:31,32)*

31 மார்ச் 2020

# 8

# ''திறப்பின் வாசல்''

## "Standing in the Gap"

கரோனா நச்சுக்கிருமியின் தாக்கம் நாடுகளைத் திணறவைத் துள்ளது. நம்பிக்கையின்மையும் விரக்தியும் பரவிக்கிடக்கின்றன. இக்கிருமி உலகையே உலுக்கிவிட்டது. திடீரென்று கடவுள் மிகவும் பிரபலமாகிவிட்டார்! பக்தியுள்ளோரோ பக்தியற்றோரோ எல்லாரும் இறைவேண்டல் செய்யத் துவங்கிவிட்டனர். தொழுகைத்தலங்கள் மூடப்பட்டுள்ளன; இல்லையேல் இவ்விதக் காலக்கட்டத்தில் அவை நிரம்பி வழியும்.

கிறிஸ்தவ வட்டாரங்களில் ஜெபத்திற்கான அழைப்புகளை யடுத்து அதிகமாய்ச் சுட்டிக்காட்டப்படும் திருவசனம் எசேக்கியேல் 22:30, ''நான் நாட்டை அழிக்காதபடிக்குத் **திறப்பில் நிற்கவும்**, சுவற்றை அடைக்கவும் ஒரு மனிதனைத் தேடினேன்; ஒருவனையும் காணேன்.'' தேவனது இப்புலம்பலை ஓர் அழைப்பாய் எடுத்துக் கொண்டு விண்ணகத்திலிருக்கும் அவரைப் பார்த்து எத்தனையோ உபவாச ஜெபங்களும், சங்கிலி ஜெபங்களும் ஏறெடுக்கப்படுகின்றன. உலகெங்குமுள்ள தமிழ்க் கிறிஸ்தவரை ஒருங்கிணைத்துத் தொலைக்காட்சித் தொடர்பில் ஜெபங்கள் நடத்திவரும், அசாதாரண வரம் பெற்ற, எனது நண்பர், சகோதரன் மோகன் C. லாசரஸ் அவர் களுக்காய் என் ஆண்டவரைத் துதிக்கிறேன். அவரது முக்கிய நிகழ்ச்சிகள் *திறப்பின் வாசல் ஜெபம்* (Standing in the Gap Prayer) என்றழைக்கப்படுகின்றன. அவரைப் போலவும், அவருக்குப் பின் னரும், இதுபோன்ற மன்றாட்டு வீரர்கள் மற்ற மொழிகளிலும், குறிப்பாய் நமது தேசிய மொழியாகிய இந்தியிலும், எவ்வளவாய்த் தேவை! தமிழகத்திலும் பிற தென் மாநிலங்களிலும் நடத்தப்



பட்டுள்ள கன்வென்ஷன்கள், முகாம்கள் மற்றும் உபவாச ஜெபங்கள் போன்றவை வட இந்தியாவில் நடத்தப்பட்டிருந்தால், வட மாநிலத் தினர் என்றைக்கோ ''சாக்கு உடை உடுத்தி, சாம்பல் பூசி, மனந்திரும் பியிருப்பர்.'' ''அதிகம் கொடுக்கப்பட்டால் அதிகம் கேட்கப்படும்'' என்ற திருவிவிலியப் பிரமாணத்தின்படி, தென்னகக் கிறிஸ்தவர் களுக்கு வட இந்தியரைவிட நியாயத்தீர்ப்பு கடுமையாயிருக்கும் (மத் 11:21-24).

நாம் மேற்குறிப்பிட்ட வசனப்பகுதியாகிய எசேக்கியேல் 22:30ஐக் கவனித்து, ஏன் தேவனானவர் இவ்விதமாய்ப் பேசினார் எனப் புரிந்துகொள்வோம். அவரது முதல் குற்றச்சாட்டு தீர்க்கதரிசிகளை (Prophets) நோக்கியது; ஆசாரியர்கள் (Priest), பிரபுக்கள் (Princes) மற்றும் மக்கள் (People) அடுத்து வருகின்றனர் (வச 25-29). □ *தீர்க்கதரிசிகளுக்கு* எதிரான அவரது வார்த்தைகள் என்னவென்றால், ''சமாதானம் இல்லாதிருந்தும் 'சமாதானம்' என்று சொல்லி, அவர்கள் எனது மக்களை ஏமாற்றுகிறார்கள்; ஒருவன் மண்சுவர் வைக்கிறான்; இதோ, மற்றவர்கள் சாரமற்ற சாந்தை அதற்குப் பூசுகின்றனர்'' (எசேக் 13:4,5,10). அவர்களை ''நரிகள்'' என்றழைக்கிறார் ஆண்டவர். இவ் விதப் பிரபல நரிகள் நம் நடுவில் நிறையவுண்டு. ''கர்த்தர் சொன் னார்'' என்பதே இவர்களது பிதற்றல் (எசேக் 22:28). விதவைகளும் பரிதாப நிலையிலுள்ளோருமே இவர்களுக்கு எளிதில் சிக்கும் இரை (வச 25இ; மத் 23:14). □ அடுத்து, *ஆசாரியர்களைக்* குறித்துக் கர்த்தரது வருத்தம்: ''அவர்கள் எனது திருச்சட்டத்தை மீறி, எனக்குரிய தூய்மையானவற்றைத் தீட்டுப்படுத்துகின்றனர்'' (எசேக் 22:26). தங்களது பாரம்பரியங்களை இறைக்கட்டளைகளுக்குப் பதிலாக்கு கின்றனர் (மத் 15:6-9). சடங்காச்சாரமும் சம்பிரதாயமுமே ஆன் மீகத்திற்கு அவர்களது மாற்றாயிற்று. தேவாலயத்திலிருக்கும் ''பொன்'' மீதும், பலிபீடத்திலிருக்கும் ''காணிக்கை'' மீதும்தான் அவர்களது கவனம் (மத் 23:16-19). ஞாயிறு ஆராதனையை ஊரடங் கின்போது ஒளிபரப்பும்போதும் திரையில் வங்கி எண் வந்துகொண்

டேயிருக்கும்! □ அடுத்து வருபவர்கள் *பிரபுக்கள்.* இவர்கள்தான் தேசத் தலைவர்களில் ஊழல் நிறைந்தவர்கள். ''ஆடுகளின் கழுத்தைக் குதறும் ஓநாய்கள்'' என்று தேவன் இவர்களை அழைக்கிறார் (எசேக் 22:27). □ இறுதியாக, *மக்களுக்கு* விரோதமாய்த் தேவன் பேசுகிறார். ''**ஏழைகளையும்** தேவையிலிருப்போரையும் துன்புறுத்தி, அந்நியரை இழிவாய் நடத்துகிறார்கள்'' என்பதே அவரது குற்றச்சாட்டு (வச 29).

இவ்விதம் தீர்க்கர்கள், ஆசாரியர்கள், பிரபுக்கள் மற்றும் மக்கள் ஆகியோரது தவறுதல்களையும் தீயசெயல்களையும் சுட்டிக்காட்டிப் பின்னர் தேவன் சொல்வது *''ஆகையால்* நான் நாட்டை அழிக்காதபடித் திறப்பில் நிற்க அவர்களிடையே ஒருவனைத் தேடினேன்'' (எசேக் 22:30). இந்த நான்கு வகுப்பினரிடையேயும் ஒருமித்துக் காணப்பட்ட அக்கிரமம் **தானதர்மம்** இல்லாமையே. இதனை நாம் சரிசெய்யாவிடில், நமது ஜெபங்கள் எவ்வளவு நீண்டவையாய் இருந்தாலும், அவை தேவனுக்குமுன் ஏற்புடையவை அல்ல. முகத்திற்கு முகமாய்த் தீர்க்கன் ஏசாயா மூலம் கடவுள் அனுப்பும் தூதினைக் கேளுங்கள்: ஏசாயா 1:15-17, ''என்னை நோக்கி உங்கள் கைகளை உயர்த்தும்போது, பாரா முகத்தினனாய் இருப்பேன்; நீங்கள் தொடர்ந்து மன்றாடினாலும் நான் செவிகொடுப்பதில்லை; உங்கள் கைகளோ இரத்தக்கறையால் நிறைந்திருக்கின்றன. உங்களைக் கழுவித் தூய்மைப் படுத்துங்கள்; உங்கள் தீச்செயலை என் திருமுன்னிருந்து அகற்றுங்கள்; தீமைசெய்தலை விட்டொழியுங்கள்.'' இதனைத் தொடர்ந்து ஆண்டவர் சொல்வது, ''நன்மை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள்.'' ''நன்மை செய்தல்'' என்றால் என்ன என்று அடுத்து ஆண்டவர் விளக்குகிறார்: ''நியாயத்தை நிலைநாட்டுங்கள், ஒடுக்கப்பட்டோருக்கு உதவுங்கள், திக்கற்றோருக்காய்ப் பேசுங்கள், விதவைக்காய் வழக்காடுங்கள்.'' இவை அனைத்துமே சமுதாயத்திலுள்ள நசுக்கப்பட்டோர், ஒதுக்கப்பட்டோர், வசதியற்றோர், நாதியற்றோருக்கானவையே என்பதைக் கவனித்தீர்களா? இவர்களுக்குச் செய்யவேண்டிய **தானதர்மத்தில்** நாம் தவறுவதையே ''கடுஞ்சிவப்பான, இரத்த நிறமான நமது பாவங்கள்''



என்று ஆண்டவர் குறிப்பிடுகிறார் (வச 18). நண்பரே, இவ்வசனப்பகுதி இவ்விதம் அதின் சூழமைவில் (context) விளக்கப்பட்டதை எப்பொழுதாவது கேட்டிருக்கிறீர்களா? நமது வசதிக்கேற்ப வேதத்தைப் புரட்டுவதில் நாம் கில்லாடிகள். இப்படி அநேகக் காரியங்கள் செய்கிறோம் (மாற் 7:13).

கரோனா தொற்றுநோய் தீவிரமாய்ப் பரவிவரும் இந்நாட்களில் உபவாச ஜெபங்களில் ஏற்பட்டுள்ள புத்தார்வத்திற்காய்த் தேவனைத் துதிப்போம். ஒரு அல்லது சில நாட்கள், ஒரு அல்லது இருவேளை, சாப்பிடாதிருப்பது திருமறை போதிக்கும் உபவாசத்தின் ஒரு பக்கம் மட்டுமே. தமக்கு ''உகந்த உபவாசம்'' எதுவென்று 7 செயல்பாடுகளை வரிசைப்படுத்தி உன்னதர்தாமே வரையறுக்கிறார்: ஏசாயா 58:5-7, (1) ''கொடுமைத் தளைகளை அவிழ்த்திடுங்கள்,'' (2) ''நுகத்தின் பிணையல்களை அறுத்திடுங்கள்,'' (3) ''ஒடுக்கப்பட்டோரை விடுவித்திடுங்கள்,'' (4) ''எவ்வகை அடிமைத்தனத்தையும் உடைத்திடுங்கள்,'' (5) "பசித்தோருடன் உங்கள் உணவைப் பகிர்ந்திடுங்கள்,'' (6) ''உறைவிடமற்ற வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்துவாருங்கள்,'' (7) ''உடையற்றோரை உடுத்துவியுங்கள்.'' இந்த 7 காரியங்களையும் நாம் செய்யும்போதுதான் ''நம்மைப் போன்று உடல் கொண்டுள்ள சகமனிதருக்கு நாம் நம்மை மறைக்காதிருக்கிறோம்'' என்று பொருளாம். அன்புச் சகோதர சகோதரிகளே, இக்காரியங்களுக்கு முன்னுரிமை தந்து இவற்றைச் செய்யும்படி உபவாச ஜெபக்கூடுகைகளில் பிரசங்கிமார் மக்களுக்குச் சவால் விடுகிறார்களா? ''ஜெபம்'' மற்றும் "உபவாசம்'' குறித்துப் போதிக்குமுன் நமதாண்டவர் ''**தானதர்மம்**" குறித்துப் பேசினார் தெரியுமா? (மத் 6:1,5,16). நமது ஆண்டவரும் எஜமானருமானவர் நியமித்த முக்கியத்துவ வரிசையை மாற்ற நமக்கு அதிகாரம் தந்தது யார்? ''ஒருவரும் இல்லையென்று கண்டு, விண்ணப்பம்பண்ணுகிறவன் இல்லையென்று ஆச்சரியப்பட்டார்'' என்று தேவனைக் குறித்து வாசிக்கிறோம் அல்லவா? (ஏசா 59:16). அது எதற்காய்

என்று கவனியுங்கள்: ''நியாயம்'' கிடைக்காது அலைமோதும் நலிந்தோருக்கு உதவுவார் இல்லையே என்பதுதான் அவரது விசனம் (வச 14,15).

திருமுழுக்கினன் யோவானைவிடப் பெரிய தீர்க்கதரிசி எவரு மில்லை என்பதே இயேசுவின் கணிப்பு (மத் 11:11). தோட்டத்தை அலங்கரிக்க இலைகளைக் கத்திரிப்பதில் உண்மையான தீர்க்கனுக்கு ஆர்வம் இருக்காது. அவன் கையிலிருப்பது கத்திரிக்கோல் அல்ல, கோடரி. வேரில் என்ன பிரச்னை என்பதுதான் அவனது கவனம் (லூக் 3:9). புரட்சியாளனாகிய அவனுக்கு வெற்று மார்க்க பக்தி பிடிக்காது (வச 8ஆ). மனந்திரும்புதலுக்கான ''கனிகள்'' அல்லது ''நிரூபணம்'' காட்டப்படவேண்டுமென்று தன்னைக் கேட்டுக்கொண்டிருந்த வர்களிடம் யோவான் வற்புறுத்தினார் (வச 8அ). இன்னும் கூடுதல் தெளிவாய் விளக்கும்படி மக்கள் அவரிடம் கேட்டபோது அவர் கோடரியை மரத்தின் வேரிலேயே வைத்துவிட்டார்: "இரண்டு ஆடை கள் உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்துகொள்ளட்டும்; ஆகாரம் உள்ளவரும் அவ்வாறே செய்யட்டும்'' (வச 11). திருமுழுக்குக்கு முன்னர் இவ்விதம் அறிவுறுத்தும் ஊழியர் எவரையும் பார்த் திருக்கிறீர்களா? நமது பிரசங்கங்களின் குறைபாடு இதுதான். வேரை விட்டுவிட்டுக் கிளைகளிலேயே கவனம் செலுத்துகிறோம். வேர் சரிசெய்யப்பட்டால்தான் கிளைகள் சரியானவையாய் இருக்கும் (ரோ 11:16). ''பண ஆசையே *எல்லாத்* தீமைக்கும் வேராயிருக்கிறது'' (1 தீமோ 6:10). அதை விட்டு ஓடுவதற்குப் பதிலாக அதற்குப் பின்னே ஓடுகிறோம் (வச 11). திருமுழுக்கினன் யோவான் சொல்லிய 50 சதவீதம் என்பது நம்மால் செரிக்கமுடியாவிடில், இறைப்பணிக்குத் தசமபாகம் கொடுத்த பின்னர் குறைந்தது இன்னொரு 10 சதவீதத்தை எளியவருக்கென்று எடுத்துவைத்தாலென்ன? இவ்வுலகைத் தேவன் சங்காரத்தால் அழிக்காதபடி, தூயாவியானவரின் வல்லமையோடு திருமுழுக்கினன் யோவானைப்போல் நாம் திறப்பில் நிற்கவேண்டும் (மல் 4:5,6; மத் 11:14).



தென்னகத்தைப் பொருத்தவரை, சபை மேய்ப்பர்களுக்கும் பிர சங்கிமாருக்கும் பஞ்சமில்லை. ஆனால் தீர்க்கதரிசிகள் எங்கே? ஆயர் களும் பிரசங்கிமாரும் பொது மருத்துவர்தான்; தீர்க்கதரிசிகள்தான் அறுவை சிகிச்சை நிபுணர். திருச்சபையின் இன்றையத் தேவை மருந்து மாற்று அல்ல; தீவிர அறுவை சிகிச்சை கட்டாயம் வேண்டும். புற்றுநோயைத் தலைவலி மாத்திரை குணமாக்காது. செயற்கை எழுப்புதல் (synthetic revivals), தோற்ற மாற்றம் (cosmetic surgery) போன்றவையே நம்மைத் திருப்திசெய்துவிடுகின்றன. தீர்க்கதரிசி என்று, அதுவும் தேவனாலேயே, முதன்முதல் அழைக்கப்பட்டவர் ஆபிரகாம்தான் (ஆதி 20:7). நாட்டு ''மக்களைக்'' காப்பாற்றவே மன்னன் அபிமெலேக்குக்கு ஆபிரகாமைத் தேவன் அவ்விதம் அறி முகம் செய்தார் (வச 4). மன்றாட்டு ஜெபத்தைக் குறித்துப் பேசும் போதெல்லாம் நாம் ஆபிரகாமைக் குறிப்பிடுகிறோம். சோதோமுக் காக அவர் கர்த்தருக்குமுன் நின்றுகொண்டிருந்தார் (18:22). சோதோமின் பாவம் ''மிகவும் கொடியதாய்'' இருந்தது (வச 20). அந்தப் பாவம் எது தெரியுமா? தேவனே இதற்குப் பதிலளிக்கிறார்: எசேக் 16:49, ''கர்வம், அளவுக்குமீறிச் சாப்பாடு, சொகுசினால் சோம்பல் ஆகிய இவையே உன் சகோதரியான சோதோமின் அக் கிரமம். இவையே அவளிடத்திலும் அவளது குமாரத்திகளிடத்திலும் இருந்தன; **ஏழை எளியோரின்** கைகளை அவள் வலுப்படுத்த வில்லை.'' வார்த்தைகள் இன்னும் தெளிவாயிருக்க முடியுமோ? சுகபோக வாழ்வும், எளியவரைக் கவனியாமையுமே சோதோமின் முக்கிய பாவம். அச்செல்வந்தன் ஏன் நரகத்தில் தள்ளப்பட்டான் என்பதை அவனுக்கு விளக்கியது ஆபிரகாம் தீர்க்கதரிசிதான் (லூக் 16:25). கொலை, திருட்டு, விபசாரம் என எக்குற்றமும் அவனிட மில்லை. **தானதர்மம்** பண்ணாததே அவனது பாதகம். தங்க இட மில்லாதிருந்த லாசருவுக்கு அவன் தனது வீட்டின் பின்புறத்தில் ஒரு சிறு குடிசை போட்டுக்கொடுத்திருக்கலாம்; தனது வேலைக்காரன் ஒருவன் மூலம் தினமும் ஒரு தட்டுச்சோறு கொடுத்தனுப்பியிருக் கலாம்; அவனது பருக்களுக்குச் சிகிச்சையளிக்கத் தனக்குத் தெரிந்த

தோல் மருத்துவர் ஒருவரிடம் ஒழுங்குபண்ணியிருக்கலாம். குறைந்தபட்சம் எச்சுப்பருக்கைக்கு அவனுடன் போட்டிபோட்ட தனது நாய்களையாவது கட்டிப்போட்டிருக்கலாம். பிரியமானவரே, நன்கு கவனியுங்கள். செய்யத்தகாதவற்றைச் செய்ததைவிட (sins of commission), செய்யவேண்டியவற்றைச் செய்யாததற்காகவே (sins of omission) தேவன் நம்மை அதிகம் தண்டிப்பார். தான் வைத்திருந்த அத்தனையிலும் 50 சதவீதத்தை **எளியவருக்குக்** கொடுத்துவிடச் சகேயு முன்வந்தபோது, அவனை நமது தீர்க்கதரிசி ''ஆபிரகாமின்'' குமாரன் என்றழைத்தார் நமதன்பர் (லூக் 19:8,9).

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கர்களில் இன்னொரு முக்கியமானவர் தானியேல். தானியேல் 9ஆம் அத்தியாயத்திலுள்ள அவரது மன்றாட்டு ஜெபம் இணையற்றது. அரசன் நேபுகாத்நேச்சாருக்குத் தரிசனத்தின் அர்த்தத்தை விளக்கிய பின்னர், முடிவாக அரசனிடம் அவர் சொன்னது: ''எனவே, அரசரே, எனது அறிவுரையை ஏற்பீராக! நல்லறம் பேணித் தீயது நீக்குக! **ஒடுக்கப்பட்டோருக்கு** இரக்கம் காட்டி உம் பாவக்கறைகளைப் போக்கிக்கொள்க! ஒருவேளை உமது வளமை நீடிக்க இது வழியாகலாம்'' (தானி 4:27). நமது தேசத் தலைவர்களிடம் இவ்விதம் நேரடியாய்ப் பேசும் தீர்க்கதரிசிகள் தேவை. 2019 ஜனவரி 22 அன்று ளிவந்த *Indian Express* செய்தித் தாள் தரும் தகவல்: ''இந்தியாவின் செல்வத்தில் 51.33 சதவீதம் நாட்டின் மக்கட்தொகையில் 1 சதவீதத்தினரிடமே குவிந்துள்ளது.'' அடுத்து ஆகஸ்டு 18 அன்று வெளிவந்த இதே செய்தித்தாள் அறிவிப்பது: ''இருப்பவருக்கும் இல்லாதவருக்கும் இடைவெளி கூடிக்கொண்டே வருகிறது. 2018ஆம் ஆண்டில் இந்தியாவின் கோடீஸ்வரரது செல்வம் நாளொன்றுக்கு 2200 கோடி ரூபாயாகக் கூடியுள்ளது. அதாவது, இந்தியாவில் செல்வம் கொழித்துள்ளோராகிய 1 சதவீதத்தினரது வருவாய் 39 சதவீதமாய்க் கூடியுள்ளது; மக்கட்தொகையில் பாதிக்கும் அதிகமானவர்களாகிய அடிமட்டத்தினருக்குக் கூடியது 3 சதவீதம் மட்டுமே. வறுமைக் கோட்டிற்குக் கீழிருக்கும் (Below Poverty Line) குடும்பங்கள் மிக அதிகமாயிருப்பது இந்தியாவில்தான். இந்தியக் குழந்தைகள் மூவரில் ஒருவருக்குக் குன்றிய வளர்ச்சியே. இன்னும் ஒரு லட்சத்திற்குக் கூடுதலான குடும்பங்கள் மலத்தை அள்ளிச் சென்று அகற்றும் துப்புரவுத் தொழிலையே சார்ந்திருக்கின்றனர்.'' பிரிய நண்பரே, இதையெல்லாம் பார்த்துக் கொண்டு ஏழைகளின் தேவன் தமது கோபத்தைக் கொட்டாதிருப் பாரோ? ''அன்பின் தேவா, தானியேல் போன்ற பரிசுத்த தீர்க்கர்களை எங்கள் நடுவிலிருந்து எழுப்பும். ஹாலிவுட் பாணியில் உல்லாசமாய் வாழும் எங்கள் பிரசங்கிமாரைக் கொழுக்கவைக்கும் எங்களை மன்னியும். பொருளாசை எனும் கொள்ளை நோய்க்கு எதிராக எங்களை எச்சரிக்கத் தீர்க்கன் எரேமியா போன்ற புலம்பல் தீர்க்கர்களை எங்களுக்குத் தாரும். வசன அறிவு இல்லாத எங்கள் சபையினரை ஏமாற்றும் சிரிப்பு ஊழியரை எங்கள் பிரசங்க பீடங்களிலிருந்து அகற்றும்'' (எரே 6:13,14).



மோசே இன்னொரு அசாதாரண தீர்க்கதரிசி (உபா 34:10-12). இயேசுவைக் குறித்த அவரது தீர்க்கதரிசனம்: ''உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவில் உன் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவருக்குச் செவி கொடுப்பீர்களாக'' (18:15,18). சுவிசேஷத்திற்காய்ப் பேசும்போது பேதுருவும் ஸ்தேவானும் இதனை மேற்கோள் காட்டினர் (அப் 3:22; 7:37). இயேசுவைக் கண்ட மக்களது சான்று: ''மகா தீர்க்கதரிசியானவர் நமக்குள் தோன்றியிருக்கிறார்; தேவன் தமது மக்களைச் சந்தித்தார்'' (லூக் 7:16). தமது ஊழியத்தின் துவக்கவுரையாக இயேசு வாசித்த திருமறைப் பகுதி: லூக்கா 4:18,19, ''கர்த்தருடைய ஆவியானவர் என்மீது இருக்கிறார்; **தரித்திரருக்குச்** சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்.'' தமது மேசியாப்பணிக்கு நிருபணமான சாட்சியாக இதனையே யோவானது சீடருக்கு இயேசு சுட்டிக்காட்டினார்: ''**தரித்திரருக்குச்** சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது'' (லூக் 7:22). செல்வம் குவிப்பதைத் தமது

மலைப்பிரசங்கத்தில் இயேசு வெகுவாய்க் கண்டித்தார் (மத் 6:19-21). ''நான் சுற்றுமுற்றும் பார்த்தேன்; அவர்களில் அறிவிக்கிறவன் ஒருவனுமில்லை; நான் கேட்கும் காரியத்திற்குப் பதில் தரக்கூடிய ஓர் ஆலோசகனும் அவர்களில் இல்லை'' என்ற பிதா வாகிய தேவனது ஏக்கத்திற்குப் பதிலளிக்கும் வகையில் ''அதிசயமான ஆலோசனைக் கர்த்தராய்'' இயேசு வந்தார் (ஏசா 41:28). நித்திய வாழ்வடையவும், பூரணமடையவும் ஆலோசனை தேடிப் பணக்கார வாலிபன் ஒருவன் இயேசுவிடம் வந்தான். பரசியடிக்காமல் இயேசு அவனுக்குக் கொடுத்த குறிப்பான ஆலோசனை: ''நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனது உடைமைகளை விற்று, **தரித்திரருக்குக்** கொடு; அப்பொழுது விண்ணுலகில் உனக்குச் செல்வம் சேரும்'' (மத் 19:16-22). இத்தகையத் தீர்க்கதரிசன ஆலோசகர் அல்லவா நமக்குத் தேவை? தீர்க்கதரிசிகள் எனப்படும் இன்றைய வம்சத்தினரோ பணக்காரருக்கு எவ்வளவு பயப்படுகிறார்கள்! முதல் வரிசையில் அல்லவா அவர்களை அமர வைக்கிறார்கள்? (யாக் 2:1-4). தேவனோ ஒரு கோடீஸ்வரனை ''முட்டாளே'' என்றழைத்தார் (லூக் 12:16-21). பவுலடியார் ஒரு தீர்க்கதரிசி (அப் 13:1-3). பண ஆசை ''முட்டாள்தனமான நாட்டம்'' என்று அவர் எச்சரித்து, **தானதர்மத்தில்** செல்வந்தர்கள் தயாள குணமுள்ளவர்களாய் இருக்கவேண்டுமென்று கட்டளையிட்டார் (1 தீமோ 6:9,17,18).

ஆதிச்சபை ஒரு தீர்க்கதரிசன சமூகமாய் (Prophetic Community) திகழ்ந்தது. யோவேலின் பெந்தெகொஸ்தே தீர்க்கதரிசனத்தை அவர் கள் தெளிவாய் விளங்கிக்கொண்டனர். ''இறுதி நாட்களில் நான் மனுவுடல் கொண்ட யாவர்மீதும் என் ஆவியைப் பொழிந்தருள் வேன். உங்கள் புதல்வரும் புதல்வியரும் *தீர்க்கதரிசனம்* சொல்லு வார்கள் ... அந்நாட்களில் உங்கள் பணியாளர் மீதும் பணிப்பெண்கள் மீதும் என் ஆவியைப் பொழிந்தருள்வேன், அவர்களும் *தீர்க்கதரிசனம்* சொல்லுவார்கள்'' (அப் 2:16-18). இல்லாதோரோடு தங்களது பொருளாதார ஆசீர்வாதங்களைப் பகிர்ந்துகொண்டதே அவர்கள் மீதிருந்த தீர்க்கதரிசன ஆவியின் முதல் வெளிப்பாடு (வச 44,45;



4:32-35). நாமோ அப்போஸ்தலர் 2:44க்குக் கடந்து செல்லாமல் 2:4இலேயே தங்கித் தேங்கிவிட்டோம். நாட்டின் செல்வத்தில் 50 சதவீதத்திற்குமேல் 1 சதவீத மக்கள் தொகையினரிடமே குவிந்திருக் கிறது என்று ஏற்கனவே குறிப்பிட்டேன். திருச்சபையிலும் இதே நிலைதான். சமநிலையின்மை எனும் இப்பாவத்தைக் கண்டித்து ணர்த்துவதற்கு வழிவகுக்கும் ஆன்மீக எழுச்சியே நமது அத்தியா வசியத் தேவை (2 கொரி 8:12-15). செல்வந்தர் இன்னும் செல்வந் தராவதற்கும் எளியவர் இன்னும் எளியவராவதற்கும் தேவன் முழுக்க முழுக்க எதிரானவர் (ஏசா 5:8; யாக் 5:1-3).

நாடு நலம் பெறுவது திருச்சபையின் மனந்திரும்புதலைச் சார்ந்தே இருக்கிறது (2 நாளா 7:14). எதுவுமே திருச்சபையில்தான் துவங்க வேண்டும். சபை போகிற போக்கிலேயே சமுதாயமும் போகும். தங்கள் சகோ தரனது பரிதாப நிலை குறித்துக் கவலைப்படாத சுகபோகிகளான சீயோனியரைத் தட்டிக்கேட்க ஆமோஸ் போன்ற தீர்க்கர்கள் தேவை (ஆமோஸ் 6:1,3-6). பணத்திற்கு விலைபோகும் சபைத்தலைவர்களைக் கண்டிக்க ஆவியானவரது பலத்தினால் நிறைந்துள்ள மீகா போன்ற தீர்க்கர்கள் தேவை (மீகா 3:8-11). தேவனது வீட்டில் அல்லவா நியாயத்தீர்ப்பு தொடங்கவேண்டும்? (1 பேது 4:17). யாக்கோபு நமதாண்டவரின் சொந்தச் சகோதரன் (மத் 13:55). ''சுத்தமும் மாசில்லாததுமான மார்க்கம்'' எதுவென்ற அவரது வரையறையை எதுவும் மிஞ்சமுடியாது. இதோ வாசியுங்கள்: ''துன்புறும் அநாதை களையும் விதவைகளையும் சந்தித்துக் கவனித்தலும், உலகத்தால் கறைபடாதபடித் தன்னைக் காத்துக்கொள்ளுதலுமே'' (யாக் 1:27). இதில் முதலாவது வருவது **தானதர்மம்** என்பதைக் கவனித்தீர்களா? நாட்டளவில் அல்லது உலகளவில் ஏதோவொரு பேரழிவு உண்டாகும்போது முதலாவது களத்தில் குதிக்கவேண்டியது திருச்சபைதான். தீர்க்கன் அகபு முன்னறிவித்தபடி கிளாதியு பேரரசன் காலத்தில் உலகெங்கும் கொடிய பஞ்சம் ஏற்பட்டபோது, விசுவாசி கள் ஒவ்வொருவரும் தாராளமாய், மனப்பூர்வமாய், நிவாரண நிதிக்குப் பணம் கொடுத்தனர் (அப் 11:27-30). கரோனா வைரஸ் பாதிப்பினால்

அவதியுறும் **எளியவர்** கரையேறி வர உதவுவதற்காய் இம்மாதங்களின் காணிக்கைகளை அவர்கள் பக்கம் திருப்பிவிடும்படிச் சபை மேய்ப்பர்கள் மற்றும் கிறிஸ்தவத் தலைவர்கள் யாவரையும் வருந்திக் கேட்கிறேன். கிறிஸ்தவர்களும் தங்கள் பகுதியில் தேவையிலிருப்போருக்கு நேரடியாய்ப் பணவுதவி செய்யலாம்.

''தேவன் உலகில் *அன்புகூர்ந்தார்''* என்று யோவான் 3:16இல் வாசிக்கிறோம். அவர் இன்னும் உலகின்மீது அன்பாகத்தான் இருக்கிறார். ஆனால் அவர் கோபம் கொண்டுள்ளார். தேவனது கோபம் (Wrath of God) என்பது பைபிளின் முக்கியக் கருத்துக்களில் ஒன்று. வேதாகமச் சொல்லகராதி (Bible Concordance) ஒன்றை எடுத்து இவ்வார்த்தைகள் எத்தனை முறை வருகிறதென்று பாருங்கள். அன்றொரு நாள் ''இளம் வெட்டுக்கிளிகள், துள்ளும் வெட்டுக்கிளிகள், வளர்ந்த வெட்டுக்கிளிகள்'' ஆகியவை மூலம் உலகின்மீது தேவன் தமது சினத்தைக் காட்டியதுபோல இன்று கரோனா நச்சுக்கிருமி மூலம் செய்துவிட்டார் (யோவேல் 2:25). ஆனாலும் அவர் இரக்கத்திலும் மன்னிப்பிலும் ஐசுவரியமுள்ளவர். அவர் கிருபையாய் இரங்கி இந்த வாதையை நிறுத்தவேண்டுமென்று ஊழியரும் மக்களும் அவருக்குமுன் நெடுஞ்சாடையாய் விழுந்துகிடப்போம். **தானதர்மம்** செய்வதில் நாம் விறுவிறுப்பாய்ச் செயல்படத் துவங்கிவிட்டால், நமக்கு விரைவில் ஆரோக்கியம் உண்டாகும் (சங் 41:1-3, ஏசா 58:8; அப் 9:36-43). தனிப்பட்டவர்களது ஜெபப் பலிபீடங்களைச் செப்பனிடுவதற்கு நாட்டளவிலான ஊரடங்கு நமக்குப் போதுமான நேரம் தந்துள்ளது. கோத்திரத்திற்கு ஒன்று என்று பன்னிரெண்டு கற்களைக் கொண்டு தீர்க்கன் எலியா தகர்ந்து கிடந்த கர்த்தருடைய பலிபீடத்தைத் திரும்பக் கட்டினார் (1 இரா 18:30,31). ''இரட்டை மனதுடன் இனியும் நொண்டியடிக்க மாட்டோம்'' என்று திருச்சபையிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் திடமாய்த் தீர்மானித்துத் தேவனுக்குமுன் முழுக் கீழ்ப்படிதலோடும் இடையறா அர்ப்பணிப்போடும் நடக்க வேண்டும் (வச 21). ''ஆண்டவரது சினம் ஒரு நொடிப்பொழுதுதான்



இருக்கும்; அவரது கருணையோ வாழ்நாள் முழுவதும் நீடிக்கும். மாலையில் அழுகை; காலையிலோ ஆர்ப்பரிப்பு'' (சங் 30:5). *''தேவனுக்கு நம்மீது கோபமா?''* என்ற 5ஆம் அத்தியாயத்தை வாசியுங்கள்.

இக்கட்டான இச்சூழலில் ஜெபத்திற்காய் நாம் நம்மை அர்ப்பணிக்கும் வேளையில், ஒவ்வொரு நாளும், 24 மணி நேரமும், பிதாவாகிய தேவனுக்குமுன் நமக்காக மன்றாடிக்கொண்டிருக்கும் இரு தெய்வீக மன்றாட்டாளர்களை (Intercessors) நாம் மறந்துவிடக்கூடாது. ஒருவர் கிறிஸ்துவானவராகிய முதலாம் *தேற்றரவாளர்* (அதாவது, தேற்றி உதவுபவர்). அவர் பரலோகில் தேவனது வலப்பக்கத்திலிருந்து நமக்காகப் பரிந்துபேசி வேண்டுதல் செய்துகொண்டிருக்கிறார் (ரோ 8:34). அடுத்தவர் ஆவியானவராகிய இரண்டாம் *தேற்றரவாளர்.* அவர் இங்கு நமது இதயங்களிலிருந்து பிதாவை நோக்கி நமக்காகப் பெருமூச்சுடன் விண்ணப்பம்பண்ணிக்கொண்டிருக்கிறார் (வச 26). இந்த இரு மன்றாட்டாளர்கள் நமக்காய் இடையறாது வேண்டுதல் செய்துகொண்டேயிருப்பதால்தான், நாம் ''வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மிகவும் அதிகமாய்த்'' தேவன் நம்மை ஆசீர்வதித்து வருகிறார் (எபே 3:20). நாம் மனதிலிருத்திக்கொள்ளவேண்டிய இன்னொரு முக்கிய சத்தியமும் உண்டு: ''இந்நாள்வரை படைப்பு அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத் தவிக்கின்றது ... தூய ஆவியைப் பெற்றுக்கொண்டுள்ள நாமும் நமது உடலின் மீட்பாகிய புத்திர சுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம்.'' கிறிஸ்துவின் மறுவருகையின்போது இது நிகழும் (ரோ 8:22,23). வாரும், கர்த்தராகிய இயேசுவே, வாரும்!

3 மே 2020

# 9

# நமக்கு வியாதி வந்தால் ...

## If we get sick ...

2020 மே 3 அன்று இக்கட்டுரையை எழுத நான் உட்கார்ந்தபோது கிடைத்த தகவலின்படி, உலகெங்கிலும் கரோனா நச்சுக்கிருமியினால் பாதிக்கப்பட்டோர் 35,00,000 பேர்; இறந்தோர் 2,50,000 பேர். பாதிக்கப்பட்டுள்ளோரில் 1/3 பகுதியினர் வல்லரசு நாடாகிய அமெரிக்காவில்தான். நம்மையும் நம்மவர்களையும் பற்றிய கவலையும் கலக்கமும் நம்மெல்லாரையும் ஓரளவிலாவது ஆட்டிப்படைக்கின்றன. நாளை என்பது இருண்டிருக்கிறது. இந்நிலையையும், இதுபோன்று உருவாகக்கூடிய நிலையையும், சரிவரச் சமாளிப்பதற்கு உதவியான திருவிவிலியக் கருத்துக்களை இங்கு உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன். பெரும்பாலும் எனது சொந்த அனுபவம் மற்றும் நான் கற்றுக்கொண்டவற்றின் அடிப்படையிலேயே இக்கட்டுரை அமைந்துள்ளது.

**(1) <u>நமது காலங்கள்</u>** தேவனது கரத்திலேயே உள்ளன என்பதுதான் நமக்கிருக்கவேண்டிய முதலும் முதன்மையானதுமான நிச்சயம் (சங் 31:15அ). இந்த நிச்சயத்தின் அடிப்படையிலேயே தாவீது அறிக்கையிடுவது: ''கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்; நீரே என் தேவன் என்று சொல்கிறேன்'' (வச 14). தேவன் நமக்குத் தந்துள்ள திறமையான மருத்துவர்களுக்காய் அவரைத் துதிப்போம்; ஆனாலும் நமது காலங்கள் அவர்கள் கைகளில் *இல்லை.* தேவன் நியமித்த வேளைக்கு ஒரு நிமிடம்கூட நமது இறப்பு முந்தாது, பிந்தாது. நம்மில் நற்செயலைத் தொடங்கிய அவர் நமது இறப்பு அல்லது இரண்டாம் வருகைவரை அதனை நிறைவேற்றியே தீருவார் (பிலி 1:5). அவரது அனுமதியின்றி நமது தலையிலிருந்து ஒரு முடிகூட விழாது (லூக் 12:7; 21:18). ''அவர்'' தமது உயிர்மூச்சை நமது நாசிகளில் ஊதியதாலேயே நாம் உயிர்வாழ்கிறோம் (ஆதி 2:7). நமது சுவாசத்தை ''அவரே'' தமது கையில் பிடித்திருக்கிறார் (யோபு 12:10; தானி 5:23ஆ; அப் 17:25). உங்களுக்குச் சுவாசக்கருவி பொருத்தப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் உங்கள் மூச்சை நீட்டிக்க அல்லது நிறுத்த ''அவரால்'' மட்டுமே முடியும்!



**(2)** இவ்வளவு பயங்கரத் தொற்றுநோய்ப் பேரழிவை நாம் இதுவரை கண்டிராவிடினும், நமது வாழ்வில் எத்தனையோ இக்கட்டுகளைக் கடந்துதான் வந்திருக்கிறோம். நேற்றைய தேவனே இன்றைய தேவன்! இன்றைய தேவனே நாளைய தேவன்! உயிருக்கே ஆபத்து ஏற்பட்டுள்ளதொரு வேளையில் பவுலடியார் செய்த அறிக்கை: “இவ்வித மரணத்திலிருந்து தேவன் எங்களைத் *தப்புவித்தார்,* இப்பொழுதும் *தப்புவிக்கிறார்,* இன்னும் *தப்புவிப்பார்* என்று அவரை நம்பியிருக்கிறோம்” (2 கொரி 1:9,10).

*காப்பார், உன்னைக் காப்பார்,*
*காத்தவர் காப்பார் இன்னும் இனிமேலும், காத்திடுவார்;*
*கலங்காதே மனமே, காத்திடுவார்!*

*கண்டுனை அழைத்தவர் கரமதைப் பார்,*
*உன்னைக் கைவிடாதிருப்பார்;*
*ஆண்டுகள்தோறும் உனக்கவர் அளித்த ஆசிகளை*
*எண்ணிப்பார், எண்ணிப்பார், எண்ணிப்பார்,*
*எண்ணிப்பார், என்றுமதை எண்ணிப்பார்!*

இஸ்ரவேலரைப் போலவே நாமும் தேவனது முந்தைய **<u>அற்புதங்களை</u>** விரைவில் மறந்துவிடுகிறோம் (சங் 78:11). ''தேவனால் முடியும்'' என்று அழுத்திச் சொல்வதற்குப் பதிலாக ''தேவனால் முடியுமா?'' என்று அலட்சியமாய்க் கேள்வி எழுப்பினர் (வச 19,20). இயேசுவுடன் நெருங்கிய சகவாசம் வைத்திருந்த சீடரும் அவரது முந்தையச் செயல்களைச் சீக்கிரம் மறந்துவிட்டனர். ''பன்னிரண்டு கூடைகளையும்'' ''ஏழு கூடைகளையும்'' அவர் அவர்களுக்கு நினைவுபடுத்த வேண்டியதாயிற்று (மாற் 8:19,20).

எனது உடல்மீது செயலாற்றிவரும் தேவனது வல்லமையைச் சந்தேகிக்கும் அளவு இவ்வித **மறதி** என்னிலும் இருப்பது குற்றம். உடலளவில் நான் அதிகம் பலக்குறைவுள்ளவன். பள்ளியில் எனது உடற்பயிற்சி ஆசிரியர் என்னை முருங்கைக்காய் என்றழைப்பார்! டைபாயிடு, மலேரியா, மஞ்சள் காமாலை, மூலம், தலைச்சுற்று (Vertigo), சிறுநீரகக்கல், வயிற்றுப்புண் (Hyperacidity), மூக்கடைப்பு (Sinusitis), இப்படி எத்தனையோ சுகக்கேடுகள் வழியாய் வந்திருக்கிறேன். 1996ஆம் ஆண்டு, எனது 50ஆம் வயதில், எனக்கு இதய அறுவை சிகிச்சையும், 2007ஆம் ஆண்டு தண்டுவட அறுவை சிகிச்சையும் நடைபெற்றன. எனது குரல் நாண்கள் ஏற்கனவே பழுது பட்டுள்ள நிலையில் மருத்துவ ஆலோசனையைக் கேட்காமலேயே நான் பிரசங்கித்துக்கொண்டிருக்கிறேன். வலி தாங்கும் சக்தியும் உடல் வலிமையும் எனக்கு மிகமிகக் குறைவு. பிரசங்கபீடத்தில் நிற்கும் அந்த வேளையில் தேவன் என்னை அபிஷேகித்துப் பயன் படுத்துகிறார், அவ்வளவுதான். மக்களோ நான் பலசாலி என்று நினைக்கின்றனர்! அடிக்கடி நான் என்னிடம் சொல்லிக்கொள்வது: ''என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு! அவரது கனிவான செயல் கள் அனைத்தையும் **மறவாதே!** அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் உயிரைப் படுகுழியினின்று மீட்டு, உனக்குப் பேரன்பையும் இரக்கத்தையும் மணிமுடியாகச் சூட்டுகின்றார். அவர் உன் வாழ்நாளை நலன்களால் நிறைவுறச் செய்கின்றார்; உன் இளமை கழுகின் இளமையெனப் புதிதாய்ப் பொலிவுறும்'' (சங் 103:1-5). இதையே நாமனைவரும் நமக்கு நாமே நினைவுபடுத்திக்கொள்வோம்.

**(3)** தேவனது சுகமளிப்பு **வாக்குகளைத்** திரும்பவும் கவனித்து நமது விசுவாசத்தை வலுப்படுத்திக்கொள்வோம். யாத் 15:26இ, ''உன்னைக் குணமாக்குகிற கர்த்தர் நானே!'' எகிப்தியர்மீது தேவன் வரப்பண்ணிய வாதைகளுக்கு எதிரானது இது. நமது உடல் எவ்வளவு வியத்தகு முறையில் தேவனால் படைக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அதனை அவர் எவ்வளவாய்ப் பராமரிக்கிறார் என்ப



தையும் சங்கீதம் 139:13,14 எடுத்துரைக்கிறது: ''ஆண்டவரே, என் உள்ளுறுப்புகளை உண்டாக்கியவர் நீரே! என் தாயின் கருவில் எனக்கு உரு தந்து காப்பாற்றியவர் நீரே. நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன்; உமது செயல்கள் வியக்கத்தக்கவை; அது எனது மனதுக்கு நன்றாகத் தெரியும்.'' மேசியாவின் சுகமளிப்பு ஊழியம் குறித்த தீர்க்கதரிசனம் கிறிஸ்துவின் பணிக்காலத்தில் நிறைவேறிற்று: ஏசா 53:4; மத் 8:16,17, ''அவர்தாமே நமது பலக்குறைவுகளைத் தாங்கிக்கொண்டு, நமது நோய்களைச் சுமந்தார்.'' தமது மக்களது ஜெபத்திற்குத் தேவன் பதில் தருவார் எனும் வாக்கு எரேமியா 33:3,6இல் உண்டு: ''என்னை நோக்கிக் கூப்பிடு; அப்பொழுது நான் உனக்குப் பதில் கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன் ... இதோ, நான் அவர்களுக்குச் சவுக்கியமும், ஆரோக் கியமும் வரப்பண்ணி, அவர்களைக் குணமாக்கி, அவர்களுக்குப் பரி பூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்.'' அப்போஸ்தலரது உபதேசம் இதோ: ''விசுவாசமுள்ள ஜெபம் நோயா ளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்'' (யாக் 5:15). ஒன்றுமே செய்யமுடியாத சூழல்கள் வழியே செல்லும்போது நம்மை நோக்கி தேவன் விடும் சவால்: ''இதோ, மனுவுடல் கொண்ட அனை வருக்கும் நானே ஆண்டவர்; அப்படியிருக்க, என்னால் செய்யமுடி யாத அதிசயம் எதுவுமுண்டோ?'' (எரே 32:27; ஆதி 18:14அ; லூக் 1:37).

**(4)** இந்த இறைவாக்குகள் இவ்வுலகில் **நோயற்ற வாழ்வை** (Sicknessfree life) நமக்கு உத்தரவாதமளிக்கின்றன என்று எடுத்துக் கொள்ள முடியாது. இதனை விளக்குகிறேன், கவனியுங்கள். நமது பாவங்களைக் கிறிஸ்து சிலுவைமீது சுமந்தார் (ஏசா 53:4,5; யோ 1:29; 1 பேது 2:24); ஆனாலும், அவரை விசுவாசித்து தேவனது பிள்ளைகளான பின்பும், நமக்குப் பாவம் இல்லையென்று சொல்ல முடியாதே (1 யோ 1:8; ரோ 7:17)! அதே பாணியில், கிறிஸ்து சிலுவைமீது நமது நோய்களைச் சுமந்தார் என்பது உண்மைதான் (ஏசா 53:4; மத் 8:17);

ஆனாலும், நமக்கு எவ்விதச் சுகக்கேடும் இல்லையென்று சொல்ல முடியாதே! இப்பொழுது நாம் அனுபவிப்பதெல்லாம் இரட்சிப்பு மற்றும் சுகத்தின் ''முதற்கனிகள்'' மட்டுமே (ரோ 8:23அ). கிறிஸ்துவின் மறுவருகையின்போதுதான், பாவமே இல்லாத, வியாதியே இல்லாத, துக்கமே இல்லாத, இறப்பே இல்லாததொரு வாழ்வுக்குள் நுழைவோம் (எபி 9:28; வெளி 21:4). நாம் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கும் முழுமையான **உடல் மீட்பைப்** பெற்ற *பின்னரே* இவை நமதாகும் (ரோ 8:23). அப்பொழுதுதான் அழிவுக்குரிய நமது உடல் அழியாமையை அணியும்; சாவுக்குரிய இவ்வுடல் சாகாமையை அணியும் (1 கொரி 15:50-54). *அதையடுத்துதான்,* சாவு ஒழிந்து வெற்றி ஓங்கும். அப்பொழுது நாம் வீசப்போகும் சவால்: ''சாவே, உன் கொடுக்கு எங்கே? பாதாளமே, உன் வெற்றி எங்கே?'' (வச 54ஆ,55). இப்பொழுது, இவ்வுலக வாழ்வில், நாம் ''நியாயப்பிரமாணத்தின் சாபம்'' (Curse of the Law) என்பதிலிருந்துதான் மீட்கப்பட்டிருக்கிறோம்; ''விழுகையின் சாபம்'' (Curse of the Fall) என்பதிலிருந்து இன்னும் மீட்கப்படவில்லை (கலா 3:13,14; ஆதி 3:16,17; ரோ 8:22,23). சகோதர சகோதரிகளே, இந்தச் சத்தியத்தை நீங்கள் தெளிவாய்ப் புரிந்துகொள்ளாவிடில், எல்லாவிதமான துர்வுபதேசங்களுக்கும் பலியாவீர்கள்.

**(5)** திருமறையை வியாக்கியானிக்கும்போது **சமநிலை** (balance) இழப்பதே பெரும்பாலான துர்வுபதேசங்களுக்கு மூலகாரணமாகும். இன்னொன்று அடிபடும் அளவிற்கு ஒரே சத்தியத்தை வலியுறுத்துவது (excessive emphasis) கட்டாயம் ஓரக்கொள்கைக்கே (eccentricity) கொண்டுபோய்விடும். திருமறையின் தேவனானவர் சமநிலையினால் அறியப்படுபவர். அவர் ''குணமாக்கும் கர்த்தர்'' எனும் யேகோவா-ரப்பா (Jehovah-Rapha) மட்டுமல்ல, ''குட்டும் கர்த்தர்'' எனும் யேகோவா-மாக்கே (Jehovah-Makkeh) என்பவரும் ஆவார் (யாத் 15:26; எசேக் 7:9). அவர் கொல்லுகிறார், *அத்துடன்* உயிரோடெழுப்புகிறார்; அவர் காயப்படுத்துகிறார், *அத்துடன்* காயங்கட்டிக் குணமாக்குகிறார் (உபா 32:39; யோபு 5:18; ஓசி 6:1).



பிறக்க ஒரு காலம் *மற்றும்* இறக்க ஒரு காலம் என்றும், சிரிக்க ஒரு காலம் *மற்றும்* அழ ஒரு காலம் என்றும், சேர்க்க ஒரு காலம் *மற்றும்* இழக்க ஒரு காலம் என்றும் பிரித்து, ''ஒவ்வொன்றையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாய்ச்'' செய்கிறார் (பிர 3:1-11). நாளையைக் குறித்து இப்படித்தானிருக்கும் என்று நமக்குத் தெரியாதபடி, அவர் ''வாழ்வின் காலம்'' *அத்துடன்* ''தாழ்வின் காலம்'' ஆகிய இரண்டையும் நியமிக்கிறார் (7:14). ''உன்னதமானவரின் உதடுகளிலிருந்து தீமை பயப்பது *மற்றும்* நன்மை பயப்பது ஆகிய இரண்டும் புறப்படு வதில்லையோ?'' என்று தீர்க்கன் எரேமியா வினவுகிறார் (புல 3:38). வேதாகமக் கதாபாத்திரங்களில் தலைசிறந்த இருவரைச் சந்திப்போம்: ஒருவர் மண்ணுலகிலுள்ள அனைவரையும்விட சாந்தகுணமுள்ள தேவதாசன் மோசே; அடுத்தவர் நாம் யாவருக்கும் பொறுமையின் இலக்கணம் கற்றுத்தரும் பக்தன் யோபு (எண் 12:3; யாக் 5:11). வாழ்வு *மற்றும்* தாழ்வு ஆகிய இரண்டையும் இவர்கள் இருவரும் எப்படிச் சமநிலைப்படுத்துகின்றனர் பாருங்கள்: மோசே ஜெபித்தது: ''தேவனே, நீர் எங்களை ஒடுக்கிய நாட்களுக்கும், நாங்கள் தீங்குற்ற ஆண்டு களுக்கும் ஈடாக எங்களை மகிழ்வுறச் செய்யும்'' (சங் 90:15). தனது மனைவிமீது யோபு எறிந்த சவால்: ''கடவுளிடமிருந்து நன்மையைப் பெற்றுள்ள நாம் அவரிடமிருந்து தீமையைப் பெறக்கூடாதோ?'' (யோபு 2:10). பிரியமானவர்களே, இன்று பகலும் இருக்கும், இரவும் இருக்கும்; புதிய வானம் புதிய பூமியில்தான் இரவே இராது (ஆதி 8:22; வெளி 21:25; 22:5). இரவில்தான் படைப்பின் முதலாம் நாள் துவங்குகிறது என்பதை மறக்கக்கூடாது (ஆதி 1:5). திருமறையின் இச்சமநிலைச் சத்தியத்தை அறியாமை எனும் நமது நிலத்தில்தான் சுகபோக வாழ்வு உபதேசம் (Prosperity Doctrine) செழித்தோங்குகிறது. இறைமக்களது இதயங்களில் 'negativism' எனும் பாதகச் சிந்தையைப் புகுத்துகிறேன் என்று நான் குற்றம் சாட்டப்படுவேன் என்பது எனக்குத் தெரியும். "Negative" மற்றும் "Positive" ஆகியவையெல்லாம் மின்சாரத்திற்கு அடுத்தவை, ஆன்மீகத்திற்கோ திருமறைக்கோ அடுத்தவை அல்ல!

**(6)** *நமக்கு வியாதி வந்தால்*, முதலாவது **“ஜெபிக்கவேண்டும்”** என்பதே நமக்கு விவிலியம் தரும் போதனை (யாக் 5:13-16). முதலில், வியாதியில் அவதியுறும் நபரே ஜெபிக்கவேண்டும்; அடுத்து, திருச்சபையின் மூப்பர்கள் (மேய்ப்பர்கள்) அவருக்காய் ஜெபிக்க வேண்டும்; இறுதியாக, உடன் விசுவாசிகள் ஒருவருக்காயொருவர் ஜெபிக்கவேண்டும். இந்த மூவர் ஜெபம் ‘‘முப்புரி நூல்’’ போன்றது (பிர 4:12). Prayer by self, prayer by shepherds, and prayer by saints! நம்மை ஜெபிக்க அழைப்பது தேவனே என்றால், அவர் நமது ஜெபத்திற்குப் பதிலளிக்க *விரும்புகிறார்* என்றுதானே பொருள்? ‘‘ஜெபத்தைக் கேட்கிறவரே’’ என்று தாவீது தேவனைக் கூப்பிட்டார் (சங் 65:2). தேவனை நமது கண்ணீர் அசைக்கிறது. தனது வியாதிப் படுக்கையிலிருந்து மன்னன் எசேக்கியா தேவனை நோக்கிக் கதறிய போது, அவர் அனுப்பிய செய்தி: ‘‘நான் உனது ஜெபத்தைக் கேட்டேன்; உனது கண்ணீரைக் கண்டேன்’’ (ஏசா 38:1-5). தேவன் நமது **ஜெபங்களை** மதித்து அவற்றைத் தமது புத்தகத்தில் (His book) பதிவு செய்கிறார்; நமது **கண்ணீரைத்** தமது புட்டியில் (His bottle) பத்திரமாய்ச் சேர்க்கிறார் (சங் 56:8). சங்கீதப் புத்தகத்தில் ஆரா தனைச் சங்கீதங்கள் 26 மட்டுமே என்பதும், புலம்பல் சங்கீதங்களோ 51 என்பதும் தெரியுமா? ஜெபத்திற்குப் பதில் உடனே வராவிடில், *சோர்ந்து போகாதே, மனமே, சோர்ந்து போகாதே!* உனது உடலிலிருந்து அந்த முள்ளைத் தேவன் அகற்றிப்போடுவார், அல்லது உனது பலக் குறைவைச் சமாளிக்கப் போதுமான கிருபையும் கூடுதல் பலமும் அள்ளித்தருவார் (2 கொரி 12:7-10). தீர்வு கிடைக்காத எந்தப் பிரச்னையும் நமது குண நலன்களை மேம்படுத்தும் (ரோ 5:3,4; யாக் 1:2-4). ‘‘துன்பத்தின் அப்பம்’’ மற்றும் ‘‘உபத்திரவத்தின் தண்ணீர்’’ ஆகிய இரண்டு மட்டுமே நமக்கு உணவானாலும், இதுவரையில்லாத அளவு தமது சத்தியங்களைத் தேவன் நமக்குப் போதித்துக் கொண்டே யிருப்பார் (ஏசா 30:20; சங் 119:71).

**(7)** சுகமளிக்கும் இயேசு நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் என்று உற்சாகமாய்ப் பாடுகிறோம். சுவிசேஷப் புத்தகங்களில் அவர் இரு



பிரதான பட்டங்களினால் அறியப்பட்டிருக்கிறார்: ஒன்று, “இறைமகன்” (Son of God), அடுத்தது, “மனுமகன்” (Son of Man). இறைமகனாக அவர் இறைவனது வல்லமையை மனிதராகிய நமக்கு வெளிப் படுத்துகிறார்; மனுமகனாக அவர் மனிதராகிய நமது வேதனைகளை இறைவனிடம் எடுத்துச்செல்கிறார். எனது இறையியல் நிபுணர் நண்பர்கள் இங்கு நான் தரும் வியாக்கியானத்தைத் தயவாய்ப் பொறுத்துக்கொள்ளக் கேட்கிறேன்! எனது கணக்கின்படி, புதிய ஏற்பாட்டில் ‘‘இறைமகன்’’ என்ற பட்டம் 44 தடவையும், ‘‘மனுமகன்’’ என்பது 88 தடவையும் வருகின்றன! *மகிமை உமக்கன்றோ? மாட்சிமை உமக்கன்றோ?* துள்ளிக் குதிக்கணும் போலிருக்கு! இவர் முதலாம் **“தேற்றரவாளர்”** என்றழைக்கப்படுவதில் வியப்பென்ன? நமது நெருக்கங்கள் அனைத்திலும் அவரும் நெருக்கப்படுகிறார்! (ஏசா 63:9). இதனை எபிரெயர் நிருப ஆக்கியோன் எப்படி வர்ணிக்கிறார் பாருங்கள்: ‘‘நமது பலக்குறைவுகளைப் பார்த்துப் பரிதபிக்க இயலாத பிரதான ஆசாரியராய் அல்ல, எல்லா வகையிலும் நம்மைப் போல் சோதிக் கப்பட்டும் பாவம் இல்லாதவராயிருக்கும் பிரதான ஆசாரியராகவே அவர் நமக்காய் இருக்கிறார். எனவே, நாம் இரக்கம் பெறவும், ஏற்ற வேளையில் உதவக்கூடிய கிருபையைக் கண்டடையவும், தைரியமாய்க் கிருபா சனத்திற்கு அருகே வந்துவிடுவோம்’’ (எபி 4:15,16). இயேசு ஒருபோதும் வியாதிப்படவில்லை; ஆனால் அவர் கெத்செமனேயில் இரத்தத்தை வியர்வையாய்க் கொட்டியபோதும், கொல்கொதாவில் இரத்தத்தைச் சிந்தியபோதும், உடல் வேதனையை அனுபவிக்கவில்லையோ?

*What a Friend we have in Jesus!*
*பாவ சஞ்சலத்தை நீக்க, பிராண சிநேகிதர் உண்டே;*
*பாவப் பாரம் தீர்ந்துபோக, மீட்பர் பாதம் தஞ்சமே.*

*சால துக்க துன்பத்தாலே, நெஞ்சம் நொந்து சோருங்கால்,*
*துன்பம் இன்பமாக மாறும், ஊக்கமான ஜெபத்தால்!*

**(8)** வியாதிப்படுக்கையிலிருக்கும் நாட்களையும் வாரங்களையும் நீங்கள் பயனுள்ள வகையில் செலவழிக்கலாம். அறிக்கையிடப்படாத பாவம் எதுவுமுண்டோ என்று **தற்பரிசோதனை** செய்யுங்கள் (புல

3:28,40). தேவனோடு காரியங்களைச் சரிசெய்யுங்கள். இவ்வசனப் பகுதியில் ஆறுதலான திருவாக்கு ஒன்றுண்டு: வச 32,33, ''ஆண்டவர் நம்மை வருத்தினாலும், தமது மிகுந்த கிருபையின்படி இரங்குவார். மனமார அவர் மானிடரை வருத்துவதுமில்லை, துன்புறுத்துவது மில்லை!'' பாவங்களை நாம் மூடி மறைத்துவைத்தால், அது நமது ''எலும்புகளை'' உலரச்செய்யும், நமது ''உடற்சத்தை'' உறிஞ்சிவிடும் (சங் 32:3,4). ஆன்மீக ஆரோக்கியமும் உடல் நலமும் பின்னிப் பிணைந்தவை (சங் 38:3ஆ; நீதி 14:30; யோ 5:14; 3 யோ 2). யார் யாருக்கு விரோதமாய் மனதில் கசப்பு இருக்கிறதென்று கண்டுபிடி யுங்கள். எல்லாரையும் தாராளமாய், தயாளமாய் மன்னியுங்கள். உடல் நலம் பெற்றவுடன் தவறிழைக்கப்பட்டோரோடு ஒப்புரவாகத் தீர் மானியுங்கள் (1 பேது 3:8-11; யாக் 5:16). இப்பொழுதே கைபேசி யிலும் அழைத்து இதனைச் செய்யலாம். உங்கள் இக்கட்டுகளில் உங்களுக்குப் போதுமான ஆதரவு தராதோருக்காகவும் ஜெபியுங்கள் (யோபு 42:10). இறையரசுக்கு அடுத்த காரியங்களுக்கு முன்னுரிமை கொடுக்க உங்கள் செயல்பாடுகளை வரிசைப்படுத்துங்கள் (மத் 6:25,33). **ஏழை எளியோருக்கு** உதவ, இன்னொரு தசமபாகம் போன்று, கணிசமான தொகையைப் பிரித்துவைக்கத் தீர்மானித்து விடுங்கள். தாவீதரசன் கண்டுபிடித்தது: ''எளியோரின் நலனில் அக்கறை கொள்பவர் பேறுபெற்றவர் ... படுக்கையில் அவர் நோயுற்றுக் கிடக்கையில் ஆண்டவர் அவருக்குத் துணைசெய்வார்; நோய் நீங்கிப் படுக்கையினின்று அவர் எழும்பும்படிச் செய்வார்'' (சங் 41:1-3). ஏசாயா 58:6-9ஐயும் வாசியுங்கள்.

**(9) மருத்துவப்பணியாளர்கள்** நமது ஜெபங்களில் தவறாது இடம்பெறவேண்டும். அவர்கள்தான் காயங்கள்மீது எண்ணெயும் திராட்சை மதுவும் ஊற்றும் நல்ல சமாரியன்கள் (லூக் 10:33,34). Dr. Ambrose Pare (1510-1590) என்பவரின் கூற்றை நான் வெகுவாய் மதிக்கிறேன்: ''கட்டு போடுவது நான், குணமாக்குவதோ நாதர்.'' (I bandage, God heals!). நமக்குச் சிகிச்சையளித்தோருக்கு முடிந்த வேளைகளிலெல்லாம், முடிந்த வகைகளிலெல்லாம், நன்றி சொல்ல



வேண்டும். தனது மிஷனரிக் குழுவினரது உடல்நலக் காரியங்களைக் கவனித்துக்கொண்ட Dr. லூக்கா அவர்களிடம் பவுலடியார் மிகுந்த மதிப்பு கொண்டிருந்தார்; அவரைப் ''பிரியமான'' வைத்தியர் என்ற ழைத்தார் (கொலோ 4:14அ). வேலூர் CMC மருத்துவமனையில் எனக்கு 6-மணிநேர இருதய அறுவை சிகிச்சை நடந்து 24 ஆண்டுகள் (1996) ஆகின்றன. ஒவ்வொரு ஆண்டும், அறுவை சிகிச்சை நாளாகிய ஏப்ரல் 23 அன்று, தவறாது எனது இதய நோய் நிபுணர், Dr. ஜேக்கப் ஜோஸ் அவர்களுக்கும், அறுவை சிகிச்சை செய்த Dr. ராய் கொருல்லா அவர்களுக்கும், எனக்கு இரத்த தானம் செய்த நண்பர்களுக்கும் நன்றி சொல்ல நான் தவறியதில்லை. கரோனா நோயாளிகளின் நலனுக்காய் மருத்துவத் தொழில் மற்றும் துப்புரவுத் தொழிலில் ஈடுபட்டிருப்போர் எவ்வளவாய்த் தங்கள் உயிரைப் பணயம் வைக்கின்றனர், பாருங்கள்! ஒரு சிறு குழு அமைத்துக் கொண்டு, மருத்துவமனைகள், தொழுநோய் இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் கூடங்கள், முதியோர் இல்லங்கள் போன்றவற்றிற்குக் கிரமமாய்ச் சென்று சந்திப்பு ஊழியம் செய்யத் தீர்மானியுங்கள். பணியாளர் பற்றாக்குறை மற்றும் பண நெருக்கடி காரணமாக வட மாநிலங்களிலுள்ள மூன்றில் இரண்டு கிறிஸ்தவ மருத்துவமனைகள் மூடப்பட்டுவிட்டன. இந்நாட்களில் நிலைமை இன்னும் மோசம். தென்னகக் கிறிஸ்தவர்கள், ஐக்கியங்கள் மற்றும் சபைகளாகிய நாம் இச்சவாலை ஏற்றுக்கொண்டு, நமது இளம் மருத்துவர்களையும் மருத்துவப்பணி உதவியாளர்களையும் மருத்துவ மிஷனரிகளாய்த் தேவை மிகுந்த பகுதிகளுக்கு அனுப்பிவைப்போமா? கொடிய நோய்வாய்ப்பட்டுள்ளோருங்கூட எளிய சிகிச்சையால் குணமடைந்து விடுவதாக மிஷனரி டாக்டர்கள் சாட்சி பகர்கின்றனர். ஆம், மருத்துவ வசதிக் குறைவான இடங்களில் வாழ்வோர் நடுவிலேயே தேவனது அற்புத வல்லமை அமோகமாய் வெளிப்படும்.

**(10)** ''சுகமடைதல்'' (healing) என்பதைவிட **''ஆரோக்கியமா யிருத்தல்''** (health) என்பதே முக்கியம். ஆரோக்கிய வாழ்வுக்கான பல வழிமுறைகள் மார்க்கவுலகிற்கு வெளியேயும் எவ்வளவோ தரப்படுகின்றன. உங்களுக்குப் பொருத்தமானவற்றைப் பின்பற்றுங்கள்.

உடற்பயிற்சிகள் செய்யத் தவறக்கூடாது. யோகா என்பது கிறிஸ்த வர்களுக்குக் கேள்விக்குறியே. உணவு வகைகளில் கட்டுப்பாடு அத்தியாவசியம். அளவுக்குமீறி *உண்ணாதீர்கள்* (லூக் 21:34)! கொழுப்புச்சத்து மிகுந்துள்ளவற்றை அகற்றுங்கள் (நீதி 23:1-3). கொழுப்பும் இனிப்பும் கொண்டாட்டத்திற்காக மட்டுமே (நெகே 8:10). புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தோராகிய நமக்கு மாமிச உணவுகளில் அசுத்தமானது என்று எதுவும் கிடையாது (ரோ 14:14). ஆனாலும் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின்படி அனுமதிக்கப்படாத வற்றிற்கு மருத்துவரீதியான காரணங்களும் உண்டு (தானி 1:8). சாப்பிடுவது தேனாக இருந்தாலும், எல்லாவற்றிலும் நிதான மாயிருங்கள் (நீதி 25:16). அடிக்கடி வெளி உணவகங்களில் சாப் பிடுவது உடல்நலத்திற்குக் கேடு. செயற்கை உணவு வகைகளையும் நொறுக்குத்தீனியையும் குறைத்துக்கொள்ளுங்கள். எதற்கும் அடி மைப்படாதீர்கள் (1 கொரி 6:12,13). அளவுக்குமீறி *உழைக்காதீர்கள்* (நீதி 23:4)! தேவன் ஓய்ந்திருந்தது களைத்துவிட்டதால் அல்ல, அல்லவே அல்ல! (ஏசா 40:28). கிரமமாய் ஓய்வெடுக்கவேண்டும் என்ற தத்துவத்தையே அவர் இவ்விதம் நமக்குப் போதித்துள்ளார். விளைநிலத்திற்குக்கூட ஓய்வு கொடுக்கக் கட்டளையிட்டார் (லேவி 26:34,35). அளவுக்குமீறி *உறங்காதீர்கள்* (நீதி 6:9,10)! ''சீக்கிரம் படுக்கச் செல்லுங்கள், அதிகாலையில் எழுந்துவிடுங்கள்.'' “Early to bed, Early to rise!” என்பது தங்க வாக்கியம். அளவுக்குமீறி இன்பங்களில் *உய்த்திராதீர்கள்* (1 கொரி 7:29-31)! அவ்வப்போது மருத்துவப் பரிசோதனை செய்துகொள்ளுங்கள். மருத்துவ ஆலோசனைகளை அல்லத்தட்டாதீர்கள். வருமுன் காப்பது மேல்! சுத்தம் சுகம் தரும் (பிர 9:8). உபவாசிக்கும்போதும் கச்சிதமாயிருங்கள் (மத் 6:17). சுறுசுறுப்பாயிருங்கள் (நீதி 6:6; யோபு 12:7,8).

■ **எதிர்கால மகிமையைக்** குறிப்பிடாமல் இக்கட்டுரை நிறைவு பெறாது. அப்போஸ்தலர்களையே அழைத்து நம்மிடம் நேரடியாய்ப் பேசச் சொல்வோம். இதோ பவுலடியார்: 2 கொரி 4:16-18, ''எங்கள் உடல் அழிந்துகொண்டிருந்தாலும் எங்கள் உள்ளார்ந்த இயல்பு நாளுக்கு நாள்



புதுப்பிக்கப்பெற்று வருகிறது. எனவே நாங்கள் மனம் தளர்வதில்லை. நாம் அடையும் இன்னல்கள் இலகுவானவைதான்; அவை குறுகிய காலம்தான் நீடிக்கும். ஆனால் ஈடு இணையற்ற மாட்சியை அவை விளைவிக்கும். அந்த மாட்சி என்றென்றும் நிலைத்திருக்கும். நாங்கள் காண்பவற்றை அல்ல, காணாதவற்றை நோக்கியே வாழ்கிறோம். காண்பவை நிலையற்றவை; காணாதவையோ என்றென்றும் நிலைத்திருப்பவை.'' அடுத்து பேதுரு வருகிறார்: 1 பேது 1:6,7, ''இப்போது சிறிது காலம் நீங்கள் பல்வகைச் சோதனைகளால் துயருற வேண்டியிருப்பினும், வரப்போகும் அந்நாளில் பேருவகை கொள் வீர்கள். அழியக்கூடிய பொன் நெருப்பினால் புடமிடப்படுகிறது. அதைவிட விலையுயர்ந்த உங்கள் விசுவாசம் மெய்ப்பிக்கப்படவே துயருறுகிறீர்கள். இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது அந்த விசுவாசம் உங்களுக்குப் புகழும், மாண்பும், பெருமையும் தருவதாய் விளங்கும்.'' இயேசுவின் தாயாரது கண்ணீரைத் துடைத்த யோவான், *அதிசயமான ஒளிமய நாடாம்* பரலோகத்தைக் குறித்த வெளிப்பாட்டுடன், அடுத்து வருகிறார்: வெளி 7:17ஆ; 21:4அ, ''தேவன்தாமே நமது கண்ணீர் *யாவையும்* துடைப்பார்!''

21 மார்ச் 2020

**10**

# வீட்டுச் சபைகள்
## House Churches

மக்கள் சுய ஊரடங்கு (People's Curfew) தினமாக 2020 மார்ச் 22 ஞாயிற்றுக்கிழமையை அனுசரிக்கவேண்டுமென்று மார்ச் 19 அன்று கரோனா நச்சுக்கிருமி குறித்து இந்தியப் பிரதமர் நாட்டினருக்கு அளித்த உரையில் குறிப்பிட்டதைத் தொடர்ந்து ஞாயிறு ஆராதனைகளும் சபைக் கூடுகைகளும் அன்றையத் தினத்தில் ரத்து செய்யப்பட்டிருப்பது இந்தியாவெங்குமுள்ள கிறிஸ்தவர்களைக் கவலைக்குள்ளாக்கியுள்ளது. திருமறைச் சரித்திரம் மற்றும் திருச்சபைச் சரித்திரத்தை ஓரளவு புரிந்துள்ள நான் பிரதமரது ஆலோசனைகளை வரவேற்கிறேன். எருசலேமில் தேவாலயத்தைத் ''திரும்பக்கட்ட'' யூதருக்கு ஆதரவாயிருந்த, 6ஆம் நூற்றாண்டின் பாரசீக மன்னராகிய, மகா பெரிய கோரேசை நினைத்துப் பார்க்கிறேன் (ஏசா 44:28). அவரைக் கர்த்தர் நான் ''அபிஷேகம்பண்ணினவர்'' என்றும் அழைக்கிறார் (45:1). ''வீட்டுச் சபைகள்'' ஆதிச்சபையின் பாணியில் திரும்பவும் உருவாகி இயங்கிட நமது பிரதமரது அறிவிப்பு வழி வகுக்கும் என்பது எனது நம்பிக்கை.

எருசலேமிலிருந்த வீட்டுச் சபைகளில் ஆராதித்தலும் அப்பம் பிட்குதலும் மட்டுமல்ல, உபதேசித்தலும் பிரசங்கித்தலும் இடம் பெற்றிருந்தன (அப் 2:46,47அ;5:42). திருச்சபையைப் பாழாக்கச் சவுல் ''வீடுகளுக்குள்'' நுழையவேண்டியதிருந்தது (8:3). சிறையிலிருந்து பேதுரு விடுவிக்கப்படுவதற்காக மரியாளின் ''வீட்டில்'' சபையார் ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தனர் (12:5,12). பிரிஸ்கில்லாள்-ஆக்கில்லா தம்பதியரின் ''வீட்டில்'' உயிருள்ளதொரு சபை கூடிவந்து கொண்டிருந்தது (ரோ 16:3-5; 1 கொரி 16:19). ரோம் நகரிலுள்ள பல வீட்டுச் சபைகளில் இது ஒன்று. பிலேமோனது ''வீட்டில்'' ஒரு சபை கூடிவந்தது (பிலே 1,2). நிம்பா என்பவரது ''வீட்டிலும்'' ஒரு சபை



கூடிவந்தது (கொலோ 4:15). ஒரே நகரில் இயங்கி வந்த பல வீட்டுச் சபைகள் ''மூப்பர்கள்'' தலைமையில் தங்களுக்குள் ஆவிக்குரிய இணைப்பை ஏற்படுத்திக்கொண்டன (அப் 20:17; தீத்து 1:5). கொரிந்து சபை, எபேசு சபை, பிலதெல்பியா சபை என்றெல்லாம் வாசிக்கிறோம் அல்லவா?

வீட்டுச் சபைகள் திரும்பவும் உருவெடுப்பது கீழ்வரும் உன்னத நன்மைகளைப் பிறப்பிக்கும் —

**(1)** கேட்கிறவர்களாகவும் பார்க்கிறவர்களாகவும் நேயர்களாய் மட்டும் இருக்கும் விசுவாசிகள் சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ''ஒருவருக்கொருவர்'' புத்தி சொல்லி ஊழியம் செய்ய ஏதுவுண்டாகும் (எபே 5:19; கொலோ 3:16). இந்தச் சமதளப் பரிமாணம் (horizontal dimension) நமது சபை ஆராதனை களில் உண்டோ? சபைகூடிவருதலின் ஒரு முக்கிய நோக்கம் ''ஒருவரையொருவர்'' கவனிக்கவும் ''ஒருவருக்கொருவர்'' புத்தி சொல்லவும்தானே? (எபி 10:24,25; மல் 3:16). வாழ்த்துதல் மட்டும் சொல்லிக் கைகுலுக்கிவிட்டால் போதுமா?

**(2)** ஒவ்வொரு விசுவாசியும் பரிசுத்த ஆவியினால் வரமளிக்கப் பட்டிருக்கிறார் (1 கொரி 12:7-11; ரோ 12:4-8; 1 பேது 4:10,11). வரம் பெறாத உறுப்பினர் கிறிஸ்துவின் உடலாம் திருச்சபையில் கிடையவே கிடையாது. அதிக எண்ணிக்கையுள்ள கூடுகைகளில் தனி நபர்கள் தங்கள் வரங்களை விடுதலையோடும் நிறைவாகவும் வெளிப்படுத்த முடிவதில்லை. ஒவ்வொரு விசுவாசியும் தனது வரத்தைப் பயன்படுத்தி, வரங்களின் பயன்பாட்டில் தேறுவதற்கு வீட்டுச் சபைகள் சாதகமாக அமைகின்றன (1 கொரி 14:26; 13:11). புதிய ஏற்பாட்டு விசுவாசி களுக்கு ஓய்வுநாள் பிரமாணம் கிடையாது என்பதால், வாரத்தின் எந்த நாளிலும், வாரத்தில் எத்தனை தடவை வேண்டுமானாலும், வீட்டுச் சபைகள் கூடிவரலாம் (ரோ 14:5,6; கொலோ 2:16,17; அப் 2:46,47).

**(3)** வீட்டுச் சபைகள் எனும் அமைப்பில் புதிய தலைவர்கள் பலர் எழும்புவர். அனைத்து விசுவாசிகளின் ஆசாரியத்துவம் (Priesthood of

all Believers) என்பது புதிய ஏற்பாட்டின் ஓர் அடிப்படை உபதேசம் (1 பேது 2:4-5,9-10; வெளி 1:6; 5:9-10). இது இன்று எழுத்தளவில்தான் இருக்கிறது, நடைமுறைப்படுத்தப்படவில்லை. 16ஆம் நூற்றாண்டின் திருச்சபைச் சீர்திருத்தத்தில் (Protestant Reformation) வலியுறுத்தப் பட்ட சத்தியங்களில் ஒன்றாகிய இது இன்னும் முழுமையாய் அமுலுக்கு வரவில்லை. பாதிரியார்-சபையார் (Clergy-Laity) என்று நிலவும் வேறுபாடு சபை ஆரோக்கியத்திற்குக் கேடுதான் விளைவிக்கும். கிறிஸ்துவின் சபையில் பட்டம், பதவி எனும் வரிசைகளுக்கெல்லாம் (hierarchy) இடமே கிடையாது. அவரது உடலின் அவயவங் களானவர்கள் எங்கெல்லாம் அவரது பெயரால் கூடிவருகிறார்களோ அங்கெல்லாம் அவர் தலைவராக அவர்கள் நடுவில் இருக்கிறார் (மத் 18:20; யோ 4:20-24). சடங்கு வெறி (ritualism) மற்றும் ஆச்சாரப் பைத்தியம் (ceremonialism) போன்றவை எல்லாம் பழைய உடன் படிக்கையைச் சார்ந்தவை. இவற்றிற்கெல்லாம் சாவு மணி அடித்து விட்டது சிலுவை (கொலோ 2:14-17). புதிய துருத்தியில்தான் புதிய ரசம் வைக்கப்படவேண்டும் (மத் 9:17).

**(4)** வீட்டுச் சபைகள் தங்களது அயலகத்தில் ஏற்படுத்திய தாக்கமே ஆதிச்சபையின் அமோக வளர்ச்சியின் இரகசியம் (அப் 2:46,47). ஓர் ஆலயக் கட்டிடத்திற்குள் வர யோசிக்கும் கிறிஸ்தவரல்லாதவர் தங்களது அயலகத்தார் ஒருவரது வீட்டுக் கூடுகையில் கலந்துகொள்ளத் தயங்கமாட்டார். 1 கொரிந்தியர் 14:24 மற்றும் அப்போஸ்தலர் 17:5-9 ஆகிய வசனப்பகுதிகள் இவ்விதச் சாத்தியக்கூற்றைக் குறிப்பிடுவதாய்த் தெரிகின்றன. வீட்டுச் சபைகள் தீவிரமாய்ச் செயல்பட்டுவந்ததா லேயே திருச்சபை வெடித்துக் கிளம்பி வளர்ந்ததைக் கம்யூனிச நாடுகள் கட்டுப்படுத்த முடியவில்லை.

**(5)** ஒருவரோடொருவர் உரையாடித் திருவசன ஆராய்ச்சி செய்வது வீட்டுச் சபைக்கூடுகைகளில் அதிகம் சாத்தியமாகும். பெரோயா நகர் விசுவாசிகள் இதற்கோர் எடுத்துக்காட்டு (அப் 17:11). இது அயல கத்திலுள்ள பிரமுகர்களையும் கவர்ந்து அவர்களைக் கிறிஸ்துவின் சீடராக்க வழிவகுக்கும் (வச 12). ஒரு சில கிறிஸ்தவக் குடும்பங்கள்



தாங்கள் குடியிருக்கும் பகுதியில் தேவனை ஆராதிக்கவும் (Worship), திருவசனத்தைத் தியானிக்கவும் (Word-study), சாட்சி பகரவும் (Witness) கூடிவரும்போது, சபைப்பிரிவுப் பாகுபாட்டுச் சுவர்களைத் தகர்க்கும் வீட்டுச் சபையாய் அது மாறிவிடுகிறது. 133ஆம் சங்கீதத்தின் ஆசீர்வாதங்கள் அவர்களுடையவையாகும். கேட்கிறவர்களாகவும் பார்க்கிறவர்களாகவும் மட்டுமே இருக்கும் கிறிஸ்தவர்கள் செயல் படுகிறவர்களாக மாறமுடியாதபடித் தொலைக்காட்சிச் சபை ஆராதனைகள் (Online Church Services) அவர்களை இன்னும் முடமாக்கும்.

**(6)** கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுதலும் ஆலயக் கட்டிடங்கள் இடிக்கப்படுதலும் இந்தியாவில் பெருகிக்கொண்டேயிருக்கின்றன. பெரும்பாலும் தங்கள் அயலகத்தாரின் நல்லாதரவுடன் செயல்படும் வீட்டுச் சபைகளைத் தடுப்பதைவிட ஓர் ஆலயக் கட்டிடத்தைத் தகர்ப்பது சுவிசேஷத்தின் எதிரிகளுக்குச் சுலபம் (அப் 2:46,47). ''வீட்டு ஜெபக்குழு'' (Home Cell) என்ற பெயர் ''வீட்டுச் சபை'' (House Church) என்பதற்குச் சிறந்த மாற்று அல்ல. ஆலயக் கட்டிடங்களுக்கு நான் எதிரானவன் அல்ல; ஆனால் 5000 பேர் கூடக் கூடிய ஒரே கட்டிடத்தைவிட தலா 500 பேர் உட்காரக்கூடிய பத்து கட்டிடங்களே இந்தியா போன்ற நாட்டில் பாதுகாப்பானது. மட்டுமல்ல, மேய்ப்பு மற்றும் போதிப்பு ஆகிய வரங்களுடன் (Pastoral and Teaching gifts) பத்து தலைவர்களாவது உருவாக இது வழி வகுக்கும். ''செங்கற்கள்தான் நம்மைக் கொன்றன'' (It's bricks which killed us!) என்பது சபைச் சரித்திராசிரியர் ஒருவரது கூற்று.

**(7)** பழகிப்போனவற்றில் மாற்றங்களை ஏற்பது சிரமம்தான்; ஆனாலும் நாம் ஏங்கி நிற்கும் ''இன்னொரு எழுப்புதல்'' (Another Revival) வருவதற்கு வீட்டுச் சபைகள் காரணமாய் அமையும் என்பது எனது ஆழ்ந்த கருத்து (சங் 85:6). கிறிஸ்துவின் மறுவருகைக்கு இதுவே நமது முடிவான ஆயத்தமாயிருக்கும் (அப் 3:19-21). ''ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்!''

8 ஜூன் 2020

# 11

# திருச்சபைகளில் திருத்தங்கள்

## Changes in Churches

தொழுகைக்கூடங்களை 2020 ஜூன் 8 ஆகிய இன்று முதல் திறக்கலாம் என்று இந்திய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. குருத் தோலை ஞாயிறு, கட்டளை வியாழன், பெரிய வெள்ளி, ஈஸ்டர் ஞாயிறு ஆகியவற்றிற்காய்க் கிறிஸ்தவர்கள் ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்த லெந்து காலத்தில் மார்ச் 3ஆம் வாரம் ஆலயங்கள் மூடப்பட்டது மிகுந்த வேதனையளித்தது. அது முதல் 10 ஞாயிறு ஆராதனைகளையும், வார நாட்கள் மற்றும் வாரயிறுதி நாட்களின் கூட்டங்களையும் கிறிஸ்தவ சமுதாயம் இழந்துவிட்டது. இந்நிகழ்வு களெல்லாம் தொலைக்காட்சிகளில் நடத்தப்பட்டாலும் அது திருப்திகரமான மாற்று என்று சொல்வதற்கில்லை.

கரோனா நோய்ப் பரவலினால் நமது சபை வாழ்க்கையில் தேவன் அனுமதித்துள்ள தாக்கத்தை நாம் எப்படிப் புரிந்துகொள்ளவேண் டும்? துன்புறுத்தப்படல், அரசியல் குழப்பம், கொள்ளை நோய்கள், இயற்கைப் பேரிடர் போன்றவை நிகழும்போதெல்லாம், கிறிஸ்தவர் களது தனி வாழ்விலும் கூட்டு வாழ்விலும் முன்னேற்றத்திற்கான மாற்றங்களே ஏற்பட்டுள்ளன. இதுதான் உலகச் சரித்திரத்திலும் சபைச் சரித்திரத்திலும் நாம் நெடுகவே காண்பது. படிப்பிக்கும் நோக்கமின்றித் தேவன் தமது பிள்ளைகளின் வாழ்வில் எதையும் அனுமதிப்பதில்லை (சங் 119:71; ரோ 8:28). நிலைமை மோசமாகிய பின்னரே அது முன்னேறும் என்பதே ஆக்கபூர்வமான மாற்றத்திற்கு வழிவகுக்கும் சூத்திரம். உலகெங்கிலும் காலாகாலமாய் அறிந்து கொள்ளப்படுவது இதுவே. இக்கட்டு வருவது நல்லதுதான்; அப்பொழுதுதான் கட்டாயம் மாற்றம் வரும்.



1963 மே மாதம் 6-மாத ஆன்மீகக் குழந்தையாயிருக்கும்போது முதன்முறையாகத் தேவன் என்னைப் பிரசங்கபீடம் ஏறச் செய்தார். அது விருதுநகரிலுள்ள புனித யோவான் CSI ஆலய ஞாயிறு ஆராதனை. நான் இறையியல் கல்லூரியில் பயிலாதவன் எனினும் கடந்த 55+ ஆண்டுகள் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் ஏறியிறங்கிய பிரசங்கபீடங்கள் அதிகம் என்றே சொல்லவேண்டும். பிறப்பின்படி நான் ஒரு பாவி, மறுபிறப்பின்படி ஒரு கிறிஸ்தவன், பின்னணியின்படி ஆங்கிலிக்கன், அனுபவத்தின்படி பெந்தெகொஸ்தே, உபதேசத்தின்படி பைபிள் சார்ந்தவன். எந்தச் சபைப் பிரிவையும் சாராமலும், சபைப் பிரிவுகளுக்கு அப்பாற்பட்டும் நிற்கும் எனது நிலையினால், புராதனச் சபைகள் மற்றும் சுயாதீனச் சபைகளிலும், அடிப்படைவாதிகள் மற்றும் இதவாதிகள் நடுவிலும், பெந்தெகொஸ்தேயினர் மற்றும் பெந்தெ கொஸ்தேயல்லாதோர் வட்டாரங்களிலும், ஏன் ரோமன் கத்தோலிக்கர் நடுவிலும்கூட, எனக்கு ஏராளம் வாசல்கள் திறந்தன. இதனால், வெள்ளையர், கறுப்பர், மாநிறத்தார் மற்றும் மஞ்சளினத்தாரை அடக்கியுள்ள பல்வேறு சபைகள் மற்றும் சங்கங்களின் தலைவர்களோடு நெருங்கிப் பழகிப் பல காரியங்களைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அடுத்த அழைப்பை விரும்பி ஒருபோதும் நான் பிரசங்கபீடத்தில் திருவசனத்தைக் கலப்படம் பண்ணவில்லை என்று உண்மையாய்ச் சொல்லுகிறேன்.

கடந்த 75 நாட்கள் ஊரடங்கின்போது பல்வேறு சபைகள் அதனை எவ்வாறு எதிர்கொண்டன என்று உன்னிப்பாய்க் கவனித்துக்கொண்டி ருந்தேன். வழக்கம்போல் எனது பகுத்தாய்வு பொருள் சார்ந்ததாகவே இருந்தது. நான் தீர்க்கனும் அல்ல, தீர்க்கனின் மகனும் அல்ல, ஆனாலும் நான் சொல்வது, ''இந்நூற்றாண்டிற்கே புதிதான இந் நெருக்கடி ஒரு முன்ருசிதான்; அதிமோசம் இனிதான்'' (மத் 24:8). சபைகளின் குறைபாடுகளை இவ்வூரடங்கு வெளிக்கொண்டு வந்துள்ளது. நமது தோல்விகளிலிருந்து நாம் கற்றுக்கொள்ளத் தவறினால், தோல்வியடையத்தான் கற்றுக்கொள்ளுகிறோம். ***''திருச்சபைகளில் திருத்தங்கள்''*** எனும் இக்கட்டுரை நாம்

எப்பகுதிகளிலெல்லாம் மாறி, எதிர்காலத்தைத் திருமறைப்பாணியில் சந்திக்கலாம் என எடுத்துரைக்கிறது. இதனைத் திறந்த மனதுடனும் திறந்த மறைநூலுடனும் வாசிக்கும்படிக் கிறிஸ்தவர்கள், குறிப்பாகத் தலைவர்கள், அனைவரையும் வருந்திக் கேட்கிறேன்.

## 1. பைபிள் கல்லாமை

திருவசனம் கற்கும் பாடசாலைகளாகவே நமது சபைகள் திகழவேண்டும். திருமறையைத் திரிபறக் கற்றுக்கொள்வதற்காக 12-வயது சிறுவன் இயேசு திருமறைப் போதகர்களுடன் தேவாலயத்தில் மூன்று நாட்கள் செலவிட்டார் (லூக் 2:46). தமது இகவாழ்வின் முடிவில் அவர் சொன்னது: ''நான் தினமும் உங்கள் நடுவில் அமர்ந்து தேவாலயத்தில் உபதேசம்பண்ணிக்கொண்டிருந்தேன்'' (மத் 26:55ஆ; லூக் 19:47). திருச்சபையில் அனைத்துச் செயல்பாடுகளுக்கும் மேலாகத் தலையோங்கி நிற்கவேண்டியது திருவசனத்தைப் பிரசங்கித்தலும் உபதேசித்தலுமே. நடைமுறையில் சொன்னால், ஞாயிறு ஆராதனையில் குறைந்தது 50 சதவீத நேரம் திருவசனப் போதகத்திற்கே ஒதுக்கப்படவேண்டும் (நெகே 9:3). ஒரு கதையையும் சேர்த்து 20-நிமிடப் பிரசங்கங்கள் மட்டுமே கேட்கும் சபையார் வாரம் முழுவதும் பட்டினியால்தான் வாடுவர். அறிவிப்புகளுக்குத்தான், ஐயோ, எவ்வளவு நேரம்! காணிக்கை விபரங்களையும், கொடுத்தோர் பெயர்களையும் வாசிக்கும் துர்ப்பழக்கம் ஒழிக! வெளிப்படைத் தன்மைக்கான கணக்கொப்புவிப்புகளைத் தலைவர்கள் கூடுகையில் சமர்ப்பிக்கலாமே. சபைகளுக்கு இறைச்செய்திகளுடன் பவுலடியார் வரும்போது காணிக்கை சேகரிப்பு இருக்கக்கூடாது என்றுகூட அவர் சொன்னாரே (1 கொரி 16:1,2). சபையினரின் மனதையும் இதயத்தையும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு திருவசனத்தால் நிரப்புங்கள். யோசேப்பின் காலத்து ஏழாண்டு செழிப்பு அடுத்து வரவிருந்த ஏழாண்டு பஞ்ச காலத்திற்கான ஆயத்தத்திற்காகவே (ஆதி 41:29,30).

ஊரடங்கு காலத்தில் பல்வேறு சபைகள் நடத்தும் ஆராதனைகளைப் பார்க்க அவ்வப்போது ஞாயிறு முற்பகல் வேளைகளில் தொலைக் காட்சியைப் பார்த்தேன். விசுவாசிகள் தாங்களாகவே, தனித்தும் குடும்பமாகவும், திருவசனத்தைப் படிப்பதும் அர்த்தப்படுத்துவதும் எப்படி என்று ஒரு பாஸ்டராவது சொல்லிக்கொடுக்காதது என்னை வெகுவாய்ப் புண்படுத்தியது. இக்காலக்கட்டத்தில்தான் பல்வேறு ஆராய்ச்சி வேதாகமங்களும், ஆராய்ச்சி நூல்களும் அறிமுகம் செய்யப்பட்டிருக்கவேண்டும். இவையெல்லாம் இப்பொழுது இணையதளங்களில் உண்டே! தாங்களாகவே திருமறையைக் கற்றுக்கொள்ளும் வழிமுறைகளைச் சபை மக்களுக்குச் சொல்லிக் கொடுத்தால் மட்டுமே, இதிலும் கடுமையான, நீண்ட ஊரடங்கு வந்தால் அதற்கு அவர்கள் போதுமான அளவு ஆயத்தப்படுத்தப் பட்டிருப்பார்கள். எப்படி என்று தெரியாததாலேயே கிறிஸ்தவர்களில் அநேகர் வீட்டில் உட்கார்ந்து வேத ஆராய்ச்சி செய்வதில்லை. பிரிய பாஸ்டர்மாரே, உங்கள் விசுவாசிகள் யாவரையும் பெரோயர் போல மாற்றிடுங்கள்! (அப் 17:10,11). பள்ளிகளிலேயே அவர்களை வைத் திராமல் கல்லூரிகளுக்கு அனுப்பிவையுங்கள்.

வார நாட்களில் நடக்கும் வேதபாட வகுப்புகளுக்கு அநேகர் வரு வதில்லையென்று ஒருவர் சொல்வது எனது காதுகளில் விழுகிறது. அதற்குப் பரிகாரம் என்ன தெரியுமா? ஞாயிறு ஆராதனைக்குத்தானே மக்கள் கூட்டங்கூட்டமாய் வருகிறார்கள், அப்பொழுது அவர்களுக்குத் திடவுணவு கொடுத்துவிடுங்கள். இது எளிய தத்துவம் அன்றோ?

புராதனச் சபை ஆராதனைகளில், பழைய ஏற்பாட்டில் ஒன்று, புதிய ஏற்பாட்டில் ஒன்று என முதல் பாடம், இரண்டாம் பாடம் என்றெல்லாம் திருமறைப் பகுதிகள் வாசிக்கப்படும் பழக்கத்திற்காய்த் தேவனைத் துதிக்கிறேன். துர்ப்பாக்கியமாக, சுயாதீனச் சபைகளும் பெந்தெகொஸ்தே சபைகளும் காலம் போற்றும் இந்நற்பழக்கத்தை அடியோடு விட்டுவிட்டது துக்கம் (நெகே 8:1-3). குளிப்பாட்டிய தண்ணீரோடு பிள்ளையையும் தூக்கியெறிந்துவிட்டீர்களே! இப் பழக்கத்தை மறுபடியும் நமது ஆராதனைகளுக்குள் கொண்டுவரக் கேட்கிறேன். சத்தமாய் பைபிள் வாசிப்பது எப்படியென நமது வாலிபர் நங்கையர் கற்றுக்கொள்ளட்டும் (லூக் 4:16,20; 1 தீமோ 4:13). திரும்பத் திரும்பக் கேட்பதாலேயே விசுவாசம் வருகிறது, வளருகிறது (ரோ 10:17). ஓரிரு சங்கீதங்களை மாறி மாறி வாசித்தால் அது தொழுகையை அர்த்தம் நிறைவுள்ளதாக்கும்.

## 2. சபைகளில் உள்வீட்டுச் சண்டைகள்

கிறிஸ்துவும் சிலுவையும் செய்யாததைக் கரோனா நோய்க்கிருமி செய்துவிட்டது! நம்மெல்லாரையும் ஒன்று சேர்த்து ஆலயங்களுக்கு வெளியேற்றிக் கதவடைத்துவிட்டது. நம்மனைவரையும் ஒருவிதப் பயத்திற்குள்ளும் எச்சரிப்புக்குள்ளும் கொண்டுவந்து நிறுத்திவிட் டது. கமிட்டி அங்கத்தினர்களின் போர்க்களம் மூடப்பட்டதற்காய், தேவா, உமக்கு நன்றி! உடன் சபையாரை முறைத்துப் பார்ப்பது இரு மாதங்களுக்கு மேல் இல்லாதிருப்பது என்னே ஆனந்தம்! பெருமையான பார்வைக்கு இடமில்லாது போயிற்று! தனவான்கள்-தரித்திரர் பாகுபாடு இப்போதைக்காவது காணாமற்போயிற்று (யாக் 2:1-4). உடையலங்கார நடையெல்லாம் எங்கே? அடுத்த ஞாயிறு நீங்கள் ஆலயம் சென்றாலும், இருக்கைகளில் உட்கார்ந்துகொண்டு கிசுகிசு கதை பேசுவதைத் தனிமனித இடைவெளி தடுத்துவிட்டது! துர்நாற்ற வாய்களை முகக்கவசம் அடைத்துவிட்டது! மாய்மாலக் கைகுலுக் கலுக்கோ, வறட்டுப் புன்முறுவலுக்கோ இனி வழியில்லை (எரே 9:8). மக்களை ஒன்றுசேரப்பண்ணுவதில் கொடூரச் சூழல்களுக்கு நிகரில்லை!

நண்பரே, தமது மக்களின் ஒருமனமின்மை போன்று இறையுள்ளத்தைக் கவலைப்படுத்துவது ஒன்றுமில்லை; அப்படியே, அவர்களது ஒருமனம் போன்று அதனைக் களிப்பாக்குவதும் எதுவுமில்லை. தமது பிரதான ஆசாரிய ஜெபத்தில் பிதாவுக்குமுன் இயேசு தமது இதய பாரத்தைக் கொட்டினார் (யோ 17:20,21). நாம் தொழுதுகொள்ளும் ''ஒரே தேவன்'' என்பவரே நம்மெல்லாருக்கும் ''தந்தையானவர்'' என்பதை நாம் இன்னும் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை (1 கொரி 8:6; எபே 4:6). நமது உடன் கிறிஸ்தோருடனுள்ள அன்புக் குறைவு அவர்களை ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகளாகவே பாவிக்கச் செய்கிறது. ''தேவன்'' என்பதையும் ''பிதா'' என்பதையும் சேர்த்துப் பேசும் வசனப் பகுதிகள் நிறையவுண்டு (யோ 6:27; 8:41; ரோ 15:5; கலா 1:1,4; எபே 1:2; 1 தெச 1:1; 2 தீமோ 1:2; முதலியன). லோத்துவுக்கும் தனக்கும்



இடையில் ஏற்பட்ட சச்சரவை எளிய, அன்பான, வார்த்தைகளால் ஆபிரகாம் தீர்த்துவைத்தார்: ''நாம் சகோதரர்!'' (ஆதி 13:8). இனவெறியினால் அமெரிக்கா பற்றியெரிந்துகொண்டிருக்கிறது. தென்னிந்தியச் சபைகள் தங்களது ஜாதி வெறியைப் புதைத்தால்தான் தேவனது இதயம் குளிரும்.

ஊரடங்குக்குப் பின்னர் நமது முதல் ஞாயிறு ஆராதனை ஜூன் 14 அன்று நடைபெறவிருக்கிறது. ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களைக் கூட்டி சனிக்கிழமையன்று ஒப்புரவாகுதல் கூட் டம் (Reconciliation Meet) ஒன்று நடத்தும்படிச் சபை ஆயர்களுக்கு அறிவுறுத்துகிறேன். இது காரியங்களைச் சரிசெய்வதற்கான விவாதத்திற்காய் அல்ல. மாறாக, ஒவ்வொரு உறுப்பினரும் அதை ஒரு ஜெப வேளையாய் எடுத்துக்கொண்டு, பிறருக்கு விரோதமான கசப்புணர்வு மற்றும் பகையுணர்வை, அமைதியாய் அல்லது சத்தமாய், தேவனுக்குமுன் அறிக்கையிடப் பயன்படுத்தவேண்டும். கருத்து வேறுபாடுகள் இருக்கலாம்; ஆனால் அவை பிரிவினையை விளைவிக்கக்கூடாது. ''உடன்பாடு இல்லாதிருக்க உடன்பாடு இருக்கட்டும்'' (Agree-to-Disagree) என்பதே சபைத் தலைமைத்துவ ஒருமனப்பாட்டிற்கு வழிவகுக்கும் இரகசியம். இருதிறத்தார்களுக்கிடையே ஆயர்கள் ஒருபுறச்சாய்வுடன் செயல்பட்டிருந்தால் அதிலிருந்து மனந்திரும்பவேண்டும். ஆலயத்திற்குள் நுழையுமுன் கை கால் கழுவவேண்டும் என்று அரசு கூறியிருக்கிறது. பகைமையினால் இரத்தக்கறை படிந்துள்ள நமது கரங்களைக் கழுவிடுவோம் (ஏசா 1:15,16; 1 யோ 3:15). சபைகளில் நடந்த தேர்தலுக்குமுன் அடுத்தவர்களைக் குறைகூறுவதற்காய் வீடுவீடாய்ப் படியேறிய கால்களைக் கழுவுவோம் (நீதி 6:18; ஏசா 59:7).

சபையிலுள்ள பெண்மணிகளுக்கு ஒரு வார்த்தை: சபையைக் கட்டியெழுப்ப உங்களுக்கு நிறைய ஞானம் உண்டு; அதனைத் தட்டித்தகர்க்கவும் உங்களுக்கு நிறைய பலம் உண்டு (நீதி 14:1). உங்களைப் ''பலவீனப் பாத்திரங்கள்'' என்றழைக்கிறார் அப்போஸ்தலன்

பேதுரு (1 பேது 3:7). ஆனால் ஆடவரை எளிதில் மாற்றிவிடும் திறமையும் உங்களுக்குண்டு (ஆதி 3:6,12). எயோதியாள், சிந்திக்கேயாள் ஆகிய இரு சகோதரிகளுக்கும் இடையிலுள்ள பிரச்னையைத் தீர்த்துவைக்க மூன்றாம் நபர் ஒருவர் தேவைப்பட்டார் (பிலி 4:2,3). பிரிஸ்கில்லாள், திரிபேனாள் மற்றும் பெர்சியாள் போன்ற தேவ பக்தியுள்ள அக்காமார், அம்மாமார், பாட்டிமார் நமது சபைகளில் சமாதானம்பண்ணுகிறவர்களாய்ச் செயல்படவேண்டும் (ரோ 16:3,12). பெண்களைத் தலைமையாய்க் கொண்டுள்ள பல நாடுகள் இந்நோய்ப் பரவலை அதிசீக்கிரம் கட்டுக்குள் கொண்டு வந்து, பொருளாதாரப் பாதிப்பையும் விரைவில் மேற்கொண்டுள்ளன. இதோ அத்தலைவிகள்: Sanna Marin (34), பின்லாந்து; Angela Merkel, ஜெர்மனி; Katrin Jakobsdottir, ஐஸ்லாந்து; Mette Frederiksen, டென்மார்க்; Jacinda Andern, நியூசிலாந்து; Tsai Ing-wen, தாய்வான்.

### 3. தலைமைத்துவச் சவால்கள்

சபை மேய்ப்பர்கள் தங்களைத் தற்பரிசோதனை செய்துகொள்ளவும், அவசரப்படாமல் திருமறையைத் தியானிக்கவும், மன்றாட்டு ஜெபத்தில் தரித்திருக்கவும், குடும்பத்துடன் நன்கு ஐக்கியப்படவும் அவர்களுக்கு நிறைய நேரத்தை இந்த ஊரடங்கு காலம் தந்திருக்கிறது என்பது நிச்சயம். உடலிலும், மனதிலும், ஆன்மீகத்திலும் புத்துணர்வு பெற்றுக்கொள்ளப் போதுமான ஓய்வெடுக்கவும் நல்ல வாய்ப்பு நமக்குக் கிட்டியது. புது வல்லமையோடும் உற்சாகத்தோடும் நமது சபைகளுக்குப் பணியாற்றத் தெம்படைந்துள்ளோம். நம்மில் பலரும் எரிந்துபோகும் நிலையிலிருந்தபோது, இவ்வூரடங்கினால் தேவன் நமக்கு இரங்கி நம்மைக் காத்துக்கொண்டார். இது வேறு தோற்றத்தில் வந்த ஆசீர்வாதம் என்றே சொல்லவேண்டும். பாஸ்டர்மாருக்கு எதிர்காலம் இதுவரையில்லாத அளவு சவால் நிறைந்ததாயிருக்கும். நீங்கள் செய்யவேண்டிய ஒரு சில காரியங்களை மட்டும் இங்கு பகிர்ந்துகொள்கிறேன் —



**(அ)** உங்கள் ஜெப அறையில் தேவன் உங்களோடு பேசும்வரை அவரது பிரசன்னத்தில் காத்திருங்கள் (மத் 10:27). கர்த்தரிடமிருந்து திட்டமான வார்த்தை பெறுவதற்குமுன் பிரசங்கபீடம் ஏறுவது குற்றம். பிரசங்க ஆயத்தத்தில் கவலையீனம் என்பது சபையாரை அவமதிப்பதாகும். நிர்வாகப் பொறுப்புகளைச் சாக்குப்போக்காய்க் காட்டவேண்டாம். விதவைகளைப் பராமரிப்பது கிறிஸ்தவத்தின் அடிப்படைக் கடமைதான். எபிரெய விதவைகளுக்கும் கிரேக்க விதவைகளுக்கும் இடையில் உணவு வழங்குவதில் பாரபட்சம் என்ற குற்றச்சாட்டு எழுந்தபோது, அப்போஸ்தலர்கள் உடனே அப்பொறுப்பைத் தங்கள் தலைமீது போட்டுக்கொள்ளவில்லை. அவர்கள் தங்களை *''இறைவேண்டலுக்கும் இறைவார்த்தைப்பணிக்கும்''* முழுவதுமாய் அர்ப்பணித்துக்கொள்ளும்படி, விதவைகள் பொறுப்பை உண்மையுள்ள எழுவர் வசம் விவேகமாய் விட்டுவிட்டனர் (அப் 6:1-4). அப்போஸ்தலரைவிட நாம் அறிவாளிகளோ? பாஸ்டர் ஐயா அவர்களே, உங்கள் பிரசங்கம் சோகை பிடித்ததாகவும், அரைத்த மாவையே அரைப்பதாகவும் மாறத் துவங்கினால், உங்களை உலுக்க வேண்டிய பொறுப்பு உங்கள் சபையிலுள்ள மூப்பர்களுக்கும் முதிர்ச்சியடைந்த உறுப்பினர்களுக்கும் உண்டு. 7ஆம் அத்தியாயத்திலுள்ள தற்பரிசோதனைக் கேள்விகளைப் பயன்படுத்தி அவ்வப்போது உங்கள் ஆன்மீக நிலையைச் சரிபார்த்துக்கொள்ளுங்கள்.

**(ஆ)** உங்கள் சபையிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினரின் குடும்பத்திற்காகவும் பெயர் சொல்லிக் கிரமமாய் ஜெபியுங்கள். அங்கத்தினர் எண்ணிக்கை அதிகம் என்றால், பட்டியலை உடன் மேய்ப்பர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். தனது ஆடுகளை நன்கு அறியாதவன் ''நல்ல மேய்ப்பன்'' அல்லவே (யோ 10:14). அவன் ஒரு ''கூலிக்காரன்தான்'' (வச 12,13). சபைகளுக்காய்த் திருத்தொண்டன் பவுல் ஏறெடுத்த ஜெபங்களை மனனம் செய்து அவற்றை முழங்காலில் கண்ணீருடன் தவறாது திருவடிகளில் கொட்டுங்கள் (எபே 1:15-23; கொலோ 1:9-11). ஜெபிக்கும் மேய்ப்பர்தான் ஜெபிக்கும் மக்களை எழுப்புவர். உங்கள் குடும்பத்தினரோ சபையாரோ உங்களைத்

தொடர்புகொள்ள முடியாத ஜெப நேரங்களைக் குறியுங்கள். ஜெப அறைக்குள் நுழையும்போது கைபேசியை எடுத்துச்செல்லாதேயுங்கள் (மத் 6:6). ஆன்மீக அனல் தணியவே கூடாது. எல்லா வைபவங்களுக்கும் நேரம் கொடுக்காதீர்கள். அதிமுக்கியமானவற்றில் மட்டும் பங்குபெறுங்கள். பணம் திரட்டும் குழுக்களோடு வீடு வீடாய்ச் சென்றால் உங்களது உயரிய அழைப்பிலிருந்து இறங்குகிறீர்கள் என்றுதான் நான் சொல்லுவேன்.

**(இ)** உள்ளூரிலுள்ள மற்ற ஆயர்களுடன் அவ்வப்போது பேசி நட்புறவு கொள்ளுங்கள். வரும் நாட்களில் ஒருவருக்கொருவர் நாம் அதிகம் தேவைப்படுவோம். இன்றைய அரசு நம்மைக் கழுகுக் கண்களுடன் பார்த்துக்கொண்டிருக்கிறது. ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்வோம்; ஒருவருக்காய் ஒருவர் ஜெபிப்போம். நமது எதிரி மற்ற சபைப்பிரிவுகள் அல்ல; சாத்தான்தான் நம்மெல்லாருக்கும் பொதுவான எதிரி. ஒவ்வொரு சபைப்பிரிவுக்கும் பலங்களும் உண்டு, பலக்குறைவுகளும் உண்டு. எல்லாப் பக்கங்களிலும் நமக்குப் போராட்டங்கள் நிறைந்துள்ள இக்காலத்தில், தனது சகோதரன் அபிசாயிடம் யோவாப் செய்துகொண்ட உடன்பாடுதான் நாம் பின்பற்றவேண்டிய தலைசிறந்த மாதிரி (1 நாளா 19:12). மற்ற ஆயர்களுடன் நீங்கள் ஐக்கியம் வைத்துக்கொள்வது உங்களது ஆன்மீக ஆரோக்கியத்திற்குக் கைகொடுக்கும்; மனத்தளர்வு வராது காக்கும். உங்களூரில் மாதந்தோறும் நடக்கும் ஆயர் கூடுகைகளில் தவறாது பங்குபெறுங்கள். குடும்பத்துடன் செலவிடவேண்டிய தரமான நேரத்தையும் எதற்காகவும் பலியாக்காதீர்கள்.

**(ஈ)** 65 வயதுக்கு மேற்பட்டோரும் 10 வயதுக்குக் கீழ்ப்பட்டோரும் தொழுகைத்தலங்களுக்குள் செல்லக்கூடாது என்பது ஊரடங்குத் தளர்வுக் கட்டுப்பாடுகளில் ஒன்று. ஆலய வளாகத்திலேயே தங்கியிருக்கும் வயதான ஆயர்கள் மாற்று ஒழுங்குகள் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இக்கட்டுப்பாடுகளெல்லாம் பரலோகமே அனுப்பிவைப்பவை என்றே நினைக்கத் தோன்றுகிறது! அடுத்த



வரிசையினரையும் இளைஞரையும் முன்னுக்குக் கொண்டுவர வயதான பாஸ்டர்மாருக்கு என்னே வாய்ப்பு! அல்லேலூயா! நீங்கள் ஒரு சுயாதீன அல்லது பெந்தெகொஸ்தே சபையின் மேய்ப்பராயிருந்தால் உங்கள் சபையில் முதிர்ச்சியும் அனுபவமும் மிகுந்த நெடுங்கால உறுப்பினர்களை ஓரங்கட்டிவிட்டு உங்கள் மகனையே தலைமைப் பொறுப்புக்குக் கொண்டுவரத் துடிக்காதீர்கள். வாரிசு அரசியல் என்பது புதிய ஏற்பாட்டு முறையல்ல. தீமோத்தேயுவும் தீத்துவும் பவுலுக்கு இரத்த உறவினர் அல்ல. பவுலடியார் சுத்தமான யூதன். தீமோத்தேயு அரை யூதன்; ஏனெனில் அவனது தாய் யூதப் பெண், தகப்பன் கிரேக்கன் (அப் 16:1). தீத்துவோ யூத குலத்தையே சேராதவன் (கலா 2:3). இவ்விரு வாலிபரும் ''முதிர்வயதுள்ள'' பவுலுக்கு ''விசுவாசத்தில்தான்'' குமாரர் (1 தீமோ 1:2; தீத்து 1:1; பிலே 8). நமது சபைகளில் செத்தவைகளும் செத்தைகளும் குவிந்துகிடக்கின்றன. இவற்றை வெளியே அகற்ற வாலிபர் தேவை (அப் 5:6,9,10). அவர்கள் வேகமாய்ச் செயல்படுவர்! கானானுக்குள் நுழைவதை மோசேக்கு தேவன் ரத்து செய்தபோது அவர் மறுவார்த்தை பேசாது இறைச்சித்தத்தை ஏற்றுக்கொண்டார். அவர் உடனே செய்தது, அடுத்த தலைவன் வேண்டி ''ஜெபம்'' (எண் 27:15-17). கர்த்தரிடமிருந்து வந்த உடனடிப் பதில், யோசுவா எனும் ''வாலிபன்'' (வச 18; யாத் 33:11). லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர் மோசே; எப்பிராயீம் கோத்திரத்தைச் சேர்ந்தவர் யோசுவா (யாத் 2:1,2; 6:19,20; எண் 13:8).

சபைத் தலைமைத்துவத்தில் செய்யப்படவேண்டிய மாற்றங்கள் இன்னும் பலவுண்டு; அதனை இக்கட்டுரையில் அடக்க முடியாது.

### 4. வெற்றுச் சடங்காச்சாரங்கள்

ஆலயங்கள் மூடப்பட்டதையடுத்து, தொலைக்காட்சி ஆராதனைகள் நடத்திய மேய்ப்பர்கள் தங்கள் சபையாரை வீட்டிலேயே குடும்ப ஜெபம், குடும்பத் தொழுகை மற்றும் குடும்பத் தியானம் செய்யும்படி ஊக்குவித்தனர். அபாரம்! குடும்பமாக அப்பம் பிட்கவும் ஊக்குவிக்காதது ஏனோ? எதற்குப் பயந்தார்கள் என்று தெரியவில்லை. மக்கள்மீது

பிடிப்பு போய்விடுமே என்ற அச்சமோ? ஆதிச்சபையில் ''வீடுகள் தோறும்'' விசுவாசிகள் அப்பம் பிட்கவில்லையோ? (அப் 2:46). 3000 விசுவாசிகளுக்கு 12 அப்போஸ்தலர் திருவிருந்து நடத்தியிருப்பது சாத்தியமா? (வச 41). தலா 250 விசுவாசிகள் கூடக்கூடிய அறைகள் எந்த வீட்டில் இருந்திருக்கும்? புதிய ஏற்பாட்டின் இந்த எளிமையை நாம் எங்கே அடகுவைத்தோம்? ஊரடங்கு காலத்தின்போது வீடுகளில் குடும்பமாக அப்பம் பிட்குதலை நீங்கள் ஊக்குவித்திராவிடில், விசுவாசிகள் ''விரும்பியபோதெல்லாம்'' கர்த்தர் வருமளவும் அவரது மரணத்தை அறிவிப்பதற்காய், அவரை இச்செயல்பாட்டின் மூலம் சிறப்பாய் ''நினைவுகூரும்'' சிலாக்கியத்தை நீங்கள் அவர்களிடமிருந்து பறித்துவிட்டீர்கள் என்றே பொருள் (1 கொரி 11:24-26). ''திருமறைத் தியானம், ஐக்கியம், ஜெபங்கள்'' ஆகியவை போலவே ''அப்பம் பிட்குதலும்'' சம முக்கியத்துவம் பெற்றது. இந்நான்கு ஆன்மீகப் பயிற்சிகளிலும் நாம் ''உறுதியாய் (இடைவிடாது) தரித்திருக்க வேண்டும்'' (அப் 2:42).

''கொடுப்பது'' மற்றும் ''வாங்குவது'' என்பது அப்பம் பிட்குதலுக்குப் புதிய ஏற்பாடு போதிக்கும் ஒழுங்குமுறை அல்ல. அப்பம் மற்றும் ரசம் எனும் அடையாளச் சின்னங்கள் தமது ''சொந்த'' உடலையும், தமது ''சொந்த'' உதிரத்தையும் குறிப்பிட்டதாலேயே, இயேசு அவற்றைக் ''கொடுத்தார்'' (மத் 26:26-28; 1 கொரி 11: 23-25). சபையாருக்காய்ச் சிலுவையில் அறையப்படாத எந்தப் பாஸ்டரும் இந்த இடத்தை எடுக்க முடியாது (1 கொரி 1:13). அது ஒரு ''பந்தி,'' ''பிரசாதம்'' அல்ல. அது ''நாம்'' பிட்கும் அப்பம்; அது ''நாம்'' ஆசீர்வதிக்கும் பாத்திரம் (10:16,17). இயேசுதாமே பாத்திரத்தைத் தமது சீடரிடம் கொடுக்கும்போது சொன்னது: ''இதை நீங்கள் வாங்கி, உங்களுக்குள் பங்கிட்டுக்கொள்ளுங்கள்'' (லூக் 22:17). சாமி வரங்கொடுத்தாலும் பூசாரி கொடுக்கமாட்டானாம்! மட்டுமல்ல, நமக்குப் ''பீடம்'' (altar) கிடையாது; மேசை (table) மட்டுமே உண்டு (லூக் 22:21,30; 1 கொரி 10:21). பெயர் சொல்லப்படாத ஒருவரது வீட்டிலேயே இயேசு தமது சீடருடன் பஸ்கா புசித்து, ''கர்த்தரது பந்தி'' என்பதனை நியமித்தார் (மத் 26:18-20; மாற் 14:13-17). அப்பம் பிட்குதலில் ஆச்சாரமே இருக்கக்கூடாது என்பதற்காகவே ஆண்டவர் இந்த எளியச் சூழலைத் தெரிந்தெடுத்தார். இந்த வரிகளையெல்லாம் எழுதுவதால் நான் குளவிக்கூட்டைக் கலைக்கிறேன் என்பது எனக்குத் தெரியும்! இதனால் எனக்கு நண்பர்கள் குறைவர்; எதிரிகள் பெருகுவர்! (கலா 4:16).



கர்த்தரது பந்தி குறித்து ஏராளம் கேள்விகள் உண்டு. முதலாவது அப்பமா, ரசமா? (லூக் 22:17-19; 1 கொரி 10:16). கோதுமை ரொட்டியா, அரிசி இட்லியா? திராட்சை ரசமா, மாம்பழ ரசமா? தினந்தோறுமா, வாரந்தோறுமா, மாதந்தோறுமா? (அப் 2:46; 20:7). ''இராப்'' போஜனம் காலையிலா, மதியத்திலா, மாலையிலா? இப்படிப் பல! *''திருமறைப்பாணியில் திருவிருந்து'' (Biblical Breadbreaking)* என்றொரு விரிவான கட்டுரையில் இவற்றை விவாதிக்க விரும்புகிறேன். இப்போதைக்கு, இதோ சில எளிய வழிமுறைகள். ஆலயங்கள் திறக்கப்பட்டாலும் திருவிருந்து வேண்டாமென்று அரசு அறிவுறுத்தியுள்ளது. இவ்விதக் கட்டுப்பாடுகள் முற்றிலும் நீக்கப்படும் வரை, கிறிஸ்தவர்கள் ஒரு குடும்பமாக, அல்லது சில குடும்பங்கள் சேர்ந்து ''வீட்டுச் சபையாக'' (House Church) வீடுகளிலேயே அப்பம் பிட்கலாம். பங்கேற்போர் மறுபடி பிறந்திருக்கவேண்டும். *(''வீட்டுச் சபைகள்''* என்ற முந்தைய அத்தியாயத்தை வாசியுங்கள்). அப்பத்தையும் பாத்திரத்தையும் ஆசீர்வதித்தபின், உங்களுக்குள் அவற்றைக் கடத்திப் பகிர்ந்துகொள்ளுங்கள். சபைகளில் திருவிருந்து நடத்தப்படுவது தொடங்கிய பின்னர், இந்த அடையாளச் சின்னங்களை பாஸ்டர் ஆசீர்வதித்து மூப்பர்கள் மூலம் அவற்றைச் சபையார் இருக்கைகளுக்கு அனுப்பிவைக்கலாம். ஒவ்வொருவரும் ஒரு சிறு துண்டையும், ரசக் குப்பியையும் எடுத்துக்கொண்ட பின்னர், ''இப்பொழுது கர்த்தரை நினைவுகூர்ந்து நாமெல்லாரும் ஒன்றுபோல் புசிப்போம், குடிப்போம்'' என்று பாஸ்டர் சொல்லலாம். 1000 பேரடங்கிய சபையாயிருந்தாலும் எல்லாம் பத்து நிமிடங்களில் முடிந்துவிடும்! ஆயரையும் சேர்த்து, அனைத்து விசுவாசிகளும் உடன் ஆசாரியர்களே (1 பேது 2:9; யாத் 19:6;

வெளி 1:6; 5:10). 2017 மார்ச் மாதம் திருச்சபைச் சீர்திருத்தத்தின் (Protestant Reformation) 500ஆம் ஆண்டு நிறைவின்போது நான் வெளியிட்ட *''நான் நிற்கும் கன்மலை'' (Here I Stand!)* எனும் 64-பக்கக் குறுநூலைக் கட்டாயம் வாசியுங்கள்.

இயேசு கிறிஸ்துவின் சபை உதறித் தள்ளவேண்டிய அர்த்தமற்ற சடங்குகள் இன்னும் ஏராளம் உண்டு. தேவனுக்குமுன் நமது பயபக்தியைச் சடங்குகள் ஆழப்படுத்துவதில்லை; நம்மை அவருக்கு நெருக்கமாகவும் கொண்டுவருவதில்லை; நம்மை மதவாதிகளாய் மாற்றும், அவ்வளவுதான். கிறிஸ்தவமோ ஒரு மதம் *அல்லவே.* ஆன்மீகத்தைவிட (spirituality) ஆச்சாரமே (ceremonialism) அதிகரித்துவிட்டதுதான் சபையின் சோகநிலை. உப்பானது உப்புத் தன்மையை இழந்த பின்னரும் வெண்மை ''நிறம்'' இருக்கும், படிக ''வடிவம்'' இருக்கும், தோற்றத்தில் ''மினுக்கம்'' இருக்கும், ஆனால் ''குணம்'' இருக்காது. இதுவே நம்மையும் பிறரையும் ஏமாற்றும் நமது பரிதாப நிலை!

## 5. தளரும் தானதர்மம்

கரோனா நோய்த்தொற்றுப் பரவலால் சரிந்துள்ள பொருளாதாரம் சமுதாயத்தின் அடிமட்டத்தினரையே வெகுவாய்ப் பாதித்துள்ளது. எவ்வித இக்கட்டான காலத்திலும் நடப்பது இதுவே. நசுங்கிக் கிடப்போருக்கு உதவ அரசும் அரசு சாரா சேவை நிறுவனங்களும் நன்கொடைகள் கேட்டு நிற்கின்றன. கோடீஸ்வரர்கள், தொழிலதிபர்கள், ஜமீன்தார்கள், நடிகர்கள் போன்ற வசதிபடைத்தோர் ஏராளம் கொடுத்துக்கொண்டிருக்கின்றனர். இதற்காய்த் தேவனைத் துதிப்போம். ஆனாலும், தானதர்மம் என்று வரும்போது திருச்சபைதான் முதலிடம் எடுக்கவேண்டும்; ஏனெனில் நமது தேவன்தான் ஏழைகளின் தேவன். ஏதோவொரு வகையில் ஒவ்வொரு சபையும் தானதர்மம் செய்துவருகிறது. ஆனாலும் பைபிளில் போதிக்கப்பட்டுள்ள தேவனது எதிர்பார்ப்பை நாம் கொஞ்சமும் எட்டவில்லை.



நமது சபை பட்ஜெட்டில் தானதர்மம்தான் முதலிடம் பெற வேண்டும். தரித்திரருக்கு 50 சதவீதம் கொடுத்துவிடத் திருமுழுக்கினன் யோவான் வலியுறுத்தினார் (லூக் 3:10,11). தனது சொத்து அனைத்திலும் 50 சதவீதத்தை எளியவருக்குக் கொடுத்துவிடச் சகேயு வாக்களித்தபோது இயேசு அகமகிழ்ந்தார் (19:8,9). செல்வந்தனாகிய வாலிபன் ஒருவனிடம் அவனது உடைமைகள் யாவற்றையும் விற்று 100 சதவீதத்தையும் தரித்திரருக்குக் கொடுத்துவிட்டுத் தம்மைப் பின்பற்றிவர இயேசு கூறினார் (18:22). முதல் தலைமுறைக் கிறிஸ்தவர்கள் தங்களது நிலபுலன்களையும் உடைமைகளையும் விற்றுக் கிடைத்த பணத்தில் 100 சதவீதத்தையும் இல்லாதோரோடு பகிர்ந்துகொள்ளக் கொண்டுவந்தனர். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கான மறுக்கமுடியா அடையாளமாய் அவர்களிடம் காணப்பட்டது இதுவே (அப் 2:4,45). ''கொடிய உபத்திரவத்தில்'' இருந்த மக்கெதோனியச் சபைகளது ''மிகுந்த உதாரத்துவத்தையும்,'' தங்களது ''திறனுக்கு மிஞ்சி'' அவர்கள் கொடுத்ததையும் பவுலடியார் புகழ்ந்து பேசினார் (2 கொரி 8:1-3). திருவிவிலியத்தில் உள்ள இவ்வித அறிவுறுத்தல்கள் மற்றும் எடுத்துக்காட்டுகளைக் கவனிக்குங்கால், ஒவ்வொரு சபையும் தனது மொத்த வருமானத்தில் 50 சதவீதத்தை ஏழை எளியோருக்கென ஒதுக்கிவிட்டாலும் அது குறைவுதான்! கரோனா நச்சுக்கிருமியினால் தேவன் நம்மைச் சிட்சித்த பின்னரும் தங்களது செலவுக் காரியங்களில் இம்மாற்றத்தைக் கொண்டுவராத சபையைப் பார்த்து இயேசு கண்ணீர் விடுவார்.

நமது அனாதை இல்லங்களுக்கு அமெரிக்காவும் ஜெர்மனியும் உதவி செய்யத் தேவையில்லை. இந்தியக் கிறிஸ்தவக் குடும்பம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அனாதைக் குழந்தையைத் தாங்கும் பொறுப்பெடுத்துக்கொண்டால் ஆதரவு தேவைப்படும் அனாதைகள் இல்லாது போவர்! இதே தத்துவத்தைத் திக்கற்றோர், மனவளர்ச்சி குன்றியோர், மாற்றுத் திறனாளிகள், மற்றும் இவர்கள் போன்றோரைப் பராமரித்து வரும் இல்லங்களுக்கும் செயல்படுத்தலாம். நம்மைவிட ஏழ்மையிலிருக்கும் நாடுகளுக்கும் நாம் உதவி அனுப்பலாம்.

பெற்றுக்கொள்வதைவிடக் கொடுத்துவிடுவதுதானே பேராசீர்வாதம்? (அப் 20:35ஆ). ஒவ்வொரு ஞாயிறு ஆராதனை முடிவிலும் ஆலய வாசலில் காத்திருக்கும் பிச்சைக்கார சகோதர சகோதரிகளுக்கு வயிறார உணவளியுங்கள். அவர்களுக்கு நற்செய்தியும் அறிவித்து மகிழ்வித்து அனுப்பிவையுங்கள். சபை விருந்துகளில் முதலாவது இரப்போரும் இல்லமற்றோரும் சாப்பிடட்டும். மிஞ்சியதைச் சபையாராகிய நாம் பகிர்ந்துண்ணலாம். நமது கொழுப்புச் சத்தும் (cholesterol) சர்க்கரைச் சத்தும் (sugar) குறையும்! நான் சொல்லுவது நடைமுறைக்கு ஒவ்வாததாய்த் தெரிந்தால், தம்மை விருந்துக்கு அழைத்த ஒருவனிடம் இயேசு கூறியதை வாசித்துப் பாருங்கள் (லூக் 14:12-14).

TV ஆராதனைகளில் பிரசங்கிக்க எழுந்து ஒரு வசனம்கூட சொல்லுவதற்குமுன் தசமபாகம் மற்றும் காணிக்கை குறித்துப் பாஸ்டர்மார் பேசுவது குமட்டுகிறது! காசேதான் கடவுளாடா? எப்பொழுதுதான் கிறிஸ்தவம் இவ்வளவு பின்மாற்றமடைந்து வணிகமயமானதோ? தசமபாகம் என்பது கட்டாயம் என்று புதிய ஏற்பாட்டில் போதிக்கப்படவில்லை; ஆனால் அது ஆரோக்கியமான பழக்கம் (2 கொரி 9:5,7). இப்படியிருக்க, தசமபாகம் ''எங்கு'' செல்லவேண்டும் என்று அறிவுறுத்தல்கள் கிடையாது. தசமபாகத்தை வலியுறுத்துவதற்காய் அடிக்கடி மேற்கோள் காட்டப்படும் திருவசனம், மல்கியா 3:10, ''எனது ஆலயத்தில் ஆகாரம் இருக்கும்படி உங்கள் தசமபாகங்களையெல்லாம் பண்டகசாலைக்குக் கொண்டுவாருங்கள்.'' ஆகாரம் இல்லாத ''நிலமற்ற லேவியர், பரதேசிகள், திக்கற்றோர், விதவைகள்'' ஆகியோருக்காகத்தான் இச்சேமிப்பு; ஏனெனில் அவர்களுக்கு நிரந்தரமான வருமானம் கிடையாது (உபா 14:28,29). எளியோருக்குக் கொடுப்பது எம்பெருமானுக்குக் கடனளிப்பதாம் (நீதி 19:17). பழைய ஏற்பாட்டு யூதனே பத்திலொன்றைத் தேவனுக்குக் கொடுப்பானானால், ''மேலான'' உடன்படிக்கையின் கீழிருக்கும் கிறிஸ்தவன் அவனை எவ்வளவாய் மிஞ்சவேண்டும்! (எபி 7:22; 8:6). உங்களது உள்ளூர்ச் சபையைத் தாங்கிய பின்னர், பணத்தை எளியோருக்கும் உங்களுக்குப் பிரியமான ஊழியங்களுக்கும்



பகிர்ந்தளியுங்கள். *''உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடம் தேவன் பிரியமாயிருக்கிறார்''* — இது தானதர்மம் குறித்துப் பேசியபோது அப்போஸ்தலன் பவுலின் கூற்று (2 கொரி 9:1,7,9). நாமோ நமது பீடங்களை ஜோடிக்கவும், தரைகளுக்கு விரிப்பு போடவும், சபையார் இருக்கைகளுக்கு மெத்தை தைக்கவும், சுவர்களுக்கு நிறம் மாற்றவும், ஆலயத்திற்குக் குளிர் வசதி செய்யவும் பணம் திரட்டவே இவ்வசனத்தைப் பயன்படுத்துகிறோம்; ஒழுக்கு வீட்டிலிருப்போருக்குக் கூரை போட்டுத்தரமாட்டோம், குளிரில் நடுங்குவோருக்குக் கம்பளம் கொடுக்கமாட்டோம்; என்னடா கிறிஸ்தவம் இது? நான்கு ஆராதனைகளில் ஒன்றிலாவது தானதர்மம் குறித்துப் பிரசங்கிக்குமாறு சபைப் போதகர்களை வருந்திக் கேட்கிறேன். உங்கள் உடன் மூப்பர்கள் மற்றும் மூத்த சகோதர சகோதரிகளைக் கூட்டி, ஆக்கபூர்வமான செயல்பாடுகளைத் திட்டமிடுங்கள். தானதர்மம் எப்பொழுதுமே சபை மூலமாகவே மக்களுக்குச் சென்றடையவேண்டும் என்பதும் கட்டாயமல்ல. உங்கள் வீட்டு வாசலில் கிடக்கும் லாசருக்குத் தனிப்பட்ட முறையில் பொறுப்பு உங்களுடையதே (லூக் 16:20). காயப்பட்டோர், கவனிப்பாரற்றோர், கதறுவோர் போன்றோருக்கு ஒரு நல்ல சமாரியனாய் நேரடி உதவி செய்யுங்கள் (10:30-35). தனது சொந்தச் செலவில் நாதியற்ற விதவைகளுக்கு ஆடைகள் தைத்து வழங்கிய தொற்காள் போலிருங்கள்; அது சபையின் செயல் திட்டம் அல்ல (அப் 9:36,39).

## 6. வீண் முதலீடுகள்

நிலம், கட்டிடம் போன்றவற்றில் அளவுக்குமீறி முதலீடு செய்வது தேவன் தந்த தரிசனத்திலிருந்து நம்மைத் திசை திருப்பும். கட்டிடங்கள் தேவைதான், ஆனால் களம் விரையவேண்டிய மிஷனரிப்பணிக்கு அவை தடங்கல்கள் ஆகலாம். கிறிஸ்தவத்திற்குள் பாபேலின் ஆவி பரவத் துவங்கியுள்ளது வேதனைக்குரிய காரியம். ஆதிக்கிறிஸ்தவர்கள் இப்போக்கிற்குத் தங்களை விலக்கிக் காத்துக் கொண்டனர். 3000 அல்லது 5000 விசுவாசிகள் ''பத்தில் ஒன்று'' கொடுத்திருந்தாலே

எவ்வளவு பணம் சேர்ந்திருக்கும்! இத்தனை ஆயிரங்கள் ''பத்தில் பத்து'' கொடுத்தார்களே! ஆதிச்சபைக்கு இவ்வளவு பணம் சேர்ந்திருந்தும், வெகுவாய்ப் பெருகி வந்த விசுவாசிகள் கூடுவதற்கான பிரமாண்ட ஆலயக் கட்டிடம் கட்டவேண்டுமென்று அவர்களுக்குத் தோன்ற வில்லையே (அப் 2:41; 4:4; 2:45; 4:32). அவர்களுக்குக் காலி நிலம் இல்லையோ? கட்டிடப் பொறியாளர் இல்லையோ? ''சலனப் பிரசங்க பீடங்களே'' (mobile pulpits) அவர்களது நிறுத்த முடியாத வளர்ச்சியின் இரகசியம்! ''செங்கற்கள்தான் நம்மைக் கொன்றன'' என்பது சபைச் சரித்திராசிரியர் ஒருவரது கூற்று!

நான் நெடுகவே சொல்லி வருவது: ''இந்தியா போன்றதொரு நாட்டில் தலா 1000 பேர் அமரக்கூடிய ஐந்து ஆலயக்கட்டிடங்களே 5000 பேர் அமரக்கூடிய ஒரே கட்டிடத்தைவிடப் பாதுகாப்பானது. ஒரு கட்டிடத்தைக் குண்டு வைத்துத் தகர்ப்பதைவிட ஐந்து கட்டிடங்களை இடித்துத்தள்ளுவது கடினம். மட்டுமல்ல, நான்கு புதிய தலைவர்களும் எழுவர்.'' யுகத்தின் இறுதிக்கட்டத்திற்குள் வந்துள்ள நாம், பணத்தை அதிகமதிகமாய்ச் சொத்துக்கள் மீதல்ல, மக்கள்மீதே நேரடியாய் முதலீடு செய்யவேண்டும். எளிய கட்டிடங்கள் போதும். (நான் ஒரு கட்டிடப் பொறியியலர்!) தமிழகம், கேரளம் மற்றும் ஆந்திரம் ஆகிய மாநிலங்களிலுள்ள பாஸ்டர்மாரும், பிரசங்கிமாரும் தங்கள் பணத்தை வட மாநிலங்களிலுள்ள மிஷனரிப் பணிக்களங்களில் ஆலயங்கள், பள்ளிகள், மருத்துவ மையங்கள் போன்றவை கட்டுவதற்குச் செலவிடும்படிக் கெஞ்சிக் கேட்கிறேன். நம்பத் தகுந்த நிறுவனத் தலைவர்களுடன் உங்களுக்குத் தொடர்பு ஏற்படுத்தித் தர நான் ஆயத்தம்.

## 7. உபதேசத் தடுமாற்றங்கள்

இவ்வளவு நவீன உபதேசங்கள் முளைத்தெழும்பியதை வேறெந்தத் தலைமுறையினரும் பார்த்திருக்க மாட்டார்கள். அப்போஸ்தலர் இதைத்தானே முன்னறிவித்தார்கள்? (1 தீமோ 4:1; 2 தீமோ 4:2-4; 2 பேது 2:1-3; 3:1-4; யூதா 17,18). சுத்த சுவிசேஷத்தை வேறெதையும்விடப் பாழாக்கினது ''சுகபோக வாழ்வு உபதேசமே'' (Prosperity Doctrine). செல்வம், படிப்பு, உடல் நலம் இப்படி ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தெய்வம் வைத்திருக்கும் விக்கிரகாராதனைக்காரருக்கும் இவ்வுபதேசம் அதிகம் பிடித்திருக்கிறது. 1971இல் நான் நிறுவிய ஊழியத்திற்கு நாங்கள் ''ஆசீர்வாத'' இளைஞர் இயக்கம் ("Blessing" Youth Mission) என்று பெயரிட்டபோது, உலகிலுள்ள அனைத்துக் குடும்பங்கள், மக்களினங்கள் மற்றும் நாடுகளுக்கு ஓர் ''ஆசீர்வாதமாய்'' இருக்க ஆண்டவர் ஆபிரகாமை ஆசீர்வதித்ததே எங்கள் மனதில் இருந்தது (ஆதி 12:1-3). அவ்விதமே, எசேக்கியேல் 34:26இலுள்ள திருவாக்கு இறைமக்களது ''சுற்றுப்புறங்களை'' ஆசீர்வாதமாக்கவே. இன்றோ, இந்த மிஷனரி நோக்கத்தையே நினைக்காமல், கிறிஸ்தவ ஊழியங்கள் பல தங்களது பெரும்பாலான நிகழ்ச்சிகளுக்கு ''ஆசீர்வாதம்'' என்ற பெயரை எப்படியாவது சேர்த்துவிடுகின்றன! வெறுமனே இனிப்பு தடவிய மாத்திரைகள் ஆன்மீக நோய்களைச் சுகப்படுத்தாது. சபை ஆயர்கள் பலரும் பக்திவிருத்திக்கேற்ற திடமான செய்திகளை ஞாயிறு ஆராதனைகளில் பிரசங்கிப்பதை விட்டு, லூசிபர் எழுதிய இச்சுவிசேஷத்தையே சபையினருக்கு அறிவித்துக்கொண்டிருக்கின்றனர். மதிப்பிற்குரிய பாஸ்டர் அவர்களே, திரள்களைக் கவரும் தந்திரங்களுக்கு ஒருபோதும் பலியாகாதீர்கள். ''திருவசனத்தைப் பிரசங்கியுங்கள்'' (2 தீமோ 4:2அ). அதாவது, கண்டிப்புடனும், தவறுகளைச் சுட்டிக்காட்டியும், அறிவுறுத்தலுடனும் மக்களுக்கு உபதேசிக்க வேண்டும் (வச 2ஆ).

ஒரு ''வெள்ளம்'' போலவே சாத்தான் தனது நச்சு வாயிலிருந்து துர்வுபதேசங்களைக் கொட்டுவான் (ஏசா 59:19). மந்தைக் குணமுள்ள (sheepishness) நமது மக்கள் எளிதில் வஞ்சிக்கப்படுவர். சத்திய ஆவியாகிய தூயாவியானவர் உதவி கொண்டு, கேள்விக்குரிய உபதேசம் எதனையும் எதிர்த்து, கொடி தூக்குங்கள். எருசலேமில் கூடிவந்த சங்கம் போல, உடன் ஆயர்கள் மற்றும் திருமறைப் போதகர்களைக் கூட்டி, துர்வுபதேசங்களை முளையிலேயே கிள்ளிவிடக் கலந்தாலோசியுங்கள் (அப் 15:6). இதன் விளைவாக ஓர் அறிக்கை (Declaration) வெளியிட்டு அனைத்துச் சபைகளுக்கும் அதனை

அனுப்பிவைக்கவேண்டும் (வச 23). இப்படியெல்லாம் செய்யாத தால்தான், சத்துரு புகுந்து விளையாடி ''பரிசுத்தவான்களுக்கு ஒரே முறையாய் ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்தை'' நாசமாக்குகிறான் (யூதா 3).

உங்களது பிரசங்கம் ஒவ்வொன்றிலும் போதுமான உபதேசம் (Doctrine) இருக்கும்படிப் பார்த்துக்கொள்ளச் சபைப் போதகர்களை வேண்டுகிறேன் (2 தீமோ 3:17; தீத் 2:1). பால் குடிக்கும் பருவத்தி லிருந்து புலால் உண்ணும் பருவத்திற்கு விசுவாசிகளை எடுத்துச் செல்லுங்கள் (எபி 5:13,14). பிரசங்கபீடத்தில் வாய்க்கு வந்ததைப் பேசும் பழக்கத்தை அகற்றுங்கள். உங்கள் ஜெப அறையிலும் படிப் பறையிலும் ஆயத்தம்பண்ணிய திட்டவட்டமான குறிப்புகள் (sermon outlines) இல்லாது பிரசங்கபீடம் ஏறாதீர்கள். ''வேதத்தை எப்படித் தியானிக்கவேண்டும்'' என்று மட்டுமல்ல, ''எப்படித் தியா னிக்கக்கூடாது'' என்றும் சபையாருக்குக் கற்றுக்கொடுங்கள். ஒவ் வொரு விசுவாசியையும் ஓர் ஊழியனாய் மாற்றுவதே ஒவ்வொரு ஊழியனின் ஊழியமாகும் (எபே 4:11-13). மேய்ப்பர்-போதகர் என்ற அழைப்புள்ள நீங்கள் உங்கள் சபைக்குள் அப்போஸ்தலரது தரிசனம் (Apostolic vision), தீர்க்கதரிசிகளின் நுண்ணோக்கு (Prophetic insight) மற்றும் சுவிசேஷகரது உற்சாகம் (Evangelistic zeal) ஆகியவற்றையும் கொண்டுவர இவ்வித வரங்களுள்ள தேவ மனிதரை அழைக்க வேண்டும்; அல்லது ஏதோவொரு வகையில் உங்கள் விசுவாசிகளை இவர்களோடு தொடர்புகொள்ள வகைசெய்யவேண்டும். அப்பொழுது தான் உங்கள் ஆடுகளுக்கு ''உள்ளும் புறம்பும்'' நீங்கள் மேய்ச்சல் காட்ட முடியும் (யோ 10:3,9). சபை (Church) என்பது சங்கிலி (clutch) அல்ல! எந்த மனிதனையும் கிறிஸ்துவுக்குள் தேறினவனாய் நிறுத்துவதற்காய் நீங்கள் எடுக்கும் முயற்சி அனைத்தும் பிரதான மேய்ப்பர் வெளிப் படும்போது பாராட்டு பெறும் (கொலோ 1:28,29; 1 பேது 5:2-4). ''கரோனா'' என்பது கிரேக்க மொழியிலும் லத்தீனிலும் ''கிரீடம்'' என்று பொருள்படும்! அது முட்கிரீடம்! பிரதான மேய்ப்பர் உங்களுக்குத் தரவிருப்பதோ ''மகிமையின் கிரீடம்!'' (1 பேது 5:4).



## முடிவு வரிகள்

இன்றிருக்கும் சபை அன்றிருந்த சபை அல்ல. இன்றிருக்கும் சபை இருக்கவேண்டியபடியான சபையும் அல்ல. இக்கட்டுரையில் சொல்லப்பட்டவை தவிர்த்து இன்னும் எத்தனையோ மாற்றங்களும் திருத்தங்களும் சபையில் செய்யப்படவேண்டும். ஆனால் இந்த ஏழும் உடனடியாய்ச் சரி செய்யப்படவேண்டியவை. மிக அதிக எண்ணிக்கையில் சபைகள், சபைப்பிரிவுகள், மிஷனரிச் சங்கங்கள், ஊழியங்கள், கூட்டங்கள் மற்றும் பிரசங்கிமாரைக் கொண்டுள்ள சென்னை நகர்தான் இந்தியாவின் எருசலேம்! இங்கு கட்டுக்கடங்காது கரோனா நோய் பரவி வருவது நமது மனதில் எழுப்பும் கேள்வி: ''இந்நகர்மீது தேவனுக்குக் கடுப்பா, அதற்காய்க் கண்ணீரா?'' இந்தியக் கிறிஸ்தவத்தைவிடச் சென்னைக் கிறிஸ்தவம் வெகுவாய்த் திருமறைப்பாணியிலிருந்து விலகிவிட்டது என்பதே எனது கணிப்பு. இக்கட்டுரையைத் தங்களுக்கும் தங்கள் சபையாருக்கும் சுயபரி சோதனைக்காய்ப் பயன்படுத்திக்கொள்ள ஆயர்களையும் மற்ற தலைவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இருக்கிறபடியே இருப்போம் என்றிருந்துவிடாதீர்கள். எழுந்திருந்து முன்செல்லுவோம்! *''பைபிள் சபை'' (Bible Church)* என்ற விரிவான நூலை 2018 ஏப்ரல் முதல் ஆயத்தம்பண்ணிக்கொண்டிருக்கும் எனக்காய் அதிகம் ஜெபிக்கும்படி வாசக நண்பர்களைக் கேட்கிறேன். வேலை மெதுவாகத்தான் நகரு கிறது, ஆனால் நகர்ந்துகொண்டேயிருக்கிறது. இது கடினமான பாடம் என்பது உங்களுக்குத் தெரியும். சோர்புண்டாக்கும் அம்புகள் என்மீது பாய்ந்தவண்ணமிருக்கின்றன. ஆனாலும் வேலையில் தரித்திருக் கிறேன். நம்மை உற்சாகப்படுத்தும் திருவாக்கு: ''முந்தைய ஆலயத்தின் மகிமையைவிடப் பிந்தைய ஆலயத்தின் மகிமை பெரியதாயிருக்கும்!'' (ஆகாய் 2:9அ).

7 ஏப்ரல் 2020

**12**

# மிஷனரிப்பணி ஆதரவாளர்களுக்கு ...

## To Mission Supporters ...

இந்திய மிஷனரிப்பணி ஆதரவாளர்களே,

அறுவடையின் ஆண்டவரது பெயரால் வாழ்த்துக்கள்! இந்த அகிலவுலகப் பேரழிவிலிருந்து சர்வ வல்ல தேவன் உங்களையும் உங்களுடையவர்களையும் பாதுகாப்பாராக!

இந்திய மிஷனரி இயக்கங்களின் சார்பில் எழுதப்படும் ஓர் அவசர காலக் கடிதம் இது. எல்லாருக்குமே இது இக்கட்டான காலந்தான்; ஆனாலும் தொலைவிடங்களில் தொலைந்துபோனோரைச் சந்தித்து, ஆசீர்வதிப்பதற்காகத் தங்கள் வசதிகளைத் துறந்து, உயிரைப் பணயம் வைத்து முன்சென்றுள்ள மிஷனரிகளே அதிகம் பாதிக்கப்படுபவர்கள். உடல்நலக்கேடு தவிர்த்து, பொருளாதார நெருக்கடி அனைத்து வட்டாரங்களையும் வெகுவாய்ப் பாதித்துள்ளது. இவற்றில் பெருமளவு பாதிப்புக்குள்ளாயிருப்பது மிஷனரி ஊழியச் சங்கங்களாகும். ஏற்கனவே நமது பல நிறுவனங்கள் பண நெருக்கடிக்கு ஆளாகியுள்ளன. நிலைமையைக் கரோனா தொற்றுநோய் இன்னும் மோசமாக்கிவிட்டது. கள நிலையைக் குறித்து நேரடி அறிவுடன் இவ்வரிகளை எழுதுகிறேன். 1971 முதல் 33 ஆண்டுகள் ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தை (BYM) அதின் நிறுவனராகத் தலைமை தாங்கி நான் நடத்திவந்ததை உங்களில் பலரும் அறிவீர்கள். இக்கடிதத்தை வாசிக்கும்போது உங்களோடும் உங்கள் குடும்பத்தினரோடும் தேவன் பேசுவாராக.

நமது மிஷனரி நிறுவனங்கள் பலவற்றிற்கு இருப்புத்தொகை என்று அதிகம் கிடையாது. கைக்கும் வாய்க்கும் என்பதுதான் நிலை. சமீபத்தில்



பெரிய மிஷனரி நிறுவனம் ஒன்று அம்மாதத்தின் 10ஆம் தேதிதான் ஊழியருக்குச் சம்பளம் கொடுத்துள்ளது. கிறிஸ்தவ இல்லங்களைச் சந்தித்துக் காணிக்கை சேகரித்து அனுப்பும் தன்னார்வலர்களையே மாதாந்திர வருவாய்க்காய் நிறுவனங்கள் பெருமளவு சார்ந்திருக்கின்றன. பணம் திரட்டும் இவர்களையெல்லாம் தேசிய ஊரடங்கு முடமாக்கிவிட்டது. 2020 ஏப்ரல் மாதச் சம்பளத்தை ஊழியருக்கு எப்படி அனுப்புவோமோ என்ற கலக்கம் ஊழியத் தலைவர்களுக்கு இல்லாமலில்லை. எலியா குடித்துவந்த ஆறு வற்றவில்லையா? பஞ்ச காலத்தில் ரொட்டியையும் இறைச்சியையும் காகங்கள் தாங்களே சாப்பிட்டுவிடாமல் அவற்றை எலியாவுக்குப் பத்திரமாய்க் கொண்டு வந்தது எனக்கு வியப்புதான்! (1 இரா 17:5-7). கறித்துண்டை ஒரு ''புறா'' கொண்டுவந்திருந்தால் அவ்வளவு ஆச்சரியப்படமாட்டேன்; மாம்சப்பட்சிணியாகிய ''காகம்'' அதை எப்படிக் கொண்டுவந்ததோ? நண்பரே, இவ்விதக் காலங்களில் ''கர்த்தரது காகங்களாய்'' மிஷனரிகளைப் போஷிக்க அவர் உங்களை அழைக்கிறார். வேகமாய் ஆறு வற்றிக்கொண்டிருக்கிறது. எலியா போன்று சுற்றித்திரியும் மிஷனரிகளுக்கு ''ஒரு கலசம் தண்ணீர்'' நீங்கள்தான் தரவேண்டும் (மத் 10:41,42). நீங்கள் ஒரு விதவையாயிருந்தாலும், தமது ஊழியரைப் பராமரிக்கத் தேவன் உங்களை எதிர்பார்க்கிறார் (1 இரா 17:8,9). உங்கள் தேவைகளுக்கே போதுமானது உங்களுக்கு இல்லாதிருக்கலாம். கவலை வேண்டாம், ''முதல் அடை'' தேவனது ஊழியருக்குப் போகட்டும்; உங்கள் தேவைக்கு அவர் செய்யும் அற்புதத்தைக் காண்பீர்கள் (வச 10-16).

தங்களது நிறுவனங்களிலிருந்து வரும் மாதாந்திர உதவித்தொகையையே பெரும்பாலான முன்னணி மிஷனரிகள் சார்ந்திருக்கின்றனர். அனேகரது குடும்பங்களிலிருந்து உதவி எதிர்பார்க்க முடிவதில்லை. களங்களில் புதிதாய் எழுப்பட்ட சபைகளின் விசுவாசிகள் பிரதானமாகப் புறவினத்தாரிடமிருந்து வந்தவர்கள். அவர்களில் அனேகர் பரம ஏழைகள், செல்வம் படைத்த கிறிஸ்தவர்களைக் கொண்ட நகரச் சபையினர் போலல்ல. காயு என்பவருக்கு அப்போஸ்தலன் யோவான்

எழுதிய ஆலோசனை இங்கு பொருத்தமாயிருக்கும்: ''பிரியமானவரே, நீர் அவர்களைத் தேவனுக்கு உகந்த முறையில் அனுப்பிவைத்தால் நலம். ஏனெனில் அவர்கள் புறவினத்தாரிடம் ஒன்றும் வாங்காமல் அவரது பெயரின் பொருட்டுப் புறப்பட்டுப் போனார்கள். எனவே நாம் சத்தியத்திற்கு உடன் வேலையாட்களாயிருக்கும்படி அப்படிப்பட்ட வர்களுக்கு உதவுவது நமது கடன்'' (3 யோ 5-8). தங்களது குமாரர், குமாரத்திகளின் படிப்பு மற்றும் திருமணத்திற்காய்ப் பெரும் தொகை களைத் தங்கள் நிறுவனங்களிலிருந்து முன்பணமாய் வாங்கிக் கொண்டதால் மிஷனரிகளில் பலர்மீது கடன் சுமை நிறைய இருக் கிறது. அத்தியாவசியப் பொருட்களின் விலையுயர்வும் நிலைமையை இன்னும் மோசமாக்கியுள்ளது.

இந்திய மிஷனரி நிறுவனங்களில் பல தென்னகத்திலிருந்து தோன்றியவை. புதிதாய் ஆதரவாளர் பலரைச் சேர்க்கவும், களத் திட் டங்களுக்குப் பணம் திரட்டவும் இவை தங்களது மே மாத வருடாந் திர முகாம்களைச் சார்ந்திருக்கின்றன. இன்றுள்ள நிலையில் இவ்வித வருடாந்திரக் கூடுகைகளை வெற்றிகரமாய் நடத்துவது சாத்திய மாய்த் தெரியவில்லை. அச்சடிப்பதிலும், பட்டுவாடா செய்வதிலும் ஏற்பட்டுள்ள தடங்கல்களினால், ஊழிய முன்னேற்றத்திற்கு அனு கூலமாயிருக்கும் தங்கள் மாதாந்திரப் பத்திரிகைகளின் ஏப்ரல் மாத இதழையும் பல நிறுவனங்கள் அனுப்பிவைக்க முடியவில்லை.

மிஷனரிப்பணி ஆதரவாளர்களில் பெருவாரியானோர் நடுத்தர வருவாயினர்; இவர்களிலும் பலர் வாராந்திர அல்லது இருவாராந்திரச் சம்பளத்தை எதிர்நோக்கியிருப்பவர். இவ்வகையினரது குடும்பங்கள் நெருக்கடியிலுள்ளன. மிஷனரிகளைத் தாங்குவதில் முக்கிய பங்கு வகிக்கும் வணிகர் சமுதாயமும் கடினமான பாதையில் சென்று கொண்டிருக்கிறது. எப்படியிருந்தாலும், தங்களது ''கொடிய தரித் திரத்திலும்'' பரிபூரண சந்தோஷத்துடன் ''மிகுந்த உதாரத்துவமாய்க்'' கொடுத்த மக்கெதோனியக் கிறிஸ்தவர்கள் நமக்குமுன் நிற்கின்றனர் (2 கொரி 8:1-3).



நான் கீழே வரிசைப்படுத்தியுள்ள ஆலோசனைகளைக் கவனமாய்ச் சிந்தித்துப் பார்க்கும்படி எனது உடன் கிறிஸ்தவர்களை வருந்திக் கேட்கிறேன் —

**(1)** பணவுதவி கேட்டு நிறுவனங்களிலிருந்து கடிதங்கள் வரக் காத்திராதேயுங்கள். நீங்கள் வழக்கமாய் அனுப்பும் காணிக்கையை 50 சதவீதமாவது அதிகரித்து வங்கி மூலம் Online transfer பண்ணுங் கள். உங்கள் சேமிப்பிலிருந்து எடுக்கத் தயங்காதிருங்கள். நிரந்தர வைப்பு (Fixed Deposit) ஒன்றினைக் காலிபண்ணலாம். சந்திக்கப் படாதோருக்கும் சபையிலில்லாதோருக்கும் நற்செய்தியைச் சுமந்து செல்வோரைத் தாங்காத பணம் இருந்து எதற்கு? தனது உறுப்பின ரல்லாதோருக்காய்ப் பிரதானமாய்ச் செயல்படவேண்டிய ஒரே சங்கம் திருச்சபைதானே?

**(2)** பணம் இல்லாவிடில், உங்கள் நகை ஒன்றை மிஷனரிப்பணிக் காய் விற்கலாமே. கூடாதா என்ன? இன்றையச் சந்தை நிலவரப்படி நல்ல விலையும் கிடைக்கும். இப்படித்தானே பரலோகில் சொத்து சேர்க்கமுடியும்? (மத் 6:19-21; லூக் 12:33,34). சகோதரிகளே, தங்கள் ''ஆஸ்திகளால்'' இயேசுவுக்கு உதவிவந்த யோவன்னாள் மற்றும் சூசன்னாள் போலாகுங்கள் (லூக் 8:3). தடித்த தங்கச் சங்கிலிகளைக் கழுத்தில் சுமந்து திரியாதீர்கள்; தங்கள் கழுத்தையே முன்னணிப் பணிக்காய்க் கொடுத்துவிடுவோருக்கு அவற்றைக் காணிக்கை யாக்குங்கள் (ரோ 16:3,4). பிரிஸ்கில்லாளுடன் நின்ற ஆக்கில்லாவைப் போல, மிஷனரிப்பணிக் காரியங்களில் உங்களோடு தோள்கொடுத்து நிற்க உங்கள் கணவரை ஈர்த்திடுங்கள்.

**(3)** மிஷனரிகளைத் தாங்கிவரும் சபைகளுக்காய்த் தேவனைத் துதிக்கிறோம். சபையாரே, இதில் திருப்தியடையாதீர்கள். உங்கள் சபைப் பணங்களிலிருந்து கணிசமான அளவை மிஷனரி நிறுவனங்களுக்கு அனுப்பிவையுங்கள். பிரம்மாண்டமான கட்டிடங்கள் கட்டச் சேர்த்துவைத்துள்ள தொகைகளை இவைகளுக்காய்ப் பயன்படுத்துங் கள். நான் அடிக்கடி சொல்லிவருகிறபடி, பெரிய பெரிய கட்டிடங்கள்

இந்தியா போன்றதொரு நாட்டில் இனிவரும் காலங்களில் அதிகப் பயனும் தராது, பாதுகாப்பாகவும் இருக்காது. கிறிஸ்து சீக்கிரம் வரப் போகிறார். அந்திக்கிறிஸ்துவினிடம் நமது பணம் சிக்கிவிடக்கூடாது. தலையாகிய கிறிஸ்துவினால் கடிந்துகொள்ளப்படாத இரண்டே சபைகள் மிஷனரிச் சிந்தையுள்ளவையே (வெளி 2:8-11; 3:7-13). நெடுகவே மிஷனரி பவுலைத் தாங்கி அவரது ''உபத்திரவத்தில்'' அவருக்குக் கைகொடுத்த பிலிப்பிய சபையைப்போல் இருங்கள் (பிலி 4:14-18). இந்தச் சபையினருக்குத்தான் ''என் தேவன் உங்கள் குறைவையெல்லாம் நிறைவாக்குவார்'' என அப்போஸ்தலன் உறுதியளித்தார் (வச 19). இது நிபந்தனையுள்ள வாக்கு. மிஷனரிகளின் ''குறைச்சலை'' நீங்கள் நிவிர்த்திசெய்தால், உங்கள் ''குறைவை'' தேவன் நிறைவாக்குவார் (வச 16,19).

**(4)** இதுவரை மிஷனரி நிறுவனம் எதற்கும் நீங்கள் உதவி தராதவராயிருந்தால், இவ்வித நிறுவனங்களைத் தாங்கிவரும் உங்கள் கிறிஸ்தவ நண்பர்களிடமிருந்து அவைகளின் வங்கி விபரங்களைக் கேட்டறிந்து, கிரமமான மிஷனரிப்பணி ஆதரவாளராய்ச் சேர்ந்து விடுங்கள்.

இக்கடிதத்தில், ஒரு மூத்த சகோதரனாய் (74), நான் எழுதியுள்ளவற்றை நீங்கள் பின்பற்றினால் பரலோகத்தில் நாம் சந்திக்கும் போது எனக்கு நன்றி சொல்வீர்கள் (பிலி 4:3).

கிறிஸ்துவின் அன்பில்,
R. ஸ்டான்லி



16 ஏப்ரல் 2020

**13**

# மிஷனரிகளும் கரோனாவும்

## Missionaries & Corona

பிரிய மிஷனரி நண்பர்களே,

தமது ஊழியக்காரரின் சுகத்தை விரும்பும் கர்த்தரது பெயரால் அன்பின் வாழ்த்துக்கள்! அவருக்கே மகிமை உண்டாகட்டும்! (சங் 35:27).

தொய்வு நிறைந்துள்ள இந்நாட்களில் தளர்ந்துள்ள உங்கள் ஆவியை உயிர்ப்பிக்க உங்கள் நிறுவனங்களின் தலைவர்களிடமிருந்து அவ்வப்போது, கர்த்தர் தரும் வார்த்தையுடன், கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன என நம்புகிறேன். மக்களைக் கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் ஆசீர்வதிக்க நாட்டின் பல்வேறு பகுதிகளில் தங்கிப் பணியாற்றும் ஏறத்தாழ 60,000 மிஷனரிகளுக்கு இதனை ஒரு பொதுவான கடிதமாய் எழுதுகிறேன். ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தை (BYM), அதின் நிறுவனராக, 33 ஆண்டுகள் (1971- 2003) தலைமை தாங்கி நடத்தும் சிலாக்கியத்தையும், இவற்றில் 7 ஆண்டுகளைப் பல்வேறு மாநிலப் பணிக்களங்களில் தங்கிச் செலவழிக்கும் பாக்கியத்தையும் பெற்ற நான், உங்களுடன் என்னை அடையாளப் படுத்திக்கொண்டு, உங்கள் மனதை அரித்துக்கொண்டிருக்கும் சில காரியங்களை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். உங்களது தேசிய ஊழியர் கூடுகைகளில் செய்தியாளராக உங்களில் பலரைச் சந்தித்திருக்கிறேன்.

**(1) உடல் நலம்** குறித்துக் கவலை கொள்ளாத நபர் இவ்வுலகில் இன்று எவருமில்லை. உடனடியாகவும் அருகிலும் மருத்துவ வசதி இல்லாத பகுதிகளில் வாழும் உங்களது அச்சங்கள் மிகுதி. நாங்கள்

உங்களுக்காய் ஜெபித்துக்கொண்டிருக்கிறோம் என்பதை உறுதிப் படுத்துவதோடு, ஆரோக்கியத்திற்காகவும் பாதுகாப்பிற்காகவும் நமது தேவன் தந்துள்ள வாக்குகளை உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன் (சங் 91:5,6; யாத் 15:26; சங் 103:3; ஏசா 53:4; லூக் 4:38,39; யாக் 5:14-16; சங் 41:1,3). உங்களுக்காகவும் உங்கள் குடும்பத்தினருக்காகவும் இவ்வசனங்களை அடிக்கடி வாசித்துக்கொள்ளுங்கள். சவால் நிறைந்த இந்நாட்களில் உங்கள் விசுவாசம் உறுதியாய்க் கட்டப்படும் (ரோ 10:17). நீங்கள் தேவனது கரத்தில் இருக்கிறீர்கள்; அவரது அறிவின்றி, அவரது அனுமதியின்றி, உங்களுக்கு ஒன்றுமே நேராது (யோ 10:28,29).

**(2)** உங்களது **பொருளாதாரத் தேவைகள்** குறித்து உங்களுக்கு நிறைய கேள்விகள் இருக்கும். நமது மிஷனரி நிறுவனங்களுக்கு வரும் காணிக்கைகள் பெருமளவில் குறைந்துவிட்டன என்பது எவருமறிந்தது. தடையில்லாமல் காணிக்கை வந்துகொண்டிருந்த காலத்திலும் அநேக இயக்கங்களுக்கு கைக்கும் வாய்க்கும் என்றுதானிருந்தது. உங்களது ஏப்ரல் மாதச் சம்பளம் குறித்த நிச்சயமின்மை புரிந்துகொள்ளக் கூடியதுதான். மே 3 வரை தேசிய ஊரடங்கை நீட்டியது எதிர்பார்ப்புகளை இன்னும் மட்டந்தட்டியுள்ளது. மாரி காலத்திற்கென்று கணிசமான சேமிப்பு எல்லா நிறுவனங்களிலும் இருக்கிறதென்று சொல்லமுடியாது. உங்களை அழைத்தவர் தேவனே என்றும், நிறுவனமானது அவரைச் சேவிக்க உங்களுக்குதவும் சாதனம் மட்டுமே என்றும் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். தேவன்தான் ஊற்றும் காரணமுமானவர். மந்தையைப் போஷிக்கவேண்டியது மேய்ப்பனின் பொறுப்பு. படை வீரரைக் கவனித்துக்கொள்ளவேண்டியது தளபதியின் பொறுப்பு. பிள்ளைகளின் தேவைகளைச் சந்திப்பது தந்தையின் பொறுப்பு. சொல்லப்போனால், கர்த்தரது ஜெபமே ஒரு மிஷனரி ஜெபம்தான். அதிலுள்ள ஏழு வேண்டல்களில் நடுவில் உள்ளது ''அனுதின ஆகாரம்'' பற்றியதே (மத் 6:9-13). நமது உடலுக்கடுத்த தேவைகள் குறித்த இறைவாக்குகளை இங்கும் நாம் நினைவுபடுத்திக்கொள்வோம் (மத் 6:25-34, 1 தீமோ 5:18; சங் 33:18,19; 37:18,19,25; ஏசா 33:16). நிலைமை எவ்வளவு மோசம் என்பதை நன்கறிந்த மிஷனரிப்பணி



ஆதரவாளர்கள் இக்கட்டான இச்சூழலில் தங்களால் முடிந்த அளவு நிறுவனங்களுக்கு உதவி வருகின்றனர். *''மிஷனரி ஆதரவாளர்களுக்கு ...''* என்று ஏப்ரல் 7 அன்று நான் எழுதிய கடிதம் (அத்தியாயம் 12) தங்களது காணிக்கைகளை அதிகரிக்கும்படி அநேகரைத் தட்டி யெழுப்பியுள்ளது. 40 ஆண்டுகள் பாலைநிலத்தில் தமது மக்களைப் பராமரித்த தேவன் மாறாதவராயிருக்கிறார்!

**(3)** பள்ளிகளிலும் கல்லூரிகளிலுமுள்ள **பிள்ளைகளது** பெற்றோரின் மனப்பாரம் அதிகம். போக்குவரத்துக் கட்டுப்பாட்டினால் சிலரது பிள்ளைகள் விடுதிப்பள்ளிகளிலிருந்து தங்கள் இல்லங்களுக்கு இன்னும் வரமுடியவில்லை. விடுமுறையில் பிள்ளைகள் உங்கள் களங்களுக்கு வரும் நாளை எவ்வளவாய் எதிர்பார்த்து இருந்திருப்பீர்கள்! உங்கள் வேதனை புரிகிறது. இறையரசிற்காய் நீங்கள் செய்யும் எல்லாத் தியாகங்களுக்கும் தேவன் பலன் தராது விடமாட்டார். NEET மற்றும் பல போட்டித் தேர்வுகளுக்குப் பிள்ளைகள் ஆயத்தப்பட உங்களில் பலரும் எதிர்நோக்கி இருந்திருப்பீர்கள்! எல்லாம் அப்படியே நின்றுவிட்டது. உங்கள் மகள்களின் பிரசவங்களுக்கு ஒருவேளை உங்களில் சிலர் உதவப் போக முடியாதிருக்கலாம். மிஷனரிகளின் பிள்ளைகளது இவ்விதப் பிரச்னைகள் ஏராளம். தனது மிஷனரித் தந்தையாகிய ஆபிரகாமின் பொருட்டு ஈசாக்கைத் தேவன் எவ்விதம் ஆசீர்வதித்தார் என்பதை மட்டுமே என்னால் நினைத்துப்பார்க்க முடிகிறது (ஆதி 12:1; 25:11; 26:12,13). அவரது பெயருக்காய் நீங்கள் காண்பித்த (காண்பிக்கிற) அன்பின் உழைப்பை மறந்துவிடுகிறதற்குத் தேவன் நீதியற்றவர் அல்லவே (எபி 6:10).

**(4)** உங்களது **களங்களிலுள்ள புதிய விசுவாசிகள்** மற்றும் சபைகளைக் குறித்ததே உங்களது அடுத்த கவலை. அவர்களைக் கிரமமாய்ச் சந்திக்கவும், ஆராதனை மற்றும் போதனைக்காய் அவர்களைக் கூட்டவும் இப்பொழுது உங்களுக்கு முடியாதிருக்கிறது. இவர்களில் பலர் படிப்பறிவில்லாதோர்; தாங்களே தியானித்துக்கொள்ள இவர்களது மொழிகளில் வேதாகமங்களும் கிடையாது. வாரந்தோறும்

நீங்கள் கொடுப்பதே இவர்களுக்கு ஆன்மீக ஆகாரம். ஓர் ஆத்துமாவை இறையரசிற்குள் பெற்றெடுக்க நீங்கள் படுகின்ற பிரசவ வேதனையை நானறிவேன். இந்தப் பாரத்தையே 2 கொரிந்தியர் 11:28,29இல் மிஷனரி பவுல் பகிர்ந்துகொள்கிறார்: ‘‘இப்பிரச்னைகள் தவிர, எல்லாத் திருச்சபைகளையும் குறித்த கவலை என்னை நாள்தோறும் நெருக் குகிறது. யாராவது வலுவற்றிருந்தால் நானும் அவனைப்போல் ஆவதில்லையா? யாராவது பாவத்தில் விழ நேர்ந்தால் என் உள்ளம் கொதிப்பதில்லையா?’’ ஆடுகளுடன் மிஷனரி-மேய்ப்பர்கள் இல்லாத வேளைகளில்தான் குதறிக்கிழிக்கும் ஓநாய்கள் புகுந்து விளையாடும். இவ்விதச் சமயங்களில்தான் களைகளை நமது நிலங்களில் விதைப் பதில் சத்துரு தீவிரம் காட்டுகிறான். வேறொன்றும் செய்யமுடியாத இச்சூழலில் நாம் நமது விசுவாசிகளைத் “தேவனுக்கும் அவர்களைக் கட்டியெழுப்ப வல்லமையுள்ள அவரது கிருபையுள்ள வசனத்திற்கும் ஒப்புக்கொடுக்கவேண்டும்,’’ அவ்வளவுதான் (அப் 20:29,32). இயேசு விடம் நமது மூலம் வருவோருக்காய் அவர் ஏற்கனவே ஜெபித்துள்ளதை நினைவிற்கொள்வோம் (யோ 17:20).

**(5)** உங்களது <u>**வயதான பெற்றோரைப்பற்றிய**</u> நினைவு உங்கள் இதயத்தைப் பிழிகிறது. கரோனா நச்சுக்கிருமியினால் மூத்த குடி மக்கள் எளிதில் தாக்கப்படுகின்றனர் என்பது எவ்வளவு வேதனை! ஏதாவது நேர்ந்துவிட்டால், கட்டுப்பாடுகள் நிறைந்துள்ள இந்நாட் களில் நீங்கள் அங்கு பயணிக்கமுடியுமா என்ற கேள்வியும் உங்களை வாட்டுகிறது. ஒருவேளை உங்களில் சிலர் இச்சோகநிலை வழியே சென்றுவிட்டீர்கள். மத்தேயு 19:27-29இலுள்ள இயேசுவானவரின் வார்த்தைகளைவிட வேறு என்ன சொல்லி நான் உங்களைத் தேற்ற முடியும்? ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலுமிருந்து நமது நாட்டுக்கு வந்து, தாயகமே திரும்பாத பல மிஷனரிகளின் தியாகச் சேவை களினாலேயே நமது மூதாதையர் பலர் கிறிஸ்துவிடம் வந்தனர். நமது குடும்பத்தினருடன் கைபேசி மூலமாவது தொடர்புகொள்ளும் வசதி இன்று நமக்கிருப்பதற்காய்த் தேவனைத் துதிப்போம். தூரம் என்பது நமது தேவனுக்குப் பொருட்டல்லவே (எரே 23:23).



**(6)** நமது <u>**ஆன்மீக மறுமலர்ச்சிக்கு**</u> இந்நாட்களைப் பயன்படுத்திக் கொள்வோம். விறுவிறுப்பாய்ப் பணியாற்றி வந்த நாட்களில் தேவனது பிரசன்னத்தில் அமர்ந்து அவரது வசனத்துடன் அவசரப்படாது நேரம் செலவழிக்க நமக்கு முடியாமற்போயிற்று. சிறையில் அடைக்கப் பட்டிருந்தபோது வாசிப்பதிலும் எழுதுவதிலும் மிஷனரி பவுல் தீவிரக் கவனம் செலுத்தினார் (2 தீமோ 4:13; பிலி 1:1,7, 12-14). தூசி படிந்துள்ள நமது பாதங்கள் கழுவப்படவேண்டுமே (யோ 13:8-10). தற்பரிசோதனை மேற்கொள்வது பெரும் பயனளிக்கும் (சங் 139: 23,24). இப்பயிற்சி தேவையில்லாத நிலைக்கு நாம் யாரும் வளர்ந்துவிடவில்லை (நீதி 20:9, 1 யோ 1:8). மிஷனரிகள் நடுவில் உறவுப்பிரச்னைகள் மலிவு. கசப்பையும் வைராக்கியத்தையும் பேணி வைப்பது நமக்குத்தான் பாதகம் (கலா 5:14,15). நமது பாவங்களைத் தேவன் ஆழ்கடலில் அமிழ்த்திவிட்டதுபோல் கடந்தகால மனத் தாங்கல்களைப் புதைத்துவிட இது பொன்னான வாய்ப்பு (மீகா 7:19). புறங்கூறுதலையும் அவதூறுபண்ணுதலையும் விட்டொழியுங்கள் (எண் 12, ஆதி 9:20-25, 2 சாமு 1:17-20). நமது எதிரிகள் பிரிந்திராத இந்தியா போன்றதொரு நாட்டில் நாம் பிரிந்திருப்பது கூடவே கூடாது (மத் 12:26). நம்மை எதிர்த்துத் துன்புறுத்தவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காய்ப் பரம எதிரிகளாகிய பிலாத்துவும் ஏரோதும் நண் பர்களாகிவிடுகின்றனரே (லூக் 23:12)! உங்கள் நிறுவனத்திலுள்ள மிஷனரிகள் மற்றும் பிற இயக்கங்களில் உங்களுக்குத் தெரிந்தவர்கள் ஒவ்வொருவராய்க் கைபேசியில் அழைத்து நலம் விசாரியுங்கள். ஒருவருக்கொருவர் நாம் தேவை. *‘‘ஆவியின் கனி’’ ஜெபம்* என்பதனைப் பயன்படுத்துங்கள் (அத்தியாயம் 3). நிர்வாகத்திற்கு எதிரான எல்லாக் கசப்பையும் அகற்றுங்கள். உங்களுக்கு ஏதாவது அநீதி இழைக்கப்பட்டிருந்தால் அதனைத் தேவனது கரத்தில் விட்டுவிடுங்கள் (1 பேது 2:23). உங்கள் தலைவர்களுக்காய் ஜெபியுங்கள். அவர் களுக்கும் பிரச்னைகளும் குறைபாடுகளும் இல்லாமலில்லை. தேவ சமாதானம் நமது இதயங்களை ‘‘ஆளட்டும்’’ (கொலோ 3:15).

**(7)** இறுதியாக, **ஓய்வுபெற்ற மிஷனரிகளுக்குச்** சில வார்த்தைகள். பணியில் மும்முரமாய் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் வாலிபர், நங்கையர், நடுவயதினரைவிட உங்களுக்கு இந்நாட்கள் மிகவும் கடினமானவை. மாதாந்திர வருவாயில் ஏற்கனவே எவ்வளவோ குறைந்துள்ள நிலையில் இருக்கிறீர்கள். நிலைமையை முதிர்வயதுப் பிரச்னைகள் இன்னும் மோசமாக்குகின்றன. மூத்த குடிமக்களுக்குக் கரோனா தொற்றுநோய் எளிதில் பரவும் என்பது திடுக்கிடச்செய்கிறது. நாமனைவரும், உங்களில் ஒருவனாக 74 வயதுள்ள நானும், சங்கீதம் 71:17,18ஐ நமது அனுதின ஜெபமாக்குவோம்: ‘‘தேவனே, எனது சிறுவயது முதல் எனக்குப் போதித்துவந்தீர்; இதுவரை உமது அதிசயங்களை அறிவித்துவந்தேன்; இப்பொழுதும் தேவனே, இத்தலைமுறைக்கு உமது வல்லமையையும், இனிவரும் யாவருக்கும் உமது பேராற்றலையும் நான் அறிவிக்கும்வரை, முதிர்வயதும் நரை முடியுள்ளவனாகும்வரை என்னைக் கைவிடாதேயும்!’’

நாட்டளவில் அல்லது உலகளவில் ஏற்படும் பேரழிவுகளை அடுத்து எத்தனையோ எழுப்புதல்கள் உருவாகியுள்ளன என்பது சரித்திரச் சான்று. வெட்டுக்கிளிகளால் ஏற்பட்ட அழிவிலிருந்து மீளுவதை வாக்குப்பண்ணியதை அடுத்து, பெருத்த ஆத்தும அறுவடைக்கு அனுகூலமாகத் தமது ஆவியானவரை ஊற்றுவதாகத் தேவன் உறுதியளித்துள்ளார் (யோவேல் 2:25,28,29,32அ). நாட்டின் நலம் நம்மைத் தாழ்த்துவதில்தான் துவங்குகிறது (2 நாளா 7:14). *‘‘என் மக்கள் தங்களைத் தாழ்த்தினால் ...’’* என்ற 6ஆம் அத்தியாயத்தை வாசியுங்கள். ஒளிமயமான எதிர்காலம் திருவாக்குகளைப் போன்றதே! பத்திரமாயிருங்கள்! பயன்பட்டுக்கொண்டேயிருங்கள்!

உங்கள் நண்பன்,
R. ஸ்டான்லி



31 மே 2020

**14**

# மிஷனரி நிறுவனங்களின் எதிர்காலம்
## Indian Missions Tomorrow

அரசியல் மற்றும் பிற காரணங்களினால் வெளிநாட்டு மிஷனரிகள் ஒவ்வொருவராய் இந்தியாவை விட்டு வெளியேறியதை அடுத்து இங்கு தேவன் எழுப்பியுள்ள நூற்றுக்கணக்கான உள்நாட்டு மிஷனரி நிறுவனங்களுக்காய் அவரைத் துதிப்போம். இந்நிறுவனங்கள் மூலம் இந்த ஆண்டுகளிலெல்லாம் அவர் செய்துள்ளது நமது கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது (சங் 118:23). தொலைந்துபோன பல்லாயிரக்கணக்கான ஆடுகள் கண்டுபிடிக்கப்பட்டு மந்தையில் சேர்ந்துள்ளது பரலோகைப் பரவசப்படுத்தியுள்ளது (லூக் 15:7). இதிலும் பெரிதானவைகளைக் காணவிருக்கிறோம் (யோ 1:50ஆ). ஊக்கமான ஜெபங்களினாலும், நிலையான ஈடுபாட்டினாலும், தியாகக் காணிக்கைகளினாலும் இந்நிறுவனங்களைத் தாங்கி, அவை இறையழைப்பைப் பூரணமாய் நிறைவேற்ற உதவ வேண்டியது கிறிஸ்தவர் ஒவ்வொருவரது கடமையாகும்.

இத்திருச்சங்கங்களின் (para-Church organisations) ஆரோக்கியம் நெடுகவே குறைந்துவருவது கவலைக்குரியது. இதற்கான காரணங்கள் பல. ஆன்மீக முக்கியத்துவம் தளர்கிறது. திருமறைத் தத்துவங்கள் புறந்தள்ளப்படுகின்றன. சாத்தானின் தாக்குதல்கள் ஓயாதிருக்கின்றன. ஆதி தரிசனம் மங்கிப்போயிற்று. அகிலவுலகப் பொருளாதாரச் சரிவு ஒரு பேரிடி. கரோனா தொற்றுநோய்ப் பரவலுக்கு முன்னரே பெரும்பாலான நிறுவனங்களில் கைக்கும் வாய்க்கும் என்றுதானிருந்தது. இந்தியப் பொருளாதாரம் 30% குன்றியுள்ள நிலையில், பணத்தேவைகளைப் பொருத்தமட்டில் நமது ஊழியங்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருக்கிறது. ஆனாலும் நமது

இதயங்கள் சோர்ந்து துவண்டுபோகவேண்டிய அவசியமில்லை; ஏனெனில் நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர், அவர் நம்மைக் குறித்த தமது தீர்மானங்களை நிறைவேற்றியே தீருவார் (1 தெச 5:24).

இந்திய மிஷனரி நிறுவனங்களுக்குக் கூடுதல் தெளிவும் தெம்பும் தருவதற்காய்ச் சில முக்கியக் காரியங்களைக் குறித்து எழுதவேண்டு மென்ற பாரம் ஒரு சில ஆண்டுகளாய் என்னில் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்திய மிஷனரி இயக்கங்கள் ஐக்கியத்தின் (India Missions Association) பொதுக் காரியதரிசிக்கு 2020 மே 28 அன்று அண்ணன் J. J. ரத்னக்குமார் அவர்கள் 16 குறிப்புகளுடன் எழுதியுள்ள கடிதம் இன்றைக்குப் பொருத்தமானது. இந்த ஐக்கிய அமைப்புதான் இந்தியாவில் 60,000 ஊழியரைக் கொண்டுள்ள 280 இயக்கங்களுக்கு ஒரு குடை போன்றதாகும். இந்திய மிஷனரி நிறு வனங்கள், அரசு சாரா சேவை நிறுவனங்கள் (NGOs), திருச்சபைகள் ஆகியவற்றின் தலைவர்களையும் தீவிர ஆதரவாளர்களையும் கரோனா காலத்திற்குப் பின்வரும் நாட்களைப் பற்றிக் கலந்தாலோசிக்கக் கூட்டும்படி அண்ணன் அவர்கள் தனது கடிதத்தில் கேட்டுள்ளார்கள். இன்றையச் சூழலில் இது அத்தியாவசியத் தேவை என்பதை எவரும் மறுக்க முடியாது.

ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தை (BYM) நிறுவியவர் என்ற வகை யில் அதனை 1971 முதல் 33 ஆண்டுகள் தலைமை தாங்கி நடத்தி 2003இல் ஓய்வுபெற்ற பின்னர், பல்வேறு மிஷனரி நிறுவனங்களின் தேசிய ஊழியர் கூடுகைகளில் செய்தியளித்து, அவர்களது ஊழியக் களங்களுக்குச் சென்றுவந்ததன் மூலம் அவர்களோடு பல காரியங் களைக் குறித்துக் கலந்துரையாடும் சிலாக்கியம் எனக்குக் கிடைத்தது. 1970களில் BYMஇன் பிரதிநிதியாக, IMAஐ நிறுவிய அங்கத்தினர் களில் ஒருவனாக, Dr. ஜான் ரிச்சர்டு (1923-2018), Rev. தியோடர் வில்லியம்ஸ் (1935-2009), Rev. G. S. மோகன் (1931-2003) மற் றும் Rev. J. C. போஸ் மெய்யப்பன் (1938-2001) போன்ற தேவ மனிதரோடு கிடைத்த மகிமையான ஐக்கியத்தை நான் மறக்க



முடியாது. அப்படியே, IMAஇன் வருடாந்திர மாநாடுகளில் பல்வேறு இந்திய ஊழியத் தலைவர்களைச் சந்தித்துப் பழகியதும் மனதில் பசுமையாயிருக்கிறது. பணம் எதுவும் சேராத நிலையில் நான்தான் IMAஇன் முதல் பொருளாளர்! IMAஇன் முதல் logo நான் வரைந்தது! BYMஐத் தலைமையகத்திலிருந்து நடத்தியது தவிர்த்து, எனது மனைவியும் நானும் ஏழு ஆண்டுகள் தமிழல்லா மாநிலங்களில் களப்பணியாளர்களோடு தங்கியிருந்தது நிறைய நடைமுறை அனுபவங்களைத் தந்தது.

இப்பின்னணியுடன், *''மிஷனரி நிறுவனங்களின் எதிர்காலம்''* *(Indian Missions Tomorrow)* என்ற இக்கட்டுரையை எழுத உட்காரு கிறேன். அண்ணன் ரத்னக்குமார் அவர்களது கடிதத்திலுள்ள பல குறிப்புகள் இங்கு இடம்பெறலாம். Onlineஇல் நடத்தக் கோரப்பட் டுள்ள கலந்தாலோசனை நிகழ்ச்சிக்கு இக்கட்டுரையின் உள்ளடக்கம் ஏதோவொரு வகையில் உதவும். எனக்குள்ளிருக்கும் கருத்துக்கள் புரட்சிகரமானவை என்பதால், கலந்துரையாடல்களில் நான் இந்நாட் களில் பங்கேற்பதில்லை. இக்கடிதத்தில் உள்ளவை குறைகாணலுக் காக (critcal) அல்ல, பகுத்தாய்வுக்காகவே (analytical) என்று உண் மையாய்ச் சொல்லுகிறேன். எனக்குள் ஓடுவது மிஷனரி இரத்தம்! எனது இரத்த வகை M-பாசிட்டிவ்! கரோனா தொற்றுநோய்த் தாக் கத்தையடுத்து, ஏப்ரல் 7 அன்று *''மிஷனரிப்பணி ஆதரவாளர் களுக்கு ...''* என்றொரு கட்டுரைக் கடிதமும், 16 அன்று *''மிஷனரி களும் கரோனாவும்''* என்ற கட்டுரையும் எழுதினேன். அவற்றை முறையே 12 மற்றும் 13ஆம் அத்தியாயங்களில் காண்க.

இன்று நம்மிடையே இருப்பது போன்ற திருச்சங்கங்கள் அன்று புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இருக்கவில்லை. முன்னோடிப் பணி யாளர்களாயிருந்த ''அப்போஸ்தலர்களுக்கு'' நமது ''மிஷனரிகளை'' ஓரளவு ஒப்பிடலாம். கிறிஸ்துவின் பெயர் அறியப்பட்டிராத பகுதி களே அவர்களது கவனத்தை ஈர்த்தன (ரோ 15:20,21). இயேசு தமது சீடர்களை வெளியுலக ஊழியத்திற்கு ''அனுப்பிவைத்த'' பின்னரே

அவர்கள் ''அப்போஸ்தலர்'' என்றழைக்கப்பட்டனர் (லூக் 9:1,2,10; 6:13; மத் 10:1,2). அதுபோலவே அந்தியோகியா சபையிலிருந்த ஊழியர் குழுவிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு ''அனுப்பப்பட்ட'' பின்னரே, பவுலும் பர்னபாவும் ''அப்போஸ்தலர்'' என்றழைக்கப்பட்டனர் (அப் 13:1-4; 14:14). இவர்கள் பிரதானமாகச் சபை கட்டும் பணியில் ஈடுபட்டனர் (1 கொரி 3:6). இடம் விட்டு இடம் நகரும் இவர்களது சலனப்பணியில் உள்ளூர்ச் சபைகள் பின்னிப் பிணைந்திருந்தன (அப் 14:23,27,28). நமது மிஷனரிகளும் சங்கங்களுமோ அனுப்பும் சபைகளோடு இவ்வளவாய் இணைந்து பணியாற்றுவதில்லை; ஆனால் அதுதான் முழுவதும் சரியானது. இப்படியிருக்க, நடபடிகளிலும் நிருபங்களிலும் நாம் வாசிக்கும் அப்போஸ்தலரது செயல்முறைகள் மற்றும் போதனைகளிலிருந்து நமக்கேற்ற படிப்பினைகளை மட்டுமே நாம் எடுத்துக்கொள்ள முடியும்.

**(1)** மிஷனரி ஊழிய நிறுவனங்களின் எதிர்காலம் **தலைமைத்துவத்தையே** சார்ந்திருக்கிறது. அநேக இயக்கங்களை நிறுவிய தலைவர்கள் மறைந்துவிட்டனர் அல்லது அமர்ந்துவிட்டனர். அடுத்த வரிசையினருக்கு அவர்கள் தொடர் ஓட்டக் கட்டையைக் (baton) கொடுத்துவிட்டனர்; ஆனால் அவர்களில் பெரும்பாலானோர்மீது சால்வை (mantle) விழவில்லை (உபா 31:14,15; 1 இரா 19:16, 19-21; 2 இரா 2:9-13). புதிய தலைவர்கள் எந்த அளவு தேவனுக்குமுன் காத்திருக்கிறார்களோ, அவர் சத்தம் கேட்கிறார்களோ, அவரது வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறார்களோ அந்த அளவுக்குத்தான் அவர்கள் வெற்றிகரமாய்ச் செயல்பட முடியும் (நீதி 8:34; உபா 33:3). முந்தையத் தலைவர்களது மறக்கப்பட்டுப்போன தியாகவுணர்வு திரும்பப் பெறப்படவேண்டும். மெழுகுவர்த்தி போல எரிந்து கரைந்திட இவர்கள் ஆயத்தமாயிருந்தால்தான் ஊழியத்தைப் பிரகாசிக்கச் செய்யமுடியும் (யோ 5:35; 2 கொரி 12:15). இந்தியாவில் நாம் எதிர்கொள்ளவிருக்கும் சவால்களைச் சந்திக்க நிர்வாகத் திறன்கள் மட்டுமே போதாது. ''கர்த்தரிலும் அவரது சத்துவத்தின் வல்லமையிலும்'' பலமுள்ளவர்களாய்த் தலைவர்கள் காணப்படவேண்டும் (எபே



6:10). நிறுவனங்களுக்கு எந்த ஆசியும் தலையிலிருந்தே வழிந்துவரவேண்டும் (சங் 133:2,3). தங்களது ஊழியங்கள் மேன்மை அடையவேண்டுமானால், தலைவர்களிடம் தாழ்மை, நேர்மை மற்றும் தூய்மை அதிகரிக்கப்படவேண்டும் (நீதி 15:33; 2 கொரி 7:2; யோசு 3:5).

ஊழிய நிறுவனங்கள் அனைத்தும் நிசமாகவே தேவன் தந்த தரிசனத்தில்தான் துவங்கப்பட்டவை என்று சொல்வதற்கில்லை. எதிர்ச்செயல், வெளிநாட்டு வாக்குறுதிகள், பிளவுகள், தலைவராகிவிடத் துடிப்பு, இப்படிப் புனிதமற்ற காரியங்களும் பல ஊழியங்களுக்குப் பின்னணிகளாகும். இவ்வித ஊழியங்கள்மீது தேவாசீர்வாதம் நெடுநாள் தங்கியிருக்காது. இந்தப் பெட்டிக்கடைகளை எவ்வளவு விரைவில் மூடுகிறோமோ அவ்வளவு மேல்! இறையரசிற்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் சரிசெய்யப்படும்.

**(2)** கிறிஸ்தவ ஊழியங்களுக்கு, அதிலும் குறிப்பாக மிஷனரி நிறுவனங்களுக்கு, எதிரான காற்றுகள் இந்தியாவில் புயலாய் வீசிக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு மிஷனரி இயக்கத்தையும் ஒரு சேனைக்கு ஒப்பிடலாம். அதில் ஒவ்வொரு **மிஷனரியும்** ஒரு போர் வீரன் (2 தீமோ 2:3). அவனது பதவி எதுவாயினும், எதிரியோடு போராட அவனுக்குப் போதுமான பலம் இருக்கவேண்டும். ஒவ்வொரு மிஷனரியையும் போர்க்களத்திற்காய்ப் பக்குவப்படுத்துவதே நிறுவனங்கள் மற்றும் தலைவர்களின் முதற்கடமை. ஒவ்வொரு மிஷனரியின் ஆன்மீக ஆரோக்கியம் அதிமுக்கியம். மேய்ப்பர்களுக்கும் மேய்ப்பும் கவனிப்பும் தேவைதானே? (1 பேது 5:1-4; லூக் 22:32). பணிக்களங்களுக்குத் தலைவர்கள் செல்வது மேற்பார்வை (inspection) செய்ய அல்ல, மேம்பாட்டுக்கு உதவ (impartation) என்றே இருக்கவேண்டும் (ரோ 1:10). களப்பணியாளர் ஒவ்வொருவருக்கும் கொடுக்கக் கர்த்தரிடமிருந்து பெற்ற திருவார்த்தையுடன்தான் களங்களுக்குத் தலைவர்கள் செல்லவேண்டும். மகனது உடல் நலக்கேடு அவனது தந்தையை விசனப்படுத்தும் (1 தீமோ 5:23).

களப்பிரச்னைகளையும் போராட்டங்களையும் புரிந்துகொள்வதற்குப் போதுமான நாட்களைத் தலைவர்கள் களங்களில் செலவிடவேண்டும். சங்கிலியின் பலத்தை நிர்ணயிப்பது பலங்குன்றிய வளையம் தான். களப்பணியாளர் பலரை ஆன்மீக வறட்சியும், உடல் இளைப்பும், மனத் தொய்வும் மேற்கொண்டுள்ளன. அவர்கள் ''சற்றே இளைப்பாறவும்,'' பலத்தைப் புதுப்பிக்கவும் வசதியான இடங்களுக்குக் கொண்டுசெல்லுங்கள் (மாற் 6:31; ஏசா 40:30,31). ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் ''மிஷனரிகள் இளைப்பாறும் இல்லங்கள்'' (Missionaries Rest Houses) இதனையே கருத்தில் கொண்டு கட்டப்பட்டவை. மிஷனரிகளது சந்திக்கப்படாத தேவைகளைக் கவனிக்கும் Missionaries Upholders Trustக்கு (MUT) எனது சல்யூட்! வேலை-கொடுப்பவர்-வேலை-செய்பவர் (Employer-Employee) என்ற உலகப்பாணி தந்திரமாய் மிஷனரி இயக்கங்களைத் தாக்கி இரத்தப் புற்றுநோய் (blood cancer) ஏற்படுத்தியுள்ளது. பவுலுக்கும் எப்பாப்பிரோதீத்துவுக்கும் இருந்த உறவுமுறைதான் தலைவர்களுக்கும் மிஷனரிகளுக்கும் இடையே காணப்படவேண்டும் (பிலி 2:25).

**(3)** இந்திய மிஷனரி நிறுவனங்களின் களப்பணியாளர்கள் ''மிஷனரிகள்'' (Missionaries) என்றும் **''சுதேச ஊழியர்''** (Native Workers) என்றும் இருவகையினராய்ப் பிரிக்கப்பட்டுள்ளனர். இரண்டாம் வகையினர் பெரும்பாலும் இரண்டாந்தரக் குடிகளாகவே நடத்தப்படுகின்றனர். ''வெளிநாட்டு'' மிஷனரிகள் இங்கு பணியாற்றிய காலங்களில்தான் அவர்களது ''இந்திய'' உடன் பணியாளரை அவர்கள் ''சுதேசி'' ஊழியர் என்றழைத்தனர். இப்போது இப்பெயர் ஒழிக்கப்படவேண்டும். வேண்டுமானால், நிர்வாக வசதிக்காக, அவர்களைத் ''துணை மிஷனரிகள்'' (Associate Missionaries) என்று அழைத்துக்கொள்ளலாம். ஏதாவதொரு கட்டத்தில் அந்தந்த மாநிலத்தில், கிறிஸ்தவத்திற்கெதிரான அதிகாரிகள் நமக்குச் சவாலிடலாம். மாநிலம் விட்டு மாநிலம் சென்று செய்யப்படும் நற்செய்திப் பணிக்குத் தடை விதிக்கப்படுமானால் ஆச்சரியப்படமாட்டேன். ''சுதேச ஊழியர்'' என்று நாம் அழைக்கும் இவர்கள்தான் எக்காலக் கட்டத்திலும் உள்ளூர்ப் பிரச்னைகளை நின்று எதிர்கொள்ளவேண்டியவர்கள் என்பதை மறக்காதிருப்போம். பேதுரு போன்றதொரு மூத்த அப்போஸ்தலனே ''மூப்பர்களுக்கு'' எழுதும்போது தன்னையும் ஓர் ''உடன் மூப்பன்'' என்றழைத்துக்கொள்கிறார் (1 பேது 5:1). தாங்கள் நிறுவிய ஒவ்வொரு புதிய சபைக்கும் தலைமைக்காய் ''மூப்பர்களை'' (Elders) அப்போஸ்தலர் நியமித்தனர் (அப் 14:23; தீத் 1:5; யாக் 5:14). ''மேய்ப்பர்கள்'' (Shepherds) அல்லது ''கண்காணிகள்'' (Bishops) என்பது ''மூப்பர்கள்'' என்பதற்கு மறுபெயர்கள்தான் (அப் 20:17,28; 1 தீமோ 3:1; தீத் 1:7; 1 பேது 5:1-3). வரவிருக்கும் சூறாவளிக் காற்றுகளை நமது புதிய சபைகள் சமாளிக்கவேண்டுமானால் இவ்வித அடிப்படை மாற்றங்கள் செய்யப்பட்டேயாகவேண் டும். புதிய ஏற்பாட்டு முறைக்குத் திரும்பவேண்டுமானால், மாதாந்திரச் சம்பளம், கிறிஸ்துமஸ் வெகுமதித் தொகைகள் போன்றவை வழங்கப்படும்போது, மிஷனரிகளுக்கும் சுதேச ஊழியர்களுக்கும் இடையில் காட்டப்படும் பாகுபாடுகள் முற்றிலும் களையப்படவேண்டும். முந்தையத் தலைவர்கள் பின்பற்றிவந்த முறைகள் திருமறைக்கு ஏற்புடையவை அல்ல என்று நாம், வளர வளர, உணருவோமானால், தயங்காமல் அவற்றைத் தூக்கியெறியவேண்டும் (1 கொரி 13:11; 1 பேது 1:18). *''வெள்ளையனே, வெளியேறு!''* (Quit India!) போன்ற எழுச்சி நமது பணிக்களங்களில் வெடிக்கும்வரை நாம் காத்திருக்கவேண்டாம்.

மிஷனரிவியல் (Missiology) என்ற கல்வித்துறைக்காய்த் தேவனைத் துதிப்போம். ஆனாலும், பைபிள் போதித்துள்ள முறைகளை மேம்படுத்தவே முடியாது என்பதை எப்பொழுதும் மனதிற்கொள்ள வேண்டும். ஏற்கனவே எக்காலத்திற்கும் பொருத்தமாயிருக்கும் (up-to-date) திருநூலை நவீனமாக்க (update) முடியவே முடியாது. அசையக்கூடாதவை மட்டுமே நிற்கும்படி அசைக்கப்படக்கூடியவை யாவும் அசைக்கப்படவேண்டும் (எபி 12:27).

**(4)** நமது மிஷனரிப்பணி முயற்சிகளில் **சமூக சேவை** என்பது பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஐரோப்பிய மற்றும் மேற்கத்திய

மிஷனரிகள் செயலில் காட்டிய இறையன்பே நமது முன்னோர்களைக் கிறிஸ்தவத்திற்கு ஈர்த்தது. அவர்கள் நிறுவிய பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் போன்றவையே திருச்சபை வளர்ச்சிக்குக் கைகொடுத்தன. இரட்சண்ய சேனையின் (Salvation Army) நிறுவனர் வில்லியம் பூத் (1829-1912) என்பவரது கொள்கைக் குரல், *''சோப்பு, சூப்பு, இரட்சிப்பு''* (Soap, Soup, Salvation) என்பதே. இவ்வரிசை சரியல்ல என்று நாம் நினைத்தால், *''இரட்சிப்பு, சூப்பு, சோப்பு''* என்று மாற்றிக்கொள்ளலாமே! நசுக்கப்பட்டோர், வசதியற்றோர், ஒதுக்கப்பட்டோர் ஆகியோரிடையே பணியாற்றுவோர் என்றுதானே நமது மிஷனரிகளை அறிமுகம் செய்கிறோம்? நமது ஆதரவாளர்களுக்கு நாம் காட்டும் படங்கள் இவைதானே? அப்படியானால், நமது களச் செலவினங்களில் 50 சதவீதமாவது சமூகச் சேவைக்காக இல்லையென்றால் அது நியாயமல்லவே! மேசியாவின் ஊழிய அறிக்கைக்கும் (Messianic Manifesto) ஆன்மீக அர்த்தம் கொடுத்து அதனை நீர்த்துவிடாதிருப்போம் (லூக் 4:18,19).

World Vision போன்ற நிவாரணப்பணி நிறுவனங்களில் ஒவ்வொரு மிஷனரியும் களப்பயிற்சி பெறவேண்டும். கரோனா தொற்று நோய்ப் பரவல் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்கள் சொந்தவூர் திரும்புதல் போன்ற காரணங்களினால் மிஷனரிப் பணிக்களங்களில் <u>மருத்துவச் சேவை</u> பெருமளவில் தேவைப்படும். அனுபவமுள்ள மருத்துவர்கள், வேலையில்லா மருத்துவப் பட்டதாரிகள், செவிலியர், இன்னும் இவர்கள் போன்றவர்களைக் குறுகிய காலங்களுக்காவது பணிக்களங்களில் தங்கி உதவ ஆவன செய்யவேண்டும். இவர்களுக்குக் கணிசமான சம்பளம் கொடுங்கள்; இல்லையேல் வரமாட்டார்கள். அரசின் ஸ்கேனர் (scanner) இன்று கிறிஸ்தவ நிறுவனங்களை நோக்கித் திரும்பியுள்ளது. அப்போஸ்தலன் பவுலும் அவரது மிஷனரிக்குழுவும் ஒரேயொரு சந்தர்ப்பத்தில்தான் பணம் திரட்டினர்; அதுவும் நிவாரணப்பணிக்காகவும் தானதர்மத்திற்காகவுமே! (அப் 11:29,30; 1 கொரி 16:1-4; 2 கொரி 9:7-9). வழக்கம்போல் இந்த வசனப்பகுதிகளையும் தானதர்மம் தவிர மற்றெல்லாவற்றிற்கும் பயன்படுத்துகிறோம்! கில்லாடிகள்! அரசு சாரா



சேவை நிறுவனங்களோடு (NGOs) முடிந்த வகைகளிலெல்லாம் இணைந்து செயல்படலாம். சமூகச் சேவையுடன் சுவிசேஷப்பணி எப்பொழுதும் சேர்க்கப்படவேண்டும் என்பது கட்டாயமல்ல (மத் 5:45).

**(5)** இறையரசில் சேர்க்கப்பட்ட மக்களுக்காகவும், நிறுவப்பட்ட சபைகளுக்காகவும் அறுப்பின் ஆண்டவரைத் துதிப்போம். **<u>புதிய சபைகளுக்கான எதிர்காலத் தலைவர்களை</u>** உருவாக்குவதில் முதல் நாள் துவக்கி மிஷனரிகள் கருத்தாயிருக்கவேண்டும். மூன்றாண்டுகள் ஊழியம் செய்த பிறகு அல்ல, துவக்க முதலே சீடர்களைத் தெரிந்தெடுப்பதில் நமதாண்டவர் தீவிரம் காட்டினார் (மத் 4:19-22; யோ 1:43). மிஷனரிகள் ஒரு சில ஆண்டுகள் மட்டுமே மேய்ப்பர்களாய்ச் செயல்படவேண்டும். அவர்கள் இடம் விட்டு இடம் நகரும் சலன ஊழியராகவே (mobile ministers) இருக்கவேண்டும். புதிய சபைகளை ஒரு சில மூப்பர்கள் வசம் விட்டுவிடவேண்டும். இவ்விதம் களச்சபைகளுக்குச் சுயாட்சி கொடுக்கப்படாவிடில், ஊழியத்தை உள்ளூரார் சொந்தமாக்கிக்கொள்ளமாட்டார்கள்; அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள ஒன்றுபட்டு நிற்கமாட்டார்கள். வெளிநாட்டு மிஷனரிகளோடு ஒப்பிடுகையில் நமது தரம் எவ்வளவோ குறைவாயிருந்தாலும், சபைகளையும், பெரிய ஆலயக் கட்டிடங்களையும் அவர்கள் நமது தலைவர்களிடம் விட்டுச் செல்லவில்லையா? நம்பப்படும்போதுதான் மக்கள் வளர்வர். உள்ளூர்ப் பழங்குடிச் சபைகளுக்கே ஊழியச் சொத்துக்கள் சொந்தமாக்கப்படுவதுதான் என்றைக்கும் பாதுகாப்பு. நற்செய்திப் பேராணையைத் தமது சீடரிடம் கொடுத்து ஆண்டவர் விடைபெற்றபோது அவர்களிடம் இல்லாத குறைபாடுகளா? (மத் 28:17-20; மாற் 16:11-15; லூக் 24:25,48). அண்டப் புளுகுகளும், காட்டு மிராண்டிகளும், சாப்பாட்டு ராமன்களும் நிறைந்துள்ள கிரேத்தா எனும் தீவிலேயே சபைத் தலைமைக்கு மூப்பர்களை ஏற்படுத்த தீத்துவினால் முடிந்ததே (தீத் 1:5,12). நமது சுதந்திரத் தாய்நாட்டில் காலனி ஆதிக்கம் ஒழிக! களச்சபைகளை நிறுவிய மிஷனரிகள் அவ்வப்போது இச்சபையார்களை வந்து சந்தித்து ஊக்குவிக்கலாம், ஆலோசனைகள் தரலாம் (அப் 14:21,22; 15:36).

களைப்பான பயணங்கள் மற்றும் அடிக்கடியான சிறைவாசங்களினால் நேரடியாய்ச் சபைகளைச் சந்திக்க முடியாத வேளைகளில் அவை களுக்கு மிஷனரி பவுல் கடிதங்கள் அனுப்பினார்.

தென்னிந்தியக் கிறிஸ்தவர்கள் தாங்கள் காணிக்கை அதிகம் கொடுப்பதால் வட இந்தியக் களச்சபைகள்மீது அதிகாரம் செலுத்து வது இந்நாட்களில் விரும்பப்படவில்லை. (தமிழகத்தைச் சேர்ந்த இந்தியக் கிறிஸ்தவன் நான்). இந்திய மிஷனரி நிறுவனங்கள் பல தென் மாநிலங்களிலேயே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன; புதிய சபைகள் செயல்படவேண்டுமானால் அந்தந்த மாநிலங்களில் அவை பதிவு செய்யப்படவேண்டுமென்று அரசு வலியுறுத்துமானால் நாம் என்ன செய்வோமோ? நம்மை விவிலியப் பாணிக்கு நேரே விரட்டி விடக் கிறிஸ்தவம் சாராத அரசையே ஆண்டவர் பயன்படுத்தலாம்! தேசிய அளவில் இன்று நமது பிரதமர் மோடி அவர்களுக்குக் கிடைத்துள்ள ஆதரவு 70%. களச்சபைகளை ஒரேயிடத்திலிருந்து கட்டுப்படுத்துவது (central control) திருமறைக்கு உகந்ததல்ல. முதல் தலைமுறைத் தலைவர்கள் செய்த தவறுகளை நாமும் செய்யவேண்டுமா என்ன? புதுச்சபையின் உறுப்பினர்களே தங்களது ஊரார், இனத்தார், அயலகத்தாருக்கு நற்செய்தி அறிவிக்கத் துவங்கி விட்டால் சபை வளர்ச்சி துரிதப்படும் (1 தெச 1:8-10). ஒவ்வொரு வரும் இன்னொருவரைச் சந்திக்கத் துவங்கிவிட்டால், ''கூட்டல்'' (addition) வேகத்தில் அல்ல, ''பெருக்கல்'' (multiplication) வேகத் தில் சபை வளரும் (அப் 9:31; 12:24; 19:20). ஆயர்கள் அல்ல, ஆடுகள்தான் குட்டிபோடும்! ''முழுநேரப்பணியாளர் அல்லாத சராசரிக் கிறிஸ்தவர்களே திருச்சபைச் சரித்திரத்தின் இறுதி அத்தியாயத்தை எழுதி முடிப்பர்'' என்ற மிஷனரி-சுவிசேஷகர் T. L. ஆஸ்போர்ன் (1923-2013) அவர்களின் கூற்றை ஆயிரம் தடவை வேண்டுமானாலும் சொல்லுவேன்!

**(6) ''கூடாரத் தொழில் மிஷனரிகள்''** (Tentmaking Missionaries) என்ற காரணப்பெயரைக் கண்டுபிடித்தவருக்கு நன்றி! சுவிசேஷம்



ஓரளவு அறிவிக்கப்பட்டுள்ள தங்கள் பிராந்தியங்களிலிருந்து, தாங்களாகவே வேலையிடமாற்றம் கேட்டு அல்லது புதிய வேலை தேடி, நற்செய்தி வாசனை அதிகம் வீசியிராத இடங்களுக்கு இடம் பெயரும் விசுவாசிகளையே இப்பெயரால் அழைக்கிறோம். தம்பதியர் இருவரும் வேலையிலிருப்பவர்களானால், இவ்விதம் மாநிலம் விட்டு மாநிலம் நகர்வது அவ்வளவு எளிய காரியமல்ல. யோசேப்பைப் போல எகிப்திற்கும், தானியேலைப் போல பாபிலோனுக்கும் சூழ் நிலைகள் அவர்களைத் தள்ளிச் சென்றால்தான் இது பெரும்பாலும் சாத்தியமாகும். ஆங்காங்கே ஏற்கனவே இருக்கும் பழைய சபை கள்மீது விண்ணிலிருந்து எழுப்புதல் ஆசீர்வாதங்கள் ஊற்றப்பட்டு, சபை உறுப்பினர் ஒவ்வொருவரும் தனியாள் ஆத்துமாதாயப்பணிக் கும் அயலக நற்செய்தியறிவிப்பிற்கும் உந்தித் தள்ளப்பட்டால்தான் எதிர்பார்க்கும் விளைவு கிட்டும். இது நடக்கவேண்டுமானால், தமிழகம், ஆந்திரம், கேரளம் ஆகிய மாநிலங்களிலுள்ள பிரசங்கி மார் இம்மாநிலங்களிலுள்ள தங்கள் ஊழியங்களைக் குறைத்துக் கொண்டு, வட மாநிலச் சபைகளின் உயிர்மீட்சிக்காய்ப் பாடுபடு வதில் தங்கள் நேரத்தைப் பெருவாரியாய் முதலீடு செய்யவேண்டும். இம்மூன்று மாநிலங்களிலும் இப்பொழுது பிரசங்கிமார் தேவைக்கு அதிகமாகவே இருக்கின்றனர்! சொந்த சாம்ராஜ்யங்கள் கட்டுபவர்கள் அல்ல, இறையரசின் விரிவாக்கத்திற்காய் உழைப்பவர்களே பார தத்தைப் பிரகாசிக்கச் செய்வதற்கான இவ்வழைப்பை ஏற்பர்!

இந்தி பேசப்படும் மாநிலங்களில் இன்னும் விரிவான தாக்கம் ஏற்படுத்தவும், தங்களது நிறுவனங்கள் முழுவதிலும் தேசியக் கலாச்சாரத்தை மேலோங்கச் செய்யவும், தென்னகத்திலிருந்து இயங்கும் மிஷனரி நிறுவனங்கள் தங்கள் **தலைமையகங்களை** வடக்கு நோக்கி நகர்த்த யோசிக்கலாம். ''சுவிசேஷ எதிரொலி மிஷ னரிச் சங்கம்'' (GEMS) தனது தலைமையகத்தை மிஷனரிகளின் கல்லறைத் தோட்டம் என்றழைக்கப்படும் பீஹாரிலும், ''மஹாராஷ் டிர கிராமப்பணி இயக்கம்'' (MVM) தனது தலைமையகத்தை RSS தலைமையகம் உள்ள நாக்பூர் நகரிலும் அமைத்துச் செயல்படுகின்றன. நாம் வடக்கு நோக்கி நகர விரும்பினால், இவ்விரு நிறுவனங்களின்

தலைவர்களாகிய அன்புச் சகோதரர்கள் அகஸ்டின் ஜெபக்குமார் அவர்களும், குலோத்துங்கன் அவர்களும் நமக்கு நல்லாலோசனை தருவார்கள். நமது தற்பெருமைக்கு (ego) சமாதி கட்டிவிட்டு, மற்ற வர்களிடமிருந்து கற்றுக்கொள்ள முனைவோம். எந்த நிறுவனமும் தன்னில்தானே நிறைவானது அல்ல.

**(7)** கரோனா பாதிப்பினால் நமது பொருளாதாரம் தளர்ந்துவிட்ட (slowdown) நிலையிலிருந்து தகர்ந்துவிட்ட (shutdown) நிலைக்குச் சரிந்துள்ளது. இதில் அதிகம் பாதிக்கப்பட்டது கீழ்மட்ட வருவாய் வகுப்பினரே (lower income group). இந்திய மிஷனரிகள் இவ்வகுப்பையே சேர்ந்தவர்கள். குறைந்தபட்ச ஊதியச் சட்டமாவது (Minimum Wages Act) நமது இயக்கங்களில் பின்பற்றப்படுகிறதா என்பது கேள்விக்குறிதான். ஒரு மிஷனரியைத் தாங்க மாதம் ரூ. 5000/- அல்லது சற்றுக் கூடுதலாக அனுப்பிவைக்கிறோம் என்று சபைகள் தம்பட்டம் அடிக்கின்றன. சபையினரின் சராசரி மாதச் சம்பளம் இவ்வளவுதானோ? மிஷனரிகளாய்ச் செல்ல விரும்பும் வாலிபர், நங்கையரின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துவிட்ட தில் வியப்பென்ன? அடிப்படைத் தேவைக்கான பொருட்களின் விலையே உச்சத்திற்கு ஏறியிருக்கும் இக்காலத்தில் **மிஷனரிகளின் சம்பளம்** கணிசமாய்க் கூட்டப்படவேண்டும்; குறைந்தது இரு மடங்காக்கப்படவேண்டும். அவர்களில் பலர் ஏற்கனவே கடன் சுமை யில் அழுந்திக்கொண்டிருக்கின்றனர். தங்களது நிறுவனங்களி லிருந்தோ, வெளியிடங்களிலிருந்தோ கடன் வாங்கித்தான் தங்களது பிள்ளைகளின் கல்விக்காவும் திருமணங்களுக்காகவும் செலவழிக் கின்றனர். முன்பணமாய் வாங்கிவிட்ட இத்தொகைகள் கழிக்கப்படு வதால் பணியிலிருந்து ஓய்வுபெறும்போது ஊழியர் பலர் வெறுங் கையாகவே சொந்தவூர் திரும்புகின்றனர். வாழ்க்கைத்துணை இறந் ததும், சம்பளம் பாதியாகிவிடுவதால், கணவனை இழந்தோரும் மனைவியை இழந்தோரும் படும் பாடு கொஞ்ச நஞ்சமல்ல. ஓய்வு பெற்ற மிஷனரிகளுக்குக் கொடுக்கப்படும் ஓய்வூதியம் (pension) என்பது சிலருக்கு வீட்டு வாடகைக்குக்கூட போதுமானதாயிருப்ப தில்லை. முதிர்வயது வியாதிகள் நிலைமையை இன்னும் மோச



மாக்குகின்றன. *''இந்திய மிஷனரிகள் படும் பாடுகள்'' (Sufferings of Indian Missionaries)* என்ற தலைப்பில் எழுதப்படவிருக்கும் கட்டுரைக்கு மீதிக் குறிப்புகளைச் சேர்த்துவைக்கிறேன்.

தங்களது ஊழியர் எண்ணிக்கையை 300 முதல் 500க்கு மேல் கூட்டாதீர்கள் என்று மிஷனரி நிறுவனங்களுக்குப் பல ஆண்டு களாய்ச் சொல்லி வந்திருக்கிறேன். 1000 ஊழியரைக் கொண்டுள்ள ஒரே நிறுவனத்தைவிட தலா 300 ஊழியர் உள்ள இரண்டு அல்லது மூன்று நிறுவனங்கள் இருக்கட்டுமே. எனது வார்த்தைகள் செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று. எனக்கு விசுவாசக் குறைவு என்று மக்கள் எண்ணினர். துணிகரத்தை (presumption) விசுவாசம் (faith) என்று நினைத்துவிடக்கூடாது (லூக் 14:28-33). நமது நிறுவனங்கள் பலவற்றில் நிர்வாகத் தடுமாற்றங்களுக்குக் குறைவில்லை. ஊழியர் சம்பளம் மற்றும் வழக்கமான செலவுகளுக்குக் குறைந்தது இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குப் போதுமான மாரிக்காலச் சேமிப்பு இல்லாத நிறுவனங்கள் அளவுக்குமீறி வளர்ந்துவிட்டன என்றே சொல்லவேண்டும். ''அன்றன்றுள்ள அப்பம்'' வேண்டிடும் ஜெபத்தை எனக்கு எதிராய் எடுத்துக்காட்டாதேயுங்கள். எனது கருத்தை விளக்க இங்கு எனக்கு இடம் போதாது. குடும்பக் கட்டுப்பாட்டில் (family planning) எனக்கு நம்பிக்கை உண்டு; உங்களுக்கில்லையோ? ஏற்கனவே மிகப்பெரியதாய் நீங்கள் வளர்ந்துவிட்டீர்கள் என்றால், பராமரிக்கக்கூடிய அளவுக்கு இரண்டு மூன்று துண்டுகளாய்ப் பிரிப் பது நலம். பல புதிய தலைவர்கள் எழுந்துவரவும் அது வழிவகுக்கும். நிறுவிய தலைவர்களது சவால் நிறைந்த குரல்கள் அமர்ந்த பின்னர் பெருமளவில் பணம் திரட்டுவது அவ்வளவு சுலபமல்ல. வெளி நாட்டு நன்கொடைகளைத் தடுத்து நிறுத்திய அரசுக்குப் பின்னிருந்து தேவனது கரம் செயல்படவில்லை என்று யார் சொல்ல முடியும்? (யோபு 12:9). மீண்டெழ முடியாத நிலை வருமுன், மிஷனரித் தலை வர்கள் தங்களது மூத்த ஊழியர் மற்றும் முக்கிய ஆதரவாளர்களைக் கூட்டி யாவற்றையும் விலாவாரியாக விவாதித்து ஆவன செய்யும்படி வருந்திக் கேட்கிறேன். கலந்துரையாட நீங்கள் கூடிவரும்போது தீர்க்கதரிசனத் தொனி உங்களுக்குக் கேட்கத் தேவன் அருள்புரிவாராக

(அப் 15:13-17). முன்னேற்றம் என்றால் எந்த மாற்றமும் வரவேற்கத்தக்கதே. வளைந்து கொடுப்போர் பாக்கியவான்கள்; அவர்கள் முறிந்துபோகமாட்டார்கள்!

**(8) சபைகள்-சங்கங்கள் உறவு** (Church-Missions Relationship) இன்னும் சுமுகமாயில்லை. சங்கங்கள் பக்கம்தான் தவறு அதிகம். நாம் சபைகளுக்குப் ''பதிலானவை'' (substitute) அல்ல, அவற்றிற்குப் ''பக்கபலமானவை'' (supplement) என்று ஊழியத் துவக்கக் காலங்களில் சொல்லிவந்தோம். நமது இன்றையச் செயல்பாடுகள் இதனை நிரூபிக்க முடியுமா? ஒரு சபையிலுள்ள அங்கத்தினர் ஒருவரைத் தங்களது இயக்கத்திற்கு ஒரு ஜெபக்குழுத் தலைவராக, அல்லது காணிக்கை வசூலிப்பவராக, அல்லது மாவட்ட/பிராந்தியத் தலைவராக நியமிக்குமுன் அவ்வியக்கத் தலைவர்கள் அச்சபை மேய்ப்பரிடம் ஒப்புதல் கேட்கிறார்களா? நமது நிறுவனத்தின் முக்கிய நபர்களில் ஒருவர் இன்னொரு ஊழியத்திலும் ஈடுபாடு கொண்டால் மட்டும் நமக்குக் கோபம் வருவது ஏனோ? உள்ளூர்ச் சபைகளிலுள்ள வாலிபர் நங்கையருக்கு, நாமாக முன்வந்து, அயலக நற்செய்திப் பணிக்குப் பயிற்சி கொடுக்கிறோமா? உங்கள் சபை மேய்ப்பருக்கு மிஷனரிச் சிந்தை இல்லையெனில், மிஷனரிப்பணிக் காரியங்களில் தேறியுள்ள நீங்களே அவருக்கு மிஷனரிச் சிந்தை வரவைக்கவேண்டும்; அது ''உங்கள்'' பொறுப்பு! காணிக்கை கொடுப்பதை மட்டும் மிஷனரிச் சிந்தை என்று சொல்லிவிட முடியாது. பின்வாசல் வழியாய் உள்ளே நுழைவது நமது பிரதான மேய்ப்பருக்குப் பிடிக்காத காரியம் (யோ 10:1). சபைத் தலைவர்களோடு சங்கத் தலைவர்கள் உட்கார்ந்து பேசி மன இறுக்கங்களைத் தளர்த்திக்கொள்ளவேண்டும். திருச்சபைகளையும் திருச்சங்கங்களையும் ஒன்றாகவே அரசு பார்க்கிறது. வரும் நாட்களில் சட்டங்கள் இன்னும் கடுமையாகலாம். இனி வரும் கொடிய நாட்களில் சபைகளுக்குச் சங்கங்களும், சங்கங்களுக்குச் சபைகளும் கட்டாயம் தேவைப்படும். தனி நபர்கள் மட்டுமல்ல, நிறுவனங்களும் பிரசங்கி 4:9-12இன் தத்துவங்களைப் பின்பற்றவேண்டும்; சபைகளுக்கும் சங்கங்களுக்கும் இவ்வசனப்பகுதி இன்றியமையாதது. ''திருச்சங்கங்களுக்காகத் திருச்சபைகள் அல்ல,



திருச்சபைகளுக்காகவே திருச்சங்கங்கள்'' என்று மிஷனரித் தரிசனம் கொண்ட நான் அடித்துச்சொல்வேன்! (Churches don't exist for Missions, but Missions are for Churches!). திருச்சபைதான் கட்டிடம் (building); திருச்சங்கம் சாரம்தான் (scaffolding). எவ்வளவு தெளிவாக இது நமக்குப் புரிகிறதோ, அவ்வளவு இருதிறத்தாரும் பயனடையலாம். சபைகளின் எழுப்புதலுக்காய் மிஷனரிச் சங்கங்கள் உழைக்கவேண்டும். நமது மாதாந்திர வெளியீடுகள் வெறுமனே நமது ஊழிய முன்னேற்றத்திற்கு என்றிருக்கக்கூடாது. வாசகருக்கு அவை பலமான ஆகாரம் தரவேண்டும்.

மேய்ப்பர்கள் ஐக்கியம் (Pastors' Fellowship) மற்றும் மிஷனரி இயக்கங்கள் ஐக்கியம் (Missions' Fellowship) என்று பல்வேறு நகர்களில் கூடுகைகள் நடைபெறுவது ஊக்கமளிக்கிறது. இவற்றில் பங்குபெறுவோரது எண்ணிக்கை குறைவென்றாலும் பரவாயில்லை. இப்படித் தனித்தனியே கூடுவது தவிர்த்து, சபைப் பிரதிநிதிகளும் சங்கப் பிரதிநிதிகளும் இருமாதங்களுக்கு ஒருமுறையாவது கூடிவருவது பெரும் பயனளிக்கும். பேதுருவுக்குப் பவுல் வேண்டும், பவுலுக்குப் பேதுரு வேண்டும். ஒருவரையொருவர் பாராட்டி ஊக்குவிப்பதுதான் முதிர்ச்சிக்கு அடையாளம் (2 பேது 3:14-16; கலா 2:7-9). அண்ணன் எமில் ஜெபசிங் அவர்களது பாடல் நினைவுக்கு வருகிறது: *''இருள் சூழும் காலம் இனி வருதே; நம்மிடை உள்ள ஐக்கியமே வெற்றியும் தோல்வியும் ஆக்கிடுமே!''* 2013இல் அவர்கள், தனது 72ஆம் வயதில் மகிமைக்குள் நுழையுமுன், வேலூர் CMC மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோது, எனது காதுகளில் மெல்லிய குரலில் சொன்ன வார்த்தைகள் இதோ: ''தம்பி, இந்தியாவிலுள்ள முதிர்ந்த தேவ ஊழியரில் ஏறத்தாழ இருபது பேர், எந்த நிகழ்ச்சி நிரலுமின்றி, தேவனுக்குமுன் காத்திருந்து இனிவரும் ஆண்டுகளில் இந்நாட்டில் அவரது பணி குறித்த அவரது சிந்தையைப் புரிந்துகொள்ளக் கூடிவரவேண்டும் என்ற பாரம் என்னில் அதிகரித்து வருகிறது'' (அப் 13:1,2). இது நடந்தால் நல்லது!

20 ஏப்ரல் 2020

**15**

# அடுத்து என்ன?

## What next?

அடுத்து என்ன? உலகின் முடிவுக்குள் விரைந்துகொண்டிருக் கிறோமா? நிலைமை முன்னேறுமா மோசமாகுமா? கரோனா நச்சுக் கிருமி ஏற்படுத்தியுள்ள பேரழிவின் இக்காலத்தில் நமது மனதைக் குழப்பும் கேள்விகளே இவை. இக்கட்டுரையை இத்தலைப்பில் எழுதுவதற்கு எனக்குத் துணிவு தந்தது என் கையிலுள்ள பழைய பைபிள்தான்!

பைபிள்தான் திருவார்த்தை என்று விசுவாசிக்கும் சிறுபான்மை யினரைச் சேர்ந்தவன் நான். 66 புத்தகங்களைக் கொண்ட இந்நூலகம் 1189 அத்தியாயங்களையும் 30,000 வசனங்களையும் உள்ளடக்கி யுள்ளது. இவற்றில் 8,000 வசனங்கள் முன்னறிவிக்கும் தீர்க்கதரி சனமாகும். அப்படியானால், பைபிளில் ஏறத்தாழ 25% இனி நிகழ விருப்பவற்றை முன்னறிவிக்கிறது என்று பொருள். எனவேதான் ''*தீர்க்கதரிசன* வசனம்'' (2 பேது 1:19-21) அல்லது ''*தீர்க்கதரிசன* ஆகமங்கள்'' (ரோ 16:25) என்று பைபிள் அழைக்கப்படுகிறது.

திருவிவிலியத்தில் **கொள்ளை நோய்கள்** குறித்து அடிக்கடி வாசிக்கிறோம். ஆபிரகாமின் மனைவியின் அழகில் மயங்கி அவளை எடுத்துக்கொண்ட மன்னன் பார்வோனுக்கும் அவன் இல்லத்தினருக் கும் தேவன் அனுப்பியது முதலாம் பெரிய வாதை (ஆதி 12:14-17). அடுத்து, எபிரெய மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க மறுத்து, தனது மனதைப் பார்வோன் கடினப்படுத்தியபோது எகிப் தின்மீது தேவன் அனுப்பிய பத்து வாதைகள் குறித்து வாசிக்கிறோம் (யாத் 7-12; யோசு 24:5). பாலைநிலத்தில் அற்புதமாய்த் தேவன்



உணவளித்ததில் திருப்தியடையாது, தங்கள் இருதயங்களில் எகிப்திற்குத் திரும்பிய இஸ்ரவேலரை அவர் மகா பெரிய வாதையால் வாதித்தார் (எண் 11:33; அப் 7:39). மன்னர்கள் மற்றும் தீர்க்கர்கள் காலங்களிலும் கொள்ளை நோய்கள் வந்துள்ளன. தேவாலயப் பிர திஷ்டை ஜெபத்தின்போது அரசன் சாலமோன் கொள்ளை நோய் களைக் குறிப்பிடுகிறார் (2 நாளா 6:28). கர்த்தரைத் தனது புகலிட மாகவும் அரணாகவும் நம்பி அவரது நிழலில் தங்கியிருப்போர் வாதை யிலிருந்து காக்கப்படுவர் என எவரும் விரும்பும் 91ஆம் சங்கீதம் வாக்களிக்கிறது (வச 1,2,10). முடிவாக, கடவுளது கோபத்தின் வெளிப்பாடுகளாய் உலகில் அனுப்பப்படவிருக்கும் பல வாதை களைக் குறித்து வெளிப்படுத்தல் புத்தகத்தில் வாசிக்கிறோம் (வெளி 6:17; 16:1; 19:15).

**கொள்ளை நோய்கள்** என்பது தேவனது கோபக்கனலின் ஒரு வெளிப்பாடு என்றே திருமறைச் சரித்திரம் காட்டுகிறது (லேவி 26:25; எண் 25:8,9; உபா 28:15,20-22; எரே 29:18,19; 34:17; எசேக் 5:11,12). கொள்ளை நோய்களைத் தேவனது நியாயத்தீர்ப்பு என்றே தீர்க்கர்கள் முழங்கினர். மக்கள் மனந்திரும்பி மன்றாடியபோது அவை நிறுத்தப்பட்டன (யாத் 8:12,13; எண் 16:46-48; 2 சாமு 24:25; சங் 106:28-31). மக்களது கவனத்தை ஈர்க்கக் கொள்ளை நோய்களுக்கு நிகர் எதுவுமில்லை! கிறிஸ்தவச் சிந்தனையாளர் C. S. லூயி (1898-1963) என்பவரது கூற்று: ''நாம் மகிழ்ந்திருக்கும் போது தேவன் மென்குரலில் பேசுகிறார்; நமது மனசாட்சியில் சத்தமாய்ப் பேசுகிறார்; நமது வேதனைக் காலத்திலோ கத்துகிறார்; செவிட்டு உலகைத் தட்டியெழுப்ப அது அவரது ஒலிபெருக்கி!''

''உமது வருகைக்கும், உலகின் முடிவுக்கும் அடையாளம் என்ன?'' என்று இயேசுவிடம் சீடர்கள் வினவியபோது, யுத்தங்கள், பஞ்சங்கள் போன்றவையுடன் ''**கொள்ளை நோய்கள்**'' என்பதையும் ஓர் அடையாளமாய் அவர் வரிசைப்படுத்தினார் (மத் 24:3,7). கி.பி. 165ஐ அடுத்து எத்தனையோ கொள்ளை நோய்கள் வந்துள்ளன.

இதோ அவற்றில் சில: அன்டோனைன் கொள்ளை நோய், கி.பி. 165-180, 50,00,000 பேர் பலி; ஜஸ்டினியன் கொள்ளை நோய், கி.பி. 541-542, 10,00,00,000 பேர் பலி; ஜப்பானிய பெரியம்மை, கி.பி. 735-737, 10,00,000 பேர் பலி; கரிய மரணம், கி.பி. 1331-1352, 20,00,00,000 பேர் பலி; காலரா, கி.பி. 1846-1860, 10,000 பேர் பலி; ரஷ்ய காய்ச்சல், கி.பி. 1889-1894, 10,00,000 பேர் பலி; ஸ்பானிய காய்ச்சல், கி.பி. 1918, 10,00,00,000 பேர் பலி; எபோலா, கி.பி. 2014-2016, 11,000 பேர் பலி; இப்படிப் பல. சில வெளியீடுகளிலிருந்து சேகரிக்கப்பட்ட இத்தகவல்களின் புள்ளி விவரம் முற்றிலும் சரி என்று சொல்வதிற்கில்லை, ஆனால் எவ்வளவு பெரிய சேதம் என்பதைப் பாருங்கள்! இப்பொழுது அகிலவுலக நாடுகளை வாட்டிக்கொண்டிருக்கும் கரோனா தொற்றுநோயினால் பாதிக்கப்பட்டோர் மற்றும் பலியானோரின் எண்ணிக்கை நம்மைப் பதற வைக்கிறது. இதுதான் கடைசியான கொள்ளை நோயா? அதுவே எனது வாஞ்சை, ஆனால் அது சாத்தியமில்லை என்றே தோன்றுகிறது! அதிமோசம் ஒருவேளை இனிதான் இருக்கலாம்!

மேற்கூறப்பட்ட கொள்ளை நோய்க் காலங்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் தாங்கள் உலகின் முடிவுக்குள் வந்துவிட்டதாகவே எண்ணியிருப்பர். ஆனால் யுத்தங்களையும், பஞ்சங்களையும், கொள்ளை நோய்களையும் முன்னறிவித்த இயேசுவின் வார்த்தைகளின் தெளிவைக் கவனியுங்கள்: மத் 24:6,8, **''முடிவு** உடனே வராது ... இவையெல்லாம் பேறுகால வேதனைகளுக்குத் **தொடக்கம்.''** அப்படியானால், நாம் வாழும் இக்காலம் இறுதி நாட்கள்தானே? நிச்சயமாகவே இவை இறுதி நாட்கள்தான், ஆனால் இவ்விறுதி நாட்கள் எப்பொழுது தொடங்கின எனப் புரிவது அவசியம். தமது முதல் வருகை மூலம் இறுதி நாட்களை இயேசு தொடங்கிவைத்தார்: எபி 1:1,2, ''முற்காலங்களில் பகுதி பகுதியாகவும், பல விதங்களிலும், நமது மூதாதையரிடம் தீர்க்கர்கள் மூலம் பேசிய தேவன் இந்த **இறுதி நாட்களில்** தமது மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார்.'' கலாத்தியர் 4:4,5 மற்றும் 1 பேதுரு 1:20,21 ஆகிய



வசனங்களையும் வாசியுங்கள். ஆதிச் சீடர்மீது தூயாவியானவர் இறங்கியபோது, தீர்க்கன் யோவேலை மேற்கோள் காட்டி அப்போஸ்தலன் பேதுரு அதனைக் **''கடைசி நாட்கள்''** எனக் குறிப்பிட்டார் (அப் 2:17,18; யோவேல் 2:28,29). பேதுருவுக்கு விளங்கியபடி, அவை ''கடைசி நாட்கள்'' என்றால், நாம் இருப்பது கடைசி நாட்களின் கடைசிக்கட்டம், அப்படித்தானே? ஆம், சுவிசேஷ யுகமே கடைசி நாட்கள். இதுவே கிருபையின் காலம். சுவிசேஷத்தை விசுவாசிக்க அவிசுவாசிகளுக்கு இவை வாய்ப்பின் நாட்கள்; சுவிசேஷத்தை விளக்க விசுவாசிகளுக்கு இவை பொறுப்பின் நாட்கள். ''கர்த்தருடைய நாள்'' அல்லது ''அந்த நாள்'' அல்லது ''தேவனுடைய நாள்'' என்பதில் கடைசி நாட்கள் உச்சம் அடையும் ( 1 தெச 5:2; 1 கொரி 3:13-15; ரோ 13:11,12; 2 பேது 3:11-13). இது ''நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாள்'' என்றும் அழைக்கப்படுகிறது (1 கொரி 1:8; 5:5; 2 கொரி 1:14; பிலி 1:11; 2:14). பழைய ஏற்பாட்டைப் பொருத்தவரை, ''கர்த்தருடைய நாள்'' என்பது இறுதியான நியாயத்தீர்ப்பையே குறிக்கும் (யோவேல் 2:1-11; 3:14-21; மல் 4:5). அப்போஸ்தலன் யோவான் இதனைக் ''கடைசிக் காலம்'' அல்லது ''கடைசி மணிநேரம்'' (last hour) என்றழைக்கிறார் (1 யோ 2:18). நாம் வாழ்வது ''கடைசி நிமிடங்கள்'' என்பது தீர்க்கன் லியோனார்டு ரேவன்ஹில் (1907-1994) அவர்களது கணிப்பு!

சீடர்கள் இயேசுவிடம் வினவியதில் மூன்று பகுதிகள் உண்டு (மத் 24:3): (1) ''நீர் கூறியவை எப்போது நிகழும்?'' (2) ''உமது வருகைக்கு அடையாளம் என்ன?'' (3) ''உலகின் முடிவுக்கு அடையாளம் என்ன?'' இக்கேள்விகள் கேட்கப்பட்ட காலத்திற்கு இருபது நூற்றாண்டுகளுக்குப் பின்னர் வாழும் நாம் இம்மூன்று கேள்விகளையும் சேர்த்து, ***''அடுத்து என்ன?''*** என்று கேட்கிறோம். சீடர்களுக்கு இயேசு தந்த பதில் மிகவும் நீண்டது. ஏறத்தாழ 100 வசனங்கள் அடங்கிய இரு அத்தியாயங்களில் இது தரப்பட்டுள்ளது (மத் 24 & 25). நண்பரே, நேரமெடுத்து இவ்விரு அத்தியாயங்களையும் இரண்டு மூன்று முறை வாசித்து இறுதிக்காலத்தில் வாழும் நாம் எதை

உணர்ந்துகொள்ளவேண்டுமென்று இயேசு விரும்புகிறார் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். இவ்விரு அத்தியாயங்களுக்கு வேத வல்லுநர்களும் வியாக்கியானிகளும் பல்வேறு விளக்கங்கள் தந்துள்ளனர்; அவற்றில் சில ஒன்றுக்கொன்று முற்றிலும் முரண்பட்டவை. விபரங்களைக் குறித்த வித்தியாசங்களில் விவாதம் செய்வதை விட இயேசுவினது பதிலின் உட்கருத்தைப் புரிந்துகொள்வதிலேயே எனக்கு ஆர்வம். சீடர்கள் கேட்ட மூன்று கேள்விகளுக்குமான தமது பதிலை ஆண்டவர் ஓர் அட்டவணை போல வரிசைப்படுத்தவில்லை. குறிப்புகள் கலந்தும் பின்னியும் இருக்கின்றன. இது வகுப்பறையில் கொடுக்கப்பட்ட விரிவுரை அல்ல, ஒரு மலைமீது உரையாடல் பாணியில் கொடுக்கப்பட்ட பதில் (24:1).

■ 100 வசனங்களில் அடங்கியுள்ள இயேசுவின் பதிலின் முதல் வாக்கியமே எதுவென்று பாருங்கள்: ''ஒருவனும் உங்களை **வஞ்சிக்காதபடிக்** கவனமாயிருங்கள்'' (மத் 24:4). அநேகக் காரியங்கள் நிகழவிருக்கின்றன; அவற்றில் சில புரியும், மற்றவை புரியாது. ஆனால் நாம் கவனமாயிருந்து **வஞ்சகம்** என்பதற்குத் தப்பித்துக் கொள்ளவேண்டும். ''அநேக'' கள்ளக் கிறிஸ்துக்கள், ''அநேக'' கள்ளத் தீர்க்கர்கள் வருவர் என்பது இயேசுவின் முன்னறிவிப்பு (வச 5,11). அவர்கள் ''பெரிய'' அடையாளங்கள், அற்புதங்கள் செய்வார்களாம் (வச 24). இதனால் ''அநேகர்'' வஞ்சிக்கப்படுவார்களாம் (வச 5,11). ஐயகோ, ''தெரிந்துகொள்ளப்பட்டவர்களும்'' வஞ்சிக்கப்படுவார்களாம் (வச 24). வார்த்தைகள் இதைவிடக் கடினமாகவும், எச்சரிப்புகள் இதைவிடக் கண்டிப்பாகவும் இருக்கமுடியுமோ?

**உபதேச வஞ்சகம்** என்பது கிறிஸ்தவத்தில் ஒவ்வொரு தலைமுறையிலும் இருந்திருக்கிறது; ஆனால் நமது காலத்தில் தான் அது வானளாவி விட்டது. இவ்வித இறுதிக்கால உபதேச மாறாட்டத்தை அப்போஸ்தலர்கள் சுட்டிக்காட்டி எழுதியுள்ளனர். பவுல் எழுதியுள்ளது: ''தூயாவியானவர் தெளிவாய்க் கூறுகிறபடி, இறுதிக்காலத்தில் சிலர் ஏமாற்றும் ஆவிகளுக்கும், *பேய்களின்*



*போதனைகளுக்கும்* காதுகொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப்போவர்'' (1 தீமோ 4:1). ''ஒரு காலம் வரும். அப்போது மக்கள் *ஆரோக்கிய உபதேசத்தைத்* தாங்கமாட்டார்கள். மாறாக, செவித்தினவு கொண்டவர்களாய்த் தங்கள் தீய நாட்டங்களுக்கு ஏற்றவாறு தங்களுக்கெனப் போதகர்களைக் குவித்துக்கொள்வார்கள். சத்தியத்திற்குக் காதுகொடுக்க மறுத்துப் புனைகதைகளை நாடிச் செல்வார்கள்'' (2 தீமோ 4:3,4). பேதுரு தரும் எச்சரிப்புகளை 2 பேதுரு 2 மற்றும் 3ஆம் அத்தியாயங்களிலும், யோவானது எச்சரிப்புகளை 1 யோவான் 2:18-27 மற்றும் 2 யோவான் 7-11 ஆகிய வசனப்பகுதிகளிலும் வாசித்துப்பாருங்கள். இறுதிக்கால வஞ்சகத்திற்குத் தப்பித்துக்கொள்ள ஒரே வழி, **''திருவசனம்** ஒன்றே போதும்'' என்று நின்றுகொள்வதே. தங்களைத் தீர்க்கதரிசிகள் என்றழைத்துக்கொள்ளும் பலரது சத்தங்கள் நமது சமநிலையைப் பாதிக்க முயலும்போது, விண்ணரசின் சாவிகளை இயேசுவிடமிருந்து பெற்றுக்கொண்டவரும், அவர் தமது சபையைக் கட்டுவதற்கான பாறை எனும் வெளிப்பாட்டைப் பெற்றவருமான அப்போஸ்தலன் பேதுருவின் இவ் வார்த்தைகளைக் கவனியுங்கள்: *''அதிக உறுதியான* தீர்க்கதரிசன **வசனமும்** நமக்குண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்கும்வரை, இருண்ட இடத்தில் பிரகாசிக்கும் விளக்கு போன்ற அந்த **வசனத்தைக்** கவனித்திருப்பது நலம் ... **வேதத்திலுள்ள** தீர்க்கதரிசனம்'' (2 பேது 1:19-21).

நமது ஆன்மீகப் பயிற்சிகள் மற்றும் செயல்பாடுகளில் **திருமறைத்** தியானமும், திருமறைப் போதிப்பும் முதலிடம் பெறத் தவறும்போது தான் வஞ்சகம் தலைதூக்கத் துவங்குகிறது. எடுத்துக்காட்டாக, நமக்கு எத்தனையோ 6-மணிநேர, 8-மணிநேர, ஏன் 24-மணிநேர ஜெப நிகழ்ச்சிகளும் உண்டு. நல்லது, ஆனால் திடமான வேத ஆராய்ச்சிக்கும், வேதப் போதனைக்கும் இவ்வித நெடுநேரக் கூடுகைகள் உண்டா? இந்தச் சமநிலையிழப்பு ஆபத்து. எஸ்றா மற்றும் நெகேமியாவின் உயிர்மீட்சி, திரும்பக்கட்டுதல் மற்றும் சீர்திருத்தம் ஆகிய பணிக்காலத்தில் தேவனது புத்தகம் ஆறு மணிநேரம்

வாசிக்கப்பட்டு வியாக்கியானிக்கப்பட்டது; அடுத்த ஆறு மணிநேரம் பாவ அறிக்கைக்காகவும் தொழுகைக்காகவும் செலவிடப்பட்டது (நெகே 9:3). நமக்கு முழு இரவு ஜெபங்கள் உண்டு; ஆதிச்சபையில் முழு இரவு வேதப் போதகம் இருந்தது (அப் 20:7-11). ஆதிச்சபையின் அபார வலிமைக்கும் அமோக வளர்ச்சிக்கும் நான்கு காரணங்கள் அப்போஸ்தலர் 2:42இல் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன: ''உபதேசம், ஐக்கியம், அப்பம்பிட்குதல், ஜெபம்.'' எது முதலில் வருகிறது? **''உபதேசம்!''** ஓராண்டு திருமறைப் போதனை பெற்றுக்கொண்டிருந்த ஒரு குழுவினர்தான் கிறிஸ்தவர்கள் என்று முதலாவது அழைக்கப்பட்டவர்கள் (11:26). கிறிஸ்தவ நண்பரே, கூட்டம் கூட்டம் என்று ஓடாதீர்கள். வேலைப்பளு நிறைந்த வார நாட்களையடுத்து, ஞாயிறு ஆராதனை ஒன்றில் பங்கேற்றால் போதும். ஞாயிறு பிற்பகல் வேளைகளை, முடிந்தால் ஆராய்ச்சி வேதாகமங்களை வைத்துக்கொண்டு, வேதத்தைப் படிப்பதற்குச் செலவிடுங்கள். கிறிஸ்தவத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பார்ப்பதையும் குறைத்துக்கொள்ளுங்கள். திருவசனத்திற்குப் புறம்பான சரக்குகள் ஏராளம்! உங்களது தனித்தியான வேளைகளிலும், திருமறைத் தியானத்திற்கும் ஜெபத்திற்கும் நேரத்தைச் சமமாய்ப் பகிர்ந்துகொள்ளுங்கள். தேவப் பிரசன்னத்தில் ''உங்கள்'' வார்த்தைகள் கொஞ்சமாயிருக்கட்டும்! கேட்பதைக் கூட்டி, பேசுவதைக் குறைத்திடுங்கள் (பிர 5:1,2). உங்களது பாதுகாப்புக்காக இறுதிக்கால அறிவுரையாய் இதனை எடுத்துக்கொள்ளுங்கள். ஜெபம் இல்லாத வேத ஆராய்ச்சி வறட்சி; வேத ஆராய்ச்சி இல்லாத ஜெபம் அபாயம்.

தங்களுக்குத் தேவன் புதிய **மறைபொருள்களை** (இரகசியங்களை) வெளிப்படுத்தியிருக்கிறார் என்று சொல்லிக்கொண்டு பல பிரசங்கிமாரும், தீர்க்கதரிசிகளும் உங்களிடம் வருவர். அவர்கள் தேவதூதர் போல் தோன்றினாலும் ஓங்கிக் கதவடையுங்கள் (கலா 1:8). அப்போஸ்தலருக்கு வெளிப்படுத்தப்படாததும், திருமறையில் எழுதப்படாததுமான மறைபொருள் எதுவுமில்லை. **(1)** யூதரும் யூதரல்லாதவரும் திருச்சபையாகிய ஒரே திருவுடலுக்குள் உட்



படுத்தப்படுகின்றனர் என்பதே *''திருச்சபை குறித்த இரகசியம்''* (எபே 3:1-6,9). **(2)** கிறிஸ்து திரும்பிவரும்போது அழிவுக்குரிய நமது உடல் அழியாமையையும் சாகாமையையும் அணிந்துகொள்வதால் நாம் மாற்றுரு பெறுவோம் என்பதே *''மறுவருகையின் இரக சியம்''* (1 கொரி 15:51-54). **(3)** ஏற்கனவே செயல்பட்டுக்கொண்டிருக்கும் சாத்தானின் திட்டம் முழுநிறைவடையப் போவதைப் பற்றியதே *''அக்கிரமத்தின் இரகசியம்''* (2 தெச 2:7-10). **(4)** *''இஸ்ரவேலரைப்பற்றிய இரகசியம்''* என்பது அவர்கள் முடிவாக மறுபடியும் நிலைநிறுத்தப்படவிருப்பதைக் குறித்தது (ரோ 11:25-27). **(5)** *''விண்ணரசின் இரகசியங்கள்''* மத்தேயு 13இல் இயேசு தந்துள்ள ஏழு உவமைகளில் அடங்கியுள்ளன. கிறிஸ்துவின் முதல் வருகைக்கும் மறுவருகைக்கும் இடைப்பட்ட காலத்தை இவை வர்ணிக்கின்றன. **(6)** அப்போஸ்தலரும், குறிப்பாக மேன்மையான வெளிப்பாடுகள் பெற்ற பவுலடியாரும், சபை யுகத் திற்காய்ப் புதிய ஏற்பாட்டில் தந்துள்ள உபதேசமே *''விசுவாசத்தின் இரகசியம்''* என்பது (1 தீமோ 3:9, 2 கொரி 12:1,7). **(7)** திருச்சபையில் அனுபவிக்கப்படவேண்டியதும், அதின் மூலம் அறிவிக்கப்படவேண்டியதுமான கிறிஸ்துவின் பிறப்பு முதல் பரமேறுதல் வரையுள்ள வாழ்க்கையைப் பற்றியதே *''தேவபக்தியின் இரகசியம்''* (1 தீமோ 3:14-16). இதற்குமேல் நமக்கு ஒன்றும் தேவையில்லை. பைபிள் நிறுத்துமிடத்தில் நீங்களும் நிறுத்திவிடுங்கள். பைபிள் எதில் அமைதியாயிருக்கிறதோ அதில் நீங்களும் அமைதியாயிருந்துவிடுங்கள். ''எழுதப்பட்டதற்கு'' மிஞ்சி *நினைக்கவும்* கூடாது (1 கொரி 4:6). மறைபொருள்கள் தேவனுக்குரியவை, நமக்குரியவை அல்ல (உபா 29:29). எதையும் கூட்டாதிருங்கள், எதையும் மாற்றாதிருங்கள், எதையும் குறைக்காதிருங்கள் (வெளி 22:18,19). வெளிப்படுத்தல் புத்தகத்திலுள்ள ''ஆமென்'' என்பதோடு திருமறை வெளிப்பாடுகள் முடிவடைகின்றன; அவற்றை மட்டும் விசுவாசிப்பதே நமக்குக் கட்டாயம் (வெளி 22:21). திருமறையின் வேலிக்குள் நின்றுகொள்ளுங்கள்; இல்லையேல் பழைய சர்ப்பம் கடித்துவிடும் (பிர 10:8ஆ). படைக்கப்பட்ட வானங்களும் பூவுலகும்கூட அழிந்துவிடும்;

**தேவ வசனமோ** என்றும் நிற்கும். தமது சீடருக்கு இயேசு கொடுத்த பதிலிலேயே இக்கூற்று உண்டு (மத் 24:35). 2 பேதுரு 3:10ஐயும் பாருங்கள்.

திருமறையை இன்றையச் சூழலுக்குப் பயனுள்ள வகையில் வியாக்கியானித்து அதனை மனிதருக்குப் ''பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும்'' உண்டாகும் வகையில் நேரடியாய்ப் பேசுவதே இன்று **தீர்க்கதரிசன வரத்தின்** பிரதான நோக்கம் (1 கொரி 14:3; அப் 15:32). வரவிருக்கும் பேரிடர் அல்லது பேரழிவைத் தேவன் தமது ஊழியர் எவருக்காவது வெளிப்படுத்துவாரானால், அந்நபர் அதனைத் தேசியத் தலைவர்கள், உலகத் தலைவர்கள் மற்றும் திருச்சபைத் தலைவர்களுக்கு முறைப்படி அறிவித்து, பொது ஊடகங்கள் வழியாக மக்களுக்கு வெளியிடவேண்டும்; இக்கட்டான சூழலைக் கையாள அது யாவரையும் முன்னதாகவே ஆயத்தப்படுத்தும் (ஆதி 41:25-40; எரே 19:1-3; யோனா 3; அப் 11:27-30; மத் 10:27). இல்லையேல், அந்நபருக்குத் தேவன் தந்த வெளிப்பாடு வீணாகிறது.

■ *''அடுத்து என்ன?''* என்ற கேள்விக்குப் பதில் காண முயலும் இக்கட்டுரையில் தேவனது தீர்க்கதரிசன நாட்காட்டியில் **இஸ்ரவேலர்** பற்றிய காரியங்களை நாம் கவனியாது விடமுடியாது. புதிய ஏற்பாட்டில் ரோமர் 9,10,11 ஆகிய அத்தியாயங்கள் இஸ்ரவேலரின் எதிர்காலத்தை விவரிக்கின்றன. கிறிஸ்தவர்களாகிய நாம் இஸ்ரவேலரைக் குறித்து இன்று நினைவிற்கொள்ளவேண்டியவற்றை இங்கு சுருக்கமாய்த் தருகிறேன். இயேசுவின் சொந்த இனத்தாராகிய இஸ்ரவேலர் அவரைப் புறந்தள்ளிச் சிலுவையில் அறைந்தனர் (யோ 1:11; அப் 2:22,23). சுவிசேஷத்தை யூதர்கள் ஏற்க மறுத்தபோது யூதரல்லாதோர் பக்கமாய் அப்போஸ்தலர் திரும்பினர் (அப் 13:46, 47). யூதருக்கு மார்க்க வைராக்கியம் உண்டு, ஆனால் அது இறைவெளிப்பாட்டின் அடிப்படையிலானது அல்ல (ரோ 10:1-3). ஆனாலும் விசுவாசித்த ஒரு சிறு கூட்டம் யூதரில் இருந்தது (அப் 2:36,37; 13:43,45). இன்றும் அப்படித்தான் (ரோ 11:4,5). தேசிய அளவில்



இஸ்ரவேலர் அனைவரும் கிறிஸ்துவிடம் திரும்புவர் என்கிறது திருமறை (11:25-27). இது ஆபிரகாமுடன் தேவன் செய்துகொண்ட உடன்படிக்கையின் நிறைவேறுதலாய் இருக்கும் (வச 28-36). இது ஆராய்ந்து அறிய முடியாத தேவ ஞானம் (வச 33). எருசலேமுக்கு யூதர் திரும்பிவரத் துவங்கிவிட்டனர்; ஆனால் நாட்டளவில் அவர்கள் இயேசுவிடம் வரத் துவங்கவில்லை. அவர்களுக்காய் மோசே போலவும் (யாத் 32:32), இயேசு போலவும் (லூக் 19:41), பவுல் போலவும் (ரோ 9:1-3) ஜெபிக்கவேண்டியது நமது கடமை. எருசலேமின் சமாதானம் நமது ஜெபக்குறிப்புகளில் ஒன்றாக இருக்கவேண்டும் (சங் 122:6-8). ஆனால், பிரியமானவர்களே, இஸ்ரவேலரது காரியங்களில் அளவுக்குமீறி ஆர்வம் காட்டாதீர்கள். தேவனது இன்றையப் பிரதான நோக்கு இஸ்ரவேலரை அடுத்ததல்ல, அது திருச்சபையை அடுத்தது. இஸ்ரவேல் நாட்டிற்குப் புனித யாத்திரை செல்லப் பேரார்வம், எருசலேமில் கிறிஸ்தவக் கட்டிடங்கள் கட்டுதல் போன்ற செயல்பாடுகள் எல்லாம் பூவுலகில் இன்று நிறைவேற்றப்படவேண்டிய பிரதான இறைத்திட்டத்திலிருந்து நம்மைத் திசை திருப்பும், கவனம்!

■ இறுதி நாட்களைக் குறித்த தமது சீடரின் கேள்விகளுக்குப் பதில் கொடுத்துக்கொண்டிருந்த நமதாண்டவர் **உபத்திரவ காலம்** குறித்தும், தமது **மறுவருகை** குறித்தும் அதிகம் பேசினார் (மத் 24:15-44). இப்பகுதியில் 30 வசனங்கள் உண்டு! கிறிஸ்துவின் முதல் வருகை குறித்து பைபிளில் 100 தீர்க்கதரிசனங்கள் உண்டு; அவரது மறுவருகை குறித்தோ 300 தீர்க்கதரிசனங்கள் உண்டு. இரண்டாம் வருகையுடன் சம்பந்தப்பட்ட உபத்திரவ காலம், ஆயிரமாண்டு ஆளுகை, இறுதி நியாயத்தீர்ப்பு போன்ற நிகழ்வுகளின் வரிசை (chronology / order) மற்றும் தன்மை (character / nature) குறித்துத் தங்களது புரிதலில் கிறிஸ்தவர்கள் வெகுவாய் வேறுபடுகின்றனர். இந்த நிகழ்வுகளின் வரிசை குறித்து மாற்றுக் கருத்துக்கள் கொண்ட உண்மையும் உத்தமமுமான வேதப் பண்டிதர் பலருண்டு. இவர்களில் ஒவ்வொருவரது கருத்துக்கும் ஆதாரமாய் வியாக்கியானிக்கப்படக்கூடிய

திருவசனங்களும் உண்டு. வேறு எந்த உபதேசத்தையும்விட இதுவே கிறிஸ்தவர்களிடையே பெரும் பிரிவினை ஏற்படுத்தியுள்ளது! கிறிஸ்துவின் மறுவருகையுடன் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளின் வரிசை மற்றும் தன்மையைவிட அவரது வருகையின் நிச்சயமே அதிமுக்கியம் என்பது எனது நம்பிக்கை. கிறிஸ்து ''மெய்யாகவே'' வருகிறார், ''சீக்கிரமாய்'' வருகிறார் (வெளி 22:20). இறுதிக்கட்ட இந்நிகழ்வுகளின் வரிசை மற்றும் தன்மையை நாம் மாற்றமுடியாது, அது தேவனது விருப்பம். நாளைக்காய் இன்றைய **ஆயத்தமே** அத்தியாவசியத் தேவை. நாம் ஆயத்தப்படவேண்டிய ஒரு சில பகுதிகள் —

**(a)** ''**பரிசுத்தம்** இல்லாமல் ஒருவரும் தேவனைத் தரிசிக்க முடியாது'' (எபி 12:14). ''இரவில் திருடன் வருவதுபோல ஆண்டவர் வரும்போது'' இம்மண்ணுலகு நெருப்பினால் வெந்துருகிப்போகும் (2 பேது 3:10). உலகளாவிய இவ்விதப் பேரழிவை முன்னறிவித்த அப்போஸ்தலன் பேதுரு நமக்கு விடும் சவால்: ''இவ்விதம் இவை யெல்லாம் அழிந்துபோகவிருப்பதால் நீங்கள் எவ்வளவு **பரிசுத்த** நடக்கையும், தேவபக்தியும் உள்ளவர்களாய் இருக்கவேண்டும்!'' (வச 11). கர்த்தரை நாம் சந்திக்கும்போது அவரது சாயலாகவே மாற்றப்படுவோம். அவர்மீது இவ்வித நம்பிக்கை கொண்டுள்ள எவனும் அவர் தூயராயிருப்பதுபோல், தன்னையும் **தூய்மையாக்க** வேண்டும் (1 யோ 3:2,3).

**(b)** தமது வருகை மற்றும் உலக முடிவின் அடையாளங்களை வரிசைப்படுத்துகையில் இயேசு முன்னறிவித்தது: ''நெறிகேடு பெருகுவதால் பலரது **அன்பு** தணிந்துபோகும்'' (மத் 24:12). இதே பாணியில் அப்போஸ்தலன் பவுல் எழுதியது: ''கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வரும். எப்படியென்றால், மனிதர் சுபாவ **அன்பு** இல்லாதவர்களாய் இருப்பார்கள்'' (2 தீமோ 3:1-5). அப்போஸ்தலன் யாக்கோபு கொடுத்துள்ள அறிவுரை: ''சகோதரரே, நீங்கள் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாகாதவாறு, ஒருவர் மற்றவருக்கு எதிராக முறை யிடாதீர்கள். இதோ, நீதியரசர் வாசலில் நின்றுகொண்டிருக்கிறார்'' (யாக்



5:9). சபை எடுத்துக்கொள்ளப்படுதல் (rapture) உண்டா இல்லையா என்ற வாதம் சபையை எவ்வளவாய்ப் பிரித்துவிட்டது! Ruptured! துக்கம்!

**(c) பண** ஆசையும் **சிற்றின்பப்** பிரியமும் கடைசிக்காலத்தை ஆளத் துவங்கும் என்பது இயேசுவின் முன்னறிவிப்பு: லூக் 17:26-30, ''நோவாவின் காலத்தில் நடந்தது போலவே மனுமகன் காலத்திலும் நடக்கும்: பேழைக்குள் நோவா சென்ற நாள்வரை மக்கள் திருமணம் செய்துகொண்டும், உண்டும் குடித்தும் வந்தார்கள். வெள்ளப்பெருக்கு வந்து அனைவரையும் அழித்தது. அவ்வாறே லோத்தின் காலத்திலும் நடந்தது: மக்கள் உண்டார்கள், குடித்தார்கள், வாங்கினார்கள், விற்றார்கள், நட்டார்கள், கட்டினார்கள். சோதோமை லோத்து விட்டுப்போன நாளில் வானிலிருந்து பெய்த தீயும் கந்தகமும் எல்லா ரையும் அழித்தன. மனுமகன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும்.'' நமது இன்றைய உலகம் இப்படித்தானே இருக்கிறது! இரவில் ஆண்-பெண் களியாட்டுகள், விருந்துகள், மதுபானக் கடைகள், பல்வகை உணவகங்கள், பிரம்மாண்டமான அங்காடிகள், வானெட்டும் கட்டிடங்கள், நாகரீக ஆடையகங்கள், இப்படிப்பல. ''காலம் குறுகியது'' என்பதால் நியாயமான இன்பங்களிலும் அள வுக்குமீறிய அனுபோகம் கூடாது என்கிறது திருமறை (1 கொரி 7:29-31). சுகபோக வாழ்வு உபதேசமானது கிறிஸ்துவானவர் மற்றும் அவரது அப்போஸ்தலரது போதனைக்கு எதிராக லூசிபர் எழுதின சுவிசேஷம். இறுதி நாட்களில் செல்வத்தைக் குவிப்பதையும் விவிலியம் கண்டிக்கிறது (யாக் 5:3).

**(d)** ஒலிவ மலையில் ஆண்டவர் கொடுத்த தமது உரையில் **உக்கிராணத்துவத்தில்** (stewardship) உத்தமமாய் இருக்கவேண்டு மென்று வலியுறுத்தினார். வேலைக்காரர் உவமை (மத் 24:45-51) மற்றும் தாலந்துகள் உவமை (25:14-30) ஆகிய இரண்டின் மூலம் அவர் இதனை விளக்கினார். உலக அலுவலோ, ஆன்மீகப் பணியோ அதில் நமது கடின உழைப்பும் உத்தமும் காணப்பட வேண்டும் என்று

ஆண்டவர் எதிர்பார்க்கிறார். கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கி யிருப்போரிடம் சோம்பலுக்கும் அசதிக்கும் இடமே இருக்கக்கூடாது. தெசலோனிக்கேயா சபைக்குப் பவுல் எழுதிய தனது முதல் கடிதத்தில் கிறிஸ்துவின் மறுவருகையைத் திரும்பத் திரும்ப வலியுறுத்தியதால் (1:9,10; 2:19; 3:12,13; 4:13-17; 5:23), சில விசுவாசிகள் தங்களது வேலைகளில் கவனக்குறைவாகி, ஒரு சிலர் வேலை செய்வதையே நிறுத்திவிட்டனர். எனவே, தனது இரண்டாம் கடிதத்தில், ''உழைக் காதவன் உண்ணலாகாது'' எனக் கடிந்துகொண்டார் (3: 6-12). தாலந்துகள் உவமையில் ஒவ்வொருவருக்கும் ஒரு தாலந்தாவது தரப்பட்டது. தேவன் நமக்கென்று நியமித்துள்ள பணி எதுவாயினும் அதில் நாம் நம்மை முழுவதுமாக ஊற்றிச் செயல்படாவிடில், நாம் ''பொல்லாத சோம்பேறிகள்;'' நம்மை நரகத்தில்தான் தூக்கியெறிய வேண்டும் (மத் 25:14-30).

**(e)** இவ்வுலகில் **பாடுகள்** இல்லாதவர் எவருமிலர். கரோனா நச்சுக் கிருமி ஏற்படுத்தியுள்ள தர்ம சங்கடமான நிலையானது ஏழை- பணக் காரர் என்றோ, படித்தவர்-படியாதவர் என்றோ, நாகரீகமடைந்தோர்-நாகரீகமடையாதோர் என்றோ எவ்விதப் பாகுபாடும் காட்டவில்லை. முன்னேறிய நாடுகளுக்கும் பின்தங்கிய நாடுகளுக்கும் இடையேயும் எவ்வித வேறுபாடும் இல்லாது தாக்கம் ஏற்பட்டுவிட்டது. அப் போஸ்தலன் பவுலைப் பொருத்தவரை, ''படைப்பு அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத் தவிக்கின்றது'' (ரோ 8:22). தூயாவியானவரால் நிரப்பப்பட்ட விசுவாசிகளும் விதிவிலக்கல்லவே (வச 23). நமது தந்தையாம் தேவனிடம் அவரது பிள்ளைகளாக நாம் எந்த வேளையிலும் எந்த வேதனையிலும் செல்லலாம். ஆனால் இக்காலத்தில் நாம் படும் துன்பங்கள் எதிர்காலத்தில் நமக்காக வெளிப்படவிருக்கும் மாட்சியோடு ஒப்பிடத் தகுதியற்றவை என்பதை மறந்துவிடக்கூடாது (வச 18). உறைவிடங்கள் பல உள்ள தமது தந்தையின் விண்வீட்டில் நமக்கென்று ஓரிடத்தைக் கிறிஸ்து ஆயத்தம்பண்ணிக்கொண்டிருக்கிறார் (யோ 14:1-3). எனவே *மகிழ்வோம், மகிழ்வோம், தினம் அகமகிழ்வோம்!*



**(f)** ஒவ்வொரு மனிதனுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டுமென்று முதல் நூற்றாண்டில் கிறிஸ்துவானவர் நமக்கு **நற்செய்திப் பேராணை** தந்துவிட்டார் (மத் 28:18-20). தங்களது தலைமுறையினருக்கு நற்செய்தியறிவிக்கச் சீடர் தங்களாலியன்ற அத்தனையையும் செய்தனர். அடுத்து வந்த நூற்றாண்டுகள் அத் தனையிலும் மிஷனரிகள் உலகெங்கும் சென்று ஒவ்வொரு நாட்டி லும் திருச்சபைகளை நிறுவியுள்ளனர். நாம் அகிலவுலக நற்செய் திப்பணியின் இறுதிக்கட்டத்தில் இருக்கிறோம். செய்யவேண்டிய அறுவடை இன்னும் அதிகமாகவே இருக்கிறது, அறுவடையாளருக்கோ பற்றாக்குறை. ''இதுவே தகுந்த காலம்! இன்றே இரட்சிப்பின் நாள்!'' (2 கொரி 6:2). ஒவ்வொருவரும் தனது பாவங்களிலிருந்து மனந்திரும்பி, நித்திய இரட்சிப்படைவதற்காய் கிறிஸ்துவை விசுவாசிப்பதற்குப் போதுமான தருணம் தருவதற்காகவே கிறிஸ்து தமது வருகையைத் தள்ளிப்போட்டுக்கொண்டிருக்கிறார் (2 பேது 3:9). நண்பரே, நமது தலைமுறையில் சந்திக்கப்படாதோர் மற்றும் சபைக்குள்ளாக் கப்படாதோரைச் சென்றடையும்படி ஜெபத்தைக் கூட்டுவோம், கொடுத்தலைக் கூட்டுவோம், தியாகத்தைக் கூட்டுவோம், உழைப்பைக் கூட்டுவோம். ஒலிவ மலை அருளுரையில் இயேசுவானவர் திட்டமாய்ச் சொன்னது: ''விண்ணரசைப்பற்றிய இந்நற்செய்தி உலகெங்கும் அறிவிக்கப்படும்; அதன் பின்பு **முடிவு** வரும்'' (மத் 24:14).

**(g)** ஒலிவ மலையில் சீடர்களுக்கு ஆண்டவர் பதிலுரைத்தபோது குறிப்பிட்ட ஒரே தீர்க்கதரிசி தானியேல்தான் (மத் 24:15; மாற் 13:14; லூக் 21:20). தானியேல் புத்தகத்தையும் வெளிப்படுத்தல் புத்தகத்தையும் சேர்த்தே படிக்கும்படி வேத வல்லுநர்கள் நம்மை ஊக்குவிக்கின்றனர். தானியேலைப் பொருத்தவரை, இறுதிக்கால முக்கிய அடையாளங்களில் ஒன்று **அறிவுப் பெருக்கம்:** தானி 12:4ஆ, ''அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகும்.'' அறிவுக்குத் தேவன் எதிரானவரல்ல. சர்வ ஞானியாகிய அவரே எல்லா அறிவுக்கும் ஞானத்திற்கும் காரணர் (யாக் 1:5). ஆனால் அவரை

ஒதுக்கிவைக்கும் எந்த அறிவும் மாறுபாடுள்ளதே (நீதி 1:7). தீரு மன்னனுக்குக் கொடுக்கப்பட்ட இறைச்செய்தியில் லூசிபரின் விழுகை குறித்த மறைமுகக் குறிப்பு உண்டு. எசேக் 28: 17, ''உனது அழகின் காரணமாய் உன் இதயம் செருக்குற்றது; உனது மாட்சியின் காரணமாய் உன் ஞானத்தைக் கெடுத்துக்கொண்டாய்; எனவே உன்னைத் தரையில் தள்ளிவிட்டேன்.'' தேவன் அவனிடம், ''தானியேலைவிட நீ அறிவாளிதான்'' என்றும் கூறினார் (வச 3-5). அறிவியலுக்காகவும் தொழில்நுட்பவியலுக்காகவும் ஆண்டவரைத் துதிப்போம். ஆனால் மனிதன் இவற்றைக் கும்பிடத் தொடங்கினால் சிருஷ்டி கர்த்தரின் சினம் பொங்கியெழும்; அவன் ஒன்றுமில்லை என்பதை அவர் உணரச் செய்வார். கரோனா நச்சுக்கிருமி நமக்குப் போதித்துள்ளது அதுதானே? மூன்று காரியங்களைக் குறித்து நாம் பெருமை கொள்ளலாகாது என்று தீர்க்கன் எரேமியா நம்மை எச்சரித்துள்ளார்: ''ஞானம், பலம், செல்வம்'' (எரே 9:23,24). இதில் முதலில் வருவது ஞானம்! ''கர்த்தர் ஒருவரே உயர்ந்திருப்பார்'' எனும் ''அந்த நாளை'' நாம் நெருங்கிக்கொண் டிருக்கிறோம்; அப்பொழுது செருக்குமிகும் பார்வை கொண்டோர் தாழ்த்தப்படுவர், ஆணவம் மிகுந்தோர் அவமானமடைவர் (ஏசா 2:11,17). சர்வ வல்லரசருக்கு முன் வல்லரசுகள் எம்மாத்திரம்? (What are super-powers before the Supra-power?)

**(h)** *''அடுத்து என்ன?''* என்ற கேள்விக்கான பதிலில் பத்து கன்னியர் உவமை அதிக இடம் பெற்றிருக்கிறது (மத் 25:1-13). இவ் வுவமைக்குப் பல்வேறு வியாக்கியானங்கள் தரப்பட்டுள்ளன, ஒவ் வொன்றிலும் நல்லது உண்டுதான். இந்த உவமையின் முடிவில் ஆண்டவர் கொடுத்த அறிவுரையின் அடிப்படையிலேயே எனது எளிய புரிதல்: ''மனுமகன் வரும் நாளோ வேளையோ உங்களுக்குத் தெரியாது; எனவே விழிப்பாயிருங்கள்'' (வச 13). மணமகன் வருகை தாமதமானபோது கன்னியரில் ஐவர் மட்டுமல்ல, பத்துப்பேரும் தூங்கிவிட்டனர் (வச 5). ஏறத்தாழ எல்லாச் **சபைகளின்** நிலையும் இதுவே. சில சபைகள் தூங்குகின்றன, சில உறங்குகின்றன, சில குறட்டைவிட்டுக்கொண்டிருக்கின்றன. கன்னியர் கேட்ட ''நள்ளிரவுக் குரலை'' இறுதியான எழுப்புதல் எனப் புரிந்துகொள்கிறேன் (வச 6,7). வெளிப்படுத்தல் புத்தகத்தில் நாம் காணும் ஏழு சபைகளில் முதல் சபைக்கு, ஏழு சபைகளின் நடுவில் உலாவி வருபவராய், கிறிஸ்து தம்மை அறிமுகம் செய்தார் (வெளி 2:1). ஏழாம் சபைக்கு நாம் வந்துசேரும்போதோ, அவர் வெளியே நின்று கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறார் (3:20). முதல் நூற்றாண்டிலிருந்து இன்று வரை சபை எவ்வளவாய்ப் பின்மாற்றமடைந்து வந்திருக்கிறது என்பதே இங்கு கவனிக்கவேண்டியது. ஆனாலும், நம்மை ஊக்குவிக்கும் செய்தி என்னவெனில், எவ்விதச் சபைப் பிரிவின்கீழ் இயங்கினாலும் எந்தச் சபையையும் இனித் தேறாது என்று கிறிஸ்து விட்டுக் கடந்து செல்லவில்லை. ஆவிக்குரிய சபையாய்த் திகழ்ந்த எபேசு சபையையும் தட்டியெழுப்பும் செய்தி இதோ: ''தூங்குகிறவனே, விழித்தெழு! இறந்தவனே, உயிர்பெற்றெழு! கிறிஸ்து உன்மீது ஒளிர்ந்தெழுவார்!'' (எபே 5:14).

*உறக்கம் தெளிவோம், உற்சாகம் கொள்வோம்,*
*உலகத்தின் இறுதிவரை,*
*கல்வாரி தொனிதான், மழைமாரி பொழியும்*
*நாள்வரை உழைத்திடுவோம்!*

கிறிஸ்து திரும்ப வருமுன் சரித்திரம் காணாததோர் அருள்மாரியையும் அசாதாரண ஆத்தும அறுவடையையும் உள்ளடக்கிய **''இன்னொரு எழுப்புதலை''** தேவன் நமது நடுவில் அனுப்புவார் என்பது எனது நம்பிக்கை, எனது ஏக்கம் (அப் 2:16-21). ஆமென், சொல்வீர்!

**(i) தானதர்மம்** என்ற பொருளைக் குறிப்பிட்டுத் தமது நீண்ட பதிலை இயேசு முடிக்கிறார் (மத் 25:31-46). அரியணையில் அமர்ந்திருக்கும் அரசர் எனத் தம்மை அழைத்துக்கொள்கிறார் (வச 31,34,40). மக்களைச் செம்மறியாடுகள் எனவும் வெள்ளாடுகள் எனவும் இருவகையினராய்ப் பிரிக்கிறார். பசியுள்ளோருக்கு உணவளித்தோர், தாகமாயிருந்தோரது தாகத்தைத் தணித்தோர், உறைவிடமற்றோரைச் சேர்த்துக்கொண்டோர், உடையற்றோரை உடுத்துவித்தோர், நோயுற்

றோரையும் சிறைவாசிகளையும் சென்று சந்தித்தோர் ஆகியோரே செம்மறியாடுகளாம். தேவையிலும் தரித்திரத்திலும் இருந்த இம்மக்களையெல்லாம் கண்டும் காணாமலும் இருந்துவிட்டோரோ வெள்ளாடுகளாம். செம்மறியாடுகள் நித்திய வாழ்வைப் பெற்றனர்; வெள்ளாடுகளோ நரகத்திற்குள் விரைந்தனர். இவ்வசனப்பகுதியை வியாக்கியானிக்காமல், என்னையே ஒரு கேள்வி கேட்டுக்கொண்டு இக்கட்டுரையை நிறைவுசெய்கிறேன், ‘‘நான் செம்மறியாடா, வெள்ளாடா?’’




**கிறிஸ்தவ வாழ்வில்**
**நிறைவாய் வளர உணவளிக்கும்**
**ஒரு தினசரித் தியான நூல் ...**




**BETTER**
**EVERYDAY**

*சகோதரன் ஸ்டான்லி நாற்பது ஆண்டுகளில்*
*எழுதியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது.*

***அனைத்துச் சபையினரும்...***
***அனைத்து வயதினரும்...***
***அனைத்துத் துறையினரும்...***
***விரும்பி வாசிக்கும்***
***ஒரு புதிய படைப்பு***

ஆங்கிலம், இந்தி, ஒடியா, கன்னடம், குஜராத்தி,
பெங்காலி, மராத்தி, மலையாளம், தெலுங்கு
ஆகிய மொழிகளிலும் உண்டு.

432 பக்கங்கள்

விலை ரூ. 150/-; அனுப்பச் செலவு ரூ. 50/-

கிடைக்குமிடம்:
R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com> <evangeline@stanleyonbible.com>*

# ‘‘பைபிள் புதையல்கள்’’
## Bible Treasures



by **R. ஸ்டான்லி**

ஆன்மீக வாழ்வின் துவக்கமுதல்
இவ்வுலக வாழ்வின் முடிவுவரை
200 திருத்துதல் திருமறைப் பாடங்கள்

■

832 பக்கங்கள்; உறையுடன் தடித்த அட்டை
விலை ரூ. 500/-; அனுப்பச் செலவு ரூ. 100/-
*ஆங்கிலம், இந்தி, கன்னடம், தெலுங்கு*
*ஆகிய மொழிகளிலும் உண்டு.*

■

இப்புத்தகத்திலுள்ள 200 பாடங்களும்
ஒலித்தட்டுகளாகவும், ஒளித்தட்டுகளாகவும் உண்டு.
*ஆங்கிலத்திலிருந்து தமிழிலும், நேரடியாக இந்தியிலும்.*

□

40 ஒளித்தட்டுகள்
ஒவ்வொன்றும் 2 மணி 30 நிமிடம் ஓடக்கூடியது.
ஒரு தொகுப்பின் விலை ரூ. 1500/-
அனுப்பச் செலவு ரூ. 100/-

□

2 MP3 ஒலித்தட்டுகள்
ஒவ்வொன்றும் 50 மணி நேரம் ஓடக்கூடியது.
ஒரு தொகுப்பின் விலை ரூ. 100/-
அனுப்பச் செலவு ரூ. 50/-

□

***100 மணி நேரத் திடமான வேத போதனை***

■

தனித்தியானத்திற்கும் குழு ஆராய்ச்சிக்கும் ஏற்றது.
புத்தகத்துடன் ஒலி-ஒளித்தட்டுகளைப் பயன்படுத்துவது
3-ஆண்டு வேதக் கலாசாலைப் படிப்பிற்குச் சமம்!





# பைபிள் முத்துக்கள்
## Bible Pearls

50 ஆண்டுகளுக்கும் கூடுதலான (1963-2016)
பிரசங்கப்பணியிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட
200 பிரசங்கக் குறிப்புகள்

**R. ஸ்டான்லி**

*இப்பிரசங்கக் குறிப்புகள் 14 தலைப்புகளில் பிரிக்கப்பட்டுள்ளன —*

*1. மனந்திரும்புதல் & இரட்சிப்பு*
*2. திருமறை & திருவுபதேசம்*
*3. கிறிஸ்தவ வாழ்வு*
*4. ஜெபம் & தொழுகை*
*5. எழுப்புதல் & ஆதிநிலையேகுதல்*
*6. நற்செய்தியறிவிப்பு & மிஷனரிப்பணி*
*7. திருச்சபை*
*8. பிரசங்கித்தல் & ஊழியம்*
*9. வேலை, சகவுறவுகள் & தலைமை*
*10. சிலுவை & பாடுகள்*
*11. குடும்பம்*
*12. இளைஞர்*
*13. நபர்கள் வாழ்க்கை & பொதுவானவை*
*14. இறப்பு & இரண்டாம் வருகை*

வசன அட்டவணை, பொருள் அட்டவணை,
கதாபாத்திரங்கள் அட்டவணை & மேற்கோள் அட்டவணை

1200 பக்கங்கள் □ உறையுடன் தடித்த அட்டை
விலை ரூ. 1000/-; அனுப்பச் செலவு ரூ. 100/-
*10 அல்லது கூடுதல் பிரதிகளுக்கு 30% தள்ளுபடி*
*முழுநேர ஊழியருக்கு 50% தள்ளுபடி*

*ஆங்கிலத்திலும் உண்டு.*
*தெலுங்கு, இந்தி, ஒடியா மொழியாக்கம் ஆயத்தத்தில் உள்ளது.*

R. Stanley
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com> <evangeline@stanleyonbible.com>*




# வாலிபர் எழுப்புதல் கடிதங்கள்

**Youth Revival Letters**

**அன்றையக் கடிதங்கள் தரும்**
**ஓர் எழுப்புதல் சரித்திரம்**
**1970-1990**

*by R.* ஸ்டான்லி

☐ *160 இதயம் பேசும் கடிதங்கள்* ☐
☐ *800 புகைப்படங்களும் வரைபடங்களும்* ☐
☐ *30 எழுப்புதல் அறிக்கைகள்* ☐
☐ *50 சவால் நிறை கட்டுரைகள்* ☐
☐ *33 கிளர்ச்சியூட்டும் பாடல்கள்* ☐
☐ *8 தற்பரிசோதனைக் கேள்விப் பட்டியல்கள்* ☐

1024 பக்கங்கள் ☐ உறையுடன் தடித்த அட்டை
விலை ரூ. 500/- மட்டும்; அனுப்பச் செலவு ரூ. 100/-
இந்நூல் ஆங்கிலத்திலும் உண்டு.

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
*Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>*



## ஆசிரியரது பிற நூல்கள்

- *அறிவூட்டும் அகவுணர்வுகள்* (பக்கங்கள் 42)
- *ஆவியின் அபிஷேகம் பெறுவது எப்படி?* (பக்கங்கள் 32)
- *ஆனந்த அறுவடை* (பக்கங்கள் 196)
- *இரட்சிக்கப்படுவது எப்படி?* (பக்கங்கள் 32)
- *இயேசுவின் அடிச்சுவடுகள்* (பக்கங்கள் 144)
- *இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்!* (பக்கங்கள் 60)
- *இன்னும் நேர்த்தியாய்ப் பிரசங்கிப்பது எப்படி?* (பக்கங்கள் 220)
- *உயர்ந்த வழிகள் உயர்ந்த எண்ணங்கள்* (பக்கங்கள் 120)
- *எதிர்நீச்சல் வாலிபர்* (பக்கங்கள் 140)
- *எழுப்புதல் வரும்போது ...* (பக்கங்கள் 256)
- *ஐந்தப்பம் இருமீன்* (பக்கங்கள் 112)
- *கண் திறக்கும் கட்டுரைகள்* (பக்கங்கள் 240)
- *காட்டுத் தேன்* (பக்கங்கள் 112)
- *கீழ்ப்படிதலே மேல்படி!* (பக்கங்கள் 92)
- *சமநிலைக் கிறிஸ்தவன்* (பக்கங்கள் 80)
- *சிறு நரிகள்* (பக்கங்கள் 56)
- *திறந்த வானம் (எபிரெயர் நிருப விளக்கம்)* (பக்கங்கள் 130)
- *திரும்பிய மனிதன் (ரோமர் நிருப விளக்கம்)* (பக்கங்கள் 160)
- *தீர்க்கதரிசி, ஆசாரியர், இராஜா* (பக்கங்கள் 112)
- *நான் நிற்கும் கன்மலை* (பக்கங்கள் 64)
- *நெஞ்சில் நெருப்பு* (பக்கங்கள் 136)
- *பூர்வ பாதைகள்* (பக்கங்கள் 148)
- *பொறுமை இருந்தால் மனிதன் ஆகலாம்!* (பக்கங்கள் 148)
- *பொற்பழங்கள்* (பக்கங்கள் 60)
- *பைபிள் கேள்விகள்* (பக்கங்கள் 228)
- *பைபிள் பதில்கள்* (பக்கங்கள் 256)
- *பைபிள் பரிசுத்தம்* (பக்கங்கள் 220)
- *பைபிள் வல்லமை* (பக்கங்கள் 356)
- *பைபிள் வெற்றி* (பக்கங்கள் 432)
- *மாணவ மணிகளுக்கு ...* (பக்கங்கள் 60)
- *வல்லமை தேவனுடையது!* (பக்கங்கள் 160)
- *விசுவாச வாழ்வு* (பக்கங்கள் 128)

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள். இப்புத்தகங்கள் ஆசிரியரிடம் அல்லது கீழ்க்கண்ட முகவரியில் கிடைக்கும் —

Blessing Literature Centre
21/11 West Coovam Road, Chintadripet, Chennai 600 002, India
*Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>*

# WWW

Word of God · Worship in Spirit · Work for Christ

**www.StanleyOnBible.com**

Here's a website that teaches you

*How to Study the Word of God*
*How to Worship God in the Spirit*
*How to Work for Christ*

through
Daily Devotionals, Letters, Articles, Books
and Audio & Video Talks,
in English, Tamil and several vernaculars.

All FREELY downloadable!

Rich in Biblical Content!
Sound in Doctrine!
Balanced in Emphasis!
Down-to-earth Practical!

***Visit today !***